சுதேச வாசகம்

முதல் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத்
திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்ததை

சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை
திருத்தியது.

வி. சூ. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை. | பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை.

பதிப்புரிமை] :: [விலை ரூ. 0-5-0

முன்னுரை

சிறு குழந்தை முதன் முதல் அம்மா, அப்பா என்ற சொற்களைப் பேசத் தொடங்கி, சோறு, தண்ணீர் என்ற அவசியமான சொற்களையும், பிறகு தனக்குப் பழக்கமான பிராணிகள், பொருள்கள் இவற்றின் பெயர்களைக் குறிக்கும் சொற்களையும் கூறுகிறது. எனவே சொற்களே குழந்தைகள் அறிந்து சொல்லும் முதற்படியாம். ஆகையால் இயற்கை முறைப்படி சொற்களையே முதலில் சொல்லி வைத்து அவற்றிலுள்ள எழுத்துக்களைப் பின்புதான் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பது தெளிவு. சொற்களைக் கற்பிப்பதில், சரியாய் உச்சரிக்கவும், உரையாடவும் செய்வதே முதற் கடமையாகும். இவ்விதம் கற்பிக்கும் சொற்கள் யாவும் அவர்கள் பழக்கத்தில் அறிந்தனவாகவே இருத்தல் நலம். புதிய ஆரம்பப் பாடசாலைப் பாட நிர்மாணத் திட்டமும் இந்நோக்கம் கொண்டதே.

குழந்தை பள்ளிக்கூடத்தில் சேரக்கூடிய 5½ வயதுக்குள், தான் நெருங்கிப் பழகும் மனிதர், பிராணிகள், பொருள்கள் இவைகளின் பெயர்களையும், நடைமுறையிலுள்ள சில (சுமார்250) சொற்களையும், தெரிந்துகொண்டே பள்ளிக்கூடம் வருகிறது.

இதை அனுசரித்தே இப்புத்தகத்தில், வீட்டிலும், வெளியிலும், பள்ளிக்கூடத்திலும், தோட்டத்திலும், கடைகளிலும் முறையே குழந்தை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சொற்களைச் சரியாய் உச்சரிக்கவும், நன்கு உபயோகிக்கவும் உதவுமாறு இப்புத்தகம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலும் ஒரு ஒழுங்கின் படியே பாடங்களும் அவைகளில் வரும் சொற்களும், வாக்கியங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

எழுத்து வரிசைப்படி கற்பிக்கவேண்டிய அவசியமில்லையெனினும் குழந்தைகள் அறியாதவாறே, தெரிந்த சொற்களை அவ்வொழுங்கின்படியே அமைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்நூலைத் திருத்திப் பதிப்பிக்க உதவிய ஸ்ரீ. வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் பி. ஏ. (ஹானர்ஸ்), எல். டி., அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்

இரண்டாம் பதிப்பு 55. பாரதி பிரஸ், மதுரை.

தேச வணக்கம்

(கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிறப்புச்
சீர்வளமும் மிகத்திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்



வகுப்பு அறை

சுதேச வாசகம்

முதல் புத்தகம்



படம்



அம்மா ஆடு





இலை ஈ





உரல் ஊசி



எலி ஏணி

ஐயர் ஒட்டகம்



ஓணான் ஔவை

அ

ஆ
இ
ஈ
உ
ஊ
எ
ஏ
ஐ
ஒ
ஓ
ஔ

கண்



சங்கு



ஊஞ்சல்

குடம்



கிணறு



தவளை

நண்டு முயல்

விரல் பழம்



குளம் இறகு

அ
க
ங
ச
ஞ
ட
ண
த
ந
ப
ம
ய
ர
ல
வ
ழ

ஆ

கா
ஙா
சா
ஞா
டா
ணா
தா
நா
பா
மா
யா
ரா
லா
வா
ழா
ளா
றா
னா



காகம்	**புறா**
மா டு	க டா
வா ய்	மா மா
கா ல்	தா ய்
பா ல்	பா ய்
சா த ம்	மா ன்



நாய்	**அணா**

இ

கி ஙி சி ஞி டி ணி தி நி பி மி யி ரி லி வி ழி ளி றி னி

கிளி



மீன்

சாவி	கீரி
அரிசி	சீனி
தயிர்	வீதி
மயில்	வீடு
விசிறி	தீபம்

மணி



சீப்பு

ஈ

கீ ஙீ சீ ஞீ டீ ணீ தீ நீ பீ மீ யீ ரீ லீ வீ ழீ ளீ றீ னீ

உ

கு
ஙு
சு
ஞு
டு
ணு
து
நு
பு
மு
யு
ரு
லு
வு
ழு
ளு
று
னு





பசு	பூ
காது	ஊர்
கதவு	நூல்
சுக்கு	தூண்
மிளகு	பூட்டு
பந்து	மூக்கு
வண்டு	மூன்று

பசு மாடு
ஊசி நூல்
சிறு தூண்
சுக்கு மிளகு

ஊ

சூ
ஙூ
சூ
ஞூ
டூ
ணூ
தூ
நூ
பூ
மூ
யூ
ரூ
லூ
வூ
ழூ
ளூ
றூ
னூ

எ

கெ
ஙெ
செ
ஞெ
டெ
ணெ
தெ
நெ
பெ
மெ
யெ
ரெ
லெ
வெ
ழெ
ளெ
றெ
னெ



பெட்டி சேவல்

செடி ஏரி
நெய் தேர்
நெல் தேன்
பெண் பேனா
செம்பு வேலை
வெள்ளி தேகம்

ஏரி நீர்
பசு நெய்
தேன் கூடு
நெல் வயல்

ஏ

கே
ஙே
சே
ஞே
டே
ணே
தே
நே
பே
மே
யே
ரே
லே
வே
ழே
ளே
றே
னே

ஐ

கை
ஙை
சை
ஞை
டை
ணை
தை
நை
பை
மை
யை
ரை
லை
வை
ழை
ளை
றை
னை



கை பூனை

பை தலை
வடை வீணை
வாழை காளை
விதை பானை
தோசை யானை
எருமை தென்னை

நெய் வடை
கீரை விதை
காளை மாடு
வாழை இலை

ஒ

கொ
ஙொ
சொ
ஞொ
டொ
ணொ
தொ
நொ
பொ
மொ
யொ
ரொ
லொ
வொ
ழொ
ளொ
றொ
னொ



கொடி கோவில்

பொன் கோழி
ஒன்று மோர்
கொக்கு சோறு
கொம்பு கோலம்
நொண்டி போர்வை
பொம்மை கோபுரம்

ஒரு கொக்கு
பொன் வண்டு
கோழி முட்டை
கோவில் யானை

ஓ

கோ
ஙோ
சோ
ஞோ
டோ
ணோ
தோ
நோ
போ
மோ
யோ
ரோ
லோ
வோ
ழோ
ளோ
றோ
னோ

இது என்ன?



இது என்ன?



பெற்றோர்

அம்மா	அப்பா
பெ ண்	ஆ ண்
அ க் கா ள்	அ ண் ணா ன்
த ங் கை	த ம் பி
பா ட் டி	பா ட் ட ன்
மா மி	மா மா
ம க ள்	ம க ன்



வீடு

வா ச ல்   ப டி

க த வு   நி லை

ஜ ன் ன ல்   க ம் பி

சு வ ர்   ஓ டு

தூ ண்   தி ண் ணை

தெ ரு   மா டி

மாடி வீடு

வாசல் படி

ஜன்னல் கதவு

குடம் செம்பு
சட்டி பானை
தவலை அகப்பை
தட்டு மத்து
முறம் சுளகு
அடுப்பு விறகு
அம்மி குழவி
உரல் உலக்கை

கல் உரல்
மண் பானை
தயிர் மத்து



தொட்டில் கட்டில்

மெத்தை உறை
திண்டு தலையணை
ஜமக்காளம் பாய்
விரிப்பு போர்வை
சங்கிலி வலை

கொசு வலை
கட்டில் கால்
பஞ்சு மெத்தை
தலையணை உறை
தொட்டில் சங்கிலி

மிருகங்கள்



பசு — காளை

குதிரை — கழுதை

பூனை — நாய்

ஆடு — பன்றி

யானை — ஒட்டகம்

பறவைகள்



கோழி குருவி

வாத்து கொக்கு

கிளி மயில்

காகம் புறா

பருந்து கருடன்

ஈ   எறும்பு

எலி   அணில்

பல்லி  ஓணான்

பாம்பு   கீரி

ஆமை   தவளை

மீன்   நண்டு



வௌவால்

தலை

கண்

காது

மூக்கு

கை

விரல்

கால்

பாதம்

நகம்

குறிப்பு :—உபாத்தியாயர் ஒவ்வொரு வார்த்தையோடும் 'கள்' என்ற விகுதியைச் சேர்த்துப் பன்மையைக் கற்பிக்க.



சூரியன் சந்திரன்

பூமி	வானம்
பகல்	இரவு
காற்று	மழை
நெருப்பு	தண்ணீர்
வெயில்	வெளிச்சம்
நட்சத்திரம்	மேகம்

மழை நீர்
சந்திர வெளிச்சம்
நெருப்புப் பந்து

பள்ளிக்கூடம்

பையன் பெண்

புத்தகம் பை

பலகை பாவாடை

ஆடை வளையல்

சட்டை காப்பு

குல்லா பின்னல்

வகுப்பு

உபாத்தியாயர் உபாத்தினி
மேஜை நாற்காலி
பெஞ்சு பலகை
பேனு மைக்கூடு
கரும்பலகை பாடம்
நில் உட்கார்

ராமா, நில்.

ராமா, உட்கார்.

பையன்களே, நில்லுங்கள்.

பையன்களே, உட்காருங்கள்.

மாடு

மாடுகள்

பையன்

பையன்கள்

மரம்

மரங்கள்

மனிதன்

மனிதர்கள்

பல்

பற்கள்



கை வண்டி



மாட்டு வண்டி



குதிரை வண்டி



சைக்கிள்
வண்டி



புகை வண்டி



மோட்டார்
வண்டி

மரம்

செடி

கொடி



இலை



பூ



காய்



வேர்

அடிமரம்

வாழை

கிளை

ஆலமரம்

அரசமரம்

பலாமரம்

புளியமரம்

மாமரம்

வேப்பமரம்

பூக்கள்

மல்லிகைப்பூ

சாமந்திப்பூ

ரோஜாப்பூ

தாமரைப்பூ



அல்லிப்பூ

அரளிப்பூ

தாழம்பூ



வாழைப்பூ

காய்கள்

வாழைக்காய்



கத்திரிக்காய்

மாங்காய்

வெண்டைக்காய்

பறங்கிக்காய்

மிளகாய்

அவரைக்காய்

தேங்காய்

பழங்கள்



வாழைப்பழம்



பலாப்பழம்



கொய்யாப்பழம்



ஆரஞ்சுப்பழம்

மாம்பழம்

திராட்சைப்பழம்



முந்திரிப்பழம்

அனாசிப்பழம்

வா

போ

ராமா, இங்கே வா.

கோபாலா, அங்கே போ.

கோவிந்தா, இங்கே நில்.

சூரி, அங்கே உட்கார்.

ராமா, புத்தகம் படி.

சூரி, பாடம் எழுது.

சீனு, கணக்குப் போடு.

கமலா, பாட்டுப் பாடு.

பம்பரம்

ஆ டு

அ டி

கோ லி

க யி று

வ ளை ய ம்



பந்து

ஓ டு

வி டு

கு ம் மி

அ ம் மா னை

கோலாட்டம்

சூரி, பந்து அடி.

கோமதி, கும்மி அடி.

சீனு, பம்பரம் ஆடு.

கமலா, அம்மானை ஆடு.

ராமா, பட்டம் விடு.

கோபாலா, விளையாடு.

ராமன்,

புத்தகம் படிக்கிறான்.

பாட்டுப் பாடுகிறான்.

பால் குடிக்கிறான்.

சோறு சாப்பிடுகிறான்.

பந்து அடிக்கிறான்.

கோலி ஆடுகிறான்.

கமலா,

புத்தகம் படிக்கிறாள்.

பாட்டுப் பாடுகிறாள்.

பால் குடிக்கிறாள்.

சோறு சாப்பிடுகிறாள்.

கும்மி அடிக்கிறாள்.

அம்மானை ஆடுகிறாள்.



குதிரை ஓடுகிறது.



புரு பறக்கிறது.



நாய் குரைக்கிறது.



காகம் கரைகிறது.



ஆமை நகருகிறது.



தவளை நீந்துகிறது.



குதிரைகள்
ஓடுகின்றன.

புறாக்கள்
பறக்கின்றன.

நாய்கள்
குரைக்கின்றன.



காகங்கள்
கரைகின்றன.

ஆமைகள்
நகருகின்றன.

தவளைகள்
நீந்துகின்றன.



இது என்ன?
இது ஒரு யானை.



அது என்ன?
அது ஒரு குதிரை.

இவன் யார்?
இவன் ஒரு மனிதன்.

அவன் யார்?
அவன் ஒரு பையன்.

இவள் யார்?
இவள் ஒரு பெண்.

அவள் யார்?
அவள் ஒரு பெண்.



இவை யாவை?
இவை யானைகள்.

அவை யாவை?
அவை குதிரைகள்.

இவர்கள் யாவர்?
இவர்கள் மனிதர்கள்.

அவர்கள் யாவர்?
அவர்கள் பையன்கள்.

இவர்கள் யாவர்?
இவர்கள் பெண்கள்.

அவர்கள் யாவர்?
அவர்கள் பெண்கள்.

சூரி, கை நீட்டு.
சூரி கை நீட்டுகிறான்.

சீனு, கை மடக்கு.
சீனு கை மடக்குகிறான்.

கோவிந்தா, குனி.
கோவிந்தன் குனிகிறான்.



கோபாலா, நிமிர்.
கோபாலன் நிமிர்கிறான்.

நான் ஒரு பையன்.
என் பெயர் ராமன்.

கமலா, நீ வா.
உன் புத்தகம் எடு.

அவன் கோவிந்தன் மகன்.
அவன் பெயர் சீனு.

அவள் அவன் தங்கை.
அவள் பெயர் சீதா.

தம்பி, நீ யார்?
நான் ஒரு பையன்.

பெரிய படம் சிறிய படம்



நீளப் பென்சில் கட்டைப் பென்சில்

உயரமான பையன் குட்டையான பையன்

பெரியது	நீளம்	உயரம்
சிறியது	கட்டை	குட்டை

நிலா நிலா ஓடிவா,
நில்லாமலே ஓடிவா,
மலைமேலே ஏறிவா,
மல்லிகைப்பூக் கொண்டுவா.



காக்கா! கண்ணுக்கு மை கொண்டுவா,
குருவி! கொண்டைக்குப் பூக் கொண்டுவா,
கொக்கு! குழந்தைக்குத் தேன் கொண்டுவா,
கிளியே! கிண்ணத்தில் பால் கொண்டுவா.

சுவைகள்

கரும்பு தித்திப்பு.
எலுமிச்சம்பழம் புளிப்பு.
கடல் தண்ணீர் உவர்ப்பு.
வாழைப் பூ துவர்ப்பு.
மிளகாய் கார்ப்பு.
வேப்பங்காய் கசப்பு.

நிறங்கள்

எலுமிச்சம்பழம் மஞ்சள் நிறம்.
இலை பச்சை நிறம்.
மிளகாய்ப்பழம் சிவப்பு நிறம்.
வானம் நீல நிறம்.
பால் வெள்ளை நிறம்.
காகம் கறுப்பு நிறம்.

சுதேச வாசகம்

இரண்டாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்ததை
சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை
திருத்தியது.

வி. சூ. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை. | பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை.

பதிப்புரிமை] : : [விலை ரூ. 0-6-0

முன்னுரை

1939-ஆம் வருடம் வெளியிடப்பட்டுள்ள பாடத்திட்டப்படி இந்த சுதேச வாசகம் இரண்டாம் புத்தகத்தை வெளியிடலானோம். ஏற்கெனவே வெளிவந்துள்ள முதற் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயர்ந்த உரை நடை, புதுச் சொற்கள் முதலியவை இதில் படிப்படியாய்ப் புகுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் நாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றனவாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்தப் பாடத்திலும் எளிதில் கற்பிக்கக் கூடியவைகளையும், அவைகளுக்கு அவசியமான சில புதுச் சொற்களையும், சிரமமில்லாமல் புகட்டக்கூடிய விதத்திலேயே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள், பிள்ளைகளின் ஞாபக சக்தியை விருத்திசெய்யவும், படித்த பாடங்களை மனதிற் பதியச் செய்யவும், தக்க முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒற்று இரட்டித்தல், இனவெழுத்துத் தோன்றல், வடமொழி எழுத்துக்கள், ஒலி பேதங்கள் இவைகளை நன்ருய்க் கற்பிக்க, தனிப்பட்ட பாடங்களும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உச்சரிப்பைச் சீர்திருத்துவதற்கு இவை இன்றியமையாதவை. இரண்டாவது வகுப்பில் பிள்ளைகள் இவைகளைத் தெரிந்துகொண்டால்தான், உச்சரிப்பிலும் எழுத்திலும் தவறுகள் ஏற்படா. விவரமாகப் பொருள் கூறி, உதாரணங்களுடன் விளக்க வேண்டிய சொற்கள் மட்டுமே 24-வது பாடத்திலிருந்து தனியாய்க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட நோக்கங்களை நன்குணர்ந்து, ஒவ்வொரு பாடத்தையும் 'எந்தெந்த விதங்களில் விரிவாகக் கற்பிக்கலாம்' என்று திட்டம் போட்டுக்கொண்டு கற்பித்தல் நலம். ஒவ்வொரு பாடமும் ஆசிரியர் யுக்தம்போல் விரிவுபடுத்தத் தக்கதாகவே எழுதப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

இந்நூலைத் திருத்திப் பதிப்பிக்க உதவிய ஸ்ரீ. வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் பி. ஏ. (ஹானர்ஸ்), எல். டி., அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்

திருத்திய இரண்டாம் பதிப்பு. '55. பாரதி பிரஸ், மதுரை.

தேச வணக்கம்

(கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிற்பச்
சீர்வளமும் மிகத்திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
	படப் பழக்கம்—1	5
1	சொல் தொடர்கள்	6
2	சொல் தொடர்கள்	7
3	என் குடும்பம்	8
4	என் தாய்	9
5	என் வீடு	10
6	ஏவல் வாக்கியங்கள்	11
7	எங்கள் பாடசாலை	12
8	ஊர் ஊர்	14
9	பசு	15
10	வடமொழிச் சொற்கள்	18
11	கோழி	20
12	எழுத்துக்களின் ஒலி பேதங்கள்	21
	படப் பழக்கம்—2	22
13	கைவீசல் (பாட்டு)	23
14	தனி வாக்கியங்கள்	24
15	பிராணிகளின் ஒலிகள்	25
16	இரட்டைச் சொற்கள்	26
17	சூரியனும் சந்திரனும்	28
18	திசைகள்	29
19	உரையாடல்	30
20	உரையாடல்	31
21	உரையாடல்	32
22	சுகவழி (பாட்டு)	34
23	எலிக் கூடு	35
24	பூனை	37
25	முரசுப் பாட்டு	38
26	தாய்	39
27	வாகனங்கள்	41
28	பிராணிகளிடத்து அன்பு (பாட்டு)	44
	படப் பழக்கம்—3	45
29	நல்ல பழக்கம் (பாட்டு)	46
30	புத்தியுள்ள காகம்	47
31	பள்ளிக்கூடத் தோட்டம்	48
32	அரிசியின் கதை	51
33	கடைத் தெரு	54
34	புறாவும் எறும்பும்	57
35	கிராமம்	60
36	ஆத்திசூடி (பாட்டு)	63
37	உலகநீதி (பாட்டு)	64

சுதேச வாசகம்

இரண்டாம் புத்தகம்

படப் பழக்கம்—1



குறிப்பு:—முதலில் ஒவ்வொரு பிள்ளையையும் படத்தில் காண்பவைகளில் ஒன்றைமட்டும் கூறச் சொல்லவும். பிறகு உயிருள்ளவைகளையும், உயிரற்றவைகளையும் பிரித்துச் சொல்லச் செய்யவும். தெரிந்த வார்த்தைகளைக் கற்பலகையில் எழுதச் சொல்லவும்.

1. சொல் தொடர்கள்

கை விரல்  கைத் தடி

தங்க மோதிரம்  தங்கக் காப்பு

குதிரை வால்  குதிரைக் கால்

கோழிமுட்டை கோழிக் குஞ்சு

கிளி மூக்கு  கிளிக் கூண்டு

வாழை இலை வாழைப் பழம்

ஆல மரம் ஆலம் பழம்

பூ மாலை  பூச் செடி

2. சொல் தொடர்கள்

அரிசி மூட்டை	அரிசிக் கூடை
ஆட்டு மந்தை	ஆட்டுக் குட்டி
இரும்பு ஆணி	இரும்புக் கம்பி
எட்டு அணு	எட்டுத் திக்கு
எருமை மாடு	எருமைப் பால்
கீரை விதை	கீரைப் பாத்தி
கொய்யா மரம்	கொய்யாக் காய்
சரிகை மாலை	சரிகைச் சேலை
நாய் வால்	நாய்க் குட்டி
பட்டு நூல்	பட்டுப் பூச்சி
மர நாற்காலி	மரப் பொம்மை
மாட்டு வண்டி	மாட்டுக் கொம்பு
வெள்ளி ரூபாய்	வெள்ளிச் செம்பு
தென்ன மட்டை	தென்னந் தோப்பு
மா மரம்	மாங் காய்
வேப்ப மரம்	வேப்பம் பழம்

3. என் குடும்பம்



இவர் என் தாய்.

அவர் என் தந்தை.

இருவரும் என் பெற்றோர்.

அவன் என் அண்ணன்.

இவன் என் தம்பி.

இருவரும் என் சகோதரர்.

இவள் என் அக்காள்.

அவள் என் தங்கை.

இருவரும் என் சகோதரிகள்.

எல்லோரும் ஒரு குடும்பம்.

4. என் தாய்



இவர் என் தாய்.

நான் இவர் பிள்ளை.

இவர் என்னைப் பெற்றவர்.

என்னிடம் அன்பு உள்ளவர்.

பாலூட்டி என்னை வளர்த்தவர்.

எனக்குத் தாலாட்டுப் பாடியவர்.

எனக்காக மருந்து உண்டவர்.

என்னை நல்ல பிள்ளை ஆக்கியவர்.

தாயே மேலான தெய்வம்.

5. என் வீடு

இது என் வீடு.

இது உயரமான இடத்தில் இருக்கிறது.

இதில் மரக் கதவுகள் உண்டு.

பெரிய ஜன்னல்களும் இதில் உண்டு.

இரும்புக் கம்பிகளைப் பார்.

கல் தூண்களும் இருக்கின்றன.

இங்கே நல்ல வெளிச்சம் உண்டு.

சுத்தமான காற்றும் அடிக்கிறது.

நாங்கள் இதில் இருக்கிறோம்.

6. ஏவல் வாக்கியங்கள்

தலையை ஆட்டு. புத்தகத்தை எடு.

கண்ணை மூடு. எழுத்துக் கூட்டு.

வாயைத் திற. பாடம் வாசி.

கையை உயர்த்து. புத்தகத்தை வை.

கையைத் தாழ்த்து. படத்தைப் பார்.

கைகளைக் கொட்டு. கதை சொல்லு.

பயிற்சி

பின்வரும் சொற்களிலிருந்து தகுந்த சொற்களை எடுத்து, கோடிட்ட இடங்களில் அமைத்துப்படி :—

(செய், போடு, போ, மூடு, அடி, பிடி, தூங்கு, படி, விழி, மூழ்கு, புசி, விளையாடு.)

1. உள்ளே——.
2. கணக்குப்——.
3. பாடம்——.
4. கும்மி——.
5. கையை——.
6. வேலை——.
7. மாலையில்——.
8. மீன்——.
9. குளத்தில்——.
10. சோறு——.
11. இரவில்——.
12. காலையில்——.

7. எங்கள் பாடசாலை



இது எங்கள் பாடசாலை.
இதில் நாங்கள் படிக்கிறோம்.
நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.
எங்கள் உபாத்தியாயர் வருகிறார்.
முதலில் நாங்கள் எழுந்திருக்கிறோம்.
அவருக்கு வந்தனம் சொல்லுகிறோம்.
பிறகு நாங்கள் உட்காருகிறோம்.
உபாத்தியாயர் பாடம் சொல்லுகிறார்.
கரும்பலகையில் கணக்குப் போடுகிறார்.
கற்பலகையில் நாங்கள் எழுதுகிறோம்.
காலை மாலை பாடம் வாசி.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தக்க வார்த்தையை அமைத்துப் படி:—

நீ எங்கே போகிறாய் ?

நான் பள்ளிக்கூடம் ———.

அவன் எங்கே போகிறான் ?

அவன் வீட்டுக்குப் ———.

நீ இங்கே வா.

நீ என்ன செய்கிறாய் ?

நான் அங்கே வருகிறேன்.

அவன் வகுப்புக்கு ———.

அவள் வகுப்புக்கு ———.

உபாத்தியாயர் வகுப்புக்கு ———.

ராமன் கணக்குப் ———.

கோமதி கோலம் ———.

கமலா பாட்டுப் ———.

நீ கதை ———.

நான் கற்பலகையில் ———.

அவன் பம்பரம் ———.

அவள் கும்மி ———.

அவர்கள் இங்கே ———.

இவர்கள் அங்கே ———.

நீங்கள் எங்கே ———?

8. ஊர் ஊர்

ஊர் ஊர்,	—	மயிலாப்பூர்
என்ன மயில்?	—	காட்டு மயில்
என்ன காடு?	—	ஆற்காடு
என்ன ஆறு?	—	பால் ஆறு
என்ன பால்?	—	கள்ளிப்பால்
என்ன கள்ளி?	—	இலைக் கள்ளி
என்ன இலை?	—	வாழை இலை
என்ன வாழை?	—	கற்பூர வாழை
என்ன கற்பூரம்?	—	ரஸ கற்பூரம்
என்ன ரஸம்?	—	மிளகு ரஸம்
என்ன மிளகு?	—	வால் மிளகு
என்ன வால்?	—	நாய் வால்
என்ன நாய்?	—	மர நாய்
என்ன மரம்?	—	பலா மரம்
என்ன பலா?	—	வேர்ப் பலா
என்ன வேர்?	—	வெட்டி வேர்
என்ன வெட்டி?	—	பனை வெட்டி
என்ன பனை?	—	தாளிப் பனை
என்ன தாளி?	—	விருந்தாளி
என்ன விருந்து?	—	மண விருந்து
என்ன மணம்?	—	பூ மணம்
என்ன பூ?	—	மாம் பூ
என்ன மா?	—	அம்மா.

9. பசு



பசு வீட்டு மிருகம்.

பசுவை நாம் வளர்க்கிறோம்.

பசுவினால் நமக்கு நன்மை உண்டு.

பசுவோடு கன்று நிற்கிறது.

பசுவுக்குக் கால்கள் நான்கு.

பசுவின் பால் நல்ல ஆகாரம்.

பசுவில் சிவப்பு நிறம் நல்லது.

பசுவின் கொம்புகள் உறுதியானவை.

பசுவினிடத்தில் அன்பாய் இரு.

பயிற்சி

படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை:—

தலையால் வணங்குகிறோம். ——— பார்க்கிறோம். ——— பேசுகிறோம். ——— நடக்கிறோம்.

கோழியோடு குஞ்சுகளும் போகின்றன.
——— குழந்தையும் இருக்கிறது.
——— நாயும் வருகிறது.
——— பள்ளிக்கூடம் போகிறாள்.



குதிரைக்குக் கால்கள் நான்கு.
காக்கைக்குக் ——— இரண்டு.
——— தண்ணீர் ஊற்று.
——— கொம்புகள் ———.

வீட்டின் படத்தைப் பார்.

__________ கால்கள் நான்கு.

__________ மூக்கு சிவப்பு நிறம்.

__________ வால் நீளமானது.

கூட்டில் குருவி இருக்கிறது.

__________ பழங்கள் இருக்கின்றன.

__________ பையன் நிற்கிறான்.

__________ புத்தகம் வைத்திருக்கிறாள்.

10. வடமொழிச் சொற்கள்



ரோஜா புஷ்பம் அழகானது.

திராக்ஷைப் பழம் ருசியானது.

பட்டு வஸ்திரம் விலை அதிகம்.

இந்த வருஷம் மழை குறைவு.

அந்த ஜாடியில் ஜலம் ஊற்று.

ஜூனுக்குப் பின் ஜூலை மாதம்.

புஷ்ப ஹாரம் ஒன்று வாங்கு.

நாம் பேசும் பாஷை தமிழ்.

பிராணிகளிடத்தில் பக்ஷமாய் இரு.

உரையாடல் பயிற்சி

கேள்விகளுக்குத் தகுந்தபடி கோடிட்ட இடங்களில் சொற்களைச் சேர்த்துப் படி:—

உன் பெயர் என்ன?

என் பெயர்———.

உன் ஊர் எது?

என் ஊர்———.

நீ எந்தத் தெருவில் வசிக்கிறாய்?

நான்———தெருவில் வசிக்கிறேன்.

உன் தகப்பனார் பெயர் என்ன?

என் தகப்பனார் பெயர்———.

உன் தகப்பனாருக்கு என்ன வேலை?

என் தகப்பனாருக்கு———வேலை.

நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

நான் இரண்டாவது வகுப்பில்———.

உன் வயது என்ன?

என் வயது———.

11. கோழி



கோழி வீட்டில் வளரும் பறவை.
இதன் இறகுகள் குட்டையானவை.
இது அதிக உயரம் பறக்காது.
பெட்டைக்கோழி முட்டை இடும்.
முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும்.
கோழி மண்ணைக் கிளறி இரை தேடும்.
குஞ்சுகளைக் கூடவே கூட்டிப் போகும்.
ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர்.
அதன் தலையில் கொண்டை உண்டு.
அது அதிக அழகாய் இருக்கும்.
சேவல் அதிகாலையில் கூவும்.

12. எழுத்துக்களின் ஒலி பேதங்கள்

ஆசிரியர்க்கு : கண், தங்கம், மகன் ஆகிய சொற்களில் 'க' என்ற எழுத்தின் ஒலி வேறுபடுவதை மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படி நன்கு உச்சரித்துக் காட்டவும். பிற எழுத்துக்களுக்கும் இவ்வாறே.

கண்	**தங்கம்**	**மகன்**
தச்சர்	**மஞ்சள்**	**சரம்**
சட்டம்	**கடவுள்**	——
தலை	**பந்தம்**	——
பணம்	**கம்பம்**	——
முறம்	**முற்றம்**	**மூன்று**

கல் மிக கனமானது.
தச்சர் ஊஞ்சல் செய்கிறார்.
படத்தின் சட்டம் பார்.
இது தட்டார் செய்த நகை.
பலமாய் பறை அடி.
ஏணி ஏறிக் கீற்று எடு.
தனி வழி போவது பயம்.
பட்டுப் புடவை நீல நிறம்.
மஞ்சள் வர்ணம் பூசு.
தங்கம் அதிக விலை உள்ளது.
சுக்கும் மிளகும் வாங்கு.
மூன்று கூறு வற்றல் கொடு.

படப் பழக்கம்—2



ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

13. கை வீசல்

(பாட்டு)

கை வீசம்மா கை வீசு
    கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
    மெதுவாய்த் தின்னலாம் கை வீசு
பழங்கள் வாங்கலாம் கை வீசு
    பாடித் தின்னலாம் கை வீசு
பொம்மைகள் வாங்கலாம் கை வீசு
    போய் விளையாடலாம் கை வீசு
சொக்காய் வாங்கலாம் கை வீசு
    சொகுசாய்ப் போடலாம் கை வீசு
மல்லிகை வாங்கலாம் கை வீசு
    மாலைகள் கட்டலாம் கை வீசு
கோவில் போகலாம் கை வீசு
    கும்பிட்டு வரலாம் கை வீசு
தேரைப் பார்க்கலாம் கை வீசு
    திரும்பி வரலாம் கை வீசு.

14. தனி வாக்கியங்கள்



பசு பால் கொடுக்கிறது.

எருது ஏர் உழுகிறது.

நாய் வீட்டைக் காவல் செய்கிறது.

பூனை எலியைப் பிடிக்கிறது.

குதிரை வண்டி இழுக்கிறது.

கழுதை பொதி சுமக்கிறது.

ஒட்டகம் பாரம் சுமக்கிறது.

மீன் தண்ணீரில் நீந்துகிறது.

சேவல் அதிகாலையில் கூவி எழுப்புகிறது.

காகம் அசுத்தங்களைப் போக்குகிறது.

15. பிராணிகளின் ஒலிகள்



மயில்	அகவுகிறது.
கோழி	கூவுகிறது.
காக்கை	கரைகிறது.
குயில்	கூவுகிறது.
ஆந்தை	அலறுகிறது.
பூனை	சீறுகிறது.
நாய்	குரைக்கிறது.
நரி	ஊளையிடுகிறது.
ஆடு	கத்துகிறது.
பசு	கதறுகிறது.
குதிரை	கனைக்கிறது.
கழுதை	கத்துகிறது.
பன்றி	உறுமுகிறது.
யானை	பிளிறுகிறது.
புலி	உறுமுகிறது.
சிங்கம்	கர்ஜிக்கிறது.



16. இரட்டைச் சொற்கள்

வாழைப்பழம் சீப்புச் சீப்பாய் இருக்கிறது.

காய்கள் குலை குலையாய்க் காய்க்கின்றன.

மனிதர் கூட்டம் கூட்டமாய் நிற்கிறார்கள்.

ஆடுகள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.

எறும்புகள் சாரை சாரையாய் ஊருகின்றன.

புஷ்பம் கொத்துக் கொத்தாய் பூக்கிறது.

செடிகளை வரிசை வரிசையாய் நடுகிறார்கள்.

புத்தகங்கள் அடுக்கு அடுக்காய் இருக்கின்றன.

வைக்கோலைப் போர் போராய் போடுகிறார்கள்.

இளநீரை மட மட வென்று குடித்தான்.

தங்கம் பள பளப்பாய் இருக்கும்.

அவன் கல கல வென்று நகைத்தான்.

பயிற்சி :-நல்ல பிள்ளை

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி.

நல்ல பிள்ளை காலையில் எழுந்திருக்கிறன்.

கை கால் சுத்தம் ____________.

கடவுளைத் ____________.

பாடத்தை நன்ருய்ப் ____________.

சுத்தமான உடை ____________.

சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் ____________.

உபாத்தியாயர் சொல்வதைக் ____________.

அவர் சொல்படி ____________.

பிள்ளைகளிடம் அன்பாய் ____________.

சரியான காலத்தில் சாப்பாடு சாப்பிடுகிறன்.

மாலையில் விளையாட்டு ____________.

இரவில் பாடம் ____________.

எப்பொழுதும் உண்மை ____________.

பெரியவர்களுக்குப் பணிந்து ____________.

நீயும் நல்ல பிள்ளையாய் இரு.

17. சூரியனும் சந்திரனும்



சூரியன்

சந்திரன்

சூரியன் காலையில் உதிக்கிறது.
நடுப்பகலில் உச்சியில் இருக்கிறது.
மாலையில் சூரியன் மறைகிறது.
இரவில் சந்திரன் ஒளி கொடுக்கிறது.
சூரியன் சூடும் வெளிச்சமும் கொடுக்கிறது.
சந்திர ஒளி வெப்பமாக இராது.
சூரிய வெளிச்சம் இல்லாத காலம் இரவு
சூரிய வெளிச்சம் உள்ள காலம் பகல்.
ஒரு பகலும் இரவும் சேர்ந்தது ஒருநாள்
நாளுக்குக் கிழமை என்று பெயர்.
ஏழு நாட்கள் ஒரு வாரம்.
ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள்.
பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்.

18. திசைகள்

காலையில் சூரியன் கிழக்கே உதிக்கிறது.
நீ கிழக்கே பார்த்து நில்.
இப்பொழுது உன் முன் பக்கம் கிழக்கு.
உன் பின் பக்கம் மேற்கு.
உன் கைகளைப் பக்கங்களில் நீட்டு.
உன் வலதுகைப் பக்கம் தெற்கு.
உன் இடதுகைப் பக்கம் வடக்கு.
மாலையில் சூரியன் மேற்கில் மறைகிறது.
மொத்தம் நான்கு திசைகள் உண்டு.
அவைகளின் பெயர்களைச் சொல்லு.
கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு
எனத் திசைகள் நான்கு.

19. உரையாடல்

ராமா, இது உன் புத்தகமா ?

ஆம் ஐயா, அது என் புத்தகம்.

இது உன் கற்பலகையா ?

இல்லை ஐயா, அது என்னுடையது அல்ல.

கமலா, உனக்கு எத்தனை தம்பி உண்டு?

எனக்கு ஒரு தம்பி உண்டு, அம்மா!

உனக்குத் தங்கை உண்டா ?

அம்மா, எனக்குத் தங்கை இல்லை.

சீனு, உனக்கு என்ன வேண்டும்?

எனக்குப் புத்தகம் வேண்டும், ஐயா!

உனக்குப் பேனா வேண்டுமா ?

எனக்குப் பேனா வேண்டாம், ஐயா !

கோபாலா, கணக்குச் செய்.

வகுப்பில் சத்தம் செய்யாதே.

20. உரையாடல்

நீ பள்ளிக்கூடம் போகிறாயா?
ஆம், நான் பள்ளிக்கூடம் போகிறேன்.
சூரி, இன்று என்ன கிழமை?
இன்று ஞாயிற்றுக் கிழமை.
இன்று பள்ளிக்கூடம் உண்டா?
இன்று பள்ளிக்கூடம் இல்லை.
நேற்று என்ன கிழமை?
நேற்று சனிக் கிழமை.
நீ நேற்று பள்ளிக்கூடம் போனாயா?
நான் நேற்று பள்ளிக்கூடம் போனேன்.
நாளை என்ன கிழமை?
நாளை திங்கட் கிழமை.
நீ நாளை பள்ளிக்கூடம் போவாயா?
நான் நாளை பள்ளிக்கூடம் போவேன்.
இப்பொழுது நீ என்ன செய்கிறாய்?
இப்பொழுது நான் எழுதுகிறேன்.
இன்று காலையில் என்ன செய்தாய்?
இன்று காலையில் பாடம் படித்தேன்.
இன்று மாலையில் என்ன செய்வாய்?
இன்று மாலையில் விளையாடுவேன்.

21. உரையாடல்

சூரி, உன் புத்தகத்தை எடு.
நீ என்ன செய்தாய்?
நான் புத்தகத்தை எடுத்தேன்.
அதை மேஜையின் மேல் வை.
ராமா, சூரி என்ன செய்கிறான்.
சூரி புத்தகத்தை வைக்கிறான்.
கோபாலா, சூரி என்ன செய்தான்?
சூரி புத்தகத்தை வைத்தான்.
நான் என்ன செய்கிறேன்?
நீங்கள் புத்தகத்தை எடுக்கிறீர்கள்.
நான் என்ன செய்தேன்?
நீங்கள் புத்தகத்தை எடுத்தீர்கள்.
புத்தகம் எங்கே இருந்தது?
புத்தகம் மேஜையில் இருந்தது.
சூரி, இங்கே வா.
ராமா, சூரி என்ன செய்தான்?
சூரி அங்கே வந்தான்.
நீ எங்கே போனாய்?
நான் வீட்டுக்குப் போனேன்.
மாலையில் நீ எங்கே போவாய்?
மாலையில் விளையாடப் போவேன்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் படி :—

1. நான் இப்பொழுது வருகிறேன்.
2. நாங்கள் ______ ______.
3. நீ ______ ______.
4. நீங்கள் ______ ______.
5. அவன் ______ ______.
6. அவள் ______ ______.
7. அவர்கள் ______ ______.
8. அது ______ ______.
9. அவைகள் ______ ______.

1. நான் நேற்று வந்தேன்.
2. நாங்கள் ______ ______.
3. நீ ______ ______.
4. நீங்கள் ______ ______.
5. அவன் ______ ______.
6. அவள் ______ ______.
7. அவர்கள் ______ ______.
8. அது ______ ______.
9. அவைகள் ______ ______.

1. நான் நாளை வருவேன்.
2. நாங்கள் ______ ______.
3. நீ ______ ______.
4. நீங்கள் ______ ______.
5. அவன் ______ ______.
6. அவள் ______ ______.
7. அவர்கள் ______ ______.
8. அது ______ ______.
9. அவைகள் ______ ______.

22. சுக வழி

1. காலையில் துயில் எழு.
2. தெய்வத்தை வழிபடு.
3. பற்களை நன்றாய்த் துலக்கு.
4. அழுக்குத் தேய்த்துக் குளி.
5. ஆடையைத் துவைத்துக் கட்டு.
6. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
7. கூழானாலும் குளித்துக் குடி.
8. நன்றாக மென்று உண்.
9. மீதூண் விரும்பேல்.
10. பசித்துப் புசி.
11. மாலையில் உலாவு.
12. வியர்க்க விளையாடு.
13. கண்ட இடத்தில் துப்பாதே.
14. நகத்தைக் கடிக்காதே.
15. சுத்தம் சோறு போடும்.

பயிற்சி

1. விடை எழுது :—
   1. காலையில் எழுந்ததும் என்ன செய்யவேண்டும்?
   2. எப்படிக் குளிக்கவேண்டும்?
   3. எப்பொழுது புசிக்கவேண்டும்?
2. பொருத்தமாகச் சேர்த்துப்படி :—

நகத்தை	குளித்துக் குடி.
மாலையில்	துப்பாதே.
கூழானாலும்	கடிக்காதே.
கண்ட இடத்தில்	உலாவு.

23. எலிக் கூடு



கூட்டில் ஆகாரம் இருக்கிறது.

ஒரு எலி வருகிறது.





கூட்டுக்குள் நுழைகிறது.

ஆகாரத்தைக் கடிக்கிறது.





எலி கூட்டில்
அகப்படுகிறது.

கூட்டில் என்ன இருந்தது?

எலி என்ன செய்தது?

பிறகு என்ன நடந்தது?

கூட்டில் ஆகாரம் இருந்தது; எலி வந்தது; கூட்டுக்குள் நுழைந்தது; ஆகாரத்தைக் கடித்தது; எலி கூட்டில் அகப்பட்டது.

24. பூனை

பூனை வீட்டில் வளரும் பிராணி. பூனையில் பல நிறங்கள் உண்டு.

பூனை பகலில் படுத்துத் தூங்கும். இரவில் அதற்குக் கண் நன்ருய்த் தெரியும். பூனை எலி பிடிக்கும்.

பூனையின் கால்களின் அடியில் மெதுவான சதைத் திண்டுகள் உண்டு. அதன் நகங்கள் கூர்மையானவை. சாதாரணமாய் அது நகங்களை உள்ளே இழுத்துக் கொண்டிருக்கும். அது நடக்கும்போது ஓசை உண்டாவதில்லை. இஷ்டமானபோது அது நகங்களை வெளியே நீட்டிக் கொள்ளும். எலியைக் கண்டதும் நகங்களை நீட்டிக்கொண்டு அதன் மேல் பாயும்.

பால், தயிர், வெண்ணெய், நெய், மாமிசம், சோறு முதலியவைகளைப் பூனை தின்னும். எலிகளையும் சிறு பறவைகளையும் பிடித்துத் தின்னும். நாயைக் கண்டால் பயந்து ஓடும்.

புதுச் சொற்கள் : —

நன்ருய் - படுத்து - தூங்கும் - மெதுவான - சதை - பாயும் - தின்னும்.

பயிற்சி

1. விடை எழுது :—
   1. பூனைக்குக் கால்களின் அடியில் என்ன இருக்கின்றன ?
   2. பூனை நடக்கும்போது ஏன் ஓசை உண்டாவதில்லை?
   3. பூனை எவற்றைச் சாப்பிடும்?
2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—
   1. பூனைக்கு ——— கண் நன்றாகத் தெரியும்.
   2. பூனை ——— பிடிக்கும்.
   3. பூனை எலி பிடிக்கும்பொழுது தன் நகங்களை ——— அதன் மேல் பாயும்.

---

25. முரசுப் பாட்டு

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர் ?
பிள்ளைகள் பெற்றதப் பூனை –அவை
பேருக் கொரு நிறமாகும் ;
சாம்பல் நிறம் ஒரு குட்டி—கருஞ்
சாந்து நிறம் ஒரு குட்டி.
பாம்பு நிறம் ஒரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம் ஒரு குட்டி.
எந்த நிறம் இருந்தாலும் அவை
யாவும் ஒரே தரம் அன்றோ ?
இந்த நிறம் சிறி தென்றும்—இஃது
ஏற்றம் என்றும் சொல்ல லாமோ?
ஒன்றென்று கொட்டுமுரசே !—அன்பில்
ஓங்கென்று கொட்டுமுரசே !
நன்றென்று கொட்டுமுரசே !—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

—பாரதியார்.

26. நாய்

இது ஒரு நாயின் படம். நாய் வீட்டில் வளரும் பிராணி. நாயில் பல வகைகள் உண்டு. நாயில் பல நிறங்களும் உண்டு.



தன்னை வளர்ப்பவரிடம் நாய் பிரியமாய் இருக்கும். வீட்டைக் காவல்செய்யும். நாய்க்குச் சந்தோஷம் வந்தால் வாலை ஆட்டும். கோபம் வந்தால் பல்லைக்காட்டி உறுமும். அந்நியரைக் கண்டால் குரைக்கும்.

நாய் தூரத்தில் உள்ள பொருள்களையும் வாசனையால் அறிந்துகொள்ளும். இதை மோப்பம் பிடித்தல் என்று சொல்லுகிறோம்.

நாய் வேகமாய் ஓடும். சில நாய்கள் தண்ணீரில் நன்றாய் நீந்தும். நாய்கள் மனிதனுக்குப் பல உதவிகள் செய்கின்றன. பால், சோறு, இறைச்சி, முதலியவற்றை நாய் தின்னும். எலும்பைக் கடிக்க இதற்கு அதிகப் பிரியம். இது நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டே ஓடும். நாய் மிகவும் நன்றியுள்ள பிராணி.

புதுச் சொற்கள் :—

பிரியம் - சந்தோஷம் - கோபம் - வாசனை - மோப்பம் - உதவி - அறிந்துகொள்ளும்.

பயிற்சி

1. **விடை எழுது :—**

   1. சந்தோஷம் வந்தால் நாய் என்ன செய்யும்?
   2. கோபம் வந்தால் நாய் என்ன செய்யும் ?
   3. நாய் எவற்றைப் பிரியமாய்த் தின்னும் ?

2. **கீழ்வரும் எழுத்துக்களைச் சரியானபடி மாற்றி எழுதிச் சொற்களாக்கு.**

   ணிபிரா — ல்வகா — பம்ப்மோ—
   லும்எபு — யம்பிரி — ஊனசவா.

---

27. வாகனங்கள்



இது ஒரு கை வண்டி. இதை மனிதன் இழுக்கிறான். இதில் மூட்டைகளை ஏற்றுவார்கள்.



இது ஒரு மாட்டு வண்டி. வண்டியை மாடு இழுக்கிறது. இதை ஒற்றை மாட்டு வண்டி என்று சொல்லுகிறோம். இந்த வண்டியில் மனிதர்கள் ஏறிப் போவார்கள். இதில் சாமான்களும் ஏற்றலாம். இரண்டு மாடுகள் இழுக்கும் வண்டியும் உண்டு. அதை இரட்டை மாட்டு வண்டி என்று சொல்லுகிறோம்.

இது ஒரு குதிரை வண்டி. குதிரை வண்டி வேகமாய்ப் போகும். இதில் மனிதர் ஏறிச் செல்லுவார்கள்.



இது புகை வண்டி. இது இரும்புத் தண்டவாளங்களின் மேல் ஓடும். இது நீராவியால் ஓடுகிறது. இதில் பல வண்டிகள் இருக்கின்றன. வண்டிகளை எஞ்சின் இழுக்கிறது. புகை வண்டி மிகவும் வேகமாய்ப் போகும்.



இது ஒரு மோட்டார் வண்டி. இது தரையில் ஓடும். இதற்கு நான்கு சக்கரங்கள் உண்டு. சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பர் போட்டிருக்கிறது. இதுவும் மிக வேகமாய்ப் போகும்.



இது ஒரு சைக்கிள் வண்டி. இதற்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. இதைத் துவிச் சக்கர வண்டி என்றும் சொல்லலாம். இதில் ஒருவர் ஏறிச் செல்லலாம்.

இது ஒரு கப்பல். கப்பல் கடலில் போகும். இக் காலத்தில் நீராவியின் சக்தியால் கப்பல்கள் ஓடுகின்றன. கப்பலில் மனிதர்களும் போவார்கள்; சாமான்களையும் ஏற்றிச் செல்லுவார்கள்.

புதுச் சொற்கள் :—

மூட்டைகள் - வேகமாய் - செல்லுவார்கள் - தண்டவாளம் - நீராவி - எஞ்சின் - ரப்பர் - துவிச் சக்கர வண்டி.

பயிற்சி

1. விடை எழுது :—

1. எது வேகமாகப் போகும்—குதிரை வண்டியா, மாட்டு வண்டியா ?

2. மோட்டார் வண்டிச் சக்கரங்களைச் சுற்றி என்ன போடப்பட்டிருக்கிறது?

3. கப்பல் எதன் சக்தியால் ஓடுகிறது?

2. பொருத்தமாகச் சேர்த்துப்படி :—

புகைவண்டி	குதிரையால் இழுக்கப்படும்.
மாட்டு வண்டி	ரப்பர்ச் சக்கரம் உடையது.
மோட்டார் வண்டி	மாடுகளால் இழுக்கப்படும்.
குதிரை வண்டி	தண்டவாளங்களின் மேல் செல்லும்.

28. பிராணிகளிடத்து அன்பு

(பாட்டு)

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா. (1)

சின்னஞ் சிறு குருவிபோல—நீ
திரிந்து பறந்துவா பாப்பா.
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா. (2)

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா. (3)

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா. (4)

—பாரதியார்

படப் பழக்கம்—3

தைரியம் உள்ள ராமன்

ராமனும் அவன் தங்கையும் தெருவில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாய் அவர்களைக் கடிக்க ஓடிவந்தது. ராமனுடைய தங்கை பயந்து அழுதாள். ராமன் தன் தங்கையை எப்படிக் காப்பாற்றினான்?

படத்தைப் பார்த்து, கதையைச் சொல்லுங்கள்.

29. நல்ல பழக்கம்

(பாட்டு)

என் அருமைக் குழந்தாய்
இன்று காலை எழுந்தாய்
சொன்ன சொல்லைக் கடவாய்
சுறு சுறுப்பாய் நடப்பாய்.

காலையிலே எழுவாய்
கடவுளைத் தொழுவாய்
வேலைகளில் முயல்வாய்
விருப்புடன் பயில்வாய்.

அன்னை தந்தை வணங்கு
அவர் சொல்லுக் கிணங்கு
நன்னயமாய்ப் பழகு
நல் வழியில் ஒழுகு.

பள்ளிக்கூடம் போக
பரபரப் பாக
உள்ள மகிழ்வோடு
உற்சாகமாய் ஓடு.

நல்ல பிள்ளையோடு
நாளும் நீயே கூடி
நல்லவனாய்ச் சேராய்
நன்மையுண்டு பாராய்.

சின்னஞ் சிறு ஜந்துவை
செய்யாதே நீ தொந்தரை
அன்னம் தண்ணீர் தந்ததை
ஆதரிப்பாய் மைந்தனே!

—நா. கனகராஜ ஐயர்.

30. புத்தியுள்ள காகம்

வெயில் காலத்தில் ஒரு நாள் ஒரு காகத்திற்குத் தாகமாய் இருந்தது. தண்ணீருக்காக அது அங்கும் இங்கும் அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை.

கடைசியில் ஓர் இடத்தில் தண்ணீர்க் குடம் ஒன்றைப் பார்த்தது. உடனே குடத்தின் மேல் உட்கார்ந்தது. ஆனால் குடத்தில் கொஞ்சம் தண்ணீர்தான் இருந்தது. அது காகத்திற்கு எட்டவில்லை.

காகம் 'என்ன செய்யலாம்' என்று யோசித்துப் பார்த்தது. பிறகு கீழே கிடந்த சிறு கல் ஒன்றைத் தன் அலகால் பொறுக்கியது. அதைக் கொண்டு வந்து தண்ணீர்க் குடத்தில் போட்டது. இப்படியே ஒவ்வொன்றாகப் பல கற்களைப் போட்டது. குடத்தில் இருந்த தண்ணீர் சிறிது சிறிதாக மேலே வந்தது.

கடைசியில் குடத்தில் இருந்த தண்ணீர் காகத்திற்கு எட்டியது. காகமும் வயிறு நிறையத் தண்ணீர் குடித்தது. அதன் தாகமும் அடங்கியது. பின்பு அது சந்தோஷமாய்ப் பறந்து சென்றது.

புதுச் சொற்கள் :—

தாகம் - இடம் - அலகு - வயிறு - அலைந்தது - அடங்கியது - கிடைக்கவில்லை - எட்டவில்லை - யோசித்து - ஒவ்வொன்றாக.

பயிற்சி

1. விடை எழுது :—

    1. காகம் எதற்காக அங்குமிங்கும் அலைந்தது?
    2. குடத்தில் எவ்வளவு தண்ணீர் இருந்தது?
    3. காகம் குடத்தில் என்ன போட்டது?
    4. குடத்திலிருந்த தண்ணீர் எப்பொழுது மேலே வந்தது?

2. கீழே உள்ள சொற்களைச் சரியானபடி மாற்றி வாக்கியங்களாக அமை :—

    1. தாகம் காகத்தின் அடங்கியது.
    2. கற்களை போட்டது குடத்தில் காகம்.
    3. எட்டவில்லை குடத்தில் காகத்திற்கு தண்ணீர் இருந்த.

---

31. பள்ளிக்கூடத் தோட்டம்

இது எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம். முதலில் நாங்கள் நிலத்தை நன்றாய்க் கொத்தினோம். பிறகு உரம் போட்டோம். பாத்திகள் கட்டினோம். விதைகள் விதைத்தோம். சில செடிகளை நட்டோம். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தோம். பாத்திகளுக்குப் பாய்ச்சினோம். செடி, கொடி முதலியன முளைத்துத் தழைத்தன.

இது கீரைப் பாத்தி. பாத்தியில் கீரை விதைகளைத் தெளிக்க வேண்டும். கீரையைச் சமைத்துச் சாப்பிடலாம். உடல் நலத்துக்கு இது மிகவும் நல்லது.

இது கத்திரிச் செடி. செடியில் கத்திரிக்காய்களைப் பார். கத்திரிச் செடிகள் அதிக உயரம் வளரா. வெண்டை, மிளகாய், கொத்தவரை முதலிய பல காய் கறிச் செடிகளும் இங்கே இருக்கின்றன.

இது அவரைக் கொடி. அவரைக் கொடி உயரப் படரும். சுரை, புடல், பீர்க்கு முதலிய கொடிகளும் உயரப் படரும். பறங்கிக் கொடி தரை மேல் படரும். பூசணி, பாகல் முதலிய கொடிகளும் தரைமேல் படரும். காய் கறிகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம்.



இது ரோஜாச் செடி. ரோஜாப் புஷ்பம் அழகானது. நல்ல வாசனையும் உள்ளது. மல்லிகை, சாமந்தி, அரளி முதலிய புஷ்பச் செடிகளும் இங்கே இருக்கின்றன. முல்லை, சம்பங்கி முதலிய புஷ்பக் கொடிகளும் இருக்கின்றன.

இது ஒரு வாழை. இதற்கு விதை கிடையாது. வாழைக் கன்றை நடவேண்டும். வாழைக்குக் கிளைகள் இல்லை. இதன் இலை பெரியது. இலையில் சாப்பிடலாம். வாழையில் ஒரு குலைதான் உண்டாகும். குலையில் காய்கள் இருக்கின்றன. வாழைப் பூவைப் பார். வாழைப்பூ, தண்டு, காய் இவைகளைக் கறி சமைக்கலாம். வாழைப் பழத்தைச் சாப்பிடலாம். எங்கள் தோட்டம் மிகவும் செழிப்பாய் இருக்கிறது.

புதுச் சொற்கள் :—

தோட்டம் - நிலம் - உரம் - பாத்தி - கிணறு - உடல் நலம் - காய் கறி - கன்று - கிளை - குலை - செழிப்பு - கொத்து - நடு - இறை - பாய்ச்சு - முளை - தழை - தெளி - சமை - படர்.

பயிற்சி

1. விடை எழுது:—

1. கீரை எதற்கு நல்லது?
2. தோட்டத்தில் வளரும் காய்கறிச் செடிகளில் நான்கு சொல்லு.
3. வாழையின் எந்தப் பாகங்களைச் சமைத்து உண்ணலாம்?

2. பொருத்தமாகச் சேர்த்து எழுது:—

அவரைக் கொடிக்கு	நல்ல வாசனை உண்டு.
ரோஜாப் பூவுக்கு	கிளைகள் இல்லை.
வாழைக்கு	பந்தல்போடவேண்டும்.

32. அரிசியின் கதை

நெல் விளையும் வயல் நன்செய். கம்பு, சோளம், துவரை முதலிய தானியங்கள் விளையும் நிலம் புன்செய். படத்தில் இருப்பது ஒரு நெல் வயல். நெல் வயலை முதலில் கலப்பையால் உழுவார்கள். கலப்பைக்கு ஏர் என்ற பெயரும் உண்டு. கலப்பையை இரண்டு மாடுகள் இழுத்துப் போகும்.

உழுதபின் தண்ணீர் பாய்ச்சுவார்கள். பிறகு பரம்பு அடிப்பார்கள். பரம்பு அடிப்பதால் வயல் ஒரே மட்டம் ஆகும். பரம்பு அடித்தபின் வயலில் ஓரிடத்தில் விதை தெளிப்பார்கள். சில நாட்களில் விதைகள் ஊறி முளைக்கும். இந்த முளைக்கு நாற்று என்று பெயர்.

நாற்று வளர்ந்ததும் பிடுங்கி நடுவார்கள். இதுதான் நாற்று நடவு. நாற்று சில நாட்களில் பயிர் ஆகும். பிறகு களை எடுப்பார்கள். இதன் பின் பயிர்கள் கதிர் விடும்.

கதிர்கள் முற்றித் தலை சாய்ந்தபின் அவைகளை அறுத்துக் கட்டுகளாகக் கட்டுவார்கள். இதுதான் அறுவடை. கட்டுகளைக் களத்துக்குக் கொண்டுபோவார்கள். அங்கேதான் தாளைப் பிடித்துக்கொண்டு அவைகளை அடிப்பார்கள். கதிர்களிலிருந்து நெல் உதிர்ந்து விடும். நெல் இல்லாத தாள்களை வைக்கோல் என்று சொல்லுவார்கள். வைக்கோலைப் போர் போராய்ப் போடுவார்கள்.

உதிர்ந்த நெல்லைத் தூசிபோக்கிக் குவிப்பார்கள். பிறகு நெல்லை அளந்து சாக்குப் பைகளில் கட்டுவார்கள். அவைகளை வண்டியில் ஏற்றிக் களஞ்சியத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.

நெல்லை உரலில் போட்டு உலக்கையால் குத்துவார்கள். நெல்லைக் குத்தினால் அரிசி ஆகும். அரிசியைச் சோறு சமைப்பார்கள். சோற்றை நாம் சாப்பிடுகிறோம். உரலில் குத்தின அரிசியே நல்லது.

புதுச் சொற்கள்: –

வயல் - நன்செய் - புன்செய் - மட்டம் - நாற்று - பயிர் - களை - கதிர் - களம் - தாள் - வைக்கோல் - போர் - தூசி - சாக்குப்பை - களஞ்சியம் - விளையும் - ஊறி - பிடுங்கு - முற்றி - உதிர்ந்து - அளந்து - அறு - கட்டு - குவி - குத்து - உழுதல் - பரம்பு அடித்தல் - நடவு - அறுவடை - கதிர் அடித்தல்.

பயிற்சி

1. விடை எழுதுக:—
   1. நாற்றுக்களை என்ன செய்வார்கள்?
   2. நெற் கதிர்களை அறுத்த பிறகு என்ன செய்வார்கள்?
   3. களத்தில் கதிர்களிலிருந்து நெல்லை எப்படிப் பிரித்தெடுப்பார்கள்?
2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி:—
   1. பரம்பு அடிப்பதால் வயல்———ஆகும்.
   2. நெல் உதிர்ந்த தாளுக்கு———என்று பெயர்.
   3. நெல்லை உரலில்போட்டு———குத்துவார்கள்.
3. எதிர்ப் பக்கத்திலுள்ள படங்களைப் பார்த்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது.

33. கடைத் தெரு

(மணியும் அவன் தந்தையும் கடைத் தெருவுக்குப் போகிறார்கள்)

மணி:—அப்பா! இந்தத் தெருவில் மட்டும் ஏன் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிறார்கள்?

தந்தை:-மணி! இது கடைத்தெரு; அதனால் தான் இங்கே கூட்டம் அதிகமாயிருக்கிறது. இங்கே ஜனங்கள் என்ன செய்கிறார்கள் பார்! அதோ அவன் கையில் என்ன வைத்திருக்கிறான்?

மணி:—அப்பா! அவன் கையில் ஒரு கூடை வைத்திருக்கிறான். அதில் பல காய்கறிகள் இருக்கின்றன. இவைகளை எங்கேயிருந்து கொண்டு போகிறான்?

தந்தை:—அவன் அவைகளைக் காய்கறிக்கடையிலிருந்து வாங்கிக்கொண்டு போகிறான். அதோ பார்! அந்தக் காய்கறிக் கடையில் எல்லாவிதமான காய்கறிகளும் இருக்கின்றன.

மணி:-அப்பா! அதோ ஒரு பெண் ஒரு புதுச் சேலையைக் கையில் வைத்திருக்கிறாளே. அது எங்கே வாங்கினது?

தந்தை: சேலை, வேஷ்டி முதலிய துணிகள் விற்கும் கடைக்கு ஜவுளிக்கடை என்று பெயர்.

மணி:— நம் வீட்டுக்கு வேண்டிய புளி, உப்பு, மிளகாய் எல்லாம் எங்கே கிடைக்கும்?

தந்தை:—மணி! அதோ பார்! அதுதான் பல சரக்குக் கடை. அதில்தான் அவைகளை வாங்கலாம்.

மணி:—பக்கத்தில் ஒரு கடையில் குடங்களும் தகர டப்பிகளும் இருக்கின்றன. அது என்ன கடை அப்பா?

தந்தை:—மணி! நீயே போய்க் கேட்டுக் கொண்டு வா.

(மணி போய்க் கேட்டு வருகிறுன்.)

மணி:—அப்பா! அது எண்ணெய்க் கடையாம். அதற்குப் பக்கத்தில் பணியாரக்கடை இருக்கிறது. எனக்கு ஒரு லட்டு வாங்கித் தருகிறீர்களா?

தந்தை:—ஆகட்டும் மணி!

மணி:—அப்பா! எனக்கு ஒரு பென்சில் வேண்டும். அதை எங்கே வாங்கலாம்?

தந்தை:—மணி! இந்த இரண்டு அணுவைக் கொண்டுபோய் நீயே விசாரித்து வாங்கி வா.

மணி:—சரி அப்பா!

(மணி போய்ச் சிறிது நேரத்திற்குப் பின், பென்சிலுடன் திரும்பி வருகிறுன்.)

தந்தை:—மணி! ஏன் இவ்வளவு நேரம்?

மணி:—அப்பா! முதலில் ஒரு கடைக்குப் போனேன். அதில் பென்சில் இல்லையாம். அது நவதானியக் கடையாம். அங்கே நெல், உளுந்து, பயறு முதலியவைகள் இருக்கின்றன. பின்பு ஒரு கடைக்குப் போனேன். அது பழக்கடையாம். அதில் பலவிதமான பழங்கள் இருக்கின்றன. பிறகு இரும்புக்கடை, மரக்கடை, இவைகளிலெல்லாம் கேட்டுவிட்டுக் கடைசியில் ஒரு கடையில் இதை வாங்கினேன். அந்தக் கடையில் பேனு, பென்சில், காகிதம், நோட்டு எல்லாம் இருக்கின்றன, அப்பா!

தந்தை:—நல்லது, இன்று நீயே பென்சில் வாங்கத் தெரிந்துகொண்டாய். வீட்டுக்குப் போவோம் வா.

புதுச் சொற்கள்:—

ஜனங்கள் - கூட்டம் - ஜவுளி - எல்லாம் - பலசரக்கு - தகர டப்பிகள் - லட்டு - நேரம் - நவதானியம் - நோட்டு - பணியாரம் - பென்சில் - காகிதம் - அதனால் - கேட்டு - விசாரித்து - திருப்பி.

பயிற்சி

1. **விடை எழுதுக:**—
   1. துணிகள் விற்கும் கடைக்கு என்ன பெயர்?
   2. பலசரக்குக் கடையில் என்ன சாமான்கள் கிடைக்கும்?
   3. நவதானியக் கடையில் கிடைக்கும் தானியங்களில் மூன்று சொல்லு.

2. **பின்வருபவற்றைப் பொருத்தமாகச் சேர்:**—

காய்கறிக் கடை	மிளகு
துணிக் கடை	உளுந்து
பலசரக்குக் கடை	சேலை
நவதானியக் கடை	பாகற்காய்

34. புறுவும் எறும்பும்

ஒரு குளக்கரையில் மரம் ஒன்று இருந்தது. அதில் ஒரு புறு கூடுகட்டி வசித்து வந்தது. அந்த மரத்தின் கீழே ஒரு எறும்புப் புற்று இருந்தது. அதில் சில கட்டெறும்புகள் வசித்து வந்தன.

ஒரு நாள் அந்த எறும்புகள் குளக்கரை ஓரத்தில் இரை தேடிக் கொண்டிருந்தன. அப்பொழுது பலமான காற்று அடித்தது. ஓர் எறும்பு தண்ணீரில் தவறி விழுந்தது. அது தண்ணீரில் நீந்த முடியாமல் தத்தளித்தது.

மரத்தில் இருந்த புறு இதைப் பார்த்தது. உடனே ஒரு இலையைப் பறித்து, எறும்பின் அருகில் கொண்டுபோய்ப் போட்டது. இலை தண்ணீரின் மேல் மிதந்தது. எறும்பு மெது வாய் அதில் ஏறிக்கொண்டது. சிறிது நேரத்தில் அந்த இலை எறும்போடு கரையை அடைந்தது. எறும்பும் உயிர் தப்பிக் கரை சேர்ந்தது.

சிறிது நேரத்தில் அங்கு ஒரு வேடன் வந்தான். அழகான அந்தப் புருவைப் பார்த்தான். உடனே தன் வில்லை எடுத்தான். புருவின் மேல் அம்பு எய்யக் குறிவைத்தான்.

மரத்தடியில் இருந்த எறும்பு இதைப் பார்த்தது. புருவைக் காப்பாற்ற எண்ணியது. உடனே ஓடி வேடன் காலைச் 'சுரீர்' என்று கடித்தது. வேடனும் 'ஐயோ' என்று அலறினன். இந்தச் சத்தத்தைக் கேட்ட புரு பறந்து ஓடித் தப்பியது.

புரு எறும்புக்குச் செய்த உதவி வீண் போகவில்லை. எறும்பைப் புரு காப்பாற்றியது. புருவை எறும்பும் காப்பாற்றியது. ஆகையால், உதவி வீண் போகாது.

புதுச் சொற்கள் :—

கரை - புற்று-கட்டெறும்பு - ஓரம் - இரை - குறி - தவறி தப்பி - அருகில் - எய்ய - காப்பாற்ற - வீண்போக - தேடு - விழு - தத்தளி - பறி - மித - அடை - சேர் - எண்ணு - அலறு.

பயிற்சி

1. விடை எழுது :—

    1. எறும்பு ஏன் தண்ணீரில் விழுந்தது ?
    2. புரு எப்படி எறும்புக்கு உதவி செய்தது ?
    3. எறும்பு புருவுக்கு எப்படி உதவி செய்தது ?

2. தவருன வாக்கியங்களைத் திருத்தி எழுது :—

    1. புரு இலையைப் பறித்துப் போட்டன.
    2. எறும்புகள் கரையில் இருந்தது.
    3. வேடன் ஐயோ என்று அலறியது.

35. கிராமம்

தகப்பனார்:—மணி, இந்தப் படத்தைப் பார். இது ஒரு கிராமத்தின் படம்.

மகன்:—அப்பா! நடுவில் ஒரு கோபுரம் தெரிகிறதே. அது என்ன?

தகப்பனார்:—அதுதான் கிராமக் கோவில்: அதற்கு நேரே பொதுச் சாவடி இருக்கிறது. சாவடிக்கு எதிரே ஊர்க்கிணற்றைப் பார்.

மற்றொரு பக்கத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள் பார். இவைகளைச் சுற்றிலும் பல வீடுகள் இருக்கின்றன.

மகன் :—அப்பா! கிராமத்தைச் சுற்றிலும் என்ன இருக்கிறது?

தகப்பனார் :—கிராமத்தைச் சுற்றி வயல்களும், தோட்டங்களும் இருக்கின்றன. ஆடுமாடுகள் மேய்வதற்கு வேண்டிய புல்தரைகளும் உண்டு. ஒரு பக்கத்தில் ஒரு ஏரியும் இன்னொரு பக்கத்தில் ஒரு வாய்க்காலும் இருக்கின்றன.

மகன் :—கிராமத்து ஜனங்கள் என்ன தொழில் செய்கிறார்கள்.

தகப்பனார் :—அவர்கள் எல்லோரும் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்கிறார்கள். அதனால்தான் அவர்கள் மிகவும் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிக்கொள்ள சிறு கடை ஒன்றும் அங்கு உண்டு.

மகன் :—அப்பா! இந்தக் கிராமத்துக்கு என்னையும் கூட்டிப்போகிறீர்களா?

தகப்பனார் :—மணி! அப்படியே போகலாம் வா.

புதுச் சொற்கள் :—

கிராமம் - சாவடி - கோபுரம் - புல்தரை - வாய்க்கால் - நிலங்கள் - ஜீவனம் - நிலைமை - சுற்றிலும் - பண்டம் - பொது - ஏரி - கூட்டி - தொழில் - தெரிகிறது.

பயிற்சி

விடை எழுது :—

1. கிராமத்தைச் சுற்றி என்ன இருக்கும்?
2. கிராம மக்கள் பொதுவாக என்ன தொழில் செய்கிறார்கள் ?

36. ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவ தொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
15. சனி நீராடு.
16. தந்தை தாய்ப் பேண்.
17. நன்றி மறவேல்.
18. பருவத்தே பயிர் செய்.
19. மீதூண் விரும்பேல்.
20. வல்லமை பேசேல்.

37. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ(டு)
இணங்க வேண்டாம்.
5. அஞ்சாமல் தனி வழியே
போக வேண்டாம்.
6. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.
7. தனம் தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.
8. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
9. கொலைகளவு செய்வாரோ(டு)
இணங்க வேண்டாம்.
10. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.
11. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.
12. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.
13. முன்கோபக் காரரோ(டு)
இணங்க வேண்டாம்.
14. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
15. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

சுதேச வாசகம்

மூன்றாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்

வி. சூ. சுவாமிநாதன்

தொகுத்தது

சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்

வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை

திருத்தியது.

வி. சூ. சுவாமிநாதன்

பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு,
மதுரை.

பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு,
சென்னை.

[பதிப்புரிமை] : : [விலை ரூ. 0–7–0

திருத்திய முதல் பதிப்பு-1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

ஆரம்பப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டப்படி, சுதேச வாசகம் மூன்றாம் புத்தகம் வெளியிடப் பெற்றுள்ளது. பாடங்கள் யாவும், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும், தற்காலச் சூழ்நிலைக்கும், இவ்வகுப்புமாணவரின் அறிவுத் திறத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. புதுச் சொற்களைச் சிரமமின்றிக் கற்பிக்கத் தக்க முறையிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

பாடத்தில் கற்ற விஷயங்களை மனத்திற்கொள்ளுமாறு செய்வதற்குரிய விளுக்களுடன், மொழிப் பயிற்சிக்கும் இலக்கணப் பயிற்சிக்கும் தேவையான கேள்விகளும் ஒவ்வொரு பாடத்திலும் தரப்பட்டுள்ளன. சில எளிய பாட்டுக்களும், கதைப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்களது சில பாட்டுக்களைச் சேர்த்துக் கொள்ள இசைவு அளித்த பிள்ளையவர்களுக்கு எம் நன்றி உரித்தாகும்.

இந் நூலைத் திருத்தியமைப்பதில் எமக்கு உதவிய ஸ்ரீ வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்.

தேச வணக்கம்

(கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம் ; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம் ;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே ! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை ! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வள மும்நகர் சாரும்சிறப்பச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி ! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங் கும்வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி ! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்.

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	தமிழ் எழுத்துக்களின் வரிசை ...	8
2.	தமிழ்மொழி வாழ்த்து (பாட்டு) ...	9
3.	சிறுமியின் தாய்மொழிப் பற்று ...	10
4.	பனையும் ஆலும் ...	13
5.	நவராத்திரி விழா ...	16
6.	வாழ்விக்கும் மழை ...	18
7.	சோம்பேறிப் பையன் (பாட்டு) ...	21
8.	பேராசையின் விளைவு ...	23
9.	ஔவையாரின் அருட் செயல்கள் ...	26
10.	கயிறு திரித்தல் ...	29
11.	உப்பு ...	31
12.	நெற்பானையும் எலியும் (பாட்டு) ...	34
13.	பாரதியார் ...	36
14.	படப் பயிற்சி–I (சிங்கத்தின் நன்றி) ...	39
15.	கொசு (பாட்டு) ...	40
16.	வேடனை ஏமாற்றிய புறாக்கள் ...	41
17.	கடற்கரையும் துறைமுகமும் ...	44
18.	இயேசு கிறிஸ்துநாதர் ...	48
19.	பருத்திச் செடி ...	51
20.	காந்தியடிகளும் ஹரிஜனங்களும் ...	54
21.	மலர்கள் (பாட்டு) ...	57
22.	அதிவீரராம பாண்டியர் ...	58
23.	தேசிங்கு ராஜன் ...	61
24.	இரு கடிதங்கள் ...	65
25.	படப் பயிற்சி–II (நாயின் நல்லறிவு) ...	67
26.	அடக்கம் பெருமை தரும் ...	68
27.	உபகாரம் வீண் போகாது ...	71
28.	பாதுஷாவின் நேர்மை ...	75
29.	கொன்றை வேந்தன் ...	77
30.	வெற்றிவேற்கை ...	79

தமிழ்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

வடமொழி

ஜ்	ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ
ஸ்	ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ
ஷ்	ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ
க்ஷ்	க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ
ஹ்	ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ

எழுத்துக்கள்

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

எழுத்துக்கள்

ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ
ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ
ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ
க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ
ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ

1. தமிழ் எழுத்துக்களின் வரிசை

எழுத்து என்பது எழுதப்படும்பொழுது வரிவடிவமாகவும் உச்சரிக்கப்படும் பொழுது ஒலி வடிவமாகவும் இருக்கும். தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களை எல்லாம் நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும்.

1. **உயிர் எழுத்துக்கள்** பன்னிரண்டு. அவை : **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.**

2. **மெய் யெழுத்துக்கள்** பதினெட்டு. அவை : **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.** உயிர் எழுத்துக்களைத் தனியாக உச்சரிக்க முடியும். ஆனால் மெய் யெழுத்துக்களைத் தனியாக உச்சரிக்க முடியாது. உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்தால் தான் மெய்யெழுத்துக்களை உச்சரிக்கமுடியும். 18 மெய் யெழுத்துக்களையும் 12 உயிர் எழுத்துக்களுடன் தனித் தனியே சேர்க்கும் பொழுது உயிர்மெய் யெழுத்துக்கள் தோன்றுகின்றன.

3. **உயிர்மெய் யெழுத்துக்கள்** இருநூற்றுப் பதினாறு. **க்** என்ற மெய்யெழுத்து உயிர் எழுத்துக்களுடன் சேரும் பொழுது **க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ** என்ற பன்னிரண்டு உயிர் மெய் யெழுத்துக்கள் உண்டாகின்றன. இதேபோல் பிற மெய் யெழுத்துக்களும் உயிர் எழுத்துக்களுடன் சேரும்.

4. **ஆய்த எழுத்து** ஒன்று. இது மூன்று புள்ளி வடிவமான ஃ என்ற எழுத்து.

எனவே தமிழ் மொழியில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. இவற்றையெல்லாம் அட்டவணையில் பாருங்கள்.

2. தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.

2. வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

—பாரதியார்.

3. சிறுமியின் தாய்மொழிப் பற்று

நாம் பேசுவது தமிழ் மொழி. இம்மாதிரியே ஒவ்வொரு நாட்டவரும் ஒவ்வொரு மொழியைப் பேசுகிறார்கள். அவரவர்களுக்குத் தங்கள் மொழி தாய் மொழியாகும். தாய் மொழியை விட்டு அயல் மொழியிலேயே எப்பொழுதும் பேச யாருக்கும் மனம் துணியாது.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மானியர், தமது நாட்டுக்கு அருகிலுள்ள **ஆல்ஸாஸ் லோரைன்** என்னும் சிறு நாட்டைப் பிடித்தனர். ஜெர்மன் சக்கரவர்த்தியாய் இருந்த **கெய்ஸர்**, லோரைன் மக்களைக் கடுமையாய் நடத்த ஆரம்பித்தார். லோரைன் மொழியில் ஒருவரும் பேசக் கூடாது என்றும் ஜெர்மன் மொழியில்தான் பேச வேண்டும் என்றும் கண்டிப்பாக உத்தரவு இட்டார். இவ்வுத்தரவை மீறியவர் கடுமையாய்த் தண்டிக்கப்பட்டனர்.

லோரைன் நாட்டினர் யாவரும் வருத்தத்துடன் தம் தாய் மொழியை விட்டு ஜெர்மன் மொழியையே பேசி வந்தனர். பள்ளிக்கூடங்களில் அரசாங்க மொழியாகிய ஜெர்மன் மொழியையே கற்பித்தார்கள். ஆனால் ஜெர்மானியாருக்குத் தெரியாமலே பலர் தம் தாய் மொழியை மறக்காமல், இரவில் தமக்குள் பேசி வந்தனர். தம் தாய்மொழியை மறக்க யார்தான் விரும்புவார்கள் ! இவ்வாறு முப்பது ஆண்டுகள் சென்றன.

ஒரு சமயம் ஜெர்மன் சக்கரவர்த்தினியான **கெய்ஸரினி**, லோரைன் நாட்டிலுள்ள ஒரு பெண்பாடசாலைக்குச் சென்றார். அப்பள்ளிக்கூடத்திலும் ஜெர்மன் மொழி மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்தது. கெய்ஸரினியைக் கண்டதும் ஆசிரியைகளும் சிறுமிகளும் ஜெர்

மன் மொழியில் வணக்கங் கூறினர். கெய்ஸரினியும் சிறுமிகளைப் பரிட்சித்தார். அவரது கேள்விகளுக்கெல்லாம் தவருது ஒரு சிறுமி விடையளித்தாள். அது கண்டு மகிழ்ந்த கெய்ஸரினி அச்சிறுமியை நோக்கி, "குழந்தாய்! உன் அறிவை மெச்சினேன். உனக்கு என்ன வேண்டும்? சொல், தருகிறேன்," என்ருர்.

அதுகேட்ட சிறுமி, "தாயே! எனக்கு வேண்டியது ஒன்றிருக்கிறது. அதைத் தாங்கள் உறுதியாய்க் கொடுக்க முடியுமோ?" என்று கேட்டாள். கெய்ஸரினி இதைக் கேட்டுச் சிறிது சினத்துடன், "தைரியமுள்ள சிறுமியே! நீ யாருடன் பேசுகிருய் தெரியுமா? ஜெர்மன் சக்கரவர்த்தினியான நான் நீ எது கேட்டாலும் தருகிறேன், கேள்!" என்ருர்.

உடனே சிறுமி முழந்தாளிட்டுக் கண்ணீர் விட்டு, "தாயே! எந்த மொழியை நாங்கள் பேசக்கூடாது என்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த எங்கள் தாய் மொழியை நாங்கள் பேச உத்தரவ

கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் எங்கள் தாய் மொழியிலேயே பாடங்கள் நடக்க வேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்" என்று பணிவுடன் வேண்டினாள்.

கெய்ஸரினி இதைக் கேட்டுச் சிறுமியின் தைரியத்தையும் மொழிப்பற்றையும் மெச்சினார். கெய்ஸரிடம் நடந்ததைச் சொல்லி சிறுமியின் வேண்டுகோளின் படியே உத்தரவுகள் போடச் செய்தார். ஒரு சிறுமியின் மொழிப்பற்றினால் அந்நாட்டிற்கே நன்மை ஏற்பட்டது.

நாமும் நம் தாய் மொழியான தமிழ்மொழியைக் கற்று அதை வளர்க்கப் பாடுபடவேண்டும்.

புதுச்சொற்கள்

மெச்சினேன்	மீறியவர்	சக்கரவர்த்தி(னி)
வணக்கம்	தண்டிக்க	கடுமையாய்
அரசாங்க	கண்டிப்பாய்	தைரியமுள்ள
முழந்தாளிட்டு	வேண்டுகோள்	பாடுபட

கேள்விகள்

1. தாய்மொழி என்றால் என்ன ?
2. லோரைன் நாட்டினர் என்ன செய்யக் கூடாது என்று ஜெர்மன் சக்கரவர்த்தி உத்தரவிட்டார்?
3. சிறுமி சக்கரவர்த்தினியினிடம் வேண்டிக் கொண்டது என்ன ?

பயிற்சி

I. மனிதர், தேவர், உயிருள்ள பொருள்கள், உயிரில்லாத பொருள்கள் இவற்றில் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ குறிக்கும் சொல்லுக்குப் பெயர்ச் சொல் என்று பெயர். ஒரு பெயர்ச் சொல் ஒரு பொருளைக் குறித்தால் ஒருமை எண் எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்தால் பன்மை எண் எனவும் சொல்லப்படும்.

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு. அவை ஒருமையா பன்மையா என்றும் கூறு :—

1. பள்ளியில் மாணாக்கர் படித்தார்கள்.
2. சிறுமியர் சக்கரவர்த்தினியை வணங்கினார்கள்.

[illegible] சென்றன.

4. பனையும் ஆலும்

பங்குனி மாதம் பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு பனங்காட்டின் நடுவே வாலிபன் ஒருவன் போய்க் கொண்டிருந்தான். வெயில் கடுமையாக இருந்தது. அவனுக்கோ பசி அதிகம். ஒரு பனையின் கீழே ஒரு திரண்ட பனம் பழத்தைக் கண்டான். அதை எடுத்தான்; பனையின் சிறிய நிழலில் இருந்து அதைத் தின்ன நினைத்தான். ஆனால் அந்நிழல் அவனுக்குப் போதுமானதா யில்லை. அதனால் அவன் மனம் வருந்தி,

" தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே,"

என்று தான் பாடத்தில் படித்த பாட்டை நினைத்துக் கொண்டே அவ்விடம் விட்டுப் புறப்பட்டான்.

சிறிது. தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தைக் கண்டான். அதன் நிழலில் அமர்ந்து இளைப்பாறினன். ஆலமரத்தின் பரந்த கிளைகளையும் குளிர்ந்த நிழலையும் கண்டு வியந்தான். அப்பொழுது வெயில் அதிகமாயிருந்த படியால் அவ்வழியாய் வந்தவர்களும், அக்கம்பக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்களும், ஆடு மாடுகளுடன் அவற்றை மேய்ப்பவர்களும் அந்தக் குளிர்ந்த நிழலில் வந்து தங்கினர். சிறுவர்களும் ஓடியாடி விளையாடினர். பலவிதப் பறவைகள் அம்மரத்தின் கிளைகளில் கூடு கட்டியிருந்தன.

இவைகளைக் கண்டு மகிழ்ந்த அவன்மீது ஒரு ஆலம் பழம் விழுந்தது. அதை எடுத்துப் பிளந்து அதன் விதைகளை நோக்கினான்; நோக்கியதும்,

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே,"

என்ற பாட்டை நினைத்தான்.

"நூற்றுக் கணக்கான மக்களும் பிராணிகளும் தங்கும் ஆலமரத்திற்குப் பழத்தைப் பெரியதாக வைத்திருந்தால், யார் மேலாவது விழுந்து காயப்படுத்துமல்லவா? அதனால் இம்மரத்தின் நிழல் யாருக்கும் உபயோகமில்லாது போகுமே! இதனால்தான் கடவுள் இப்பெரிய மரத்திற்குச் சிறிய விதையை ஏற்படுத்தினார் போலும்," என்று கடவுளது படைப்பின் பெருமையைப் புகழ்ந்து கொண்டே சென்றான்.

புதுச்சொற்கள்

பெருமையை	திரண்ட	தெள்ளிய
இளைப்பாறினன்	அமர்ந்து	கயம்
காயப்படுத்தும்	படைப்பின்	தேம்படு
வியந்தான்	வானுற	அண்ணல்
புரவி	வாலிபன்	நுண்ணிதே
	பரந்த	

கேள்விகள்

1. வெயில் அதிகமாயிருக்கக் கூடிய மாதம் எது?
2. பனையைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
3. ஆலமரத்தின் உபயோகங்களைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
4. ஆலம்பழத்தையும் பனம்பழத்தையும் ஒப்பிட்டு இரண்டு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

I. பின்வரும் பெயர்ச் சொற்களுக்கு ஒருமை, பன்மை கூறு :—

வாலிபன், பழம், சிறுவர்கள், கிளைகள்.

II. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :-

திடீரென, கொடுமை, பெருமை, பிளந்து.

III. முதல் வரிசையில் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்துச் சேர் :—

பனைமரம்	இளநீர்
ஆலமரம்	அகன்ற இலை
தென்னை மரம்	நுங்கு
வாழை மரம்	விழுது

5. நவராத்திரி விழா

புரட்டாசி மாதம் பிறந்து விட்டாலே பெண் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான்; நவராத்திரி விழா வரப் போவதைக் கருதி அவர்கள் புதுப் பொம்மைகள் வாங்குவார்கள். பழைய பொம்மைகளைத் துடைத்துச் சரிப்படுத்துவார்கள். தாம் அணிவதற்குப் புது உடைகள் வேண்டுமென்று பெற்றோரிடம் கேட்டு, அவற்றைத் தயார் செய்துகொள்வார்கள்.

நவராத்திரி முதல் நாள் வீட்டில் ஓரிடத்தில் தட்டுத் தட்டாகப் பல படிகள் அமைத்து, அவற்றில் பொம்மைகள் அழகாக அடுக்கப்படும். இதற்குக் கொலு என்று பெயர். பெண்கள் புத்தாடைகளை அணிந்து, கொலுவுக்கு முன் அமர்ந்து பாட்டுப் பாடுவார்கள். கொலுவைப் பார்க்கத் தம் நண்பர்களை எல்லாம் அழைப்பார்கள். பெரியோர்களும் இதில் கலந்து கொள்வார்கள்.

நவராத்திரியைக் கலைவிழா என்று சொல்லலாம். பொம்மைகள் செய்வோரின் சிற்பத் திறமையும் ஓவியத் திறமையும் இந்த விழாவினுல் வளர்கிறது. மாதர்களின் இசைக் கலை வளர்ச்சியடையவும் இவ்விழா உதவுகிறது.

நவராத்திரி விழாவின் கடைசி நாள் சரஸ்வதி பூஜை அல்லது ஆயுதபூஜை என்ற நாளாகும். எல்லா விதக் கல்வி கலைகளுக்கும் தெய்வமாகிய சரஸ்வதியை வழிபடும் நாள் அது. அந்த நாளில் எல்லாத் தொழிலாளரும் தத்தம் தொழிற்கருவிகளுக்குப் பூஜை செய்வர். கல்வி கலைகளையும் எல்லாத் தொழில்களையும் நாம் நன்கு மதிக்கவேண்டும் என்பதையே இந்த விழாநாள் வற்புறுத்துகிறது.

சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் விஜயதசமி. அன்று தொடங்கிய காரியமெல்லாம் வெற்றியடையும் என்பது நமது நம்பிக்கை. பூஜை செய்த கருவிகளை அன்று எடுத்துக்கொண்டு எல்லாரும் தம்முடைய தொழில்களைத் தொடங்குவார்கள். " உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் " என்று பாரதியார் பாடியிருப்பதையே நாம் ஆயுதபூஜை நாளில் செய்கிறோம்.

புதுச்சொற்கள்

கொண்டாட்டம்	*கொலு*	*ஓவியம்*
சரிப்படுத்து	*கலைவிழா*	*இசைக்கலை*
புத்தாடை	*சிற்பம்*	*வழிபடும்*
மதிக்க	*வற்புறுத்து*	*வந்தனை*

கேள்விகள்

1. *நவராத்திரிக்குமுன் பெண் குழந்தைகள் என்ன தயார் செய்வார்கள் ?*

2. நவராத்திரி விழாவினுல் என்ன நற்பயன்கள் ஏற்படுகின்றன ?
3. ஆயுதபூஜை யன்று என்ன செய்கிறோம் ?
4. விஜயதசமி யன்று தொழில் தொடங்கினுல் என்ன கிடைக்கும் ?

பயிற்சி

I. சில சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு கருத்து முடிந்தால் அதற்கு ஒரு வாக்கியம் என்று பெயர். வாக்கியம் முடிந்ததைக் காட்ட ஒரு புள்ளியிடவேண்டும். அதற்கு முற்றுப் புள்ளி என்று பெயர். நீங்கள் படித்த பாடங்களிலும், படிக்க விருக்கும் பாடங்களிலும் ஒரு வாக்கியம் முடிந்தவுடன் முற்றுப் புள்ளி யிருப்பதைப் பாருங்கள்.

II. பின்வரும் சில வாக்கியங்களை முற்றுப்புள்ளியிட்டுப் பிரித்துக் காட்டு :

தென்னை உயர்ந்து வளரும் இதற்குக் கிளைகள் இல்லை பாளையில் தேங்காய் காய்க்கும் வெயிற்காலத்தில் நாம் இளநீர் குடிக்கலாம்

6. வாழ்விக்கும் மழை

மழை பெய்வதை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். எப்படி மழை பெய்கிறது ? ஆகாயத்தில் தண்ணீர் ஏது?

தண்ணீரில் நனைந்த துணியை நாம் நிழலிலும் வெயிலிலும் உலரவைக்கிறோம்; துணியிலுள்ள தண்ணீர் கீழே விழவில்லை; ஆனுல் துணியிலிருந்து மறைந்து விட்டது. தண்ணீர் எங்கே போய்விட்டது ? சூரிய வெப்பத்தினுல் துணியிலுள்ள தண்ணீர் ஆவியாகமாறி, காற்றில் கலந்து விட்டது. தண்ணீரை ஒரு பாத்திரத்தில் கொதிக்க வைத்தால் தண்ணீர் ஆவியாக மாறி மேலெழுந்து போவதைக் காணலாம். அந்த ஆவி படும்படி ஒரு கற்பலகையைப் பிடி. அந்தக் கற்

பலகையிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுவதைப் பார்க்கலாம்.

உலகத்தின் மேற்பரப்பு சுமார் மூன்று பாகம் நீராகவும், ஒரு பாகம் தரையாகவும் இருக்கிறது. சூரிய வெப்பத்திஞல் நீர்நிலைகளிலுள்ள தண்ணீர் ஆவியாக மாறுகிறது. இந்த நீராவி காற்றைவிட இலேசானது. ஆகையால் நீராவிகலந்த காற்று, நீராவியில்லாத காற்றைவிட இலேசாகி உயரச் செல்கிறது. காற்று மேலே செல்லும் பொழுது குளிர்ச்சி அடைகிறது. போதுமான அளவு குளிர்ச்சி அடைந்தால், காற்றிலுள்ள நீராவி சிறு நீர்த்துளிகளாகி மேகம் உண்டாகிறது.மேன்மேலும் காற்று குளிர்ச்சியடைந்தால், மேகத்திலுள்ள நீர்த்துளிகள் பருமஞகி மழையாகப் பெய்கிறது.

அடிக்கடி மலைகளின்மேல் மழை பெய்வதால் நீர் ஊற்றுக்களும், ஓடைகளும், நதிகளும் உற்பத்தியாகின்றன. இவற்றிலுள்ள தண்ணீர் விவசாயம் செய்யவும், ஜீவராசிகள் குளிக்கவும், குடிக்கவும் உதவுகிறது. மழையில்லாவிட்டால், பூமியிலுள்ள நீரூற்றுக்கள் வறண்டுபோகும். தண்ணீர் இல்லாது விவசாயம் நடக்காது. எங்கும் பஞ்சம் ஏற்படும். ஜீவராசிகள் உயிர் வாழ முடியாது. தண்ணீர் எவ்வளவு இருந்தாலும், மழையில்லாவிட்டால் பயிர் வகைகள் தகுந்த பலனைக் கொடுக்கா. இது பற்றியே "மழை முகம் காணுப் பயிர் போலவும்" என்று நாம் சொல்லுகிறோம்.

புதுச்சொற்கள்

நீர் நிலைகள்	*பருமன்*	*பஞ்சம்*
ஆகாயத்தில்	*கிளம்பும்*	*வறண்டு*
பிரதேசங்கள்	*பெய்வதை*	*உற்பத்தி*
வெப்பம்	*ஊற்றுக்கள்*	*ஆவியாக*

கேள்விகள்

1. மழை எப்படி உண்டாகிறது?
2. மழையினுல் நாம் அடையும் பயன்கள் யாவை?

பயிற்சி

I. சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது :

1. தண்ணீர் தரையின்மேல் விழுகிறது. தண்ணீர் சுத்தமாகிறது.

2. நீர் வெப்பத்தினுல் ஆவியாகிறது. ஆவி மேகமாகிறது.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :-

1. நீராவி காற்றைவிட ———. (இலேசானது, கனமானது.)

2. மழை நீர் தரையில் விழுந்த பிறகு ———. (சுத்தமாகிறது, அசுத்தமாகிறது.)

3. நீராவி ——— மேகமாகிறது. (உஷ்ணமாகி, குளிர்ந்து.)

III. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களில் ஒருமையைப் பன்மையாகவும், பன்மையை ஒருமையாகவும் மாற்றி வாக்கியங்களை எழுது:-

1. மாடுகள் மேய்கின்றன.

2. எங்களுடைய தோட்டங்களில் மரங்கள் இருக்கின்றன.

7. சோம்பேறிப் பையன்

சோம்பித் திரியேல் என்றௌவையார் சொல்லிய
சொல்லை மறந்த ஓர் சின்னப் பையன்
சோம்பித்திரிந்து பள்ளிக்கூடம் போவதைச்
சுத்தமாய் மறந்து விட்டனனே. 1

நல்ல பிள்ளைகளின் சேர்க்கை யில்லாமலே
நாள்தோறும் சுற்றித் தெருத் தெருவாய்
மெல்ல மெல்லக் கற்ற நல்ல வழக்கத்தை
விட்டு விட்டான் அவன் கெட்டு விட்டான். 2

தந்தையும் தாயாரும் சொல்லிய சொற்களைத்
தட்டி நடக்கவும் ஆரம்பித்தான்.
எந்தவிதம் சொல்லிப் பார்த்தாலும் மூளையில்
ஏருத சோம்பேறி யாகிவிட்டான். 3

பள்ளிக்கூடம் போகும் நேரம் வரையிலும்
பாயிற் படுத்துப் புரண்டொரு நாள்
அள்ளிப் போட்டுக் கொஞ்சம் சாப்பிட்டதும் விளை
யாடப் புறப்பட்டான் வேடிக்கையாய். 4

நாய் ஒன்றைக் கண்டதைக் கூப்பிடவே அது
' நான் வரமாட்டேன், ஐயா!' என்றது.
ஈ யொன்றைக் கண்டவன் கூப்பிடவே அது,
' எனக்கும் வேலை உண்டு' என்றதுவே. 5

சிற்றெறும் பொன்றினைக் கண்டவன் தன்னோடு
சேர்ந்து விளையாடக் கூப்பிட்டனன்.
சிற்றெறும்பும், ' பையா நான் செய்யும் வேலைகள்
தீர்ந்ததும் பேசுவோம்,' என்றதுவே. 6

பூக்களில் புகுந்த தேனீயைக் கண்டவன்
பொழுதைப் போக்கிடக் கூப்பிடவே
' ஊக்கம் இல்லாத ஓர் சோம்பேறியோடு நான்
ஒன்றுமே பேசிடேன்,' என்றதுவே. 7

" தேனீயும் எறும்பும் நாயும் ஈயுமே
சேர்ந்தென் னுடன்விளை யாடவில்லை.
நானே மிகக் கெட்ட சோம்பேறி என்றிவை
நன்ருகப் புத்தி கற்பித்தனவே. 8

"இன்று முதலாய் நான் தேனீயைப் போலவும்
எறும்பைப் போலவும் உழைத்திடுவேன்.
நன்று நன்றென்னவே நல்லவர் வாழ்த்திட
நானும் உயர்வு பெறுவேனே," 9

என்று துணிந்தவன் வீடு திரும்பினன்
இன்பமுறக் கல்வி கற்க எண்ணி.
அன்று முதலே நன்ருய் உழைத்ததால்
ஆனந்த வாழ்க்கை அடைந்தனனே. 10

நா. கனகராஜ ஐயர்.

புதுச்சொற்கள்

சோம்பித்திரி	சோம்பேறி	துணிந்து
சேர்க்கை	திர்ந்ததும்	பேசிடேன்
தட்டிநட	போக்கிட	இன்பமுற

கேள்விகள்

1. சோம்பேறிப் பையனுக்கு எறும்பு என்ன பதிலளித்தது?
2. தேனீ பையனிடம் கூறியது என்ன?
3. ஈ, எறும்பு முதலிய பிராணிகள் பையனுக்கு என்ன புத்தி கற்பித்தன?

8. பேராசையின் விளைவு

பாசூர் என்ற கிராமத்தில் பரமன், ராமன் என்ற இரு விறகு வெட்டிகள் இருந்தனர். பரமன் தனக்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு திருப்தி அடைவான். தினந்தோறும் தான் கொண்டுவரும் விறகுக் கட்டை நியாயமான விலைக்கு விற்று, தன் குடும்பத்தைக் காப்பாற்றிச் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தான். ஆனால் ராமனோ தன்னுடைய விறகுக்கட்டை அதிகமான விலைக்குத்தான் விற்பான். அப்படி விற்றும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் அதிகப்பணம் கிடைக்க வில்லையே என்று வருத்தப்படுவான்.

ஒரு நாள் பரமன் வழக்கம்போல் விறகு வெட்டப் பக்கத்திலுள்ள காட்டுக்குச் சென்றான். ஒரு ஏரிக்கரையிலிருந்த பட்டுப்போன மரம் ஒன்றைத் தன் கோடரியால் வெட்ட ஆரம்பித்தான். அவ்வாறு வெட்டும்போது, அவனது கோடரி கை நழுவி ஏரிக்குள் விழுந்து விட்டது. கோடரி யில்லாமல் எப்படி விறகு வெட்டித் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவது என்று நினைத்து அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது அக்காட்டில் இருந்த வனதேவதை, அவன்முன் தோன்றி, ''அப்பா! ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டது. அதற்குப் பரமன், ''தாயே! என்னுடைய கோடரி இந்த ஏரியில் விழுந்து விட்டது. இனிமேல் விறகு வெட்ட முடியாதே என்று நினைத்துத்தான் அழுகிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட வனதேவதை உடனே ஏரியில் மூழ்கி, ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டி, ''அப்பா! இதுவா உன் கோடரி?'' என்று கேட்டது. அதைக் கண்ட பரமன், ''அம்மணி! இது என்னுடையதல்ல'' என்றான். மறுபடியும் வனதேவதை ஏரியில்

மூழ்கி, ஒரு வெள்ளிக் கோடரியைக் கொண்டுவந்து காட்டியது. பரமன், ''இதுவும் என்னுடையதல்ல,''என்ருன். பிறகு வனதேவதை மூன்ரும் முறையாக, அவனுடைய இரும்புக் கோடரியையே கொண்டுவந்து காட்டியது. அதைக் கண்டதும் பரமன் மகிழ்ந்து, ''அம்மா! இதுவே என் கோடரி,'' என்று கூறி, அதை வாங்கக்

கையை நீட்டினுன். வனதேவதையும் அவனுடைய நல்ல குணத்தைக் கண்டு அவனுக்கு அம் மூன்று கோடரிகளையும் கொடுத்து மறைந்தது. பரமனும் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் விற்றுச் சுகமாக வாழ்ந்தான்.

இந்தச் செய்தியைக் கேட்ட ராமன், பொருமை கொண்டு தானும் அவ்வாறே செய்து பணக்காரனுக ஆசைப்பட்டான். அதே ஏரிக்கரைக்குச் சென்று, தன்

கோடரியை ஏரியில் எறிந்துவிட்டு அழ ஆரம்பித்தான். வனதேவதையும் அவன் முன் தோன்றியது. முன் போலவே ,ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டியது. பேராசை பிடித்த ராமனே அது தன்னுடைய தல்லவென்று சொல்லவில்லை. "அம்மா! இதுதான் என்னுடைய கோடரி" என்று பொய் கூறி ஆசை யோடு அதை வாங்கக் கையை நீட்டினன்.

உடனே வனதேவதை அவனை நோக்கி, "அடே! நீ உன் கோடரியை ஏரியில் வேண்டுமென்றே போட்டு விட்டு, தவறிவிட்டது என்று பொய் கூறினய். இப்போது இந்தத் தங்கக் கோடரி உன்னுடையது என்று பேராசையுடன் வாங்கக் கை நீட்டுகிருய். நீ பெரும் பொய்யன்; பேராசைக்காரன். ஆகையால் உனக்கு உன்னுடைய இரும்புக் கோடரியும் கிடைக் காது; போய்விடு," என்று கூறி மறைந்துவிட்டது. ராமன் அதிக ஆசைப்பட்டதனல் தன்னுடைய கோடரி யையும் இழந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினன்.

புதுச்சொற்கள்

செய்தி	*வெட்டி*	*தவறி*	*கோடரி*
குடும்பம்	*பொருமை*	*தேவதை*	*மூழ்கி*
நியாயமான	*திருப்தி*	*நழுவி*	*பட்டுப்போன*

கேள்விகள்

1. *பரமனுடைய கோடரி எப்பொழுது ஏரியில் விழுந்தது?*
2. *வனதேவதை பரமனுக்குத் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் ஏன் கொடுத்தது?*
3. *ராமனுடைய கோடரி ஏன் ஏரியில் விழுந்தது?*
4. *ராமன் எப்படித் தன் கோடரியையும் இழந்தான்?*
5. *இக்கதையிலிருந்து நீ தெரிந்துகொண்டது என்ன?*

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்துப்படி :-

1. பரமன் உண்மை சொன்னதால் தேவதை ———. (கோபித்தது, மகிழ்ந்தது)

2. பேராசை உள்ளவர்கள் ——— அடைவார்கள். (இலாபம், நஷ்டம்)

II. மாதிரியில் காட்டியபடி, வாக்கியத்துக்குப் பொருத்தமாகப் பூர்த்தி செய் :—

1. நான் விறகு வெட்டுகிறேன்.
2. நீ விறகு ———.
3. அவன் விறகு ———.
4. அவர்கள் விறகு ———.
5. நீங்கள் விறகு ———.

9. ஔவையாரின் அருட் செயல்கள்

ஔவையார் பண்டைத் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த ஒரு பெரும் புலவர். அரசர்களும் இவரை மரியாதையுடனும் அன்புடனும் நடத்தினார்கள். அரசர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளில் இவரே பல தடவைகள் சமாதானம் செய்திருக்கிறார். இவர் நெடுங்காலம் உயிரோடிருந்தால் உலகத்திற்கு நன்மை ஏற்படும் என்று பலர் நினைத்தார்கள். ஒரு சமயம் **அதியமான்** என்னும் அரசனுக்கு ஓர் அரிய நெல்லிக்கனி கிடைத்தது. அதைத் தின்றவர் நெடுநாள் உயிரோடிருக்கலாம். இந்தக் கனியை அதியமான் தான் உபயோகித்துக்கொள்ளாமல் ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையாரும் அதை உண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தார்.

ஒரு கிராமத்தில் ஒரு வீட்டின் கொல்லையில் ஒரு பலாமரம் இருந்தது. அதைச் சிலர் வெட்டினர். அந்த மரத்திற்குச் சொந்தக்காரியான குறப்பெண் அதற்காக

மிகவும் வருத்தத்துடன் அழுதுகொண்டிருந்தாள். ஔவையார் இதைக்கண்டு வருந்தி ஒரு பாட்டுப் பாடினர். மரம் தளிர்த்து வளர்ந்து ஓங்கி நின்றது.

ஒரு நாள் ஔவையார் மிகுந்த பசியோடிருந்தார். அவரது பசியாற ஒரு வேளாளன் கஞ்சி வார்த்தான். அவனுடைய கஷ்டம் தீரும்படி ஔவையார் ஒரு பாட்டுப் பாடினர். அவன் தரித்திரம் நீங்கிச் செல்வம் பெற்று நெடுங்காலம் வாழ்ந்து வந்தான்.

ஒரு சமயம் ஔவையார் குளிரால் மிகவும் கஷ்டப்பட்டார். ஒரு கொல்லர் தம் உலைப்பக்கமாய் ஔவையாரை உட்காரச்செய்து குளிரைப் போக்கி, அவருக்கு வேண்டிய உதவிகள் செய்தார். சில நாட்களில் கடல் கரைபுரண்டு வந்து அந்த ஊரை அழிக்க ஆரம்பித்தது. ஔவையார் அக்கொல்லருடைய வீடும் உலையும் அழியாதிருக்கப் பாடினர். அப்படியே அவ்விரண்டும் அழியாமல் தப்பின.

இப்படியே பல அருட் செயல்களை ஔவையார் இவ்வுலகத்தில் செய்து புகழ் பெற்ருர். ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய பல அரிய நூல்களும் செய்துள்ளார்.

புதுச்சொற்கள்

நெடுநாள்	தரித்திரம்	புகழ்	புலவர்
குறப்பெண்	அத்தாட்சி	அழிக்க	கொல்லை
நெல்லிக்கனி	உலகத்திற்கு	செயல்கள்	சகியாமல்
சொந்தக்காரி	செல்வத்துடன்	சச்சரவு	அரிய

கேள்விகள்

1. ஔவையார் நெடுங்காலம் உயிரோடிருந்ததற்குக் காரணம் என்ன?
2. ஔவையார் குறப்பெண்ணுக்கு என்ன செய்தாள்?
8. ஔவையாருக்குக் கஞ்சி வார்த்த வேளாளனுக்கு என்ன கிடைத்தது?
4. ஔவையாருக்கு உதவிய கொல்லர் என்ன நன்மை பெற்ருர்?

பயிற்சி

I. பின் வரும் சொற்களுக்கு எதிர்மொழிகள் கூறு :— நீளம், துன்பம், பகல், பெரிது.

II. ஓரிடத்தில் என்ற சொல்லை ஓர்+இடத்தில் என்று பிரித்து எழுதலாம். பின் வரும் சொற்களை இதுபோல் பிரித்து எழுது :-

நாடெங்கும், உயிரோடிருந்தால்.

III. ஆடு மேய்கிறது. இந்த வாக்கியத்தில் ஆடு செய்கிற தொழிலை (அல்லது வினையை) மேய்கிறது என்ற சொல் தெரிவிக்கிறது. இது வினைச் சொல் எனப்படும். வினைச்சொல்லுக்கும் ஒருமை பன்மை உண்டு. மேய்கிறது–ஒருமை எண்.

IV. இப்பாடத்தில் மூன்றும் பாராவிலுள்ள வினைச் சொற்களை எடுத்து எழுது.

10. கயிறு திரித்தல்

(உரையாடல்)

நாகசாமி : கிணற்றிலிருந்து நீர் இறைக்க உதவும் இந்தக் கயிறு எவ்வளவு வலிமையா யிருக்கிறது, பார்த்தாயா ?

கோபு : ஆம் : இதை எப்படிச் செய்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா ?

நாகசாமி : தெரியுமே !

கோபு : எனக்குத் தெரியாது. நீ சொன்னால் தெரிந்து கொள்கிறேன்.

நாகசாமி : நார் உரிக்காத தேங்காயைப் பார்த்திருக் கிறாயா ?

கோபு : பார்த்திருக்கிறேன். ஒரு உளிபோன்ற இரும்பு முனையில் அந்தத் தேங்காயை அழுத்தி நாரை உரிப்பதையும் பார்த்திருக்கிறேன்.

நாகசாமி : ஆம். அந்த நாரினால்தான் இந்தக் கயிறு செய்யப்படுகிறது. உரித்த நார்களை நீரில் நன்றாக ஊறவைப்பார்கள். ஊறின நாரை ஒரு கல்லில் வைத்து ஒரு சுத்தியால் தட்டுவார்கள். இதனால் நார் மிருதுவாகும். பிறகு அந்த நாரைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கையால் திரிப்பார்கள். கையால் திரிப்பதற்குப் பதிலாக, ஒரு சிறு கோலில் கல்லைக்கட்டி அதைச் சுழலச் செய்து கயிறு திரிப்பதும் உண்டு. இந்த மெல்லிய கயிறுகள் புரி என்று சொல்லப்படும். பிறகு இரண்டு மூன்று புரிகளைச் சேர்த்து முறுக்கித் தடித்த கயிறுகளைச் செய்கிறார்கள்.



கோபு : நமது ஊர்த் தேரை இழுப்பதற்குப் பெரிய வடங்கள் இருக்கின்றனவே ; அவையும் தேங் காய் நாரினால் செய்யப்பட்டவையா ?

நாகசாமி : ஆம். அவையும் இந்தத் தாம்பைப் போலவே தான் முறுக்கப்படுகின்றன.

கோபு : சில கயிறுகள் வேறு மாதிரி நிறத்தோடு இருக்கின்றனவே. அது ஏன் ?

நாகசாமி : தேங்காய் நாரைத் தவிர வேறு நார்களைக் கொண்டும் கயிறுகள் செய்கிறார்கள். பனை நார், சணல் நார், முதலிய நார்களால் முறுக்கப்படும் கயிறுகள் வேறு நிறத்தோடிருக்கும்.

புதுச்சொற்கள்

உரிக்காத	*புரி*	*வடம்*
சுத்தி	*முறுக்கி*	*சணல்*

கேள்விகள்

1. *தேங்காய் நாரைக் கொண்டு எப்படிக் கயிறு திரிக்கிறார்கள்?*
2. *கயிறுகள் செய்ய வேறு என்ன நார்கள் பயன்படுகின்றன?*

11. உப்பு

நமது ஆகாரத்தில் மிகவும் முக்கியமாக இருப்பது உப்பு. உப்பு இல்லாத எந்தப் பதார்த்தமும் ருசியாய் இராது. அதிக நாள் கெடாமல் இருக்க வேண்டிய பதார்த்தங்களுக்கு உப்பைச் சேர்க்கிறார்கள். இதனாலேயே 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்ற பழமொழி வழங்கி வருகிறது. உப்பு வெண்மை நிறமுள்ள ஒரு பொருள். அது தண்ணீரில் கரையக் கூடியது. இதனால்தான் நாம் உப்பை ஆகாரங்களில் சேர்க்க முடிகிறது.

உப்பு எடுக்கும் விதங்கள் இரண்டு. முதலாவது கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கப்படுகிறது. கடல் நீரைச் சிறு வாய்க்கால்கள் மூலம் உப்புச் செய்யும் இடத்திற்குக் கொண்டு போவார்கள். உப்புச் செய்யப்

படும் இடம், ஆழமில்லாத சிறு பாத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். வாய்க்கால் வழியாக வரும் கடல் நீரைச் சிறிது சிறிதாக இப்பாத்திகளில் நிரப்புவார்கள். பாத்திகளில் தங்கும் நீரெல்லாம் சூரிய வெப்பத்தினுல் சில நாட்களில் ஆவியாக மாறிப் போய்விடும். அதிலுள்ள உப்பெல்லாம் பாத்திகளிலேயே தங்கிவிடும். இவ்வுப்பை எடுத்து ஒன்ருகச் சேர்ப்பார்கள். சில நாட்கள் சென்றதும் அவைகளைக் குவியலாகக் குவித்து வியாபாரிகளுக்கு விற்பார்கள். இவ்வாறு உப்புச் செய்யும் இடங்களுக்கு உப்பளங்கள் என்று பெயர்.

நமது சென்னை ராஜ்யத்தில் கடற்கரை ஓரமாகப் பல உப்பளங்கள் இருக்கின்றன. எல்லா உப்பளங்களும் நமது அரசாங்கத்தார் வசமே இருக்கின்றன. இதற்காகவே பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு உப்பு இலாகா உத்தியோகஸ்தர்கள் என்று பெயர். வியாபாரிகள் அரசாங்கத்தாரிடமிருந்து மொத்தமாக உப்பை வாங்கி நமக்கு விற்கிருர்கள்.

இரண்டாவது, சில இடங்களில் நிலத்திலிருந்து உப்பு எடுக்கப்படுகிறது. பூமியில் பெரிய சுரங்கங்கள் வெட்டி உப்பு எடுக்கிருர்கள். ஆனுல் இவ்வுப்பு மண்ணேடும் வேறு அசுத்தங்களோடும் கலந்திருக்கும். ஆகையால் உப்பைத் தனியாய்ப் பிரித்துச் சுத்தம் செய்ய வேண்டும். இம்மாதிரி உப்புச் சுரங்கங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் பல இருக்கின்றன. நம் நாட்டில் ராஜபுதனத்திலும் உப்புச் சுரங்கங்கள் இருக்கின்றன.

நமது ஆகாரத்தில் உப்பைச் சேர்ப்பதால், தேகத்திலுள்ள எலும்புகள் பலப்படுகின்றன. உப்பு ஜீரண சக்தியை அதிகப்படுத்தும். உப்பு இல்லாவிட்டால் ஒரு

உணவுக்கும் ருசியில்லை. உப்பு இல்லாவிட்டால் உயிர் இல்லை. உப்பு அளித்தவன் உயிர் கொடுத்தவன். இதனுல்தான் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற பழமொழி வழங்குகிறது.

பதுச்சொற்கள்

சத்து	காய்ச்சி	இலாகா
மூலம்	பழமொழி	பதார்த்தம்
ஆழம்	சுரங்கம்	உப்பளம்

கேள்விகள்

1. கடல் நீரிலிருந்து உப்பு எப்படி எடுக்கப்படுகிறது?
2. உப்புச் சுரங்கம் என்பது என்ன?
3. உப்பு நமக்கு எவ்வாறு பயன்படுகிறது?

பயிற்சி

I. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளை எழுது.

II. பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் ஒருமை, பன்மை கூறு:—

1. கடல் நீரை சிறு வாய்க்கால்கள் மூலம் உப்பளங்களில் பாயச் செய்வார்கள்.

2. உப்பு வெண்மை நிறமுள்ள ஒரு பொருள்.

3. உப்பு மண்ணேடும் வேறு அசுத்தங்களோடும் கலந்திருக்கும்.

III. மாதிரியில் காட்டப்பட்டுள்ளது போல் வாக்கியங்களைப் பூர்த்திசெய்:—

1. நாங்கள் நேற்று விளையாடினேம்.
2. நாங்கள் இப்பொழுது ———.
3. நாங்கள் நாளை ———.
4. நீங்கள் நாளை ———.
5. அவர்கள் ———.

IV. பின்வரும் வாக்கியங்களில் உள்ள தவறுகளைத் திருத்தி எழுது:-

1. மாம்பலத்தைக் கத்தியால் அருத்தான்.
2. விலையாட்டுப் பையன்கள் சன்டை போடுகிறுர்கள்.
3. சிருவர்களும் சிருமிகளும் நன்ருகப் படிக்கிரார்கள்.
4. காலை மாலை பாடம் வாசி.
5. பெறியோரைத் துணைக்கொள்.
6. அவன் நள்ளவன்.

12. நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானையும் ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா. 1

உள்ளே புகுந்துநெல் தின்றுதின்று—வயி
றூதிப் புடைத்துப் பருத்ததடா.
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா. 2

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு

பூனை எலியினைக் கண்டதடா—ஓடிப்
போயதைக் கௌவியே சென்றதடா. 3

கள்ளவழியிற் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ளபடியே நடப்பவர்க்குத் தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா. 4

—தேசிக விநாயகம் பிள்ளை.

புதுச்சொற்கள்

ஊதி	புடைத்து	பருத்து
மெத்த	கௌவி	காலடி
உற்ற	தெய்வம்	தொடர்

கேள்விகள்

1. பழம் பானைக்குள் எலி எவ்வாறு புகுந்தது?
2. பானையில் எலி என்ன செய்தது?
3. எலி ஏன் பானையிலிருந்து வெளியே வர முடியவில்லை?
4. காலையில் பாட்டி பானையைத் திறந்ததும் எலி என்ன செய்தது? எதனிடம் அது அகப்பட்டுக் கொண்டது?
5. கள்ள வழியில் செல்பவருக்கு என்ன நேரும்?

13. பாரதியார்

தென்னிந்தியாவில் தென் கோடியிலிருப்பது திருநெல்வேலி ஜில்லா. அதில் **கோவில்பட்டி** என்ற தாலூகாவில் **எட்டயபுரம்** என்ற ஓர் ஊர் இருக்கிறது. இது ஒரு ஜமீனுக இருந்தது. சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்னே **சின்னச்சாமி** ஐயர் தம் மனைவியாகிய **லட்சுமி** அம்மாளுடன் அங்கு வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு 1882-ம் வருடம் ஒரு புதல்வர் தோன்றினுர். அந்தக் குழந்தைக்குச் **சுப்பிரமணியன்** என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தனர். இவருடைய ஐந்தாவது பிராயத்தில் இவருடைய தாயார் இறந்தார்.

இவர் தமது ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடம் சென்ருர் ; படிப்பில் நல்ல ஊக்கம் காட்டினுர். இவரது ஏழாவது வயதில் இவரே சொந்தமாய்ச் சிறு பாட்டுக்கள் பாட ஆரம்பித்தார். இந்தச் சமயத்தில்தான் இவருடைய கவித்திறமையை அறிந்த புலவர்கள் இவரை **பாரதி** என்று அழைத்தனர். பாரதி என்ற சொல்லுக்குச் சரஸ்வதி என்பது பொருள். இதிலிருந்து இவருக்குப் பாரதியார் என்ற பெயரே வழங்கலாயிற்று.

பாரதியார் திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியில் சிறிது காலம் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது இவர் சரமாரியாகக் கவிபாடுவார் என்று

எல்லோரும் பேசிக்கொள்வார்கள். கவியில் காள மேகம் என்பார்கள் இவரை. ஒருநாள் இவருக்குப் பாடம் தெரியவில்லை. உபாத்தியாயர் கோபங்கொண்டு " மேகம் பொழியட்டுமே " என்று கேலியாகச் சொன்னார். பாரதியார் உடனே தாமதமின்றி, "ஐயா! மேகம் அதற்கு விருப்பமான நேரத்தில் மழை பொழியுமே தவிர, தாங்கள் விரும்பும் நேரத்தில் பெய்யுமா! இது தங்களுக்குத் தெரியாததா?" என்று பதில் சொன்னார்.

சில நாட்களுக்குப் பிறகு இவருடைய தகப்பனார் இறந்துவிட்டார். ஆகையால் இவர் ஐந்தாவது படிவத்திற்குமேல் படிக்க முடியாமல் போய்விட்டது. இவருடைய தகப்பனாரின் சகோதரி காசியில் இருந்தார். அந்த அம்மாள் இவரை வரவழைத்து அங்கே படிக்க வைத்தார். அங்கு இவர் ஹிந்தி, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளைக் கற்றார். முதல் பரீட்சையில் முதலாவதாய்த் தேர்ச்சி பெற்றார். அப்பொழுது இவருக்குக் கலியாணம் ஆகியிருந்தது.

இவருக்கு இருபது வயதாகும்போதுதான், இவர் பிறந்த இடத்திற்குத் திரும்பி வந்தார். அங்கே ஜமீன்தாரிடம் சமஸ்தான கவியாயிருந்தார்: இவர் சுதந்திர வாழ்வில் பிரியமுள்ளவர். ஆகையால் இவர் சமஸ்தானப் பதவியைக் கைவிட்டு, மதுரையில் சிலமாதம் உபாத்தியாயராக இருந்தார். சிலகாலம் **இந்தியா, பாலபாரதம்** என்ற பத்திரிகைகள் நடத்தினார். இதில் நம்நாட்டு விடுதலையின் அவசியத்தைப் பற்றித் தீரமாய் எழுதினார். அதனால் அரசாங்கத்தார் இவரைக் கைது செய்ய முயற்சித்தனர். உடனே இவர் தம் குடும்பத்துடன் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமா யிருந்த புதுச்சேரிக்குச் சென்று அங்குப் பத்து வருடம் காலங்கழித்

தார். பின்பு சென்னையில் **சுதேசமித்திரன்** என்ற பத்திரிகைக்கு உதவி ஆசிரியராய் வேலைபார்த்து வந்தார்.

ஒரு தடவை யானை ஒன்றுக்கு விளாங்கனி கொடுக்கப் போனார். அது மதம் கொண்டிருந்த படியால் இவரைக் காலால் மிதித்துவிட்டது. அதிலிருந்து நோய்வாய்ப்பட்டு 1921-ம் வருடம் செப்டம்பர் மாதம் இறந்தார்.

இவர் பல தேசீயப் பாட்டுக்கள் பாடியிருக்கிறார். அவைகளை எல்லாம் சேர்த்துப் பெரிய புத்தகங்களாக அச்சிட்டிருக்கிறார்கள். இவருக்கு இரண்டு பெண்கள் உண்டு. அவர்களில் இளைய மகளுக்காகப் பாடிய பாட்டுத்தான் **பாப்பாப் பாட்டு**. சுப்பிரமணிய பாரதியாரை நாம் நன்கு மதித்து அவரைப்போல் தமிழில் முன்னேற்றமடைய வேண்டும்.

புதுச்சொற்கள்

விளாங்கனி	சுயகவி	ஊக்கம்	தேர்ச்சி
பொழிவார்	சரமாரி	ஹிந்தி	பிராயம்
பத்திரிகை	கல்லூரி	மிதித்து	தீரம்
முன்னேற்றம்	தாலூகா	அச்சிட்டு	புதல்வர்

கேள்விகள்

1. பாரதியார் எந்தப் பத்திரிகைகளை நடத்தினார்?
2. பாரதியார் புதுச்சேரிக்கு ஏன் சென்றார்?
3. பாரதியார் எதனால் நோய்ப்பட்டு இறந்தார்?

பயிற்சி

I. எதிரான பொருளுள்ள சொற்களை எழுது:—

தெற்கு, கிழக்கு, நல்ல, பொழியும்.

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள தவறுகளைத் திருத்தி எழுது:—

1. இவர் என்னை அடித்தான்.
2. இவரது கவித்திரமையைப் புலவர்கள் அரிந்தார்கள்.
3. நம் நாட்டு விடுதலைக்காகப் பாரதியார் தன் யிரையே கொடுத்தான்.

14. படப் பயிற்சி—I

சிங்கத்தின் நன்றி

பின்வரும் படங்களைப் பார்த்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது. பிறகு அவற்றைச் சேர்த்துக் கதை சொல்லு.

15. கொசு

பல்லவி

பொல்லாத கொசுவே—இங்கே
நில்லாதே கொசுவே
எல்லோரும் உன்னையே—கண்டால்
கொல்வோமே கொசுவே. (பொ)

சரணங்கள்

1. குட்டை குளங்களிலும் கட்டுக் கடைத்
தண்ணீரிலும் முட்டையிட்டுக் குஞ்சாகி
மோசம் செய்ய வந்திடுவாய். (பொ)

2. மாடிமேல் ஏறி நாங்கள் மகிழ்வுடனே
உறங்கும்போது ஓடிவந்து ஊசிகுத்தி
உபத்திரவம் பண்ணுகிறாய். (பொ)

3. மா நிலத்தில் மக்கட்கெல்லாம் **மலேரியாக்**
காய்ச்சல் தந்து மானிடரின் ரத்தமதை
மண்டியிட்டுக் குடித்திடுவாய். (பொ)

4. குட்டை குளங்களையும் கட்டுக்கடைத்
தண்ணீரையும் திட்டமாக மூடி உன்னால்
தீங்கு வராமல் தடுப்போம். (பொ)

5. இல்லாமற் செய்திடவே எல்லோருமே
முயல்வோம் பொல்லாத மருந்தால் உன்னைப்
போக்கிடுவோம் ஓடு ஓடு. (பொ)

6. ஆய்ந்தறிந்த **கொயினாவினை** அடிக்கடி நாம்
அருந்தி **முறைக் காய்ச்சல்** தனைத் தடுப்போம்
கண்டு நீயும் ஓடிடுவாய். (பொ)

—*வி. கூ. நடராஜன்.*

கேள்விகள்

1. *கொசு எங்கு முட்டையிடுகிறது?*
2. *கொசு எந்த நோயைப் பரப்புகிறது?*
3. *கொசுவை ஒழிப்பது எப்படி?*
4. *முறைக் காய்ச்சலை எப்படி ஒழிக்கலாம்?*

16. வேடனை ஏமாற்றிய புருக்கள்

பறவை பிடிக்கும் வேடன் ஒருவன், ஒரு காட்டில் தன் வலையை விரித்து, தானியங்களை அதில் இறைத்து விட்டு ஒரு பக்கத்தில் ஒளிந்திருந்தான். அப்போது பக்கத்திலிருந்த மரத்தின்மேல் ஒரு புருக்கூட்டம் வந் திறங்கியது. புருக்கள் அங்கு இறைக்கப்பட்டிருந்த தானியங்களைத் தின்ன ஆவல் கொண்டன. அப்போது அக்கூட்டத்துக்குத் தலைமையான சித்திரக்கிரீவன் என்னும் புரு மற்றவைகளை நோக்கி, "மனிதர் இல் லாத இக்காட்டில் தானியம் எப்படி வந்தது? இதில் ஏதோ சூது இருக்கிறது. நன்ருய் யோசனை செய்து தான் நாம் கீழே இறங்க வேண்டும்" என்றது.

ஆனால் பசியோடிருந்த மற்றப் புருக்கள் சித்திரக் கிரீவனுடைய பேச்சைக் கேட்கவில்லை. உடனே அவை கீழே இறங்கித் தானியத்தைத் தின்ன ஆரம்பித்தன; அதனால் வலையில் அகப்பட்டுத் தத்தளித்தன. இதைக் கண்ட சித்திரக்கிரீவன், "ஐயோ! என் இனத்தார் யாவரும் வலையில் அகப்பட்டுக்கொண்டார்கள். நான் மாத்திரம் தப்பித்து என்ன பயன்?" என்று எண்ணி, அதுவும் வலையில் அகப்பட்டுக்கொண்டது. புருக்கள் எல்லாம் சித்திரக்கிரீவன் சொல்லியதைக் கேட்காத தற்காக வருத்தப்பட்டன.

அப்போது சித்திரக்கிரீவன் மற்றப் புருக்களைப் பார்த்து, "நடந்ததை நினைத்து வருந்துவதால் என்ன பயன்? இப்போது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து, வலையைத் தூக்கிக்கொண்டு பறந்துசெல்லவேண்டும். இல்லாவிடில் நாம் தப்ப வழியில்லை" என்று கூறியது. இதற்குள் புருக்களெல்லாம் வலையில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்ட வேடன், சந்தோஷத்தோடு

அவைகளைப் பிடிக்கச் சென்றான். அப்போது எல்லாப் புறாக்களும் ஒற்றுமையுடன் பறந்துபோயின.

இதைக்கண்ட வேடன் ஆச்சரியப்பட்டு அவைகளின் பின்னேயே ஓடினான். புறாக்களோ கண்ணுக்கு எட்டாத தூரத்தில் போய்விட்டன. வேடனும் வருத்

தத்துடன் வீடு திரும்பினான். சித்திரக்கிரீவனும் புறாக் கூட்டமும் மற்றொரு வனத்தில் போய் இறங்கின. அவ்வனத்தில் சித்திரக்கிரீவனுடைய சிநேகிதனான இரணியகன் என்னும் எலியரசன் இருந்தது. புறாக்கள் இறங்கிய ஓசை கேட்ட இரணியகன், தன் வளையிலிருந்து வெளியே வந்து, "சிநேகிதா! என்ன விசேஷம்?" என்று கேட்டது.

அதற்குச் சித்திரக்கிரீவன், "நண்பா! நாங்கள் மூடத்தனமாய் இவ்வலையில் அகப்பட்டுக் கொண்டோம். உன் கூர்மையான பற்களால் இந்த வலையைக்

கடித்து, அறுத்து எங்களை விடுவி" என்றது. இரணியகனும் அவ்வாறே செய்தது. எல்லாப் புருக்களும் விடுபட்டு மகிழ்ந்தன.

புருக்கள் முதலில் ஒன்றுபடாததால் வலையில் அகப்பட்டுக் கொண்டன. பிறகு அவைகள் ஒன்று பட்டதால் வலையோடு பறந்து தப்பின. இதனால் ஒற்றுமை **எல்லோருக்கும் அவசியமானது** என்பது நன்கு விளங்கும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!"-பாரதியார்

சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை

புதுச்சொற்கள்

மூடத்தனமாய்	*அகப்பட்டு*	*விடுவி*	*சூது*
அனைவர்க்கும்	*இனத்தார்*	*வனத்தில்*	*ஒற்றுமை*
தானியங்கள்	*வலிமை*	*வலை*	*ஆவல்*

கேள்விகள்

1. *புருக்கள் எதனால் கஷ்டத்திற்குள்ளாயின?*
2. *மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் என்பதை இக் கதையின் மூலம் ரூபி.*
3. *புருக்கள் வலையையும் தூக்கிக்கொண்டு வேடனுக்கு அகப்படாமல் பறந்தோட அவைகளிடம் காணப்பட்ட குணம் என்ன?*

பயிற்சி

I. *பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—*

அகப்பட்டு; விரித்து; வனத்தில்; அனைவரும்; மூடத்தனமாய்; இனத்தார்; ஒற்றுமை; கூர்மை.

II. *கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை :—*

1. *புருக்களோ —— எட்டாத தூரத்தில் போய்விட்டன.*
2. *வேடனும் —— வீடு திரும்பினன்.*
3. *சித்திரக்கிரீவனும் புருக்கூட்டமும் —— வனத்தில் போய் இறங்கின.*

17. கடற்கரையும் துறைமுகமும்

(உரையாடல்)

துரை : சேகர்! சென்னைக்குப் போயிருந்தாயே, கடற்கரைக்குப் போயிருந்தாயோ ?

சேகர் : ஓ! அது எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா ?

துரை : கடல் பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது ?

சேகர் : கடல் நீல நிறமாக இருக்கிறது. கண்ணுக்கு எட்டிய வரையில் ஒரே நீல நிறமான தண்ணீர் தான். சென்னைக் கடற்கரையில் விசாலமான மணற் பரப்பு இருக்கிறது.

துரை : கடல் நீரைக் குடிக்கலாமா ?

சேகர் : குடிக்கவா ? கடல் நீர் வெறும் உப்பு; சிறிது கூட நன்றாயிராது.

துரை : கடற் கரையில் நல்ல காற்று வீசுமா ?

சேகர் : மாலை வேளைகளில் கடலிலிருந்து காற்று வீசும். அதற்குக் கடற் காற்று என்று பெயர். கடற் காற்றுக்காகவே மாலையில் பல ஜனங்கள் கடற்கரை மணலில் வந்து உட்காருகிறார்கள். கடற்கரையை 'பீச்' என்று சொல்கிறார்கள்.

துரை : கடற்கரையில் வேறு ஏதேனும் விசேஷம் உண்டா ?

சேகர் : அங்கே அலை மோதுகின்ற கரையோரமாகக் கட்டுமரங்கள் இருக்கின்றன. செம்படவர்கள் இவற்றில் ஏறிக்கொண்டு கடலில் சென்று மீன் பிடிக்கிறார்கள். காலையில் கட்டுமரங்களில் செல்வோர் மீன் பிடித்துக்கொண்டு மாலையில் திரும்புவார்கள்.

துரை : சென்னையில் நீ கப்பலைப் போய்ப் பார்த்தாயா?

சேகர் : ஒரு கப்பலைப் பார்த்தேன்.

துரை : துறைமுகம் என்கிறார்களே, அது என்ன ?

சேகர் : கப்பல்கள் வந்து தங்குமிடத்திற்குத் துறைமுகம் என்று பெயர். கப்பலில் வரும் பிரயாணிகள் துறைமுகத்தில் இறங்குவார்கள். சாமான்கள் இறக்குமதி செய்யப்படும். கப்பல் மறுபடியும் புறப்படும்பொழுது வேறு பிரயாணிகளையும் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு செல்லும்.

துரை : தண்ணீரில் கப்பல் எப்படிச் செல்லுகிறது ?

சேகர் : கப்பலில் ஒரு எஞ்சின் இருக்கிறது. ரயில் வண்டி நீராவியால் ஓடுவதுபோல், கப்பலும் நீராவியால் செல்லுகிறது; இக்கப்பலுக்கு நீராவிக் கப்பல் என்று பெயர்.

துரை : வேறு விதமான கப்பல்களும் உண்டா ?

சேகர் : முன் காலத்தில் கப்பல்களில் பாய்மரம் என்ற ஒரு பெரிய தூண் அமைக்கப்பட்டிருந்தது. அதில் கெட்டியான துணி ஒன்று விரித்துக் கட்டப்பட்டிருக்கும். அதன்மேல் காற்று தாக்கிக் கப்பலைச் செலுத்தும். அதற்குப் பாய்மரக் கப்பல் என்று பெயர். இப்பொழுதெல்லாம் அம்மாதிரியான கப்பல்கள் அதிகமாயில்லை.

துரை : கடற்கரைக்கு அருகில் கப்பல் எப்படி வந்து நிற்கிறது ?

சேகர் : சென்னைத் துறைமுகத்தில் கடற்கரைக்கருகில் கடல் ஆழமாகத் தோண்டப்பட்டிருக்கிறது. அதனால் கரைக்கு அருகில் கப்பல்கள் வந்து நிற்கின்றன.

துரை : இரவில் கப்பலைச் செலுத்துபவர்களுக்குக் கரை தெரியுமா ?

சேகர் : துறைமுகங்களில் உயர்ந்த தீபஸ்தம்பங்கள் நிறுத்தியிருக்கிறார்கள். அவைகளில் பிரகாசமான விளக்குகள் இரவெல்லாம் எரியும். அவற்றின் உதவியால் மாலுமிகள் கடற்கரையைத் தெரிந்து கொள்வார்கள்.

துரை : நாமெல்லாம் ஒரு தடவையாவது கப்பலில் பிரயாணம் செய்து பார்க்க வேண்டாமா ?

சேகர் : அடுத்த பெரிய விடுமுறையில் எங்கள் வீட்டில் எல்லோரும் இலங்கைக்குப் போகிறோம். நீயும் வந்தால் அழைத்துச் செல்லுகிறேன்.

புதுச்சொற்கள்

பீச்	விசாலமான	இறக்குமதி
பிரயாணி	பாய்மரம்	துறைமுகம்
மாலுமி	கட்டுமரம்	தீபஸ்தம்பம்

கேள்விகள்

1. கடல் பார்ப்பதற்கு எப்படியிருக்கும்?
2. கடல் நீரின் சுவை என்ன?
3. கடற் காற்று என்றால் என்ன?
4. கட்டுமரம் யாருக்கு எதற்குப் பயன்படுகிறது?
5. நீராவிக் கப்பல் எதனால் செல்லுகிறது? பாய்மரக் கப்பல் எதனால் செல்கிறது?
6. தீபஸ்தம்பம் எதற்கு உதவுகிறது?

பயிற்சி

I. பின் வரும் வாக்கியங்களிலிருந்து பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது:—

1. கடற்கரையில் நல்ல காற்று வீசும்.
2. மாலையில் பல ஜனங்கள் கடற்கரை மணலில் வந்து உட்காருகிறார்கள்.

II. மேல் வாக்கியங்களில் எடுத்தெழுதிய சொற்களுக்கு ஒருமை பன்மை கூறு.

III. முதல் பத்தியிலுள்ள ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொற்களை இரண்டாம் பத்தியிலிருந்து எடுத்து எழுது:-

துறைமுகம்	காற்றினால் தள்ளப்படும்.
தீபஸ்தம்பம்	மீன் பிடிக்க உதவும்.
கட்டுமரம்	கப்பல்கள் தங்குமிடம்.
பாய்மரக் கப்பல்	இரவெல்லாம் விளக்கெரியும்.

18. இயேசு கிறிஸ்துநாதர்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அரேபியா தேசம் செழிப்புற்றிருந்தது. அங்கே வாழ்ந்த மக்களில், கடவுள் பக்தியுள்ள யூதர் என்ற ஒரு இனத்தாரும் இருந்தார்கள். ஒரு யூத குடும்பத்தைச் சார்ந்த மரியாள் என்ற ஒரு எளிய பெண்ணின் குமாரராகக் கிறிஸ்து பிறந்தார்.

கிறிஸ்து பிறந்தவுடன் ஒரு அதிசய நட்சத்திரம் தோன்றியது. "இவர் யூதர்களுக்கு அரசர் ஆவார்," என்று சோதிடர் கூறினர். அதனால் ஏரோது என்ற யூத அரசர் இவரைக் கொல்ல முயன்றார். அவர் முயற்சி பலிக்கவில்லை. இவர் கல்வியிலும் ஞானத்திலும் நாளுக்குநாள் தேர்ச்சி அடைந்து வந்தார்.

கிறிஸ்து நாதர் மக்களைப் பார்த்து, "தன்னைப்போல் பிறரையும் நேசிக்கவேண்டும். தனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அதையேதான் நாமும் அவர்களுக்குச் செய்ய வேண்டும். முழு இதயத்தோடும் முழு அன்போடும் முழு பலத்தோடும் கடவுளை வழிபட வேண்டும்" என்று உபதேசித்தார். அவர் மூன்றரை வருட

காலம் பல தெய்விக அருட் செயல்களைச் செய்தார். குருடர்களுக்குப் பார்வையளித்தார்; செவிடர்களுக்குக் காது கேட்கச் செய்தார் ; நொண்டிகளை நடக்கச் செய் தார் ; நோயாளிகளைக் குணமாக்கினுர் ; மரித்தோரை உயிரோடெழுப்பினுர்.

ஏரோது இவர் புகழைக்கண்டு பொருமை கொண் டார். 'அவர் அரசராறுலும் ஆகலாம்' என்று சந்தே கித்தார். பொய்ச் சாட்சிகள் தயார் செய்யப்பட்டன. அரச நிந்தனே, தெய்வ நிந்தனே ஆகிய இரண்டு குற் றங்கள் அவர் பேரில் சுமத்தப்பட்டன. இக்குற்றங் களுக்காக அவருக்கு மரண தண்டனே விதிக்கப்பட் டது. அத்தேசத்தின் அக்கால வழக்கப்படி **சிலுவை** மரத்தில் ஆணிகளால் அடிக்கப்பட்டார். அப்போது அவர் "கடவுளே! இவர்களை மன்னியும். இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறுர்கள்," என்று கடவுளை வேண்டிக்கொண்டார். உடனே உயிர் துறந்தார். அவரை ஒரு கல்லறையில் அடக்கம் செய் தார்கள்.

மூன்றும் நாள் உயிரோடு எழுந்தார். தம்மைப் பின்பற்றிய சீடர்களுக்கு முன் தோன்றினுர். தம் முடைய உபதேசத்தை உலகத்தில் பரப்பும்படி ஆணே யிட்டார். நாற்பது நாள் அவர்களோடிருந்து, சீடர்கள் எல்லோரும் பார்த்திருக்கும்போதே பரலோகம் சென் ருர்.

இவ்வாறு மனிதர்களுடைய அறியாமைக்காகத் தம்மையே தியாகம் செய்த **இயேசு கிறிஸ்து நாதர்** உலகப் புகழ் அடைந்தார். இதனுலேயே அவருடைய மதம் இன்று உலகமெங்கும் வியாபித்திருக்கிறது.

புதுச்சொற்கள்

சந்தேகித்தார்	சார்ந்த	இதயம்	நேசிக்க
செவிடர்கள்	மன்னியும்	சாட்சிகள்	சோதிடர்
மரித்தோர்	பரலோகம்	தியாகம்	பலிக்க

கேள்விகள்

1. கிறிஸ்துவின் தாயாரின் பெயர் என்ன?
2. ஏரோது என்ற மன்னன் கிறிஸ்துவை ஏன் கொல்ல முயற்சித்தான்?
3. கிறிஸ்து மக்களுக்கு என்ன உபதேசித்தார்?
4. கிறிஸ்துவின்மீது என்ன குற்றங்கள் சாட்டப்பட்டன?

பயிற்சி

I. பின் வரும் சொற்களைச் சிறு வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு :-

ஆணை, செழிப்பு, போதித்தார்.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் பூர்த்தி செய்:—

1. ஏரோது, கிறிஸ்துவின் புகழைக்கண்டு———கொண்டார்.
2. தன்னைப்போல்———நேசிக்க வேண்டும்.

III. பின்வரும் வாக்கியங்களில் வினைச் சொற்கள் தவறுயுள்ளன. அவற்றைத் திருத்தி எழுது:-

1. நானும் அவனும் புசித்தேன்.
2. காட்டில் மரங்கள் செழிப்பாக வளர்கின்றன.
3. ஆடுமாடுகள் மேய்வதற்குச் சென்றது.

Printed at the ...

19. பருத்திச் செடி

நமது உடைகளில், சில பஞ்சினாலும் சில பட்டினாலும் சில கம்பளியினாலும் செய்யப்பட்டவை. இவைகளில் பஞ்சினால் செய்யப்பட்டவைதான் அதிகம். பருத்திச் செடியிலிருந்து பஞ்சு கிடைக்கிறது.

பருத்தி உஷ்ணப் பிரதேசங்களில்தான் அதிகமாய் உண்டாகும். பருத்தியில் அநேக வகைகள் உண்டு. பருத்திச் செடி கரிசல் நிலத்தில்தான் செழித்துவளரும்; நல்ல பலனையும் கொடுக்கும். கரிசல் நிலத்தைக் கோடை காலத்தில் நன்றாய் உழுது புழுதியாக்க வேண்டும். மழை காலத்தில் ஒன்று இரண்டு மழை பெய்ததும் நல்ல பருத்தி விதைகளை எடுத்து, சாணிப் பாலூட்டி விதைக்க வேண்டும். விதைகள் மண்ணுள் மறையும்படி மறுபடியும் உழவேண்டும். சில நாட்களில் விதை முளைக்கும். பத்து அல்லது பதினைந்து இலைகள் விட்டதும் களையெடுக்க வேண்டும். பின்பு ஒரு அடி உயரம் வளர்ந்ததும் களைக்கொட்டினால் மேல்மண் புரளும்படியும் களைகள் அறும்படியும் கொத்தி விடவேண்டும். மேல் மழை ஒன்று பெய்தால் செடி நன்றாய் வளரும்.



மூன்று மாதங்களில் பூக்கள் தோன்றும். இவை மஞ்சள் நிறமாய்ப் பெரியதாயிருக்கும். சில தினங்களில் பூ இதழ்கள் உதிர்ந்துவிடும். உதிர்ந்த இடத்தில் பிஞ்சுகள் தோன்றும். ஒரு மாதத்திற்குள் இவை காய்களாகி முற்றி, சூரிய வெப்பத்தினால் வெடிக்கும்

வெடித்த காய்கள் மூன்று பிரிவாகப் பிரிந்து நிற்கும். அந்தப் பிரிவுக்குள் பருத்தி நிறைந்திருக்கும். இப்படியாக முன்னும் பின்னுமாக மூன்று மாதம் வரை பருத்தி வெடிக்கும். விவசாயிகள் ஆணும் பெண்ணுமாகப் போய் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பருத்தியைச் சேகரிப்பார்கள். ஒவ்வொரு காயில் வெடிக்கும் பருத்தி '**சுளை**' என்று சொல்லப்படும். இந்தச்சுளையைப் பிரித்துப் பார்த்தால் அதனுள்ளே இரண்டு மூன்று விதைகளிருக்கும்.



இப்படிச் சேகரித்த பருத்தியை அதற்கென்று ஏற்பட்ட மணைகளில் வைத்துச் சுற்றினுல் பருத்தியிலுள்ள பஞ்சு வேறு, விதை வேருகப் பிரிந்துவிடும். பஞ்சை, ராட்டைகளிலும் எந்திரங்களிலும் வைத்து நூலாக நூற்று நெசவு செய்து துணியாகச் செய்கிருர்கள். விதையை மாட்டிற்கு நல்ல உணவாகக் கொடுக்கலாம். விதை விதைப்பதற்காகவும் சேகரித்துவைக்கலாம். பருத்தி விதையிலிருந்து ஒருவித எண்ணெய் எடுப்பதும் உண்டு.



பருத்திச் செடி ஒரு வருடத்திற்கு மேல் நல்ல பலனைக் கொடுக்காது. ஆகையால் விவசாயிகள் காற்றுக் காலம் வந்ததும் பருத்திச் செடியைப் பிடுங்கி விடுவார்கள். பிடுங்கின செடிகள், மறைவு தட்டிகள் பின்னவும், காய்ந்தபின் அடுப்பெரிக்கவும், சில இடங்களில் உலையேயும் பயன்படுத்துகிருர்கள்.

பருத்தி ஆடை ஏழைகளுக்கு எளிதில் கிடைக்கக் கூடியது. நம் நாட்டு சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தது. நம் தேசத்தில் பருத்தி ஏராளமாய் உற்பத்தியாக வேண்டிய வசதிகளிருக்கின்றன. ஆகையால் நாம் நமக்குப் பலவித ஆடைகள் அளித்து உதவும் பருத்தியை நன்கு வளர்த்து, அதன் மூலம் நம் நாட்டுக் கைத் தொழில்களையும் ஆலைத் தொழில்களையும் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

புதுச்சொற்கள்

வசதி	கூரை	மழை	சுளை
ராட்டை	எந்திரம்	புழுதி	கம்பளி
இதழ்கள்	பிரிவாக	கரிசல்	வேயவும்
வெடிக்கும்	உதிர்ந்து	பிஞ்சுகள்	தட்டிகள்
ஏராளமாய்	சேகரிப்பார்	சாணிப்பால்	பருத்தி

கேள்விகள்

1. பருத்தி எந்தப் பிரதேசத்தில் உண்டாகும்?
2. பருத்தி பயிரிடுவதற்கு நிலத்தை எப்படித் தயார் செய்ய வேண்டும்?
3. பருத்திச் செடி பயிரிடுவதைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை :—

1. பருத்தி———பிரதேசங்களில்தான் அதிகமாய் உண்டாகும். (உஷ்ண, குளிர்)

2. பருத்தி ——— நிலத்தில் தான் செழித்து வளரும். (மணல், கரிசல்)

3. ஒரு பருத்திக்காயில் உள்ள பருத்திக்கு———என்று பெயர். (பொதி, சுளை)

II. பின் வரும் சொற்களைத் தகுந்தபடி மாற்றி வாக்கியங்களாக அமை :—

1. கிடைக்கக் கூடியது ஆடை பருத்தி எளிதில் ஏழைகளுக்கு.

2. விடுவார்கள் வந்ததும் பருத்தியை காற்றுக் காலம் பிடுங்கி.

20. காந்தியடிகளும் ஹரிஜனங்களும்

மகாத்மா காந்தியை நம் நாட்டின் பிதா என்று சொல்கிறோம். ஏனெனில் அவரே நாம் சுதந்திரம் பெறுவதற்கு வழிகாட்டியாக இருந்தார். அவரிடம் இரண்டு முக்கியமான குணங்களிருந்தன. பிறரைத் துன்புறுத்தாமை, உண்மை ஆகிய இரண்டுமே அந்தக் குணங்களாகும்.

இந்தியரிடையே சிலர் தீண்டாதார் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இந்த நிலைமை ஒழிய வேண்டுமென்று காந்தியடிகள் எடுத்துக் காட்டினார். தம் வாழ்க்கையில் அவர் யாரையும் தீண்டாதார் என்று ஒதுக்கிவைத்ததில்லை. அவர்களை ஹரிஜனங்கள் என்று போற்றினார்.

ஒரு கிராமத்தில் காந்தியடிகள் ஒரு கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்

திற்குப் பல ஹரிஜனங்களும் வந்திருந்தார்கள். மற்ற ஜாதியார் அவர்களைத் தூரத்தில் உட்காரச் செய்தனர். காந்தியடிகள் கூட்டத்திற்கு வந்து பேசத் தொடங்கு முன், ஒரு தடவை கூட்டத்தைப் பார்த்தார். தூரத்தில் உட்கார்ந்திருந்த ஹரிஜனங்களைக் கண்டார்.

உடனே காந்தியடிகள் அக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த ஒருவரை அழைத்து, அந்த மக்கள் ஒதுங்கி உட்கார்ந்திருப்பதற்குக் காரணம் கேட்டார். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர், ''மகாத்மாஜி! அவர்கள் சேரி மக்கள்'' என்று பதிலளித்தார்.

காந்தியடிகள், ''அந்த ஹரிஜனங்கள், உங்களுடன் உட்கார முடியாதென்ருல், நான் அவர்களிடம் சென்று அங்கேயிருந்து பேசப் போகிறேன்'' என்று சொன்னுர். உடனே மேடையிலிருந்து இறங்கி, சேரி மக்கள் இருந்த இடத்திற்குச் சென்ருர். கூட்டத்திலிருந்த பலரும் காந்தியடிகளைப் பின்பற்றி ஹரிஜனங்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ''மகாத்மாஜிக்கு ஜே!'' என்று எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள்.

சொல்வதொன்று செய்வது வேருென்று என்பதே காந்தியடிகளிடம் இல்லை. பிறருக்கு உபதேசம் செய்ததைக் காந்தியடிகள் எப்பொழுதும் தாமே கடைப்பிடித்தார். தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று அவர் கூறியதை நாளடைவில் எல்லா இந்தியர்களும் ஒப்புக் கொண்டார்கள். இப்பொழுது நம் நாட்டில் தீண்டாமை அறவே ஒழிக்கப்பட்டு விட்டது.

புதுச்சொற்கள்

சேரி	*ஆரவாரம்*	*கடைப்பிடி*	*ஹரிஜனங்கள்*
அறவே	*வழிகாட்டி*	*நாளடைவில்*	*துன்புறுத்தாமை*

கேள்விகள்

1. காந்தியடிகளை நாம் ஏன் 'நாட்டின் பிதா' என்று சொல்கிறோம்?
2. கூட்டத்திற்கு வந்த ஹரிஜனங்கள் ஏன் ஒதுங்கி உட்கார்ந்தனர்?
3. கூட்டத்திற்கு வந்தவுடன் காந்திஜி என்ன செய்தார்?
4. காந்திஜிக்கு ஹரிஜனங்களிடமிருந்த அன்பு எப்படி வெளிப்பட்டது?
5. காந்திஜியிடம் காணப்பட்ட இரு முக்கிய குணங்கள் என்ன?

பயிற்சி

I. பின்வரும் சொற்களில் எது பெயர்ச் சொல், எது வினைச் சொல் என்று கூறு; ஒவ்வொன்று என்ன எண் என்பதையும் சொல்லு:-

கூட்டம், மக்கள், இருந்தன, மரங்கள், அது, அவை, நின்றது.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்து எழுது:-

1. காந்திஜியிடம் இருந்த இரு குணங்கள் ——.

2. பிறருக்கு உபதேசம் செய்ததைக் காந்தியடிகள் தாமும் ———.

21. மலர்கள்

மண்ணிலிருந்து பொருள் வரினும்—அதை
மாற்றி மணம் பெறச் செய்திடுவோம்
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம்—விண்ணிற்
காணுங் கதிரிடம் பெற்றிடுவோம்.

வண்டின் வரவெதிர் பார்த்து நிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசி நிற்போம்
உண்டு களிக்க மதுவளிப்போம் — சற்றே
உட்காரப் பீடமும் இட்டு வைப்போம்.

மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணஞ்செய்து வாழ வைப்போம்
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்க மேல் தங்கிடுவோம்.

ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டி நிற்போம்.

மன்னருங் கண்டெதிர் வந்திடுவர்—கட்டி
மார்போ டணைத்து மகிழ்ந்திடுவர்
இந்நிலத் தின்பம் பெருகிடவே—நாங்கள்
என்றும் உயிர்வாழ்ந் திருப்போமம்மா.

—தேசிக விநாயகம் பிள்ளை.

கேள்விகள்

1. வண்டுகளுக்கு மலர்கள் என்ன தருகின்றன ?
2. திருமணத்திலும், ஈசனைப் பூசனை செய்யும்பொழுதும் மலர்கள் எப்படிப் பயன்படுகின்றன ?

22. அதிவீரராம பாண்டியர்

சுமார் நானூறு வருடங்களுக்கு முன் திருநெல்வேலியிலுள்ள கொற்கை நகரில் அதிவீரராமர் என்ற பாண்டிய அரசர் ஆண்டுவந்தார். அவருக்கு வரதுங்க பாண்டியர் என்ற தமையனார் இருந்தார். அவர் திருக்கருவை என்னும் நகரில் செங்கோல் செலுத்திவந்தார். இவர்களிருவரும் மதுரையில் ஆண்ட பாண்டியர்களுக்கு அடங்கியவர்களே.

அதிவீரரும் வரதுங்கரும் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் வல்லவர்கள். கவி பாடுவதில் மிகவும் சிறந்தவர்கள். வரதுங்க பாண்டியர் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் பாடிய பாடல்களெல்லாம் சிவபெருமானைப் போற்றுவனவே. வரதுங்கரின் மனைவியாரும் தமிழில் வல்லவரே. ஆனால் அதிவீரராமரோ உலக விஷயங்களில் ஈடுபட்டு உலக இன்பத்தைப் பற்றியே பாடி வந்தார்.

அதன்படியே அதிவீரராமர் தமிழில் நைடதம் என்னும் நூலைப் பாடத் தொடங்கினார். நைடதம் நளமகாராசனுடைய கதையைக் கூறும் நூல். அதில் அதிவீரராமர் உலக இன்பங்களைப் பற்றி விமரிசையாகப் பாடினார். இவ்வாறு பாதி நூல் முடிந்ததும் பாடல்களைத் தமையனாரிடம் காண்பித்தார். அவைகளைப் பார்த்து வரதுங்கர், "தம்பி! எம்பெருமானைத் துதியாது மனிதனைப் புகழ்ந்து, இவ்வுலக இன்பத்தைப்பற்றியே பாடியுள்ளாயே" என்று கூறி வருந்தினார்.

இதைக் கேட்டதும் அதிவீரராமரது உற்சாகம் குறைந்துவிட்டது. இருந்தபோதிலும் எடுத்த காரியத்தை முடிக்கவேண்டும் என்று எண்ணி, ஒருவாறு

அந்நூலைப் பாடி முடித்தார். முடிந்ததும் தமது சமஸ்தானப் புலவர்களிடம் காட்டினார். அவர்கள் அவருடைய நூல் "கரும்பின் இனிப்பைப்போல் சிறந்து விளங்குகின்றது" என்றனர். பிறகு அதிவீரராமர் தமது நைடதத்தை, தமையனாரது மனைவியிடம் காட்டினார். அந்த அம்மையார் அதைப் பார்த்து, "வேட்டை நாய் காட்டிற்குச் செல்லும்போது ஊக்கத்துடன் சென்று, திரும்பிவரும்போது சோர்ந்து வருவது போல் இருக்கிறது" என்று கூறினார்.

அதிவீரராமர் இதைக் கேட்டுப் பெருங் கோபங் கொண்டார். உடனே தம் ஊர் சென்று படைகளைத் திரட்டி, தமையனாரோடு சண்டை செய்யப் புறப்பட்டார். தம்பி படையெடுத்து வந்ததைக் கேட்ட வரதுங்கர், ஒரு ஓலையில் "ஆருயிர்த் தம்பி! கர்ணன், இராவணன், அர்ச்சுனன் இவர்களைப்போல் நீ இராதே. ஆனால் ஸ்ரீராமனையும் பரதனையும் போல் இரு," என்னும் பொருளுள்ள,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்ச
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்,"

என்ற பாட்டை எழுதியனுப்பினார்.

இந்தப் பாட்டைப் பார்த்த அதிவீரராமர் மனம் வருந்தித் தமது தப்பிதத்தை உணர்ந்தார். உடனே படைகளைத் திருப்பி யனுப்பிவிட்டுத் தமையனாரிடம் சென்று அவரை வணங்கினார். அப்போது வரதுங்கர், "தம்பி! உனது சமஸ்தானப் புலவர்கள் கூறியதையே உன் அண்ணியும் கூறினாள். கரும்பை அடியிலிருந்து தின்றுகொண்டே போனால், முதலில் இனிப்பும், கொழுத்தாடைப் பக்கத்தில் உப்பும் தோன்றும். அது

போலவே உன் அண்ணியும் உனது நைடதத்தை வேட்டை நாய்க்கு ஒப்பிட்டாள். ஆனால் பாடல்கள் சிறந்தவைகளே. ஆகையால் நீ மனம் வருந்த வேண்டாம்,'' என்றார்.

உடனே அதிவீரராமர் மகிழ்ந்து, **நறுந்தொகை** என்னும் **வெற்றி வேற்கை** பாடினார். அதிவீரராமரைப் **பிள்ளைப் பாண்டியன்** என்றும் **தமிழ் வளர்த்த தென்னவன்** என்றும் சொல்வதுண்டு.

புதுச்சொற்கள்

அண்ணி	விமரிசை	உற்சாகம்	ஈடுபட்டு
துதியாது	பெருமான்	தமையனார்	இன்பம்
விரதம்	செங்கோல்	கொழுந்தாடை	ஒப்பிடு

கேள்விகள்

1. அதிவீரராம பாண்டியர் என்ன நூல்களை இயற்றினார்?
2. சமஸ்தானப் புலவர்கள், நைடதம் எப்படி இருந்ததாகச் சொன்னார்கள்?
3. அதிவீர ராமரின் அண்ணி நைடதத்தை எதற்கு ஒப்பிட்டாள்?
4. அதிவீரராமர் தம் தமையனார்மீது படையெடுத்த பொழுது, அவர் செய்த உபதேசம் யாது?

பயிற்சி

I. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் அமை :—
வருந்தினான், திரட்டி, திரும்பி, சிறந்தவை.

II. முதல் பத்தியில் உள்ள பெயருக்குப் பொருத்தமான பெயரை இரண்டாம் பத்தியிலிருந்து எடுத்துச் சேர் :-

இராவணன்	கர்ணன்
ராமன்	வரதுங்க பாண்டியன்
அருச்சுனன்	விபீடணன்
அதிவீரராம பாண்டியன்	பரதன்

III. தகுந்த இடங்களில் முற்றுப் புள்ளி வைத்துப் பிரி:—

அதிவீரராமர் இதைக் கேட்டுக் கோபங்கொண்டார் உடனே தம் படைகளைத் திரட்டினார் தமையனுடன் போர் செய்யச் சென்றார்.

23. தேசிங்கு ராஜன்

டில்லியில் அரசாண்ட முகம்மதிய சக்கரவர்த்திகளுள் ஷா ஆலம் ஒருவர். அவரிடம் எவர்க்கும் அடங்காக் குதிரை ஒன்று இருந்தது. அது மிகவும் கொடிய குணமுடையது. பின்னுல் போனுல் உதைக்கும்; முன்னுல் வந்தால் கடிக்கும். அதை அடக்கவோ அதில் சவாரி செய்யவோ ஒருவராலும் முடியவில்லை.

சக்கரவர்த்தியும், அந்தக் குதிரையை அடக்கி அதில் சவாரி செய்கிறவனுக்குப் பெரிய பரிசு அளிப்பதாகத் தம் தேசம் முழுவதும் விளம்பரம் செய்தார். பல சிற்றரசர்கள் அக்குதிரையை வசப்படுத்த முயன்றனர். ஒன்றும் பலிக்கவில்லை. குதிரையை அடக்க முயன்று பின்னடைந்தவர்கள் எல்லோரும் சிறையில் இடப்பட்டனர். அவர்களில் நம் தென்னுட்டில் உள்ள செஞ்சிக் கோட்டைச் சிற்றரசராகிய தரணிசிங்கும் ஒருவர்.

தரணிசிங் அரசர் சிறையிலிடப்பட்டபொழுது, அவரது மனைவி கருவுற்றிருந்தாள். காலாகாலத்தில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. அவனுக்குத் தேசிங்கு என்று பெயரிட்டனர். அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தான். அவனுக்குப் பதினெட்டு வயது நிறைந்தது. அவன் தனது தந்தையாரது சிறைவாசத்தைப் பற்றி அறிந்தான். டில்லிச் சக்கரவர்த்தியின் அடங்காக் குதிரையை அடக்கி, தன் தகப்பனுரை மீட்க எண்ணங் கொண்டான்.

தேசிங்கு தன் பள்ளித் தோழன் முகம்மதுகானைக் கூட்டிக்கொண்டு டில்லி சேர்ந்தான்; அடங்காத குதிரையை அடக்குவதற்கு வந்திருப்பதாகச் சக்கர

வர்த்தியிடம் தெரிவித்தான். சக்கரவர்த்தியும் சம்ம தித்தார். குதிரை வெளியே கொண்டுவந்து நிறுத்தப் பட்டது. தேசிங்கு பாய்ந்து எழுந்து அதன் பக்கம் போனான். குதிரையைத் தட்டிக்கொடுத்து அதன்மேல் குதித்து ஏறினான். குதிரையும் தாவிப் பாய்ந்தது. தேசிங்கோ அதை மனம்போல போகவிட்டான்.



செஞ்சிக்கோட்டை

குதிரையும் வெகுதூரம் ஓடிக் களைத்தது. தேசிங்கும் வெற்றி பெற்றான். எல்லோரும் அவனைப் புகழ்ந் தனர். ஷா ஆலம் அந்தக் குதிரையை அவனுக்கே கொடுத்தார். தரணி சிங்கும் விடுதலையடைந்தார். தரணிசிங் வருடா வருடம் சக்கரவர்த்திக்குக் கட்ட வேண்டிய கப்பத்தை இனிக் கட்டவேண்டியதில்லை என்று உத்தரவு பிறந்தது. டில்லிச் சேனாதிபதி தன் மகளைத் தேசிங்குக்குக் கலியாணம் செய்து கொடுத் தான். செஞ்சிக் கோட்டைக்கு எல்லோரும் திரும்பினர்.

சிறிது காலத்தில் தரணி சிங் மரணமடைந்தார். தேசிங்கு பட்டத்துக்கு வந்தான். செஞ்சி, செல்வத்திலும் நாகரிகத்திலும் முதன்மைபெற்றது. முகம்மது கான் சேனுதிபதி ஆனுன். அவனுக்குக் கலியாணமும் ஏற்பாடாயிற்று. டில்லி சக்கரவர்த்திக்காக ஆற்காட்டு நவாபு கப்பம் வசூல் செய்தான். அவன் தேசிங்கிடமும் கப்பம் கேட்டனுப்பினுன். இதுகேட்ட தேசிங்கு கடுங்கோபங்கொண்டான். "என்னைச் சண்டையில் வென்று கப்பம் வாங்கிக் கொள்ளட்டும்," என்று சொல்லி அனுப்பினுன்.

முகம்மதுகானுக்குக் கலியாணம் நடந்துகொண்டிருந்த சமயம் செஞ்சியில் சண்டையும் ஆரம்பித்தது. இது அறிந்த முகம்மதுகான் கலியாணத்தை நிறுத்திவிட்டுச் சண்டைக்குச் சென்றுன். நவாபின் சேனையைச் சின்னுபின்னப்படுத்தினுன். எதிர்த்து நிற்பார் ஒருவரும் இல்லை. முகம்மதுகான் கோட்டைக்குத் திரும்பினுன். வழியில் பிணக் குவியலின் மறைவிலிருந்து ஒருவன் அவனை ஈட்டியால் குத்திக்கொன்றுன். இதையறிந்த ராஜா தேசிங்கு சினங்கொண்டான். சீறி எழுந்தான். யுத்தகளத்திற்குச் சென்றுன். எஞ்சி நின்ற நவாபின் சேனையையும் சின்னுபின்னம் செய்தான். முகம்மதுகான் இல்லாமல் உயிர் வாழ அவன் விரும்பவில்லை. தன் வாளை உயர எறிந்தான். தன் மார்பை அதற்கு நேராகக் காண்பித்தான். வாள் அவன் மார்பில் பாய்ந்து, அவன் உயிரை வாங்கியது. தேசிங்கின் மனைவி தீ வளர்த்து அதில் விழுந்து இறந்தாள். அவள் கற்பின் மேன்மைக்கும், தேசிங்கின் வீரத்திற்கும், உயர்ந்த சிநேகத் தன்மைக்கும் அவர்களை இன்றும் உலகம் போற்றுகிறது.

புதுச்சொற்கள்

கற்பு	எஞ்சி	பிணம்	சேனாதிபதி
மேனி	வசூல்	கப்பம்	விளம்பரம்
நவாபு	ஈட்டி	சவாரி	வண்ணம்

கேள்விகள்

1. தரணிசிங் என்ன காரணத்தினால் சிறையிலிடப் பட்டார்?

2. தேசிங்கு ராஜன் குதிரையை அடக்கினதால் அடைந்த லாபம் என்ன?

3. நவாபுக்கும் தேசிங்கு ராஜனுக்கும் நடந்த சண்டைக் குக் காரணம் யாது?

4. முகம்மதுகான் யார்?

5. தேசிங்கு ராஜன் எவ்வாறு மரணம் அடைந்தான்?

பயிற்சி

I. பின்வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை :-

விடுதலை, கப்பம், கொடிய, குதித்து, மீட்க, சின்னா பின்னம், வெற்றி, சவாரி.

II. இப்பாடத்தில் வரும் இடங்களின் பெயர், பிராணி களின் பெயர் இவைகளைத் தனித்தனியாக எடுத்து எழுது.

24. இரு கடிதங்கள்

I

மேல மாசி வீதி,
மதுரை.
20, செப்டம்பர், 1954.

அன்புள்ள சேகர்,

சென்ற வாரத்தில் நீ எங்கள் ஊருக்கு வரப்போவதாகச் சொல்லி வராமலிருந்து விட்டாய். என்னை இப்படி நீ ஏமாற்றலாமா? என் தாயாரும் தகப்பனும் நீ வராததற்கு வருந்தினர்கள்.

போனது போகட்டும். இந்த மாதம் 25-ம் தேதி (இன்னும் நான்கு நாட்களே இருக்கின்றன!) எனக்குப் பிறந்த நாளாம். என் பெற்ருேர் அந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடப் போகிருர்களாம். இந்த மாதிரியான கொண்டாட்டங்களில் எனக்கு விருப்பமில்லை. ஆனல் அன்று நல்ல சாப்பாடு கிடைக்கும். நீ தவருமல் அந்தக் கொண்டாட்டத்திற்கு வரவேண்டும். அன்று ஞாயிற்றுக் கிழமையாயிருப்பதால், உனக்கு லீவுதான். 'வேலை இருந்தது, வரமுடியவில்லை' என்று சொல்லிக்கொள்ள முடியாது.

உன் அன்பன்,
கண்ணன்.

II

மலைக்கோட்டைத் தெரு,
திருச்சி.
21, செப்டம்பர், 1954.

அன்புள்ள கண்ணா !

உன் பிறந்த நாளை நீ கொண்டாடப் போவதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். ஆனால் அதற்கு நான் வர இயலாததைக் குறித்து வருந்துகிறேன். எங்கள் பள்ளியில் இப்பொழுது பரிட்சை நடந்துகொண்டிருக் கிறது. வரவிருக்கும் உன் பிறந்த நாளுக்கு மறு நாள் எனக்குத் தமிழ்ப் பாடப் பரிட்சை. நான் மதுரைக்கு வந்துவிட்டுத் திரும்பிவந்து பரிட்சை எழுதலாம்; ஆனால் பாடங்களைப் படிக்க நேரமிராது.

இன்று உனக்குப் பிறந்த நாள் பரிசாக ஒரு புத்தகம் அனுப்பியிருக்கிறேன். அதைப் பெற்றுக்கொண்டு, நான் வரமுடியாததற்கு என்னை மன்னித்துவிடு. பரிட்சை முடிந்ததும் தொடங்கும் விடுமுறை நாட்களை நான் உன்னுடன் கழிக்கத் திட்டம் போட்டிருக் கிறேன்.

உன் பிரிய நண்பன்,
சேகர்.

பயிற்சி

1. உன் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு கொண்டாட்டத்திற்காக உன் நண்பனுக்கு ஒரு அழைப்புக் கடிதம் எழுது.

2. உன் ஊர்த் திருவிழா ஒன்றை விவரித்து உன் மாமனுக்கு ஒரு கடிதம் எழுது.

25. படப் பயிற்சி—II

நாயின் நல்லறிவு

பின்வரும் படங்களை வரிசையாகப் பார்த்து ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுது. பிறகு அவற்றைச் சேர்த்துக் கதையாகச் சொல்லு.



26. அடக்கம் பெருமை தரும்

ஈசுவரசந்திரர் வங்காளத்தில் பிறந்தார். இளமை யிலேயே அவர் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். அவர் கல்கத்தாவிலுள்ள ஒரு கல்லூரியில் சம்ஸ் கிருதம் கற்றுப் பெரும் புலவரானார். அவருடைய தகுதியை அறிந்து அரசாங்கத்தார் அவருக்கு வித்தியாசாகரர் (கல்விக் கடல்) என்னும் பட்டம் அளித் தார்கள். இதிலிருந்து அவர் ஈசுவரசந்திர வித்தியா சாகரர் என்று அழைக்கப்பட்டார்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவருக்குச் சர்க்கார் உத்தியோகம் கிடைத்தது. நாளடைவில் அவர் சம்ஸ் கிருதக் கல்லூரியில் தலைமை ஆசிரியர் ஆனார். அதன் பிறகு அவர் வங்காளத்திலிருந்த சம்ஸ்கிருத பாடசாலை களையும், கல்லூரிகளையும் மேற்பார்க்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் வங்காளி மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.

ஈசுவரசந்திரர் அடக்கமான சுபாவம் பொருந்தி யவர். எப்பொழுதும் ஏழை எளியாருக்குத் தம்மால் இயன்ற அளவு உதவி செய்து வந்தார். அவர் நூற்றுக் கணக்கான ஏழை மாணவர்களுக்கு உதவி செய்தார். அவர் இவ்வளவு பெரிய மனிதராக இருந்தும், எப் பொழுதும் சாதாரணமான உடையே அணிந்துவந்தார். ரயில் பிரயாணத்தின் பொழுது அவர் மூன்றும் வகுப்பு வண்டியிலேயே பிரயாணம் செய்து வந்தார்.

ஒரு தடவை வித்தியாசாகரர், கல்கத்தாவிலிருந்து பர்த்வானுக்குச் சென்றுகொண்டிருந்தார். அதே வண்டியில் ஒரு நவநாகரீக இளைஞன் ஐரோப்பிய உடை அணிந்து உட்கார்ந்திருந்தான். அவனும் பர்த் வானுக்குச் சென்று கொண்டிருந்தான். ரயில் வண்டி

பர்த்வான் ஸ்டேஷனில் வந்து நின்றது. இளைஞன் தன்னுடைய சிறு கைப்பெட்டியைத் தூக்கி வருவதற் காகக் கூலியாளைக் கூவியழைத்தான். அச்சமயம் ஸ்டேஷனில் கூலியாள் யாரும் இல்லை. இளைஞன் மிக்க கலவரமடைந்தான். இதைக் கண்ட வித்தியா சாகரர் அவனிடம் சென்று, "இங்கே கூலியாள் யாரும் இல்லை. உங்களுக்குச் சம்மதமானால், நானே' பெட்டி

யைத் தூக்கி வருவேன்," என்றார். இளைஞன் கர்வத் துடன் அதற்குச் சம்மதித்தான். வித்தியாசாகரர் பெட்டி யைத் தூக்கிக் கொண்டு இளைஞன் முன்னால் சென்றார். வீட்டை அடைந்தபின் இளைஞன் இரண்டணாவை எடுத்து வித்தியாசாகரருக்குக் கொடுக்க முன்வந் தான். வித்தியாசாகரர் வணக்கத்துடன் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்துத் தம் வழியே சென்றார்.

அடுத்த நாள் அந்தக் கிராமத்தில் பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகரரை வரவேற்கப் பெருங் கூட்டம்

கூட்டிற்று. வித்தியாசாகரரின் கீர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த அந்த இளைஞனும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றான். அப்பெருங் கூட்டத்தின் நடுவே எளிய உடையணிந்த ஒரு மனிதர் நிற்பதை அவன் கண்டான். ஜனங்கள் அவரை வரவேற்று மரியாதை செய்தனர். இளைஞன் அவர் அருகில் சென்று அவரைத் தரிசித்தான். முதல் நாள் தனது பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்த மனிதரே புகழ் பெற்ற ஈசுவரசந்திர வித்தியாசாகரர் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவன் திடுக்கிட்டான். தான் அவரிடம் கர்வத்துடன் நடந்து கொண்டதை எண்ணி வருந்தினான். கூட்டம் முடிவுற்றதும் அவன் வித்தியாசாகரரிடம் சென்று தனது பிழைக்காக அவரது பாதங்களில் பணிந்து மன்னிப்பு வேண்டினான். அவர் அவனை மன்னித்து நற்புத்தி கூறி அனுப்பினார்.

புதுச்சொற்கள்

தகுதி	சுபாவம்	எளியார்
தரிசித்தான்	இயன்ற	நவநாகரிகம்
கர்வம்	கதியற்ற	மரியாதை

கேள்விகள்

1. ஈசுவரசந்திரருக்கு என்ன பட்டப் பெயர், எப்படிக் கிடைத்தது?
2. வித்தியாசாகரர் என்ன உத்தியோகம் செய்தார்?
3. வித்தியாசாகரரின் குணங்களைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
4. இளைஞன் தனது பெட்டியைத் தூக்க ஆள் கிடைக்காததால் என்ன செய்தான்? வித்தியாசாகரர் அவனுக்கு எப்படி உதவினார்?
5. இளைஞன் மறுநாள் கூட்டத்தில் என்ன கண்டான்?
6. இளைஞன் தன் குற்றத்தைத் தெரிந்துகொண்டதும் என்ன செய்தான்?

பயிற்சி

I. *பின்வரும் பெயர்ச் சொற்களை (1) பொருள்களின் பெயர், (2) இடங்களின் பெயர், (3) காலங்களின் பெயர் என்று வகைப்படுத்தி எழுது:-*

மரம், வங்காளம், யானை, மாதம், மதுரை, பையன், நாள், பூனை, மல்லிகை, நிமிடம்.

II. *பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச் சொற்களுக்குப் பொருத்தமான வினைச் சொற்களை அமைத்து எழுது:-*

1. *வித்தியாசாகரர் பெட்டியைத்——. (தூக்கு)*
2. *இளைஞன் தனது குற்றத்தை-——. (உணர்)*
3. *கிராம ஜனங்கள் வித்தியாசாகரருக்கு மரியாதை (செய்)*

27. உபகாரம் வீண் போகாது

காவனூர் என்ற கிராமத்தில் கோபாலன் என்ற பையன் ஒருவன் இருந்தான். அவன் ஏழை எளியவர்க்கு இரக்கப்பட்டு உதவி செய்யும் குணம் உள்ளவன். ஒரு நாள் அவன் அயலூருக்குப் போக நேர்ந்தது. ஆகையால் அவன் கட்டுச் சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

வழியில் அவன் ஒரு காட்டைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் காட்டின் வழியாகச் செல்லும்போது சேறு நிறைந்த ஒரு குட்டையில் குருடன் ஒருவன் விழுந்து தத்தளிப்பதைக் கண்டான். கோபாலன் அவ்வழி போவதைக் குருடன் சத்தத்தால் அறிந்து,

" கண்ணில்லாக் குருடன் ஐயா !
கதியில்லாமல் விழுந்துவிட்டேன்.
புண்ணியவானே நீருமென்னைப்
பொறுமையுடனே எடுத்துவிடும்.

" ஐயா ! நான் குருடன். வழி தெரியாமல் இச் சேறு நிறைந்த குட்டையில் விழுந்துவிட்டேன். தயவு செய்து

என்னை இதிலிருந்து கரையேற்றி, பாதையில் விட்டு விடும்,'' என்று வேண்டினான். அதைக் கேட்ட கோபாலன்,

'' கண்ணியமுள்ள பெரியவரே !
கருத்துடனே உம்மை விடுவிப்பேன்
எண்ணியபடியே இல்லாமல்
ஐயா யானொரு சிறுபயலே.

'' பெரியவரே ! இதோ உம்மைக் கரையேற்றி விடுகிறேன். ஆனால் நீர் எண்ணியபடி நான் பெரிய மனிதனல்ல; சிறு பையன். அடுத்த கிராமத்திற்குச் சென்று, இருட்டுமுன் திரும்ப வேண்டும்,'' என்று கூறிக் குருடனைக் கரையேற்றி, பாதையில் விட்டுச் சென்றான்.

செல்லும்போதே பாதையின் அருகே மயக்கமாய் விழுந்து கிடந்த நொண்டி ஒருவனைக் கண்டான். நொண்டி, பையனைக் கண்டதும்,

'' எட்டு நாளாய் உணவில்லாமல்
ஏக்கமுடனே மயங்குகிறேன்
கட்டுச் சோற்றில் சிறிதளித்துக்
காத்திடுவாயோ பையா நீ ?

''பையா! எட்டு நாளாய் உணவில்லாமல் இவ்விடத்திலேயே கிடக்கின்றேன். தயவு செய்து உனது கட்டுச் சோற்றில் சிறிது கொடுத்து என்னைக் காப்பாற்று,'' என்று கெஞ்சினான். இதைக் கேட்ட கோபாலன்,

'' திட்டமுடன் இச்சோற்றினையே
தின்று பசியைத் தீர்த்துக்கொள்ளும்
கஷ்டத்துடனே ஊர் சென்று
கருத்துடன் திரும்புவேன் விரைவாக.

''ஐயா! இக் கட்டுச்சோற்றை நீர் சாப்பிடும். நான் அயலூர் சென்று சீக்கிரம் இருட்டுமுன் திரும்ப

வேண்டும்,'' என்று கூறிக் கட்டுச்சோற்றைக் கொடுத்துச் சென்றான்.

ஆனால் கோபாலன் திரும்பி வரும்போது நடுக் காட்டில் பொழுது இருட்டி விட்டது. வழியில் அவன் பாடிக் கொண்டே வந்தான். இரண்டு திருடர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினார்கள். அப்பொழுது,

"வாருங்கள் வாருங்கள் சீக்கிரமே!
வந்திதோ இருக்கிற திருடர்களைப்
பாருங்கள், பிடியுங்கள், கட்டுங்கள்
பாவத் தொழில்செய்யும் கள்வர்களை.

"வாருங்கள், சீக்கிரம் வாருங்கள்! இதோ இருக்கும் திருடர்களைப் பிடியுங்கள்; கட்டுங்கள்; அடியுங்கள்," என்ற சத்தம் கேட்டது. இதைக் கேட்ட திருடர்கள் ஓடிவிட்டனர். முன்பு கோபாலன் உபகாரம் செய்த நொண்டி, குருடன்மேல் ஏறிக்கொண்டு, இருவரும் சத்தமிட்டுக்கொண்டே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் கோபாலன்,

" ஐயன்மீர் உங்கள் உதவியினால்
ஆபத்திலிருந்து தப்பிவிட்டேன்
மெய்யாகவே நீங்கள் வாராவிடில்
மேன்மேலும் ஏதேது செய்வார்களோ?

"ஐயன்மீர்! நீங்கள் சமயத்தில் வந்தீர்கள். இல்லாவிட்டால் அத்திருடர்கள் என்னை அடித்துக் கஷ்டப்படுத்தியிருப்பார்கள். உங்களுக்கு மிகவும் வந்தனம்!" என்று கூறினான். அதற்குள் அவர்கள்,

" பையனே உன் ஆபத்தினைப்
பார்த்ததுமே நாங்கள் ஓடிவந்தோம்
செய்யும் உபகாரம் ஒருநாளும்
சேதமாகாது தெரிந்து கொள்வாய்.

"பையா! உன் குரலைக்கேட்டு, உன் ஆபத்தை அறிந்து சத்தமிட்டுக் கொண்டே ஓடி வந்தோம். அதனால் திருடர்கள் ஓடிவிட்டனர். நீ இன்று எங்களுக்கு உபகாரம் செய்ததனால் உன் குரலைத் தெரிந்து கொண்டோம். ஆகையால் ஒருவருக்கு உபகாரம் செய்தால் அது என்றும் வீண்போகாது," என்று கூறிச் சென்றனர். கோபாலனும் சௌக்கியமாய் வீடு சேர்ந்தான்.

புதுச்சொற்கள்

பாவத்தொழில்	கண்ணியம்	கெஞ்சு	கடக்க
சௌக்கியம்	உபகாரம்	மயக்கம்	வந்தனம்
கஷ்டப்படுத்து	ஆபத்து	ஏக்கம்	சேதம்

கேள்விகள்

1. கோபாலன் யார் யாருக்கு உபகாரம் செய்தான்? அவர்களால் கோபாலனுக்கு எந்த விதத்தில் பிரதியுபகாரம் செய்ய முடிந்தது?
2. இப்பாடத்தினால் நீ கற்றுக்கொண்ட நீதி என்ன?

பயிற்சி

I. பின்வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை:-

இரக்கம், அன்பு, தத்தளி, வழிதெரியாமல், கரையேற்றி, திருடர்கள், தப்பிவிட்டேன்.

II. இப்பாடத்திலுள்ள பெயர்ச் சொற்களில் நான்கும் வினைச் சொற்களில் நான்கும் எடுத்து எழுது. அவற்றின் எண்களைக் கூறு.

28. பாதுஷாவின் நேர்மை

ஜஹாங்கீர் அக்பர் பாதுஷாவின் புதல்வர். அவர் தமது குடிகளை மிக்க அன்புடன் நடத்தி, நீதி தவறாது செங்கோல் செலுத்தி வந்தார். குடிகளின் குறைகளைக் கேட்டறிவதற்காக அவர் தமது அரண்மனையில் பெரிய மணி ஒன்று அமைத்தார். அதன் கயிறு அரண்மனையில் வெளிப்புறக் கதவில் கட்டியிருந்தது. குடிகளில் எவருக்கேனும் துன்பம் நேர்ந்தால் அந்தக் கயிற்றை இழுத்து மணியை அடிப்பது வழக்கம். பாதுஷா, மணியின் ஒலியைக் கேட்டு மணியடித்தவரைத் தர்பாருக்கு வரவழைத்து விசாரிப்பார்.

ஒரு நாள் ஓர் ஏழைப் பெண் அந்த மணியை அடித்தாள். பாதுஷா அச்சமயம் அரண்மனையினுள்ளே தம் ராணியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். மணி ஒலியைக் கேட்டதும் அவர் மணியடித்தவரைத் தர்பாருக்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ஏழைப்பெண் பாதுஷாவின் எதிரில் வந்தாள். அவளை விசாரித்ததில், கோட்டையினுள்ளிருந்து வெளிவந்த ஒரு குண்டு பட்டு அவளுடைய கணவன் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது. உடனே பாதுஷா குண்டு போட்டவர் யாரெனக் கண்டுபிடிக்க உத்தரவிட்டார்.

ஜஹாங்கீரின் பெரிய ராணியான நூர்ஜஹான் குண்டு போட்டதாகச் செய்தி கிடைத்தது. தர்பாரில்

கூடியிருந்தவர்கள் இதைக் கேட்டு, நீதிக்குப் பெயர் பெற்ற ஜஹாங்கீர் அளிக்கப்போகும் தீர்ப்பை ஆவலு டன் எதிர்பார்த்தார்கள். உடனே ஜஹாங்கீர் ஒரு துப் பாக்கியை வரவழைத்து அதைக் குண்டுகளால் நிரப்பி ஞர். பிறகு அதை அந்த ஏழைப் பெண்ணிடம் கொடுத்து, "நமது நீதியின்படி, கொலைக்குப் பதில் கொலைதான். என் மனைவி உன் கணவனைக் கொன்று உன்னை விதவையாக்கினாள். ஆகவே நீயும் அவளது கணவனைக் கொன்று அவளைக் கைம்பெண்ணுக்கு. அவளது கணவனான நான் இதோ உன் முன்னால் நிற் கின்றேன்," என்றார்.

சபையோர் மிக்க ஆச்சரியமடைந்தனர். அந்த ஏழைப்பெண், "நான் இவ்விதம் பழிவாங்க விரும்ப வில்லை. நான் தங்களது மனைவியை மன்னித்துவிட் டேன்," என்று கூறினாள். பாதுஷாவும் அவளைப் பாராட்டித் தமது மனைவி நூர்ஜஹானுக்குக் கொடுத் திருந்த கிராமங்களில் பாதியை அந்த ஏழைப் பெண்ணுக்கு ஜாகீராகக் கொடுத்தார். ஜஹாங்கீரின் நேர்மையைக் குடிகள் எல்லாரும் புகழ்ந்தார்கள்.

புதுச்சொற்கள்

பாதுஷா	தர்பார்	கைம்பெண்
தீர்ப்பு	பழிவாங்கு	விதவை
ஜாகீர்	அரண்மனை	கட்டளை

கேள்விகள்

1. ஜஹாங்கீரின் அரண்மனையில் பெரிய மணி எதற்காக அமைக்கப்பட்டிருந்தது?
2. அரண்மனை மணியை ஏழைப்பெண் ஏன் அடித்தாள்?
3. பாதுஷா, ஏழைப் பெண்ணுக்கு எப்படி நியாயம் வழங்கினார்?

பயிற்சி

பின் வரும் சொற்களுக்கு எதிரான பொருளுடைய சொற்களை எழுது:—

வெளிப்புறம்; முன்னே; புகழ்ந்தார்கள்; நியாயம்.

29. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
கிட்டாதாயின் வெட்டென மற.
கீழோர் ஆயினும் தாழ உரை.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
திரைகட லோடியுந் திரவியந் தேடு.
தெய்வஞ் சீறின் கைதவ மாளும்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு.
மாரி அல்லது காரியம் இல்லை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வீரன் கேண்மை கூரம்பாகும்.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கோள்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தீராக் கோபம் போராய் முடியும்.
தோழ ஞேடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சக மில்லை.
நைபவ ரெனினும் நொய்ய உரையேல்.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோ டாயினும் காலம் அறிந்துண்.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோ டுண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.
வையந் தோறும் தெய்வம் தொழு.

30. வெற்றிவேற்கை

ஆசான்

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

அழகு

கல்விக் கழகு கசடற மொழிதல்.
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.
மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.
உழவர்க் கழகு ஏர் உழுதூண் விரும்பல்.
மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
பெண்டிர்க் கழகு எதிர் பேசா திருத்தல்.
அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

பெருமை சிறுமை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
கற்றோரெல்லாம் அறிஞரும் அல்லர்.
பெருமையும் சிறுமையும் தான் தரவருமே.

நட்பு

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்ருது.
சுடினும் செம்பொன் தன்ெனுளி கெடாது.
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அருது.
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
கலக்கினும் தண்கடல் சேரு காது. [காய்
அடினும் பால்பெய்து கைப்பருது பேய்ச்சுரைக்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது
ஆதலால்.
ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

பிழை பொறுத்தல்

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

சுதேச வாசகம்

நான்காம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்தது

சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்
வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை
திருத்தியது.

வி. சூ. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை. | பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை.

பதிப்புரிமை] :: [விலை ரூ. 0-8-0

திருத்திய முதற்பதிப்பு—1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

ஆரம்பப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டப்படி, தேச வாசகம் நான்காம் புத்தகம் வெளியிடப் பெற்றுள்ளது. பாடங்கள் யாவும், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும், தற்காலச் சூழ்நிலைக்கும், இவ்வகுப்பு மாணவரின் அறிவுத் திறத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. புதுச் சொற்களைச் சிரமமின்றிக் கற்பிக்கத் தக்க முறையிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

பாடத்தில் கற்ற விஷயங்களை மனத்திற்கொள்ளுமாறு செய்வதற்குரிய வினாக்களுடன், மொழிப் பயிற்சிக்கும் இலக்கணப் பயிற்சிக்கும் தேவையான கேள்விகளும் ஒவ்வொரு பாடத்திலும் தரப்பட்டுள்ளன. சில எளிய பாட்டுக்களும், கதைப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்களது சில பாட்டுக்களைச் சேர்த்துக் கொள்ள இசைவு அளித்த பிள்ளையவர்களுக்கு எம் நன்றி உரித்தாகும்.

இந் நூலைத் திருத்தியமைப்பதில் எமக்கு உதவிய ஸ்ரீ வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்

தேச வணக்கம்

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிறப்பச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 2

ஞாலமெங்கும் வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	ஆடுவோமே (பாட்டு)	6
2.	தமிழ் நாடு	7
3.	படிப்பும் பகுத்தறிவும்	10
4.	உடற்பயிற்சி	15
5.	தமிழ் இலக்கியம் (பாட்டு)	19
6.	பட்டு	20
7.	வீரத்தாதி	24
8.	பாய் பின்னுதல்	29
9.	படப்பயிற்சி—I	33
10.	இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்	34
11.	குமணன்	38
12.	சைக்கிள் (பாட்டு)	44
13.	பொங்கல் விழா	45
14.	தபால்முறை வளர்ந்த விதம்	49
15.	சர்க்கரை	54
16.	படப்பயிற்சி—II	59
17.	கடிகாரம்	60
18.	கடிகாரம் வேண்டுமோ (பாட்டு)	65
19.	வ. உ. சிதம்பரம் பிள்ளை	67
20.	இராமகிருஷ்ண பரமஹம்ஸர்	72
21.	படப்பயிற்சி—III	78
22.	கிராமத்தொண்டு	79
23.	தாஜ்மஹால்	83
24.	உண்மையின்பெருமை	86
25.	வெற்றிவேற்கை	92
26.	வாக்குண்டாம்	95

1. ஆடுவோமே

ஆடுவோமே—பள்ளுப்
பாடுவோமே ;
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று (ஆடுவோமே)

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனே செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனே செய்வோம்.
விழலுக்கு நீர்பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கே உழைத்துடலம்
ஓய மாட்டோம். (ஆடுவோமே)

நாமிருக்கும் நாடு நமது
என்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்ப தறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
செய்து வாழ்வோம். (ஆடுவோமே)

—பாரதியார்.

அருஞ்சொற்பொருள்

வந்தனே - வணக்கம். நிந்தனே - வைதல். விழல் - புல். மாய - சாக. உடலம் - உடம்பு. பரிபூரணன் - கடவுள்.

கேள்விகள்

1. நாம் எதற்கு வந்தனே செய்வோம் ?
2. நாம் என்ன செய்யமாட்டோம் ?
8. நாம் அறிந்து கொண்டது என்ன ?
4. இனி எவருக்கு அடிமை செய்யமாட்டோம் ? எவருக்கு அடிமை செய்வோம் ?

2. தமிழ் நாடு

நாம் பேசுவது தமிழ் மொழி. தமிழ் பேசுபவர்கள் வாழும் நாட்டுக்குத் தமிழ் நாடு எனப் பெயர். தமிழ் நாடு தென்னிந்தியாவின் தென்பாகத்திலுள்ளது. பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாடு கிழக்குக் கடற்கரைக்கும் மேற்குக் கடற்கரைக்கும் இடையே, தெற்கில் **கன்னியாகுமரி** முதல் வடக்கே **வேங்கடம்** என்ற திருப்பதி வரை பரவியிருந்தது

நம் தமிழ் நாட்டை முன் காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். தமிழ் நாட்டு மூவேந்தர் நீதி செலுத்துவதில் இணையில்லாதவர்கள். அவர்கள் காலத்தில் தமிழ்க் கல்வி ஓங்கி வளர்ந்திருந்தது. விவசாயம் செழிப்புற்றிருந்தது. மக்கள் பெரிய தோணிகள் செய்து, அவைகளில் நம் நாட்டில் விளையும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு பல இடங்களுக்கும் சென்று வியாபாரம் செய்து வந்தனர். அந்நிய நாடுகளோடும் அவர்கள் வியாபாரம் செய்தனர். தமிழர் நெசவுத் தொழிலில் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். சிறந்த படை வீரர்களாய் விளங்கினர். அவர்களுக்கு இரும்பு முதலிய உலோகங்களால் பலவித ஆயுதங்கள் செய்யத் தெரிந்திருந்தது. சிற்பம், சங்கீதம், நாட்டியம், வைத்தியம், ஓவியம் முதலிய பல கலைகளிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவர்களது அரசியல் முறை சிறந்திருந்தது. தமிழ்ப் புலவர் பலர், பல உயர்ந்த தமிழ்க் காவியங்களை இயற்றினர். அரசர்கள் பல கலைகளையும் புலவர்களையும் ஆதரித்து வந்தனர்.

சேர ராஜ்யம் :—இது கேரளம் என்றும் சொல்லப்படும். இதில் **கொச்சி**, **மலையாளம்**, **திருவாங்கூரின்**

வடபாகம், சேலம் ஜில்லாவின் பெரும் பகுதி முதலிய தற்காலப் பகுதிகள் அடங்கியிருந்தன. சேர நாட்டிற் குத் தலைநகரம் வஞ்சி. இதன் துறைமுகங்கள் முசிரி, மாந்தை, தொண்டி முதலியன. கோவலனது சரிதை யாகிய சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காவியத்தைப் பாடிய இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன் என்னும் அரசனது தம்பியே. சேர அரசர்களின் கொடி முரசுக் கொடியாகும்.

சோழ ராஜ்யம் :—இதில் தற்காலத்திய திருச் சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னுற்காடு, கோயம்புத் தூர் முதலிய பகுதிகள் அடங்கியிருந்தன. சோழநாடு காவிரிப் பாய்ச்சலால் மிகவும் செழிப்பாய் இருந்தது. இந்நாட்டிற்குத் தலைநகரம் திருச்சிராப்பள்ளிக்கு அருகி லுள்ள உறையூர். பிற்காலத்தில் தஞ்சையும் இதன் தலைநகராய் விளங்கிற்று. இந்நாட்டிற்குத் துறைமுக மாய் விளங்கியது காவிரிப்பூம் பட்டினம். அது காவிரி நதியின் முகத்துவாரத்தில் இருந்தது. அங்கு ஒரு தீப ஸ்தம்பம் இருந்ததாகவும், பட்டினம் வெகு அழகாய் அமைந்திருந்ததாகவும், ஒரு காலத்தில் சோழ ராஜ்யத் தின் தலைநகராய் விளங்கியதாகவும் தமிழ் நூல்களி லிருந்து தெரிய வருகிறது. அக்காலத்தில் அது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். தமிழில் இராமாயணம் பாடிய கம்பர் சோழ நாட்டில் பிறந்தவரே. சோழர் களின் கொடி புலிக் கொடியாகும்.

பாண்டிய ராஜ்யம் :—இது சோழ நாட்டிற்குத் தெற்கே இருந்தது. இதில் தற்காலத்திய மதுரை, திரு நெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களும் திருவாங் கூரின் சில பாகங்களும் சேர்ந்திருந்தன. முதலில் மணலூர் பாண்டிய நாட்டின் தலைநகரமாயிருந்தது. பின்னர் மதுரை தலைநகரமாகியது. மதுரையிலுள்ள

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் உலகப் புகழ் பெற்றது. பண்டைக் காலத்தில் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. பல தமிழ்ப் புலவர்கள் அக்காலத்தில் கூடி, பல அரிய பெரிய தமிழ் நூல்களை இயற்றினர். அரசர்களும் புலவர்களாகவே விளங்கினர். இந்நாட்டின் துறைமுகம் **கொற்கை.** அயல் நாட்டு வியாபாரிகள் கொற்கையில் இறங்கி, தங்கள் சரக்குகளை விற்பனை செய்து, இங்கிருந்து மீன், முத்து, பவளம், தந்தம், மயில் முதலியவைகளை வாங்கிச் செல்வார்கள். பாண்டிய மன்னர்களுக்கு **மாறன்** என்றும் **வழுதி** என்றும் பட்டப் பெயர்கள் உண்டு. அவர்களுடைய கொடியிலும் நாணயங்களிலும் மீன் உருவம் வரையப்பட்டிருந்தது.

அக்காலத்தில் நம் தமிழ் நாடு பல துறைகளில் சிறந்து விளங்கியது. நாமும் நம் தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் எவ்வகையிலும் சிறந்தோங்கச் செய்வோமாக.

பரவி	*சங்கம்*	*தற்காலம்*	*முகத்துவாரம்*
பகுதி	*முத்து*	*பிற்காலம்*	*கைதேர்ந்தவர்*
சரக்கு	*பவளம்*	*அமைந்து*	*பண்டைக்காலம்*
தோணி	*காவியம்*	*மூவேந்தர்*	

அருஞ்சொற்பொருள்

மூவேந்தர் - மூன்று அரசர்கள்; சேர, சோழ, பாண்டியர். சரக்கு - சாமான். தோணி - படகு. கைதேர்ந்தவர் - திறமையுள்ளவர்.

கேள்விகள்

1. *பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை :— பரவு, நூல், பண்டைக்காலம், சிற்பம், ஓவியம்.*
2. *பாண்டிய அரசர்களின் பட்டப் பெயர்களை எழுது.*
3. *சேர, சோழ நாட்டின் அக்காலத்திய எல்லைகளைக் குறிப்பிடு.*
4. *தமிழ் நாடு மிகவும் நாகரிகமடைந்திருந்தது என்பதற்கு உதாரணங்கள் கூறு.*

பயிற்சி

I அ முதல் ஔ வரையிலுள்ள பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள் எனப்படும். பிற எழுத்துக்களின் உதவி யின்றியே இவற்றை ஒலிக்க முடியுமாகையால் இவை இப் பெயர் பெற்றன. இவற்றில் குறுகிய ஓசையுடையவை குறில் அல்லது குற்றெழுத்துக்கள் எனப்படும். நீண்ட ஓசையுடை யவை நெடில் அல்லது நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ—குறில் ஐந்து.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—நெடில் ஏழு.

II க் முதல் ன் வரையிலுள்ள பதினெட்டும் மெய்யெழுத் துக்கள் எனப்படும். இவற்றில்,

க், ச், ட், த், ப், ற் – வல்லினம்.

ங், ஞ், ண், ந், ம், ன்—மெல்லினம்.

ய், ர், ல், வ், ழ், ள்—இடையினம்.

III பின் வரும் சொற்களிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் எந்த வகையைச் சேர்ந்தது என்று எழுது.

அரம், ஈனம், எங்கு, ஓடம், கலம்.

3. படிப்பும் பகுத்தறிவும்

உதயபுரம் என்ற ஊரில் நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் நால்வரும் கல்வி கற்பதற்கு ஐயபுரம் என்ற ஊருக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் ஒரு நல்லாசிரியரை யடைந்து, பல கலை களைப் பயின்று வந்தார்கள். அவர்களின் கடைசி சகோதரனான சுபுத்தி என்பவனுக்குப் படிப்பு சிறிதும் வரவில்லை. கலைகளைக் கற்றுக்கொள்ள ஆவல் சிறிதும் அவனுக்கு ஏற்படவில்லை. ஆனால் அவனுக்கு உலக அனுபவமும் நல்ல சாமர்த்தியமும் ஏற்பட்டது. மற்ற மூவரும் எப்பொழுதும் பல நூல்களைக் கற்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்துவந்தனர். அவர்கள் சுபுத்தியை மூடன் என்று எண்ணி வெறுத்து வந் தார்கள்.

இவ்வாறு நான்கு வருடங்களில் அவர்களது படிப்பு முடிவடைந்தது. மூத்தவர்கள் மூவரும் எல்லா வித்தைகளிலும் வல்லவர்களானார்கள். சுபுத்தியோ பகுத்தறிவுள்ளவனாகவும் ஆனால் படிப்பில்லாதவனாக வும் இருந்தான். அவர்கள் நால்வரும் தங்கள் ஆசிரிய ரிடம் விடைபெற்றுக்கொண்டு, தங்கள் ஊரை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் ராஜபுரி என்ற பட்டினம் இருந்தது. அப்பொழுது மூத்தவன் மற்ற வர்களை நோக்கி, "சகோதரர்களே! இன்னும் சிறிது தூரத்தில் ராஜபுரி என்ற நகரம் இருக்கிறது. அதை ஆளும் அரசன், கல்வியில் வல்லவர்களுக்குச் சிறந்த பரிசுகள் அளிக்கின்றானாம். நாமும் அங்கே சென்று பரிசு பெற்று வருவோம். ஆனால் நம்முள் சுபுத்தி மிகவும் மூடன். ஆகையால் அவனை இங்கேயே விட்டு விட்டுப் போவோம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான்.

அது கேட்ட மூன்றாம் சகோதரன், "அண்ணன் மார்களே! படிக்காத முட்டாளாயிருந்த போதிலும், சுபுத்தி நம் கூடப் பிறந்தவன் அல்லவா? ஆகையால் அவனையும் கூட்டிக்கொண்டே செல்வோம்," என்று கூறினான். மற்றவர்களும் இதற்குச் சம்மதித்தனர். பிறகு நால்வரும் ராஜபுரியை நோக்கிப் புறப்பட்டனர். போகும்பொழுது அவர்கள் ஒரு காட்டின் வழியாய்ச் செல்ல நேர்ந்தது. அக்காட்டின் நடுவே ஓரிடத்தில் சில எலும்புகள் சிதறிக்கிடந்தன. அதைக் கண்டதும் மூத்தவன், "தம்பிமார்களே! நாம் கற்ற வித்தையை பரிட்சை செய்ய ஒரு நல்ல தருணம் கிடைத்திருக் கிறது. இத் தருணத்தைக் கைவிடக் கூடாது. இதோ, இறந்த ஒரு புலியின் எலும்புகள் கிடக்கின்றன. நம் மவருள் ஒருவன் இந்த எலும்புகளை ஒழுங்காக அடுக்

கட்டும். மற்றொருவன் இதற்குத் தோலும் சதையும் உண்டாக்கட்டும். நான் இதற்கு உயிர் கொடுக்கிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்றான்.

இதைக்கேட்ட சுபுத்தி மிகவும் பணிவுடன், '' அண்ணன்மார்களே! தயவு செய்து நீங்கள் செய்யப் போகும் காரியத்தை யோசித்துச் செய்யுங்கள். இறந்த

ஒரு புலியை நீங்கள் உயிர்கொடுத்து எழுப்பினால், அது நம்மையே முதலில் கொன்றுவிடும். ஆகையால் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம். வேறு வழிகளில் உங்கள் வல்லமையைப் பரிட்சிக்கலாம்,'' என்று கூறி வேண்டினான். அப்போது மற்றொரு சகோதரன் சுபுத்தியை நோக்கி, '' அடே! அற்பப்பதரே! வித்தை கற்காத முழு மூடனாகிய நீயா எங்களுக்குப் புத்தி சொல்கிறாய்? அண்ணன் கூறியபடியே உன்னை

அங்கேயே விட்டுவிட்டு வந்திருக்க வேண்டும்,'' என்று கோபத்துடன் கூறினன். மற்றவர்களும் சுபுத்தியைக் கண்டிக்கலாயினர்.

ஆனல் சுபுத்தியோ அவர்களை வணங்கி, "அண்ணன்மார்களே! நீங்கள் எது வேண்டுமாயினும் செய்யுங்கள். ஆனல் தயவு செய்து நான் ஒரு மரத்தின் மேல் ஏறிக்கொள்ளும் வரை பொறுங்கள். பிறகு உங்கள் வித்தைகளைப் பரிட்சித்து, அதன் பலனை அடையுங்கள்,'' என்று கூறி, ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறிக்கொண்டான்.

சுபுத்தி மரத்தின்மேல் ஏறிக்கொண்ட பின் சகோதரரில் ஒருவன் இறந்த புலியின் எலும்புகளை ஒழுங்காய் அடுக்கினன். இன்னெருவன் அதற்குத் தோலும் சதையும் உண்டாக்கினன். மூன்ருவது சகோதரன் அப்புலிக்கு உயிர் கொடுத்தான். உயிர் பெற்றெழுந்த புலியோ, அம்மூவர்மேலும் பாய்ந்து அவர்களைக் கொன்று தூக்கிக்கொண்டு காட்டுக்குள் ஓடிவிட்டது! புலி ஓடி வெகுநேரம் ஆனபின், சுபுத்தி மனவருத்தத்துடன் மரத்திலிருந்து இறங்கி வீட்டுக்குச் சென்ருன். ஆகையால் படிப்பு இருந்தால் மட்டும் பயன் இல்லை; சமயத்திற்குத் தகுந்த பகுத்தறிவும் வேண்டும்.

சிதறி	*வித்தை*	*புத்திசாலி*	*பகுத்தறிவு*
மூடன்	*பயின்று*	*தேகசுகம்*	*இன்றியமையாதது*
ஆவல்	*முட்டாள்*	*அனுபவம்*	*கண்டிக்க*

அருஞ்சொற்பொருள்

ஆவல் - மிகு விருப்பம். வித்தை - கலையறிவு. பயின்று - கற்று. பகுத்தறிவு - இது நல்லது இது தீது என்று வேறு படுத்தி யறியும் அறிவு.

கேள்விகள்

1. கல்வி கற்கச் சென்ற சகோதரர்களுள் இருந்த வேறுபாடு என்ன?
2. இக்கதையைச் சுருக்கமாக எழுது.
3. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது :—சிதறு ; தருணம் ; பழகு ; பயில்.

பயிற்சி

I தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை?

II உயிர் மெய்யெழுத்து, ஆய்த எழுத்து இவை எவை?

III பின்வரும் வாக்கியங்களைக் கவனி :—

1. நாய் குரைக்கிறது.
2. சுபுத்தி மரத்தின்மீது ஏறிக்கொண்டான்.

இவற்றில், நாய், மரம், சுபுத்தி, என்ற சொற்கள் பெயர்ச் சொற்கள் என்பதும், குரைக்கிறது, ஏறிக்கொண்டான் என்ற சொற்கள் வினைச் சொற்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

IV பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது :—

1. அவர்கள் ஆசிரியரிடம் கல்வி பயின்றனர்.
2. காட்டில் ஓரிடத்தில் சில எலும்புகள் சிதறிக் கிடந்தன.

V மாதிரியில் காட்டியிருப்பதுபோல் சொற்களைச் சேர்த்து எழுது :—

வேலையை	+ செய்	=	வேலையைச் செய்
மரத்தை	+ கண்டான்	=	
புலியை	+ கொன்றான்	=	
வீட்டுக்கு	+ போனான்	=	
மாணவனுக்கு	+ தம்பி	=	
இதை	+ பார்	=	

4. உடற்பயிற்சி

இவ்வுலக வாழ்க்கையை நாம் திறமையுடன் நடத்துவதற்கு, நமது உடல், நோய்களால் துன்புருமல், வலிமை பெற்றிருக்க வேண்டும். மாணவர்களாகிய உங்களுக்குக் கல்வி கற்பதே முதன்மையான வேலை. நீங்கள் காய்ச்சல் முதலிய நோய்களால் துன்புறும்பொழுது, உங்களுடைய வேலையைச் சரிவரச் செய்ய முடிவதில்லை. அதுபோலவே, எல்லோருக்கும் அவரவர் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு உடல் நலம் இன்றியமையாதது.

நமது உடல் வலிமை பெறுவதற்கு, நாம் செய்ய வேண்டுவது யாது? இந்த வினுவிற்குச் சுருக்கமாக, 'உடற்பயிற்சி செய்தல்' என்று விடையளிக்கலாம். சிறுவர்கள் அதிகமாக வேலை செய்தால், அவர்களுடைய உடல் நலம் கெட்டு விடுமென்று அஞ்சும் பெற்ருேர் சிலர் இருக்கிருர்கள். இவர்கள் நமது உடம்பின் இயல்பை அறியாதவர்கள் என்று சொல்லலாம். உழைப்பினுல்தான் நமது உடல் உரம் பெறுகிறது. உடலுழைப்பு ஏதும் இல்லாதிருப்பவர்கள் வலிமை குறைந்து எளிதில் நோயுறுவார்கள்.

வயதானவர்கள் பலர் தத்தம் பிழைப்புக்கு வேண்டிய தொழில்களைச் செய்யும்போதே உடலுக்குத் தேவையான உழைப்பும் பயிற்சியும் அவர்களுக்குக் கிடைத்து விடும். தனிப்பட்ட உடற்பயிற்சி அவர்களுக்குத் தேவையில்லை. ஆனுல் கல்வி பயிலும் பருவத்திலுள்ள மாணவர்களுக்குத் தனிப்பட்ட உடற்பயிற்சிகள் இன்றியமையாதவை. நீங்கள் முக்கியமான சில உடற்பயிற்சிகளை நாள்தோறும் செய்து வர வேண்டும். உங்களுக்கு உடற்பயிற்சி முக்கியமானது

என்பதை வற்புறுத்தவே பள்ளி நேரத்தில், வாரத்திற்கு இரண்டு மூன்று நாட்களில் உடற்பயிற்சி விளையாட்டுக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

காலை, மாலை வேளைகளில் திறந்த வெளிகளில் உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஓடுதல், குதித்தல், பல வகையான பந்தாட்டங்கள் போன்ற விளையாட்டுக்



களில் நீங்கள் ஈடுபடலாம். தண்டால் எடுத்தல், பஸ்கி போடுதல் போன்ற பயிற்சிகளையும் செய்யலாம். நீந்துவதும் ஒரு நல்ல பயிற்சியாகும். சடுகுடு, கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்களும் உடலுக்கு நல்ல பயிற்சியளிக்கும்.

உடற்பயிற்சி செய்யும்பொழுது உடலில் வேர்வை உண்டாகும். இதனால் உடலிலுள்ள கழிவுப் பொருள்கள் நீக்கப்படுகின்றன. திறந்தவெளிக் காற்றை சுவாசிப்பதால், இரத்தம் சுத்தமடையும். நமது தசைகளுக்கு

இரத்த ஓட்டம் அதிகமாகப் பாய்வதால் அவை வளர்ச்சி யடையும். நல்ல பசி எடுக்கும். உடற்பயிற்சி செய்பவர்கள் சத்துள்ள உணவுகளைப் புசிக்கவேண்டும்.

உடற்பயிற்சி செய்யும்போது அளவுமீறிச் செய்து கொண்டே இருக்கக்கூடாது. களைப்பு ஏற்பட்டு விட்டால், உடற்பயிற்சியை நிறுத்திவிட்டு, ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். நாளடைவில் பயிற்சிக் காலத்தையும், பயிற்சியின் அளவையும் சிறிது சிறிதாக அதிகப்படுத்தலாம்.

குறித்த வேளைகளில், ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வந்தால், உடல் வலிமையும் சுறுசுறுப்பும் ஏற்படுவதுமல்லாமல், மூளையும் அறிவும் வளர்ச்சியடையும். உடல் வலிமையற்றவர்கள் பெரிய அறிவாளிகள் ஆவது அரிது.

அறிவு	அரிது	களைப்பு	திறம்பட
பயில்	இயல்பு	புசிக்க	அறிவாளி

அருஞ்சொற்பொருள்

துன்புறுமல் - கஷ்டப்படாமல். திறம்பட - சிறந்த முறையில், நன்றாக. இயல்பு - தன்மை. உரம் - வலிமை. பயிலும் - கற்கும். வற்புறுத்த - உறுதியாகச் சொல்ல. ஈடுபடலாம் - சேர்ந்து உழைக்கலாம். நாளடைவில் - நாளாக ஆக. அரிது - பெரும்பாலும் இல்லை.

கேள்விகள்

1. உடல் நலம் எதற்கு இன்றியமையாதது?
2. தனிப்பட்ட உடற்பயிற்சி யாருக்குத் தேவையில்லை? யாருக்குத் தேவை?
3. மாணவர்கள் செய்யத் தகுந்த சில உடற்பயிற்சிகளை எழுது.
4. உடற்பயிற்சி செய்வதால் நம் உடம்பு எவ்வாறு வலிமை பெறுகிறது?

பயிற்சி

I எதிரான பொருளுடைய சொற்களை எழுது:—

துன்புறு ; அரிது ; அதிகப்படுத்து ; இல்லை ; செய்யலாம்.

II பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாடு விளங்கும் படி வாக்கியங்களில் உபயோகி : (1) வழி , வலி. (2) கலை , கழை , களை. (3) பறவை , பரவை. (4) இறங்கு , இரங்கு.

III பின் வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களைக் கவனி:—

1. என் நண்பன் உண்ண வந்தான்.

2. படித்த பையன் புகழ் பெறுவான்.

இவற்றிலுள்ள வினைச் சொற்களில் வந்தான், பெறுவான் என்ற இரண்டும் பொருள் முடிவு பெற்றுள்ளன. உண்ண, படித்த என்ற இரண்டும் வினைச் சொற்களே; ஆனால் பொருள் முடிவுபெறவில்லை. பொருள் முடிவு பெற்ற வினைச் சொற்களுக்கு முற்றுவினைகள் என்றும், முடிவு பெருத வினைச் சொற்களுக்கு எச்ச வினைகள் என்றும் பெயர்.

IV பின் வரும் வாக்கியங்களிலுள்ள முற்று வினைகளையும் எச்ச வினைகளையும் எடுத்து எழுது :—

1. கல்வி பயிலும் மாணவருக்கு உடற்பயிற்சி வேண்டும்.

2. ஆசிரியர் காலையில் எழுந்து படிக்கிருர்.

3. உடற்பயிற்சி செய்யத் தகுந்த நேரம் காலையும் மாலையுமே.

4. பாடகன் தெருவில் பாடிக்கொண்டே சென்ருன்.

5. தமிழ் இலக்கியம்

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவோமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவோமே. 1

பாவின் சுவைக்கட லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவோமே—நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவோமே. 2

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே. 3

கற்றவர் மெச்சும் கலித்தொகை—யாமின்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே—கால்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே. 4

பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும்—அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே. 5

—**தேசிக விநாயகம் பிள்ளை**

அருஞ்சொற்பொருள்

மறை - வேதம். வள்ளுவர் தந்த மறை - திருக்குறள். உள்ளம் - மனம். ஊன் - சதை, உடம்பு. நிதம் - தினந்தோறும். மண்டலம் – பூமி. வாசம் - வாசனை.

கேள்விகள்

1. திருக்குறள் தமிழ் மாதினுடைய எதைப் போன்றது?
2. கம்பன் பூமியில் பொழிந்த இனிய பாற்கடல் எது?
8. இச் செய்யுளில் கவி சிறப்பித்துப் பேசும் நூல்கள் யாவை?

6. பட்டு

பருத்திப் பஞ்சிலிருந்து நெய்யப்பட்ட ஆடைகளை, எல்லோரும் உடுத்துகின்றனர். ஆனால் பணம் உள்ளவர்களே பட்டினாலான ஆடைகளை அணிகிறார்கள். பட்டாடைகள் பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும். பட்டு நூல் ஒருவகைப் பூச்சியால் அமைக்கப்படும் கூட்டிலிருந்து கிடைக்கிறது. இப் பூச்சிக்குப் **பட்டுப் பூச்சி** என்று பெயர். பட்டு எப்படி உண்டாகிறது என்பதைப் பற்றி கவனிப்போம்.



1. பட்டுப்பூச்சி முட்டையிடுதல். 2. பட்டுப் புழு முசுக்கட்டை இலையைத் தின்கிறது. 8. பட்டுப் புழுவின் கூடு (பிளந்து காட்டப் பட்டுள்ளது). 4. கூட்டுப் புழு.

தாய்ப்பூச்சி முசுக்கட்டை இலையின்மேல், கடுகு போல் சிறுத்த முட்டைகளை இடும். அம்முட்டைகள் சுமார் இருநூறு முதல் நானூறு வரை இருக்கும். அம் முட்டைகளெல்லாம் சூரிய உஷ்ணத்தினால் பொரிந்து புழுக்கள் வெளிப்படும். முட்டையிலிருந்து வெளிப்

பட்ட புழு சுமார் அரைக்கால் அங்குல நீளமுள்ள தாகவும், சாம்பல் நிறமாயுமிருக்கும். இப் புழு முசுக் கட்டை இலையைத் தின்று வளர்ந்து, ஒரு வாரத்தில் நன்ருய்ப் பருத்து விடும். பிறகு தன் தோலை உரித்துக் கொண்டு வெண்மை நிறமாகும். இதன்படியே அப் புழு ஐந்தாறு நாட்களுக்கு ஒரு முறையாக நாலைந்து தடவை தன் தோலை உரித்துக் கொள்ளும். வெண்மை யாய் இருந்த புழு, தோல் உரியவும் மஞ்சள் நிறமாக மாறிக் கடைசியில் பசுமை நிறமாய்விடும். உடனே முசுக்கட்டை இலையைத் தின்பதை நிறுத்திவிடும்.

இச்சமயம் பட்டுப் புழு, ஒன்றரை அல்லது இரண்டு அங்குல நீளமுள்ளதாக இருக்கும். அப்புழு முசுக்கட்டைச் செடியின் கிளையில் தன் கூட்டைக் கட்டத் தொடங்கும். அதற்காக அது, தன் வாயின் கீழுள்ள துவாரங்கள் வழியாக ஒருவகைப் பிசினை வெளிப்படுத்தும். இந்தப் பிசின், மஞ்சள் நிறமாகவும் பளபளப்பாகவும் இருக்கும். இப் பிசினிலிருந்து நூல் நூற்றுத் தானும் உள்ளே இருந்துகொண்டு தன் உடலை மறைக்கும்படியான ஒரு கூட்டை அமைத்துக் கொள்ளும். இதற்கு மூன்று நான்கு நாட்களாகும். இப்படிக் கட்டிய கூடு முட்டை வடிவமாயிருக்கும். கூட்டில் அடைபட்ட புழு மறுபடியும் ஒரு தரம் தோலுரித்துப் பொன்னிறம் அடைகிறது.

பிறகு அப்புழு தன் கூட்டுக்குள்ளேயே பதினைந்து இருபது நாட்கள், உறங்கிக் கிடக்கும். இந்த உறக்கமே அதன் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றது. கூட்டுக்குள் இருக்கும்போது, நாளாக ஆக, உருவம் மாறிக்கொண்டே வந்து, கடைசியில் இறகு முளைத்த பட்டுப் பூச்சியாகிக் கூட்டைத் துளைத் துக்கொண்டு வெளியேறுகிறது. இதுவே பட்டுப் பூச்சியின் இயற்கை வளர்ச்சி.

இவ்வாறு பூச்சியை வெளியேறவிட்டால், கூட்டிலுள்ள பட்டு நூல் சின்ன பின்னமாய் அறுந்து போகும். ஆகையால் பூச்சி உள்ளிருக்கும்பொழுதே, கூட்டை வெந்நீரில் போட்டுப் பூச்சியைக் கொன்று பட்டு நூலை எடுத்துக்கொள்வார்கள். இவ்வாறு எடுத்த பட்டு, சவுக்காரம் கலந்த தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்யப்படுகிறது. பிறகு அதன் நுனியைக் கண்டுபிடித்துக் கழிகளில் சுற்றுவார்கள். சுமார் இரண்டாயிரம் கூடுகளிலிருந்து ஒரு ராத்தல் பட்டு நூல் கிடைக்கும். இந்தப் பட்டிலிருந்துதான் புடவைகளும் பிற பட்டுத் துணிகளும் நெய்யப்படுகின்றன.

பட்டுப் பூச்சி முதலில் நம் நாட்டில் இருக்கவில்லை. சீனு தேசத்தில் மட்டும் இப் பூச்சிகளை வளர்த்துப் பட்டாடைகள் நெய்து, நல்ல லாபம் அடைந்து வந்தனர். பின்னர் ஐரோப்பியப் பாதிரிகள் மூலம் இது பல தேசங்களுக்கும் பரவலாயிற்று. இப்பொழுது உலகத்தில் பல நாட்டினர் பட்டுப் பூச்சிகளை வளர்க்கிறுர்கள். நமது தேசத்தில் வங்காளம், மைசூர், காஷ்மீரம் முதலிய இடங்களில் பட்டு அதிகம். நமது ராஜ்யத்தில் காஞ்சீபுரம், கொள்ளேகாலம், பெங்களூர், பெத்தாபுரம் முதலிய இடங்களில் பட்டாடைகள் நெய்யப்படுகின்றன.

பிசின்	*ராத்தல்*	*சவுக்காரம்*
அறுந்து	*துவாரங்கள்*	*மிருதுவாக*
உறங்கி	*பொரிந்து*	*துளைத்துக்கொண்டு*
உதவாது	*முசுக்கட்டை*	*பளபளப்பாய்*
கழிகள்	*பாதிரிகள்*	*வடிவம்*

அருஞ்சொற்பொருள்

பிசின் - பசை. உறங்கி - தூங்கி. உதவாது - பயன்படாது. பாதிரி - கிறிஸ்துவமதத் துறவி. பொரிந்து - வெடித்து.

கேள்விகள்

1. பட்டுப் பூச்சியின் வளர்ச்சியைப் பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுது.
2. பட்டு எப்படி எடுக்கப்படுகிறது ?
3. பட்டாடைக்கும் பருத்தி ஆடைக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

பயிற்சி

I கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்துப் படி:

1. ———ஆடைகள் மிருதுவாக இருக்கும்.

2. பட்டு நூலின் நுனியைக்———பிடித்துக்———சுற்றுவார்கள்.

II எதிர்மொழி கூறு :— ஏழை, மிருது, உஷ்ணம், உறக்கம், இயற்கை, வெந்நீர், சுத்தம்.

III அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் பொருள்களைச் சுட்டுவதில் பயன்படுகின்றன. அவ்வாறு சுட்டுப்பொருளில் வரும்பொழுது இவை சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

(உ-ம்) அந்த, இந்த, உந்த.

அம்மனிதன், இப்புத்தகம், உவ்வீடு.

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய எழுத்துக்கள் சில சொற்களில் வினாப் பொருளைத் தரும். அப்பொழுது அவை வினாவெழுத்துக்கள் எனப்படும்.

(உ-ம்) எப்பொருள்? யாவன்? அவனா? கேசவனோ? ஏது?

IV பின்வரும் சொற்களில் சுட்டெழுத்துக்களையும் வினாவெழுத்துக்களையும் குறிப்பிடு:-

அவன், அம்மா, இம்மனிதன், இறகு, உம்மனிதன், உரிமை.

எங்கு, ஏணி, யானை, யார்.

V மாதிரியில் காட்டியது போல் பிரித்தெழுது:-

பசும்பொன் = பசுமை + பொன்
செம்மரம் =
வெண்சாமரை =
கருங்குரங்கு =

7. வீரத்தாதி

நம் இந்தியா தேசத்தில். ராஜபுத்திரர் என்ற ஒரு இனத்தார் இருக்கின்றனர். அவர்கள் மிகவும் சிறந்த வீரர்கள். பிறருக்கு உதவிசெய்யத் தமது உயிரையும் கொடுக்க முன்வருவார்கள். அவர்கள் ராஜபக்தி மிகுந்தவர்கள். ராஜபுத்திர மாதர்களோ கற்பையே தமது அணியாகக் கருதுபவர்கள்; கத்தி எடுத்துப் போர் புரியவும் அஞ்சார்கள். ராஜபுத்திரர்களுடைய ராஜ்யம் ராஜபுதனம் என்பது. ராஜபுதனத்தில் பல பிரிவு கள் இருந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைவன் ஒருவன் உண்டு. அவனை ராணு என்று சொல்லுவார் கள். இந்தப் பிரிவுகளுள் மீவார் ராஜ்யம் மிகவும் பெயர் பெற்றது. ஒரு காலத்தில் அதை விக்ரமஜித் என்னும் ராணு ஆண்டுவந்தான்.

மீவாரில் வனவீரன் என்பவன் சேனுதிபதியாய் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். மீவார் ராஜ்யத்தை அபகரிக்க எண்ணங்கொண்டான். தன் கீழுள்ள சேனையின் உதவியால், திடீரென விக்ரமஜித் தைக் கொன்றுவிட்டான். பிறகு தானே அரசனுக நிலைத்திருக்க வேண்டி, ராணுவைச் சேர்ந்தவர்கள் யாவரையும் கொல்ல வழிதேடினுன். அப்பொழுது விக்கிரமஜித்தின் தம்பியான உதயசிங் சிறு குழந்தையா யிருந்தான். அவன் பன்னு என்னும் தாதி யால் வளர்க்கப்பட்டு வந்தான். பன்னு விக்ரம ஜித்தினிடம் வேலை பார்த்தவள்.

வனவீரன், ராணுவைக் கொன்றதையும், உதய சிங்கைக் கொல்ல விருப்பதையும் அவள் அறிந்தாள். எப்படியும் ராஜ குமாரனுன உதயசிங்கைக் காப்பாற்ற நினைத்தாள். விக்ரமஜித்தினிடம் வேலை பார்த்த,

நம்பிக்கையுள்ள வேலைக்காரன் ஒருவனை இவ்விஷயத்தில் உதவி செய்ய வேண்டினாள். அவனும் அவளுக்கு உதவி செய்ய வாக்களித்தான். ஆனால் வனவீரன், உதயசிங்கை யாரும் வெளியே கொண்டுபோக முடியாதபடி காவல் வைத்திருந்தான். ஆகையால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவ்வாறு சில நாட்கள் சென்றன. வனவீரனது செய்கைகள் அந்நாட்டிலுள்ள சில பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லை. சிலர் கலகம் செய்ய ஆரம்பித்தனர். 'உதயசிங் உயிருடன் இருப்பதாலேயே இவ்வாறு நடைபெறுகிறது' என்றெண்ணிய வனவீரன், உதயசிங்கைக் கொல்ல நினைத்தான். ஒருநாள் நடு இரவில் அந்த நம்பிக்கையுள்ள வேலைக்காரன் பன்னாவிடம் ஓடிவந்து, "அம்மா! பெரிய ஆபத்து வந்து விட்டதே! இனி என்ன செய்வோம்? எவ்வாறு இளவரசனைக் காப்பாற்றுவோம்? வனவீரன் உருவிய கத்தியுடன் நம் இளவரசனை வெட்ட வருகிறான். தப்ப வழியில்லையே," என்று பரபரப்புடனும் துயரத்துடனும் கூறினான். பன்னா சமயத்திற்குத் தகுந்த அறிவு படைத்தவளாதலால், உடனே ஒரு கூடையில் உதயசிங்கை வைத்து, அவன்மீது பழங்களையும் இலைகளையும் போட்டு நன்கு மூடி, அவ் வேலைக்காரன் கையில் ஒப்புவித்தாள். மீவார் நாட்டைத் தாண்டி, அடுத்த நாட்டு அரசனிடம் இளவரசனை ஒப்புவிக்க வேண்டினாள். அவ்வேலைக்காரனும் ஒத்துக் கொண்டு, அக்கூடையைத் தலைமீது சுமந்துகொண்டு வெளியே சென்றான். காவலரும் அது பழக்கூடையென்றெண்ணிப் பேசாமல் இருந்துவிட்டனர்.

வனவீரன் உள்ளே நுழைவதற்குள் பன்னா, உதயசிங்கின் வயதும் உயரமும் உள்ள தனது குழந்தைக்கு ராஜகுமாரனது உடைகளை அணிவித்தாள். இள

வரசனது தொட்டிலில் தன் குழந்தையைப் படுக்க வைத்தாள். உருவிய கத்தியுடன் உள்ளே நுழைந்த வனவீரன் பன்னுவை நோக்கி, ''எங்கே ராஜகுமாரன்? ராஜகுமாரன் எங்கே? உடனே காண்பி,'' என்று கோபத்துடன் கூறினன். ஆனல் பன்னுவோ வாய் திறக்க வில்லை. தொட்டிலேயே பார்த்த வண்ணமிருந்தாள். வனவீரனும் தொட்டிலிலிருந்த குழந்தையே உதயசிங்

என்றெண்ணி, கத்தியால் அதை வெட்டிவிட்டு வெளியே சென்ருன். ராஜகுமாரனைக் காப்பாற்றத் தன் குழந்தை இறந்ததற்காகப் பன்னு சிறிதும் வருந்த வில்லை. ஆனல் அரண்மனையை விட்டு உடனே வெளியே சென்றுவிட்டாள். என்னே பன்னுவின் ராஜபக்தியும் தியாகமும்!

உதயசிங்கைக் கொண்டுசென்ற வேலைக்காரன் அடுத்த நாட்டு அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனும் உதயசிங்கை ஒருவருக்கும் தெரியாமல்

வளர்த்து வந்தான். நாளடைவில் உதயசிங் அரசனுக்குரிய எல்லாக் கலைகளையும் கற்றுப் பெரு வீரனானான். தன் பிறப்பு வளர்ப்பை யறிந்தான். வேண்டிய படைகளைத் திரட்டிக்கொண்டு மீவார்மீது படையெடுத்து வனவீரனைக் கொன்று, தான் ராணாவானான். வனவீரனது கொடுமையிற் சிக்கி வருந்திய குடிகளும் உதயசிங் ராணாவை எதிர்கொண்டழைத்தனர்; உதயசிங்கும் குடிகள் மகிழ அரசாட்சி புரிந்தான்.

உதயசிங் ராணாவானதும், பெற்ற பிள்ளையைக் கொடுத்துத் தன்னைக் காத்த பன்னாவைத் தேடிக் கண்டுபிடித்தான். அவளை அரண்மனையிலேயே தன் சொந்தத் தாயைப்போல் பாராட்டிக் காப்பாற்றி வந்தான். பன்னாவும் தன் சொந்தப் பிள்ளை உயிர்பெற்று வந்தாற்போல் சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தாள்.

ஆனால் உதயசிங் என்ன செய்தாலும் பன்னா செய்த உதவிக்கும் தியாகத்திற்கும் இணையாகுமா? அவளுடைய உதவியே உதவி! அவள் செய்த தியாகமே தியாகம்! அவளே **வீரத்தாதி!**

வாக்களித்தான்	தாதி	நிலைத்து	அபகரி
முன்வாருங்கள்	சிக்கி	பரபரப்பு	ராணா
நடைபெறுகிறது	உதவிய	நம்பிக்கை	அஞ்சார்
மிகுந்தவர்கள்	திரட்டி	கலகம்	ராஜபக்தி

அருஞ்சொற்பொருள்

தாதி - தோழி, வேலைக்காரி. ராணா - அரசன். அபகரி - கைப்பற்று. அஞ்சார் - பயப்படமாட்டார். வாக்களித்தான் - உறுதியாகக் கூறினான்.

கேள்விகள்

1. மீவாரை யாரிடமிருந்து வனவீரன் கைப்பற்றினான்?
2. உதயசிங்கை பன்னா எப்படிக் காப்பாற்றினாள்?
3. உதயசிங் எப்படித் தனது உரிமையைத் திரும்பவும் பெற்றான்?

பயிற்சி

I பின்வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :-

பாராட்டு; பரபரப்பு; அபகரி; திரட்டு.

II பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாடு என்ன? வாக்கியங்களில் உபயோகித்துக் காட்டு :—

1. கறந்தான், கரந்தான். 2. அறம், அரம்.
3. பாலம், பாளம். 4. வேலை, வேளை.

III முற்றுவினைகள் மூன்று காலங்களில் வரும். அவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்.

செய்தான், சுட்டான்—இறந்தகாலம்
செய்கிறான், சுடுகின்றான்—நிகழ்காலம்
செய்வான், சுடுவான்—எதிர்காலம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினை முற்றுக்கள் எந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்று கூறு:-

1. வேடுவன் காட்டில் வேட்டையாடினான்.
2. ஆசிரியர் மாணவருடன் போகிறார்.
3. கெடுவான் கேடு நினைப்பான்.

IV பின்வரும் வாக்கியங்களிலுள்ள தவறுகளைத் திருத்தி எழுது:-

1. பரவைகள் மறத்தின்மீது அமர்ந்துள்ளன.
2. தக்க வேலையில் வந்து சேர்ந்தான்.
3. நன்றி மரவேல்.
4. அவனுடைய தோட்டத்தில் ஆயிறக் கணக்கான மறங்கள் வளர்கிரது.

V பின் வரும் வாக்கியங்களிலுள்ள எச்ச வினைகளைக் கூறு. அவை எந்தச் சொற்களைக் கொண்டு முடிகின்றன என்பதையும் கண்டுபிடி :-

1. சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை.
2. அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுவர்.

8. பாய் பின்னுதல்

(உரையாடல்)

கமலா : அம்மா ! இந்தப் பாய் எவ்வளவு அழகாயிருக்கிறது ! இதை எதனால் செய்கிறார்கள் ?

தாயார் : இது பனையோலைப் பாய். இதைப் பனையோலைகளால் பின்னுகிறார்கள். கோரம்பாய் கோரைப் புல்லினாலும், தாழம்பாய் தாழை யோலைகளாலும் பின்னப்படும்.

கமலா : இதைப் போல் ஒரு பாயை நாம் பின்ன முடியுமா, அம்மா ?

தாயார் : நன்றாகப் பின்னலாம். எனக்குப் பாய் பின்னத் தெரியும். நான் உனக்குக் கற்றுக் கொடுக்கிறேன்.

கமலா : இப்பொழுதே கற்றுக்கொடு. எங்கள் பள்ளிக்கூடத்தில் கூட, பாய் பின்னக் கற்றுக்கொடுக்கப் போகிறார்களாம். நான் இப்பொழுதே கற்றுக்கொண்டுவிட்டால், பள்ளிக்கூடத்தில் நன்றாகப் பின்னுவேன்.

தாயார் : அப்படியே செய்யலாம். அந்த மூலையில் உள்ள பனையோலைகளையும் கத்தியையும் எடுத்துக் கொண்டுவா.

கமலா : இதோ கொண்டு வந்தேன்.

தாயார் : இதோ, பார் ! பனையோலைகளின் ஈர்க்கை எடுத்துவிட்டு, ஒவ்வொரு ஓலையையும் நீளப் போக்கில் இரண்டாக்க வேண்டும். ஓரங்களைக் கத்தியால் வாரி, ஒடுக்கமான நுனியை அறுத்து விடவேண்டும். நாம் தயாரித்த ஓலை சுமாராக



பனையோலைகளைப் பாயாகப் பின்னும் முறையை
விளக்கும் படங்கள்.

எங்கும் ஒரே அகலமுள்ளதாக இருக்கிறது பார்த்தாயா ?

கமலா : ஆம், அம்மா !

தாயார் : இவை எல்லாம் முறிந்து போகாதபடி தண்ணீர் தெளித்துப் பதப்படுத்த வேண்டும்.

கமலா : அதற்காகத் தான் தண்ணீர் தெளிக்கிருயா ?

தாயார் : ஆம். இப்பொழுது ஈர்க்கு ஒன்றை எடுத்து, 'ட' வைப் போல் வளைக்க வேண்டும். ஒரு ஓலையை எடுத்து, அதைத் தக்கபடி மடித்து, 'ட' வின் மூலையைப் பொதிந்து மூடவேண்டும். நன்ருகக் கவனித்துக்கொள்.

கமலா : ஆகட்டும் அம்மா !

தாயார் : பிறகு அந்த ஓலையின் இரு மடிப்புக்களும் 'ட' வின் இரு கோடுகளுக்குச் சரியான மையத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த மடிப்புக்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு, வேறு ஓலைகளால் பாய் பின்ன வேண்டும். பின்னும்பொழுது ஓலைகள் எப்படி மாறி மாறி மேலும் கீழும் வருகின்றன என்று பார்த்துக்கொள்.

கமலா : எனக்கு ஓலைகளைக் கிழித்துச் சரிப்படுத்திக் கொடு. நானும் ஒரு பாய் பின்னுகிறேன்.

மையத்தில்	*மடிப்பு*	*ஆதாரம்*	*ஒடுக்கமான*
தாழை	*கோரை*	*ஈர்க்கு*	*பொதிந்து*
தாழம்பாய்	*கோரம்பாய்*	*பதப்படுத்து*	*வாரி*

அருஞ்சொற்பொருள்

வாரி - சீவி. பதப்படுத்து - பக்குவம்செய். பொதிந்து - உள்ளே வைத்து. ஒடுக்கமான - குறுகிய.

கேள்விகள்

1. பாய் பின்னுதலைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. உனக்குத் தெரிந்த பாய் வகைகளைக் கூறு.

பயிற்சி

I பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு, சொந்த வாக்கியங்களில் உபயோகி:-

1. அழி, அளி. 2. தனி, தணி. 3. எரி, எறி. 4. மரி, மறி. 5. பரி, பறி. 6. வழி, வலி.

II பின்வரும் வாக்கியங்களில் வரும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்தெழுதுக :-

1. நான் செல்வேன்.
2. அந்தப் பனையோலையை எடுத்து வா.
3. நானும் ஒரு பாய் பின்னுகிறேன்.

III மேலே காட்டிய வாக்கியங்களில், செல்வேன் என்ற பயனிலைக்குச் செயப்படுபொருள் இல்லை. ஆகையால் செல்வேன் என்பதற்குச் செயப்படுபொருள் குன்றியவினை என்று பெயர். எடுத்து வா என்ற வினைக்குப் பனையோலையை என்பது செயப்படு பொருள். பின்னுகிறேன் என்ற வினைக்குப் பாய் என்பது செயப்படுபொருள். ஆகவே, எடுத்துவா, பின்னுகிறேன் என்ற இரண்டும் செயப்படுபொருள் குன்றுவினைகள் எனப்படும்.

IV இந்தப் பாடத்திலிருந்து குன்றிய வினைக்கு மூன்று உதாரணங்களும் குன்றுவினைக்கு மூன்று உதாரணங்களும் தருக.

9. படப்பயிற்சி—I

கீழேயுள்ள படங்களை வரிசையாகப் பார்த்து, ஒவ்வொரு படத்தையும் பற்றி ஒன்றிரண்டு வாக்கியங்கள் சொல்லு. பிறகு முயல் எப்படிச் சிங்கத்தைக் கொன்றது என்ற கதையை எழுது.



10. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

உங்கள் பள்ளிக்கூடத்தில் இளைஞர் செஞ்சிலு வைச் சங்கம் இருக்கிறதா? இருந்தால், அதில் நீங் கள் சேர்ந்து, அதன் உயரிய நோக்கங்களைக் கடைப். பிடித்து ஒழுகுதல் வேண்டும். பிறருக்குத் தொண்டு செய்து வாழ்வதே சீரிய வாழ்க்கை என்பதைச் செஞ் சிலுவைச் சங்கம் அறிவுறுத்துகிறது. இச் சங்கத்தின் வரலாற்றைச் சற்றே தெரிந்துகொள்வோம்.

சுமார் தொண்ணூறு ஆண்டுகட்கு முன் ஐரோப் பாவில் நடந்த ஒரு போரில் கணக்கற்ற வீரர் காயம் பட்டும் கைகால் இழந்தும் நோய்வாய்ப்பட்டும் அவதி யுற்றனர். ஹென்றி டூனண்டு என்ற ஒரு பெரியார், இத்தகைய வீரர் படும் துன்பங்களைக் கண்டு மன மிரங்கி, அவர்களுக்கு உதவி புரிவதற்கென்றே ஒரு சங்கத்தை நிறுவினர். அதற்குத்தான் செஞ்சிலுவைச் சங்கம் என்று பெயர். ஒரு சிவப்புச் சிலுவையை அவர் தாம் நிலைநாட்டிய சங்கத்தின் அடையாளமாகக் கொண்டமையால், அதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் என்ற பெயர் ஏற்பட்டது.

போர்க் காலங்களில் காயம்பட்டும் நோயுற்றும் தவிக்கும் வீரர்களுக்குத் தொண்டு புரிவது மட்டுமே இச் சங்கத்தின் முதல் நோக்கமாயிருந்தது. நாளடை வில் இந்த நோக்கம் விசாலமடைந்தது. வெள்ளம், பஞ்சம் முதலிய காரணங்களால் துன்புற்ருேருக்கு உதவியளிப்பதும் இச்சங்கத்தின் வேலையாயிற்று. தற் காலத்தில் எல்லா நாடுகளிலும் இதன் கிளை ஸ்தாப னங்கள் ஏற்பட்டுள்ளன. சாதி, நிறம், மதம் முதலிய வேற்றுமைகளைப் பாராட்டாமல் கஷ்டப்படுகிற யாவ ருக்கும் ஊழியஞ் செய்வதே இச்சங்கத்தின் வேலையா

யுள்ளது. மக்களின் உடல் நலனுக்காக உழைத்தல், நோயாளிகள் சிகிச்சை பெற வழி செய்தல், பூகம்பம், பஞ்சம், வெள்ளம் முதலிய காரணங்களால் தமது வீடு வாசல்களை இழந்து தவிப்போருக்கு வாழ வழி செய்தல், எல்லா நாட்டு மக்களிடையேயும் அன்பை வளர்த்தல் – இவையெல்லாம் செஞ்சிலுவைச் சங்கத்தார் புரிந்து வரும் பணிகளாம்.



இவ்வேலைகளைச் செய்வதற்கு உதவியாக, ஒவ்வொரு கிளை நிலையத்திலும் ஒன்றிரண்டு மோட்டார் வண்டிகளை இச் சங்கத்தினர் வைத்திருப்பார்கள். இந்த வண்டிகளில் செஞ்சிலுவை அடையாளம் இருக்கும். இத்தகைய வண்டிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். செஞ்சிலுவை ஊழியர்களும் தம் உடையில், செஞ்சிலுவை அடையாளம் அணிந்திருப்பர்.

இந்தச் சங்கத்தின் ஒரு பிரிவே இளைஞர் செஞ்லுவைச் சங்கமாகும். இப் பிரிவு 1914-ல் முதன்முதல் அமெரிக்காவில் ஏற்பட்டது. பிறகு எல்லா நாடு

களுக்கும் இது பரவிற்று. இளைஞர் தம் போன்ற பிற இளைஞர்களுக்கும், பொதுவாகத் தம் சமூகத்திற்கும் ஊழியஞ் செய்வதை இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் கற்பிக்கிறது. பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் சுகாதார விதிகளை அனுசரிக்கப் பழகுதல், நோய் முதலியவற்றால் துன்புறுவோருக்கு உதவி செய்தல், அயல் நாட்டு இளைஞருடன் தபால் மூலம் நட்பு வளர்த்தல் ஆகிய மூன்றும் இளைஞர் சங்கத்தின் நோக்கங்கள் என்று கூறலாம்.

இளைஞர் சங்கத்தில் பள்ளிக்கூடத்திலுள்ள எல்லா மாணவர்களும் சேரலாம். இளைஞர் சங்கத்தில் சேரும் மாணவர் ஓர் ஆசிரியரின் மேற்பார்வையில் தமக்குள் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, தாமே சங்க வேலைகள் எல்லாவற்றையும் செய்யப் பழக வேண்டும்.

செஞ்சிலுவை இளைஞர் தாமே தவறாமல் சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டும். ஊராருக்குச் சுகாதார விதிகளை எடுத்துரைக்க வேண்டும். தெருக்களில் கிடக்கும் கண்ணாடித் துண்டுகள், இரும்பு ஆணிகள், காகிதக் கிழிசல்கள், பழந்தோல்கள் முதலியவற்றைத் திரட்டுவதை ஒரு வேலையாகக் கொள்ளலாம்.

ஏழை மாணவருக்கும் நோயாளிகளுக்கும் உதவி செய்ய நிதி திரட்டலாம். பஞ்சம், வெள்ளம் முதலியவற்றால் ஊரார் அவதியுறும்போது, பெரியோருடன் சேர்ந்துகொண்டு மக்களுக்கு உதவி செய்யலாம்.

செஞ்சிலுவை இளைஞர் அயல் நாட்டு இளைஞருடன் தபால் மூலம் கடிதப் போக்குவரவு செய்யலாம். இதற்குத் தலைமைக் காரியாலயம் உதவி செய்யும். விசேஷமான படங்களைச் சேகரித்து, ஒரு 'ஆல்பம்' தயாரித்து அதைப் பிறநாட்டு இளைஞர்களுக்கு அனுப்பலாம்.

மாணவர் இச் சங்கத்தில் சேருவதற்குத் தனிச் சந்தாப் பணம் எதுவும் செலுத்த வேண்டுவதில்லை. ஒரு பள்ளிக்கூடம் இச்சங்கத்தில் சேரும்பொழுது மட்டும் சிறுதொகை சந்தாச் செலுத்த வேண்டும்.

செஞ்சிலுவை	நிறுவினர்	சந்தா
பூகம்பம்	கிளை ஸ்தாபனம்	சீரிய
சிகிச்சை	அவதியுறு	பணிகள்

அருஞ்சொற்பொருள்

கடைப்பிடித்து—அனுசரித்து. சீரிய - சிறந்த, உயர்ந்த. அவதியுறு-கஷ்டப்படு. நிறுவினர் - நிலைநாட்டினர். பணிகள் - வேலைகள், தொண்டுகள்.

கேள்விகள்

1. செஞ்சிலுவைச் சங்கம் எந்த நோக்கத்துடன் முதலில் நிலை நாட்டப்பட்டது?
2. செஞ்சிலுவைச் சங்கத்தின் தற்கால நோக்கங்கள் யாவை?
3. செஞ்சிலுவை இளைஞர் எந்த வேலைகளைச் செய்யலாம்?

பயிற்சி

I பின் வரும் சொற்களை வாக்கியங்களில் உபயோகி :—
கடைப்பிடி; நிறுவு; சந்தாப் பணம்; மேற்பார்வை.

II மாதிரியில் உள்ளதுபோல், சொற்களைப் பிரித்தெழுது :—
1. மனமிரங்கு = மனம்+இரங்கு
2. அனலடிக்கிறது =
3. வாளாளாவிய =
4. பாலமுது =

III வினைமுற்றுக்கள் மூன்று காலங்களில் வரும். அவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்.
1. நான் நேற்றுப் படித்தேன் (இறந்த காலம்)
2. நீ இப்பொழுது படிக்கிறாய் (நிகழ் காலம்)
3. நீ நாளைப் படிப்பாய் (எதிர்காலம்)

IV பின் வரும் வினைமுற்றுக்களின் காலங்களைக் கூறு :—
செய்தான், வருவான், போகிறீர்,
பாடுவாள், ஆடினார்கள், படிக்கிறார்கள்,
நாடினான், குதிக்கிறீர்கள், பயந்தாள்.

11. குமணன்

முற்காலத்தில் நம் தமிழ் நாட்டில் வள்ளல்கள் பலர் வாழ்ந்தனர். அவர்கள், யார் எதைக் கேட்ட போதிலும் அளவில்லாமல் கொடுத்து மகிழ்ந்தனர். அதனுலேயே அவர்களுக்கு 'வரையாது கொடுக்கும் வள்ளல்கள்' என்ற பெயருண்டாயிற்று. அவர்கள் இரப்போருக்கு இல்லையென்னுது கொடுத்து உதவி செய்வதையே தங்கள் கடமையாகக் கருதினுர்கள்.

இத்தகைய வள்ளல்களில் குமணன் என்னும் சிற்றரசனும் ஒருவன். அவன் முதிரம் என்ற மலையையும் அதையடுத்துள்ள சில ஊர்களையும் ஆண்டு வந்தான். புலவர்களைக் கண்டால் அவன் மகிழ்வான். அவர்களுக்குப் பொன்மாரி பொழிவான். அக்காலத்தில் அவனுக்கு இணையான வள்ளல்கள் யாரும் இலர். புலவர் பலர் அவன் சபையை யடைந்து, அவன் புகழ்பாடிப் பரிசு பெற்றனர். அவனது புகழ் தமிழ் நாடெங்கும் பரவியிருந்தது.

குமணனுக்கு ஒரு தம்பி இருந்தான். அவனை இளங்குமணன் என்றும் அமணன் என்றும் அழைப்பார்கள். அமணன் தனது தமையனுக்கு நேர்மாருன குணங்களுடையவன். அவனுக்குத் தன் தமையன் செய்கை பிடிக்கவில்லை. "இப்படி வருவோர் போவோருக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்தால், கொஞ்ச நாளில் ராஜ்யமே போய்விடும்," என்று எண்ணினுன். அமணனுக்குப் பல கொடியவர்கள் சிநேகமாயினர். அவர்களது தூண்டுதலினுல் அவன் தன் அண்ணனைத் தொலைக்க வழி தேடினுன்.

இதையறிந்த குமணன், தன் தம்பியால் நாட்டுக்கே கேடு விளையும் என்றஞ்சினுன். ஆனுல் கொடியவர்

நட்புக்கொண்டுள்ள தம்பிக்கு அச்சமயத்தில் என்ன புத்தி சொன்னாலும் பயனிராது என்று எண்ணினான். ஆதலால் அவனையே அரசனாக்கத் தீர்மானித்தான். குமணன் தான் தீர்மானித்தபடியே செய்வதற்காக ஒரு நாள் இளங்குமணனை யழைத்து, "தம்பி! உனது எண்ணம் என்ன?" என்று கேட்டான். அதற்கு அமணன் "அண்ணா! நீ அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்து வருகிறாய். உன்னால் நம் நாடு வறுமையாகிக் கொண்டு வருகிறது. ஆதலின், நாட்டை என்னிடம் ஒப்புவித்து விடு," எனக் கூறினான். குமணனும் இதையே எதிர் பார்த்தானாதலால், ஒன்றும் பேசாது அவனுக்கு முடி சூட்டிச் சில அறவுரைகளையும் கூறிவிட்டுக் காடு நோக்கிச் சென்றான்.

அரசாட்சி தன் கைக்கு வந்ததும் இளங்குமணன் பாடு கொண்டாட்டமாய் விட்டது. தன் விருப்பப்படி அரசாட்சி செய்ய ஆரம்பித்தான். இவனது கொடுங் கோன்மையைப் பொறுக்காமல் ஜனங்கள் கலகம் செய்யத் தொடங்கினர். அதைக் கண்ட அவனது துன்மந்திரிகள், "குமணன் உயிருடன் இருக்கும் வரை, அவனுக்காக இவர்கள் கலகம் செய்துகொண்டு தான் இருப்பார்கள். அவனைக் கொன்றுவிட்டால் இவர்கள் அடங்கிவிடுவார்கள்," என்று சொல்லித் தூண்டினர். இளங்குமணன் உடனே, "குமணனது தலையைக் கொணர்வோருக்கு ஆயிரம் வராகன் பரிசு," எனப் பறை சாற்றினான். அது கேட்டு மக்கள் யாவரும் நடுங்கினர்.

இச்சமயத்தில் **சாத்தனார்** என்றொரு புலவர், குமணனிடம் பரிசு பெறுவதற்காக அங்கு வந்தார். வந்தவர் அங்கு நிகழ்ந்த செய்திகளைக் கேட்டு மனம் வருந்தினார். எப்படியாலும் குமணனைப்

பார்க்காமல் செல்வதில்லையென்று தீர்மானித்து, குமணன் இருந்த காட்டை அடைந்தார். அங்கே பல இடங்களிலும் அலைந்து திரிந்து முடிவில் குமணனைக் கண்டு தாம் வந்த காரியத்தைக் கூறினார்.

அது கேட்ட குமணன், "புலவரே! நான் அரசாண்ட காலத்தில் வந்தீரில்லையே! இப்பொழுது நான் என்ன செய்வேன்!" என்று கூறிச் சிறிது யோசித்தான். பிறகு திடீரென்று, "புலவரே! இப்பொழுதும் ஓர் வழி இருக்கிறது.

அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்துநீ நொந்தனை யடைந்தாய்!
தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களையே.

"ஒன்றுக்கும் உதவாத என் தலைக்கு எனது தம்பி ஆயிரம் வராகன் மதிப்பு வைத்திருக்கிறான். ஆதலின் எனது தலையை வெட்டிக் கொண்டுபோய், அப்பரிசைப் பெற்றுக்கொள்ளும். இப்பொழுது என்னால் செய்யக் கூடியது இவ்வளவே," என்று கூறித் தன் வாளை நீட்டினான். என்னே, குமணனது கொடைத்திறம்! தன் உயிரையும் புலவருக்காகக் கொடுக்க இசைந்த அவனது வள்ளல் தன்மையை எவ்வாறு புகழ்வது!

பார்த்தார் புலவர். உயிரையும் தம்பொருட்டுத் தியாகம் செய்ய முன்வந்த குமணனைக் காப்பாற்ற எண்ணினார். ஒரு பொய்த் தலையைச் செய்து அமணனை ஏமாற்ற நினைத்தார். ஆனால் தான் இல்லாத சமயத்தில், குமணன் வேறு யாருக்காவது தன் தலையைக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்துக் குமணனை நோக்கி, "அரசே! தாங்கள், தங்கள் தலையை எனக்குக் கொடுத்துவிட்டீர்கள்.

நான் திரும்பி வரும்வரை அத்தலை தங்கள் உடலி லேயே இருக்கட்டும். வேறு யாருக்கும் கொடுத்து விடக்கூடாது,'' என்று கூறினர்.

சாத்தனர், குமணன் தலைபோல் ஒரு பொய்த் தலை செய்து, இளங் குமணனிடம் சென்று காட்டிப் பரிசு

கேட்டார். தலையைக் கண்டதும் இளங்குமணன் நடுங்கிவிட்டான். 'தான் ஆடாவிடினும் தன் சதை யாடுமல்லவா ?' அவன் குணம் முற்றிலும் மாறிவிட் டது. 'தமையன் இறந்துவிட்டான்' என்று வருந்திக் கதறி யழுதான்.

அது கண்ட புலவர் அவனைச் சமாதானம் செய்து, "குமணனை உயிர்பெறச் செய்தால் என்ன தருவாய் ?" என்று கேட்டார். இளங்குமணனும் சிறிதும் தயங்காது, "என் உயிரையும் தருவேன்," என்றான். புலவர் இளங்குமணனை யழைத்துச் சென்று குமணன் முன் விட்டனர். அமணனும் தன் அண்ணனைக் கண்டதும் அவன் கால்களில் விழுந்து, தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். குமணனும் தன் தம்பி நல்வழிப் பட்டமைக்கு மனமகிழ்ந்து அவனைத் தழுவித் தேற்றினான்.

தம்பியின் வேண்டுகோளுக்கும் புலவர் ஆணைக்கும் இணங்கி, குமணன் திரும்பவும் நாட்டுக்கு வந்து முடி சூட்டிக்கொண்டான். துன்மந்திரிகள் குமணனைக் கண்டதும் இருந்தவிடம் தெரியாமல் ஓடிவிட்டனர். குடிகளும் மகிழ்ச்சியடைந்தனர். சாத்தனார் மனமகிழும் படியாக வேண்டிய பரிசுகளைக் கொடுத்தனுப்பிவிட்டு, குமணன் முன்போல் நாட்டை ஆண்டு வந்தான். குமணனும் அமணனும் இணைபிரியாது வாழ்ந்து வந்தனர்.

தழுவி	துன்மந்திரி	நொந்தனை
அள்ளி	முடிசூட்டி	தூண்டுதல்
கடமை	தொலைக்க	நேர்மாறான
வராகன்	பொன்மாரி	வள்ளல்
கொடை	சாற்றினான்	கொணர்வோர்

அருஞ்சொற்பொருள்

தொலைக்க – அழிக்க. பொன்மாரி – பொன்மழை. சாற்றினான் – கூறினான். நொந்தனை – துன்பம்.

கேள்விகள்

1. குமணனுடைய தம்பியின் விருப்பம் யாது?
2. தம்பியின் கருத்தை அறிந்த குமணன் என்ன செய்தான் ?
3. காட்டில் வாழ்ந்த குமணனைக் கொல்ல அமணன் என்ன வழி செய்தான்?

4. சாத்தனர் குமணனை எப்படி மறுபடியும் அரசனுக்கினர்?
5. 'தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும்' என்பது எந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையாயிற்று?

பயிற்சி

I உன் சொந்த வாக்கியங்களில் பின்வரும் சொற்களை அமைத்து எழுது :—
அள்ளி, கொடை, தூண்டு.

II எதிர்மொழி கூறு :—
வறுமை, துன்மந்திரி, நல்வழி, பிடிக்கவில்லை, இணங்கி, அளவில்லாமல்.

III மாதிரியில் காட்டியதுபோல் வாக்கியங்களைச் சேர்த்து எழுது:—
குமணன் புலவர்களைக் கண்டால் மகிழ்வான். அவன் அவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பான்.
—குமணன் புலவர்களைக் கண்டு மகிழ்ந்து அவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பான்.
1. புலவர் பலர் அவன் சபையை அடைந்தனர். அவர்கள் அவன் புகழைப் பாடினர்.
2. சாத்தனர், குமணன் தலைபோல் ஒரு பொய்த் தலை செய்தார். அவர் அதை அமணனிடம் காட்டினர்.

IV மாதிரியில் காட்டியிருப்பது போல், எழுவாய்க்குப் பொருத்தமாகப் பின்வரும் கட்டங்களை நிரப்பு :—

எழுவாய்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நான்	ஓடினேன்	ஓடுகிறேன்	ஓடுவேன்
நாங்கள்			
நீ			
நீங்கள்			
அவன்			
அவள்			
அவர்			
அது			
அவை			

12. சைக்கிள்

தங்கையே பார்! தங்கையே பார்!
சைக்கிள் வண்டி இதுவே பார்! 1

சிங்காரமான வண்டி
சீமையிலே செய்த வண்டி. 2

இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும் வண்டி. 3

மாடில்லை குதிரையில்லை
மாயமதாய் பறந்திடும் பார். 4

தீயில்லை புகையுமில்லை
தீவிரமாய்ச் சென்றிடும் பார். 5

காலாலே மிதிப்பதனுல்
கடும் விசையில் போயிடும் பார். 6

ஒன்றன்பின் ஒன்ருக
உருளும்பை தாக்களைப் பார். 7

அக்காளும் தங்கையும் போல்
அவைபோகும் அழகைப் பார். 8

—தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்சொற்பொருள்

சிங்காரமான–அழகான. தீவிரமாய்–வேகமாக. பைதாக்கள்–சக்கரங்கள்.

கேள்வி

இச் செய்யுளைத் தழுவி, சைக்கிள் வண்டியைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

13. பொங்கல் விழா

மார்கழி மாதம் முடிந்து தை மாதம் தொடங்கும் பொழுது, நம் தமிழ் நாட்டில் குளிர் காலம் அனேக மாகக் கழிந்து விடுகிறது. அதற்குள் விவசாயிகளின் உழைப்பும் முற்றுப் பெற்று வீடுகளில் புதுநெல் நிரம்பியிருக்கும். நெல் விளைவதற்குத் தேவையான மழையையும் வெப்பத்தையும் அளித்த தெய்வங்களான இந்திரனையும் சூரியனையும் வணங்கும் நாட்களே பொங்கல் விழா நாட்களாகும்.

பொங்கல் விழா என்பது தொன்று தொட்டே நம் தமிழ் நாட்டில் கொண்டாடப் பெற்று வருகின்றது. பண்டைக் காலத்தில் இது இந்திர விழா என்ற பெய ருடன் கொண்டாடப் பெற்றதாகத் தெரிகிறது.

பொங்கல் விழா வரப்போவதைக் கருதி மார்கழி மாதக் கடைசி நாட்களிலேயே வீட்டுச் சுவர்களையும் தரையையும் பழுது பார்த்து, காரை, மண் முதலியன பூசி வைப்பார்கள். வீடுகளுக்கு வெள்ளையடிப்பார்கள். மார்கழி மாதம் கடைசிநாள் போகிப் பண்டிகை எனப் படும். போகி என்பது இந்திரனுடைய பெயர்களில் ஒன்று. ஆகையால் அன்றுதான் இந்திர விழா நாள் ஆகும். அன்று, வீட்டிலிருக்கும் பழைய பாய், கூடை, முறம், துடப்பம் போன்ற பொருள்களை வீட்டுக்கு

முன்னே வைத்துக் கொளுத்துவார்கள். அந்தத் தீயின் முன் சிறுர்களும் பெரியோரும் அமர்ந்து பறைகொட்டி ஆடிப்பாடி மகிழ்வர். பழம் பானைகளையும் தூர எறிந்து விடுவார்கள். இவைகளுக்குப் பதிலாக, புதுப் பாய், கூடை, பானை முதலிய பொருள்களை வாங்கி உபயோகத்துக்கு வைத்துக் கொள்வார்கள்.

அழுக்குப் பிடித்த பழைய பாய் முதலிய பொருள்களை ஆண்டு தோறும் எரித்துவிட்டு, புதிய பொருள்களை உபயோகிப்பது நம் சுகாதாரத்துக்கு அவசியமான ஒரு நற்பழக்கமாகும்; அவற்றிலுள்ள கிருமிகள் இறந்து விடும். அதுபோலவே ஆண்டு தோறும் வீட்டைப் பழுது பார்த்து வெள்ளை யடிப்பதும் நம் உடல் நலத்துக்கு நல்லது; இதனுல் மூட்டைப்பூச்சி முதலியன இறந்து விடுகின்றன.

இவ்வாறு வீட்டையும், வீட்டிலுள்ள சில பொருள்களையும் புதுப்பித்துவிட்டு, எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். பிறகு புதிய தின்பண்டங்கள் தயாரித்து இந்திரனுக்குப் படைத்து வணங்குவார்கள். அவற்றைத் தாமும் உறவினரும் உண்டு மகிழ்வார்கள்.

தை மாதம் முதல் நாள் பொங்கல் பண்டிகை ஆகும். அன்று வீட்டை நன்கு மெழுகிச் சுத்தமாக்கி, செம்மண்ணினுலும் மாவினுலும் கோலங்கள் போடுவார்கள். வீட்டு வாயிலிலும் அழகிய பெரிய கோலங்கள் வரையப்படும். பூசணிப் பூக்களைப் பறித்து கோலங்களின் இடையிடையே வைத்து அழகு செய்வர். அன்றுதான் அந்த ஆண்டின் புது அரிசியை முதன் முதலாகச் சோறு சமைப்பார்கள். இதற்காக மூன்று மண் கட்டிகளின் மீது புதுப்பானையை வைத்து அதில் புது நெல்லைக் குத்திக் கிடைத்த அரிசியைப் போட்டுச் சோருக்குவர். புதுப்பானைக்கும் அலங்காரம் செய்திருக்

கும்; மஞ்சள் கொத்தையும் கரும்புத் துண்டையும் பானையின் கழுத்தில் கட்டுவர். உலையில் சிறிது பாலை யும் ஊற்றுவர். சோறு பொங்கும்பொழுது வீட்டில் உள்ள யாவரும் 'பொங்கலோ பொங்கல்!' என்று கூவித் தம் மகிழ்ச்சியை வெளியிடுவர். பொங்கல் பானை பொங்கி, சோறு பதமானவுடன் அதை இறக்கி வைத்து, தாம் தொழும் தெய்வத்திற்கும் சூரியனுக்கும் படைப்பார்கள். பிறகு புது ஆடைகள் அணிந்து கொண்டு அந்தப் பொங்கலையும், வேறு பல உணவு களையும் தம் உறவினருடன் உண்பார்கள்.

இந்திரனுக்கும் சூரியனுக்கும் தம் நன்றியைத் தெரிவித்துப் பூசை செய்வதுடன் நம் குடியானவர்கள் திருப்தி யடைவதில்லை. நம் நாட்டுப் பயிர்த்தொழிலுக் குப் பல வழிகளில் மாடுகள் உதவுகின்றன. உழுதல், பரம்படித்தல், கிணற்று நீரைக் கவலைகளினுல் இறைத் தல், வண்டியிழுத்தல், நெல் கதிர்களை மிதித்து வைக் கோலையும் தானியங்களையும் பிரித்தலாகிய பிணைய லடித்தல் முதலிய பல வேலைகளைச் செய்வதற்கு மாடு களே பேருதவி புரிகின்றன. மேலும் மாடுகளின் மல ஜலக் கழிவுகள் நிலத்திற்குச் சிறந்த எருவாகின்றன. இவ்வளவு உதவிகளைச் செய்யும் மாடுகளுக்குத் தம் நன்றியை விவசாயிகள் தெரிவிக்கும் நாளே மாட்டுப் பொங்கல் ஆகும்.

தை மாதம் இரண்டாம் தேதி மாட்டுப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. அன்று மாடுகளை நன்ரு கக் குளிப்பாட்டுவார்கள். கொம்புகளுக்கு வர்ணம் தீட்டிக் கழுத்தில் சதங்கைகளைக் கட்டுவார்கள். கொம் பைச் சுற்றி ஒரு புதுத் துணியைக் கட்டுவார்கள். அன் றும் புது அரிசிச் சோறு பொங்கி அதை மாடுகளுக்குக் கொடுப்பார்கள். மாலைவேளையில் மாடுகளை அவிழ்த்

துச் சிறிது நேரம் ஓட விட்டுப் பிறகு பிடித்துவந்து கட்டிவைப்பார்கள். "வாயில்லா சீவன்," என்று சொல்லக் கூடிய மாடுகளுக்கும் தம் நன்றியை வெளிப்படுத்தும் இந்த வழக்கம் மிகச் சிறந்ததாகும்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் கன்றுப் பொங்கல் அல்லது காணும் பொங்கல் என்று சொல்லப்படும். அன்று எல்லோரும் தம் நண்பர்களையும் உறவினரையும் கண்டு பேசி வருவார்கள். பொங்கல் நாளில் ஒருவரையொருவர் காணும் பொழுது "பால் பொங்கிற்று?" என்று கேட்டுக்கொள்வார்கள்.

போகிப்பண்டிகையிலிருந்து தொடங்கி நான்கு நாட்கள் தமிழ் நாடெங்கும் மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமாயிருக்கும். ஆனி, ஆடி மாதங்களில் தொடங்கிய பயிர்த் தொழில் பெரும்பாலும் மார்கழி மாதத்தில் முடிந்துவிடுகிறது. இந்த வேலையில் ஈடுபட்ட விவசாயிகளின் களைப்பைப் போக்கி, மனத்திற்கு இன்பமும் உற்சாகமும் தரும் கொண்டாட்டமாக அமைந்துள்ளது இப் பொங்கல் விழா.

முற்றுப் பெற்று	பதம்	அலங்காரம்
தொன்றுதொட்டு	போகி	புரிகின்றன
படைப்பார்கள்	சீவன்	பழுதுபார்

அருஞ்சொற்பொருள்

முற்றுப் பெற்று-முடிந்து. தொன்று தொட்டு-பண்டைக் கால முதல். பழுதுபார்-குறைகளைச் சரிப்படுத்து. போகி-இந்திரன். படைப்பார்கள்-முன்னே வைப்பார்கள். புரிகின்றன-செய்கின்றன. அலங்காரம்-அழகு செய்தல். சீவன்-உயிர்.

கேள்விகள்

1. பொங்கல் விழா நாட்கள் என்று தொடங்கி, என்று முடிகின்றன?
2. போகிப்பண்டிகையின்பொழுது வீடுகளை எவ்வாறு சுத்தமாகச் செய்கின்றனர்?

3. பழைய பாய், கூடை முதலியவற்றைக் கொளுத்துவது ஏன் நல்லது ?
4. முதன் முதல் புது நெல்லரிசி என்றைய தினம் சோறாக்கப்படுகிறது ? அன்று புதுப்பானையில் பொங்கும் விதத்தை விவரித்து ஐந்து வாக்கியங்கள் எழுது.
5. மாடுகள் பயிர்த்தொழிலுக்கு எவ்வாறு உதவுகின்றன ?
6. மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல்—இந்த நாட்களின் சிறப்பு என்ன?

பயிற்சி

I உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :—

முற்றுப் பெறு; பழுதுபார்; தொன்றுதொட்டு.

II பின்வரும் சொற்களைப் பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வாக்கியங்களில் உபயோகி:—

1. நம் தேசத்திற்குப் பாரத நாடு என்று பெயர். (பெயர்ச் சொல்)
2. அவன் கல்வியறிவையே நாடுகிறான். (வினைச்சொல்)

தை; நெய்; திரி; பார்.

14. தபால்முறை வளர்ந்த விதம்

(உரையாடல்)

சேகர் : ஐயா! இப்பொழுது தபாலாபீசுகளின் நூற்றாண்டுக் கொண்டாட்டம் என்று ஏதோ கொண்டாடுகிறார்களே, அது எதற்கு ?

ஆசிரியர் : இது தெரியாதா உனக்கு! 1854 அக்டோபர் மாதம் முதல் தேதியன்று, தபால் கட்டணம் செலுத்துவதற்கு ' ஸ்டாம்பு ' வாங்கி ஒட்டியனுப்பும் முறை அமுலுக்கு வந்தது. அன்று முதல், 1954-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி வரை நூற்றாண்டுகள் முடிந்துவிட்டன. ஆகையால்தான் இந்தக் கொண்டாட்டம்.

சேகர் : ஆங்கிலேயர், நம் நாட்டுக்கு வருவதற்கு முன் இங்கே தபால் முறை இருந்ததில்லையா ?

ஆசிரியர் : இருந்தது, சேகர்! பண்டைக் காலங்களில் புருக்களைப் பழக்கி, அவற்றின் கழுத்தில் செய்திக் கடிதங்களைக் கட்டிவிட்டார்கள். அவை ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்கு அச் செய்திகளைக் கொண்டு சேர்த்தன. பிறகு ஆட்கள் மூலமாகவும் குதிரைச் சவாரி செய்பவர் மூலமாகவும் கடிதங்களை அனுப்பும் முறை அமுலுக்கு வந்தது. ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட காலத்தில்தான் தபால் முறை மிகவும் வளர்ச்சியுற்றது.

சேகர் : சுமார் 100 ஆண்டுகட்கு முன் தபால் கடிதங்கள் எவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டன ?

ஆசிரியர் : 1853-ல் தான் முதல் ரயில் பாதை நம் நாட்டில் ஏற்பட்டது. அதற்கு முன், ஆட்சுமையாகவும், குதிரைகள் மீதும்தான் தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன. ரயில் பாதைகள் ஏற்பட்ட பிறகு, ரயில் வண்டிகளில் தபால்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்று அக்காலத்தில் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹௌஸி பிரபு சட்டம் பிறப்பித்தார். ரயில் வண்டியிலேயே தபால் வண்டியொன்று அமைக்கப்பட்டது. அதில் தபால் கடிதங்களை ஊர்வாரியாகப் பிரிக்க, தபால் ஊழியர்கள் அதிலேயே பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

சேகர் : ஐயா தபால் முறை வளர்ச்சியடைந்துள்ளது என்றீர்களே, அதன் பொருள் எனக்கு விளங்கவில்லையே !

ஆசிரியர் : அப்படிக் கேள், சொல்கிறேன். நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் சுமார் 700 தபால் ஆபீசுகளே இருந்தன. 1870-ல் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள

எல்லா நகரங்களிலும் தபால் ஆபீசுகள் ஏற்பட்டன. 1947-ம் ஆண்டில் சுமார் 22000 தபாலாபீசுகள் இருந்தன. இப்பொழுது சுமார் 46000 தபாலாபீசுகள் ஏற்பட்டுள்ளன.

சேகர் : நாற்பத்தாறுயிரம் தபாலாபீசுகளா !

ஆசிரியர் : ஆம். இப்பொழுது நம் அரசாங்கத்தார் பெரிய கிராமங்களிலெல்லாம் தபாலாபீசுகள் ஏற்படுத்தி வருகிறார்கள்.

சேகர் : இன்னும் என்ன விதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது ?

ஆசிரியர் : முன்பெல்லாம் ஓரிடத்திலிருப்பவர் அயலூரில் இருப்பவருக்குப் பணம் அனுப்ப வேண்டுமானால் அரசாங்கக் கஜானாவில்தான் பணத்தைக் கட்ட வேண்டும். 1880-ம் ஆண்டில் தபால் ஆபீசுகளில் 'மணியார்டர்'கள் ஏற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. மக்கள் சிறுதொகைகளைச் சேமித்து வைத்துக்கொள்ள வசதியளிப்பதற்கு, தபாலாபீசுகளில் 'சேவிங்ஸ் பாங்கு'கள் ஏற்படுத்தப்பட்டன. தந்தி முறையில் செய்தி அனுப்புவதையும் தபாலாபீசுகள் செய்யத் தொடங்கின.

சேகர் : ஐயா ! இப்பொழுது சென்னைத் தபாலாபீசில் ஒரு கடிதம் போட்டால் அது டில்லிக்கு எப்பொழுது போய்ச் சேரும் ?

ஆசிரியர் : இப்பொழுதெல்லாம் சாதாரணக் கடிதங்கள் ஆகாய விமானங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகையால் இன்று சென்னைத் தபாலாபீசில் நீ போடும் கடிதம் நாளைக்கே டில்லிக்குச் சென்றுவிடுகிறது. எங்கெல்லாம் ஆகாய விமானங்கள் செல்கின்றனவோ, அங்கெல்லாம்

சாதாரணத் தபால்களை விமானங்களே எடுத்துச் செல்கின்றன. விமானத் தபால் ஏற்படுவதற்கு முன் கடிதம் ரயில் வண்டியில் டில்லியை அடைய இரண்டு நாட்களாயிற்று. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் ரயில் வண்டிகள் இல்லையல்லவா ? அப்பொழுது ஒரு கடிதம் சென்னையிலிருந்து டில்லியை அடையச் சுமார் இரண்டு வாரமாயிற்று.

சேகர் : ரயில் வண்டிகளும் விமானங்களும் வேகமாகச் செல்வதால்தான், தபால்களும் சீக்கிரம் நமக்குக் கிடைக்கின்றன. இல்லையா, ஐயா ?

ஆசிரியர் : ஆம். நம் தபாலாபீசுகள் எவ்வளவு வளர்ச்சியடைந்துள்ளன என்பதை மற்றொரு விஷயத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாடு முழுவதும் இருந்த தபாலாபீசுகளில், ஒரு வருடத்தில் சுமார் 3000 தபால்களே போடப்பட்டன. ஆனால் தற்காலத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் 70 லட்சம் தபால்கள் போடப்படுகின்றன.

சேகர் : என்ன ஐயா, எழுபது லட்சமா ?

ஆசிரியர் : எழுபது லட்சம்தான். அவற்றில் எல்லாம் ஒரே மொழியில் விலாசம் எழுதப்பட்டுள்ளதா? அதுவுமில்லை. சுமார் 30 மொழிகளில் விலாசங்கள் எழுதப்படுகின்றன. இவற்றை யெல்லாம் படித்துப் பட்டுவாடாசெய்ய எத்தனை சிப்பந்திகள் இருக்கவேண்டுமென்று பார்த்துக்கொள்.

சேகர் : இப்பொழுது நம் நாட்டில் எத்தனை தபால் சிப்பந்திகள் இருக்கிறார்கள், ஐயா ?

ஆசிரியர் : இப்பொழுது நம் தபாலாபீசுகளில் சுமார் 2½ லட்சம் தபால் ஊழியர்கள் வேலை செய்கிறார்கள்.

சேகர் : தபாலாபீசுகள் நமக்கு எவ்வளவு அவசிய மென்று இப்பொழுது தெரிந்து கொண்டேன் ஐயா !

கட்டணம்	அயலூர்	சேவிங்ஸ்பாங்கு
சிப்பந்தி	அமுல்	மணியார்டர்
ஆட்சுமை	கஜானு	பட்டுவாடா

அருஞ்சொற்பொருள்

கட்டணம் - செலுத்த வேண்டிய பணம். அமுல் - ஓர் உத்தரவுப்படி நடக்க வேண்டுமென்று கட்டளையிடுதல். கஜானு - பொக்கிஷம். மணியார்டர் - அயலூரிலுள்ளவருக்குத் தபால் மூலம் பணம் அனுப்புதல். சேவிங்ஸ் பாங்கு - மீதப் படும் பணத்தைப் போட்டு வைக்கும் நிதி. சிப்பந்தி - ஊழியன்.

கேள்விகள்

1. தபால் 'ஸ்டாம்பு'கள் எப்பொழுது முதன்முதல் உபயோகத்திற்கு வந்தன ?
2. ரயில் வண்டிகள் இல்லாத பொழுது தபால்கள் எப்படி அனுப்பப்பட்டன ?
3. மணியார்டர் என்ருல் என்ன?
4. நம் நாட்டில் தபால் முறை வளர்ச்சியுற்றிருப்பதற்கு உதாரணங்கள் கொடு.

பயிற்சி

I பின் வரும் சொற்களை வாக்கியங்களில் உபயோகி :—

அமுல், ஆட்சுமை, சிப்பந்தி, அயலூர்.

II பின் வரும் சொற்களைச் சேர்த்து எழுது :—

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக் கொடுத்தான்.
எனக்கு + தருவான் =
அவரை + கண்டேன் =
யாரை + சீறினுன் =

III பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களின் காலத்தைக் கூறு :

1. இராமன் வருவான்.
2. மாணவர்கள் விளையாடுகிருர்கள்.
3. ஆசிரியர் நேற்று நன்ருகக் கற்பித்தார்.

15. சர்க்கரை

சர்க்கரை எல்லோருக்கும் தெரிந்த பொருள். அது மிகவும் இனிமையானது; உணவுக்கு முக்கியமாய் வேண்டியது. சர்க்கரையில் பலவிதங்கள் உண்டு. அவை பழுப்புச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை, மணல் சர்க்கரை, குழைவுச் சர்க்கரை என்பனவாம். எல்லா வகைகளும் தித்திப்பாகவே இருக்கும்.

சர்க்கரை முக்கியமாய்க் கரும்பின் சாற்றிலிருந்தே செய்யப்பட்டு வந்தது. ஆனால் ஐரோப்பாவில் பீட் என்னும் ஒரு வகைக் கிழங்கிலிருந்தும் வட அமெரிக்காவில் சர்க்கரை மரம் என்னும் மரத்தின் சாற்றிலிருந்தும் சர்க்கரை செய்யப்படுகின்றது. நம் இந்தியாவிலும், சீனாவிலும் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே கரும்பு இருந்ததாகத் தெரியவருகிறது. இந்தியாவிலிருந்துதான் கரும்பு மற்ற நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்டது. கரும்பு உஷ்ணப் பிரதேசங்களிலேயே பயிராகின்றது.

கரும்பில் செங்கரும்பு, வெண்கரும்பு, நாமக் கரும்பு என்று பல வகைகள் உண்டு. இவற்றில் செங்கரும்பே மிகவும் தித்திப்பானது. கரும்பு ஆறு அடி முதல் பன்னிரண்டு அடி உயரம் வரை வளரும். இதில் பல கணுக்கள் உண்டு. இது ஒரு அங்குலம் முதல் இரண்டங்குலம் வரை பருமன் உள்ளது. விதையிலிருந்து கரும்பு உண்டாவதில்லை. ஆனால் கருப்பங் கழியைக் கணுக்களுடன் துண்டு துண்டாய் நறுக்கிப் பூமியில் நட்டுப் பயிராக்குவார்கள். நட்ட ஒரு வருடத்திற்குள் அது நன்றாய் வளர்ந்துவிடும். கரும்பின் நுனியில் பச்சையான நீண்ட இலைகள் உண்டு. அப் பாகத்தைக் கொழுத்தாடை என்று சொல்வர்.

கரும்பின் அடிப்பாகம் மிகவும் இனிப்பாகவும் கொழுத் தாடைப் பாகம் சற்று உப்பாகவும் இருக்கும்.

முற்றிய கருப்பங் கழிகளைத் துண்டுகளாய் நறுக்கி, பின்பு அவற்றைக் கரும்பாலைகளிற் கொடுத்துச் சாறு பிழிவார்கள். கரும்பாலை என்பது இரும்பு உருளைகள் உள்ள ஓர் இயந்திரம். இந்த ஆலையை இரண்டு மாடுகள் இழுத்துக் கொண்டே சுற்றிச் சுற்றிவரும்.



ஆலையின் அடியில் பெரிய பாண்டம் வைத்திருப் பார்கள். ஆலை சுற்றும்பொழுது, ஒருவன் கரும்புத் துண்டுகளை இரும்பு உருளைகளுக்கு இடையில் கொடுத் துக்கொண்டே யிருப்பான். இரும்பு உருளைகள் அத் துண்டுகளை நசுக்கி, சாற்றைப் பிழிந்துவிடும். பிழியப் படும் சாறு முழுவதும் கீழே வைக்கப்பட்டுள்ள பெரிய பாண்டத்தில் விழும்.

இவ்வாறு எடுக்கப்படும் சாற்றையெல்லாம், ஈயம் பூசிய பெரிய கொப்பரையில் விட்டு, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சுவார்கள். காய்ச்சும்போது சிறிது

சிறிதாகச் சுண்ணும்பு நீர் சேர்ப்பார்கள். அவ்வாறு சேர்த்தால், சாற்றில் உள்ள அழுக்கெல்லாம் நுரையாக மேலே வரும். இவ்வழுக்கு நுரையை அப்போதைக் கப்போது நீண்ட கரண்டியால் எடுத்து வெளியே போடுவார்கள். கொப்பரையில் உள்ள சாறு, நன்ருகக் காய்ந்த பின் பாகு ஆகும். இப்பாகை நன்ருய்க் காய்ச்சி, மரத் தொட்டிகளிலும் மர அச்சுக்களிலும் ஊற்றி ஆறவைப்பார்கள். ஆறிய பிறகு அது வெல்ல மாக மாறும். அச்சுக்களில் ஊற்றியது அச்சு வெல்ல மென்றும், தொட்டிகளில் ஊற்றியது உருண்டை வெல்லமென்றும் சொல்லப்படும். இந்தப் பாகை ஆறவிடாமல் நன்ருய்க் காய்ச்சிப் பிறகு ஆறவைத் துக் கழிகளால் தட்டி உடைத்தால் பழுப்புச் சர்க்கரை ஆகும்.

கொதிக்கும் தண்ணீரில் பழுப்புச் சர்க்கரையைக் கரைத்து, கம்பளிகளில் ஊற்றிப் பலமுறை வடி கட்டுவார்கள். பிறகு மிருகங்களின் எலும்பைச் சுட்டெரித்த கரிகளின்மேல் ஊற்றி வடிகட்டு வார்கள். அசுத்தமெல்லாம் கரியில் ஒட்டிக்கொள் ளும். சர்க்கரைக் கரைசல் சுத்தமாகிவிடும். அந்தக் கரைசலே மறுபடியும் ஈயம் பூசிய பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். நன்ருய்க் காய்ச்சி ஆறவைத்தால் இது வெள்ளேச் சர்க்கரை ஆகும். வெள்ளேச் சர்க் கரையிலிருந்து கற்கண்டு செய்யப்படுகிறது.

நம் இந்தியாவில் தென்னே, பனே, ஈந்து முதலிய வற்றின் சாறுகளிலிருந்தும் வெல்லம், சர்க்கரை, கற் கண்டு முதலியவை செய்கிருர்கள். நம் சென்னே ராஜ் யத்தில் புகளூர், பாண்டியராஜபுரம், நெல்லிக் குப்பம் முதலிய இடங்களிலும், ஆந்திர ராஜ்யத்தில் அஷ்ட கிராமம், பீமன்பட்டணம், அஸ்கா, ராஜமகேந்திரம்

முதலிய இடங்களிலும் சர்க்கரை செய்கிறார்கள். நமது ராஜ்யம் முழுவதிலும் வெல்லம் செய்கிறார்கள். பனைவெல்லமும், பனங்கற்கண்டும் திருநெல்வேலி ஜில்லாவில் மிகுதியாகச் செய்கின்றனர்.

இனி பீட் கிழங்கிலிருந்து எப்படிச் சர்க்கரை செய்கிறார்கள் என்று தெரிந்துகொள்வோம். இந்தக் கிழங்கின் விதைகள் மண்ணில் விதைக்கப்பட்டுப் பயிர் செய்யப்படுகின்றன. கிழங்குகள் முற்றியபின் அவைகளைத் தோண்டி எடுத்து, இலேசான சிறு துண்டுகளாகச் சீவி, அவற்றை வெந்நீரில் போட்டு ஊற வைப்பார்கள். நன்றாய் ஊறிக் கருப்பஞ் சாறுபோல் அந்தச் சாறு ஆனபின், கிழங்குத் துண்டுகளைப் பிழிந்தெடுத்துவிட்டு, சாற்றை அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி முன் கூறிய முறைப்படியே சர்க்கரை செய்வார்கள்.

சர்க்கரை மரத்தில் பல இடங்களில் வெட்டி அதனின்று வடியும் பாலைச் சேகரித்து, முன் கூறிய விதமாகவே அடுப்பில் ஏற்றிக் காய்ச்சிச் சர்க்கரை செய்வார்கள். இம்மரங்கள் வட அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் வளர்கின்றன.

சர்க்கரை நம் உடம்புக்கு வெப்பமும் வேலை செய்யச் சக்தியும் தரக்கூடியது. முக்கியமாக அது குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. சர்க்கரை சேர்ந்த பண்டங்கள் பலநாள் வரை கெடாமல் இருக்கும். இதற்காகவே மேல்நாட்டார் சர்க்கரை சேர்த்தே ஊறுகாய்கள் செய்கிறார்கள். நம் தேசத்தில் ஊறுகாய்களுக்கு முக்கியமாய் உப்புச் சேர்க்கிறார்கள். சிலர் சிறிது சர்க்கரை சேர்ப்பதும் உண்டு. சர்க்கரை பலவிதமான பலகாரங்கள் செய்ய உபயோகப்படுகிறது. லேகியம் முதலிய மருந்துகளுக்கும் சர்க்கரை சேர்க்கப்படும்.

பீட்	நசுக்கும்	உருளைகள்	நாமக்கரும்பு
சாறு	குழைவு	கணுக்கள்	வெண்கரும்பு
பாகு	லேகியம்	கொப்பரை	பாண்டம்
ஈந்து	கற்கண்டு	பிழிவார்கள்	கரைசல்
ஆலை	நுரையாக	செங்கரும்பு	சேகரித்து

அருஞ்சொற் பொருள்

ஆலை-தொழிற்சாலை, எந்திரம். பாண்டம்-பானை. மிகுதியாக-தாராளமாக. கொப்பரை-பெரிய பாத்திரம்.

கேள்விகள்

1. சர்க்கரை எவ்வாறு நமக்குப் பயன்படுகிறது?
2. கரும்பு எப்படிப் பயிர் செய்யப்படுகிறது?
3. கரும்பிலிருந்து வெல்லமும் சர்க்கரையும் எவ்வாறு தயாரிக்கிறார்கள்?
4. நமது ராஜ்யத்தில் எங்கே சர்க்கரை தயாரிக்கிறார்கள்? ஆந்திர ராஜ்யத்தில் எங்கே தயாரிக்கப் படுகிறது?
5. பீட் கிழங்கிலிருந்து எப்படிச் சர்க்கரை செய்கிறார்கள்?
6. திருநெல்வேலி ஜில்லாவில் வெல்லமும் கற்கண்டும் எதிலிருந்து தயாரிக்கப்படுகின்றன?

பயிற்சி

I உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:-

பிழி; இனிமை; ஆலை; நறுக்கு.

II வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுது:-

1. சேகர் நாளைப் பள்ளிக்கூடம் வருகிறான்.
2. நான் நேற்று நன்றாக விளையாடுகிறேன்.
3. மாணவர் எல்லாரும் வந்தான்.
4. காட்டு விலங்குகள் அனைத்தும் கதறியது.
5. நீங்கள் ஏன் நோயுடன் வெளியில் வருகிறாய்?

III மாதிரியில் காட்டியுள்ளபடி பின்வரும் வாக்கியங்களை மாற்றி எழுது:-

மாதிரி: கோபாலன் காவியத்தைப் படித்தான்.=காவியம் கோபாலனால் படிக்கப்பட்டது.

1. அவன் மரத்தை வெட்டினான்.
2. சிறுவர்கள் உணவு புசிக்கிறார்கள்.
3. கமலா புத்தகத்தைக் கிழித்தாள்.

16. படப்பயிற்சி—II

பின் வரும் படங்களை வரிசையாகப் பார்த்து, ஒரு தபால் கடிதத்தின் பயணத்தைப் பற்றி எழுது.

17. கடிகாரம்

கடிகாரம் என்பது தற்கால விஞ்ஞான முறையில் காலத்தைத் திட்டமாய் நிர்ணயிக்க அமைக்கப்பட்டுள்ள ஒரு கருவியாகும். இடங்களுக் கேற்றவாறும், காலங்களுக்கேற்றவாறும் வெவ்வேறு வகையில் கடிகாரங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு இருபத்துநான்கு மணி என்ற கணக்கின்படி, தற்கால கடிகாரங்கள் நேரங் காட்டுகின்றன.

நம் முன்னோர் காலத்தையும் நேரத்தையும் கணித்த முறை வேறுவிதமாகவே யிருந்து வந்திருக்கிறது. நாழிகை, முகூர்த்தம், சாமம் என்று நேரத்தையும், வாரம், மாதம், வருடம், யுகம் என்று காலங்களையும் கணக்கிட்டு வந்திருக்கிறார்கள்.

நம் முன்னோர் ஒரு நாட் பொழுதை அறுபது நாழிகைகளாகப் பிரித்தனர். ஆகவே ஒருமணி நேரமானது இரண்டரை நாழிகை யாகும். அதாவது ஒரு நாழிகை 24 நிமிஷங்களாகும். முன் காலத்தில் பகலில் மனிதர் தம் நிழலைக் காலடியால் அளந்து அல்லது சூரியனிருக்கும் இடத்தைப் பார்த்து நாழிகைகளை உத்தேசமாகக் கணக்கிட்டனர். இதல்லாமல் பெரிய பாத்திரங்களின் அடியில் துவாரம்செய்து, அவைகளில் பொடி மணலை நிரப்பி, அம்மணல் எவ்வளவு இறங்கியிருக்கிறது என்பதன் மூலம் நாழிகைகளை யறிந்தனர்.

பகலில் சூரிய வெளிச்சத்தினால் ஏற்படும் நிழலைக் கொண்டும், இரவிலே சந்திர உதயத்தைக் கொண்டும், நட்சத்திரங்கள் இருக்கும் நிலையைக் கொண்டும் நேரத்தை அறிந்துகொண்டனர். அதுவுமன்றிச் சேவல்களும் நேரங்களைத் தவறாமல் தெரிவித்து வந்தன. நடு இரவில் ஒருதரம் சேவல் கூவும். அதிகாலை

மூன்று மணிக்கு அதாவது விடிய ஏழரை நாழிகை யிருக்கும்போது முதல் கோழியும், விடிய ஐந்து நாழிகை யிருக்கும்போது அதாவது காலை நான்கு மணிக்கு இரண்டாவது கோழியும், விடியற்காலம் ஐந்துமணிக்கு அதாவது விடிய இரண்டரை நாழிகை யிருக்கும்போது மூன்ருவது கோழியும் கூவும்.

ஒரு கம்பியைக் கல்லின் மத்தியில் நட்டுவைத்து அதன் நிழலிலிருந்து நேரத்தை அறிந்தார்கள். அதன் பின்பு கடிகாரங்கள் உலகில் தோன்றின. தற்கால கடி காரங்களில் மணி, அரைமணி, கால்மணி அடிக்கக் கூடிய கடிகாரங்களும், கையில் கட்டும் சிறு கடிகாரங் களும், தேவையான நேரத்தில் எச்சரிக்கை செய்யும் கடிகாரங்களும், பாட்டுப் பாடும் கடிகாரங்களும் உள. இவைகளின் விலைகள் அவைகளின் வேலைப்பாட்டிற் குத் தகுந்தபடி அமைந்திருக்கும். இவைகளின் மூலம் நேரத்தைப் பார்த்தறிவது மிகவும் எளிது.

ஒரு நாளை இருபத்து நான்கு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்துக்கும் மணி என்று பெயரிட்டார் கள். இவ்விருபத்து நான்கு மணி நேரத்தையும், பகல் பன்னிரண்டு மணிகளாகவும், இரவு பன்னிரண்டுமணி களாகவும் பிரித்திருக்கிருர்கள். ஒவ்வொரு மணியை யும் அறுபது நிமிஷங்களாகவும், ஒவ்வொரு நிமிஷத் தையும் அறுபது விநாடி (செகண்டு)களாகவும் பிரித் துச் சுலபமாகப் பொழுதறியும்படி ஏற்படுத்தி யிருக் கின்றனர்.

அடுத்த பக்கத்திலுள்ள முதல் படத்தைப் பாருங் கள். இது சுவரில் மாட்டக்கூடிய பெரிய கடிகாரத்தின் படம். இதன் மேல்பாகத்தில் ஒரு வெண்மையான வட் டத் தகட்டில் 1 முதல் 12 வரை உள்ள எண்கள் குறிக் கப்பட்டுள்ளன. இத் தகட்டின் மத்தியில் சிறிதும்

பெரிதுமாக இரு முட்கள் காணப்படுகின்றன. இம் முட்கள் அந்த எண்களைச் சுற்றிக்கொண்டே தகட்டில் சுற்றி வருவதிலிருந்து, மணி எத்தனை என்று தெரிந்து கொள்ளலாம்.

கடிகாரத்தின் கீழ்ப் பாகத்தில் ஒரு வட்டமான கனத்த பித்தளைத் தகடு ஆடிக்கொண்டே யிருக்கிற தல்லவா ? அதுதான் ஊசல் என்று சொல்லப்படுவது.



இவ்வாறு இது ஆடுவதால்தான் மேல்பாகத்தில் உள்ள முட்கள் ஒரே நிதானமாக எந்திர மூலமாய் நகர்ந்து சுற்றிச் சுற்றி வருகின்றன. இக்கடிகாரத்தின் தலைப் பில் 12 என்ற எண் இருக்கிறது. அதன் வலது பக்கத் திலிருந்து 1 முதல் 11 வரை உள்ள எண்கள் வட்டமாக இருக்கின்றன. தகட்டில் இருக்கும் ஒரு எண்ணுக்கும் மற்றொரு எண்ணுக்கும் நடுவே சிறிய இடம் இருக் கிறது. அந்த இடம் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. இப்படியே 12 மணிகளுக்கும் இடையில் 5 பாகங்கள் வீதம் மொத்தம் 60 பாகங்கள் இருக் கின்றன. இவைதான் நிமிஷங்கள்.

இப்பொழுது கடிகாரத்தைக் கவனியுங்கள். பெரிய முள் விரைவாகவும், சிறிய முள் மெல்லவும் நகருவதைக் காணலாம். பெரிய முள் 12 என்ற எண்ணிலிருந்து நகர்ந்து சென்று திரும்ப 12-க்கு வந்து சேரும்போது, சிறிய முள் ஒரு எண்ணிலிருந்து அடுத்த எண்ணுக்கு வந்திருக்கும். இதுதான் ஒரு மணி நேரம். இவ்வாறு பெரிய முள் பன்னிரண்டு தடவை சுற்றி வந்தால், சிறிய முள் ஒரு தடவை சுற்றும். இந்தக் காலம் பன்னிரண்டு மணி நேரம். சிறிய முள் இரண்டு தடவை சுற்றிவந்தால் 24 மணி நேரம் அல்லது ஒரு நாள் ஆகும்.

பெரிய முள், ஒரு எண்ணிலிருந்து மற்றொன்றுக்கு வர 5 நிமிஷங்கள் ஆகின்றன. பெரிய முள் 12 என்ற எண்ணிலிருந்து 3 என்ற எண்ணுக்கு வந்தால் 15 நிமிஷங்களாகும். இது 'கால் மணி' எனப்படும். 6 என்ற எண்ணுக்கு வந்தால் 30 நிமிஷங்கள் ஆகும். இது 'அரை மணி'. 9 என்ற எண்ணுக்கு வந்தால் 45 நிமிஷங்கள் அல்லது 'முக்கால் மணி' ஆகும். பிள்ளைகளே! இந்தக் கணக்குப்படி கடிகாரத்தைப் பார்த்து இப்போது மணி என்னவென்று சொல்லுங்கள்.

சுவரில் மாட்டக்கூடிய இந்தப் பெரிய கடிகாரத்தைத் தவிர, சட்டைப் பையில் போட்டுக் கொள்ளவும், கை மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும், ஏற்ற சிறு கடிகாரங்கள் உள்ளன. அவைகளைப் படத்தில் பாருங்கள். இம்மாதிரியான சிறு கடிகாரத்தில் 6 என்ற எண் உள்ள இடத்தில் ஒரு சிறு வட்டம் இருக்கிறது. அதில் 10, 20, 30, 40, 50, 60 என்ற எண்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒரு சிறிய முள் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இச்சிறு வட்டக்கி

லுள்ள ஒவ்வொரு கோடும் ஒரு செகண்டு அல்லது விநாடியைக் குறிக்கும். இதிலுள்ள சிறிய முள் ஒரு தடவை சுற்றி வந்தால் 60 செகண்டுகள் அல்லது ஒரு நிமிஷமாகும். அப்போது பெரிய முள் ஒரு நிமிஷத்தைக் காட்டும். இவ்வாறு பலவித கடிகாரங்களால், நாம் வெகு சுலபமாக நேரத்தை அறிந்து கொள்கிறோம். கடிகாரம் நமக்கு மிகவும் உபயோகமுள்ளது.

மணி	பொடி	கடிகாரம்
சாமம்	நாழிகை	முகூர்த்தம்
பித்தளை	திட்டமாய்	மணிக்கட்டு
கணிப்பது	செகண்டு	மாட்டக்கூடிய
நிர்ணயிக்க	உத்தேசமாய்	யுகம்
வேலைப்பாடு	கருவி	உதயம்
தகடு	விநாடி	விஞ்ஞான

அருஞ்சொற்பொருள்

கணிப்பது - கணக்கிடுவது. வேலைப்பாடு - திறமை மிக்க வேலை. திட்டமாய் - சரியாக. உத்தேசமாய் - சுமாராக. மாட்டக் கூடிய - தொங்கவிடக் கூடிய.

கேள்விகள்

1. பண்டைக் காலத்தில் எவ்வழிகளில் நேரங் கண்டு பிடித்தார்கள்?
2. நாழிகைக்கும் மணிக்கும் உள்ள சம்பந்தம் என்ன?
3. கடிகாரத்திலுள்ள பெரிய முள்ளும் சிறிய முள்ளும் எவ்வாறு நகரும்?

பயிற்சி

I பின்வரும் வார்த்தைகளை உன் சொந்த வாக்கியங்களில் அமை:—

சிருஷ்டி, சாமம், நகர், கணி, சுலபம்.

II பின் வரும் சொற்களைப் பிரித்து எழுது:

இளங்காற்று = இளமை + காற்று.
பசும்பொன் =
அங்குமிங்கும் =
மூலமந்திரம் =
காலக்கிரமம் =

III பின்வரும் வாக்கியங்களைச் சேர்த்து எழுது:-

மாதிரி : கந்தன் விளையாடினுன். பின்பு கந்தன் வீட்டுக்குப் போனுன். = கந்தன் விளையாடியபின் வீட்டுக்குப் போனுன்.

1. செல்லம் தூங்கி யெழுந்தான். பிறகு அவன் விளையாடச் சென்முன்.

2. முயல் சிங்கத்தைப் பார்த்தது. பிறகு அது ஒரு புதரில் பதுங்கிக் கொண்டது.

3. காற்று வீசியது. காற்று மரங்களைச் சாய்த்தது.

18. கடிகாரம் வேண்டுமோ

சேவற் கோழியுண்டு காகமுண்டு—வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பொன்னே! அதி காலை தெரிந்திட
வேறும் கடிகாரம் வேண்டுமோடி ? 1

செங்கதிர் பொங்கி வருவதுண்டு—நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி ? 2

தன்னிழல் தன்னடி யாவதுண்டு—சுடர்
தானுந் தலைநேர் எழுவதுண்டு
இன்னமுதே! பகல் உச்சியி தென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி ? 3

விண்மணி யாழியில் வீழ்வதுண்டு—வாசம்
வீசு மந்தாரை மலர்வதுண்டு
கண்மணியே! மாலைக்காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி ? 4

முல்லை யரும்பு விரிவதுண் டாம்பலின்
மொட்டுகள் மெள்ள அவிழ்வதுண்டு
மெல்லியலே! மாலை வேளை யறிந்திட
வெள்ளிக் கடிகாரம் வேண்டுமோடி ? 5

அம்புலி நட்சத் திரங்களுண்டு—கணக்
காக்கி யறிய வழிகளுண்டு
இன்பமே! நேரம் இரவி லறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி ? 6

கம்மென வாசம் கமழ் பாரி சாதமிக்
காவில் மலர்ந்து சொரிவதுண்டு
அம்மையே! நள்ளிர வீதென்று சொல்லிட
ஆர்க்கும் கடிகாரம் வேண்டுமோடி ? 7

காலை மாலை எந்த வேளையும்—சூரிய
காந்தி மலர்தானே காட்டிடாதோ
வேலை யெழுந்த திருவே! உனக்கினி
மேலும் கடிகாரம் வேண்டுமோடி ? 8

சுற்றுப் பொருளெல்லாம் உற்றுநோக்கி—அவை
சுட்டும் மணிநேரம் கண்டறிவாய்
பெற்ற முத்தே! இந்த உண்மை யறிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி ? 9

– தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்சொற்பொருள்

பொன்னே - பொன் போன்ற பெண்ணே. செங்கதிர் - சூரியன். சுடர் - சூரியன். விண்மணி - சூரியன். ஆழி - கடல். அவிழ்வது - மலர்வது. மெல்லியல் - பெண். அம்புலி - சந்திரன். வேலை எழுந்த திரு - கடலில் பிறந்த இலக்குமி போன்ற பெண்.

கேள்விகள்

1. காலை, நடுப்பகல், மாலை ஆகிய நேரங்களை எந்த நிகழ்ச்சிகளிலிருந்து அறியலாம் ?

2. இரவில் எப்படி நேரம் அறியலாம்?

3. மாலையிலும் நள்ளிரவிலும் மலரும் பூக்கள் எவை ?

19. வ. உ. சிதம்பரம் பிள்ளை

நம் பாரதநாடு சுதந்திரம் பெறுவதற்காகப் போரிட்ட வீரர்கள் பலராவர். மகாத்மா காந்தியடிகள் நம் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்குவதற்கு முன்பே, திலகர் பெருமான் ' சுதந்திரம் எனது பிறப்புரிமை ' என்ற மந்திரத்தை நமக்கெல்லாம் அளித்தார்.

அடிமைகளாக உறங்கிக் கொண்டிருந்த இந்திய மக்களை அவர் தட்டி எழுப்பினார். அக் காலத்தில் நம் தமிழ் நாட்டிலும் சில வீரர்கள் தோன்றி நாட்டின் விடுதலை இயக்கத்தில் முழு மனத்துடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களில் தலை சிறந்தவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களாவர். இவர் திலகருடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் என்ற கிராமமே சிதம்பரம் பிள்ளையவர்கள் பிறந்த ஊராகும். இவர் 1872-ம் ஆண்டில் உலகநாதம் பிள்ளைக்கும் பிரமாயி அம்மைக்கும் புதல்வராகப் பிறந்தார்.

இளமையில் சிதம்பரம்பிள்ளை நன்கு கல்விகற்றார். சுதந்திர வாழ்வில் அவருக்கிருந்த ஆர்வம் அக்காலத்திலேயே வெளிப்பட்டது. மெட்ரிக்குலேஷன் படிப்பு முடிந்ததும், அரசாங்க உத்தியோகப் பதவியை அவர் விரும்பாமல், வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

பொதுவாக இத்தொழிலைச் செய்வோர் தம் கட்சிக்கு இசைந்தபடி யெல்லாம் சாட்சிகளைத் தயாரித்துப் பேசச் சொல்வர். ஆனால் சிதம்பரம் பிள்ளை உண்மைக் காகவே வாதாடுவார். ஏழைகளிடம் அவருக்குக் கரை கடந்த அன்பிருந்தது. ஆகவே ஏழைகளிடம் பணம் பெறாமல் அவர்கள் கட்சியை எடுத்துரைப்பது அவர் வழக்கம். சில காலம் இத் தொழிலைத் தாம் பிறந்த ஊரில் செய்தபின், தூத்துக்குடிக்குச் சென்று அங்கே இத்தொழிலை நடத்தினார். இக் காலத்தில் எல்லாம் அவர் உயர்ந்த தமிழ் இலக்கிய நூல்களைப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

இல் வாழ்க்கையில் இவருக்கு மகிழ்ச்சியும் துய ரமும் கலந்தே ஏற்பட்டன. இவருக்கு வாய்த்த முதல் மனைவியான வள்ளியம்மையார் நற்குணங்கள் நிரம்பப் பெற்று, இவருடைய இல்வாழ்க்கையை மகிழ்ச்சி நிறையச் செய்தார். ஆனால் அந்த அம்மையார் வாலி பத்தில் மரணமடைந்தார். அதனால் சிதம்பரம் பிள்ளை மிக்வும் துயருற்றார். சில காலம் கழிந்த பிறகு மீனாட்சி யம்மையார் என்பவரை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்துகொண்டார்.

நம் நாட்டு விடுதலை இயக்கம் தொடங்கியதும் சிதம்பரம்பிள்ளை அதில் சேர்ந்து உழைக்க முன்வந்தார். தமிழ் நாட்டில் மக்களிடையே பிரசாரம் செய்தார். ஆங்கிலேயரின் ஆட்சியை வேரறுக்க, சுதேசி இயக் கமே முக்கியமான துணையாகும் என்று அப்பொழுது தலைவர்கள் சொற்பொழிவு செய்தார்கள். அயல்நாட்டுப் பொருள்களை வாங்காமல் நம் நாட்டுப் பொருள்களையே வாங்கி உபயோகிக்கவேண்டுமென்பது இந்த இயக்கத் தின் கருத்து. சிதம்பரம் பிள்ளை போன்ற தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்ட நம்நாட்டு மக்கள் அயல்

நாட்டுத் துணிகளை எரித்தனர்; சுதேசி சாமான்களையே வாங்க உறுதி கொண்டனர். அப்பொழுது சிதம்பரம் பிள்ளையுடன் உழைத்த மற்றொரு தமிழ்நாட்டுத் தலைவர் சுப்பிரமணிய சிவா என்பவராவர்.

நம் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் எல்லாம் ஆங்கிலேய முதலாளிகளுக்கே சொந்தமாயிருந்தன. இதைக் கண்ட சிதம்பரம் பிள்ளையின் மனம் கொதித்தது. பண்டைக் காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கப்பல் படைகள் வைத்திருந்தார்கள்; தமிழ் நாட்டு வியாபாரிகள் கப்பல்களில் கடல் கடந்து சென்று சிங்களம், பர்மா, ஜாவா முதலிய நாடுகளுடன் வியாபாரம் செய்தார்கள். இத்தகைய பண்டைப் பெருமையையுடைய தமிழ் மக்கள் இப்பொழுது தமக்கென்று கப்பல்களே இல்லாதிருந்தனர்; இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்று சிதம்பரம் பிள்ளை உறுதி பூண்டார். பல செல்வர்களிடம் இதைப்பற்றிப் பேசி, அவர்களுடைய உதவியும் பொருளும் பெற்று, "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி," என்ற ஒரு கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். ஒரு கப்பலை விலைக்கு வாங்கி, அதைத் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கு மிடையே ஓட்டினார். இதைப் பார்த்த ஆங்கிலக் கப்பல் முதலாளிகள் இவருடன் போட்டியிட்டார்கள். சுதேசி கப்பல் கம்பெனி சுமார் இரண்டு வருடகாலம் நடந்தது; பிறகு போட்டி காரணமாக அது நின்று விட்டது. ஆயினும் சிதம்பரம் பிள்ளைக்கு, "கப்பலோட்டிய தமிழன்," என்ற பெயர் ஏற்பட்டது.

ஒரு தடவை அரசாங்கத்தாருடைய தடையை மீறி, சிதம்பரம் பிள்ளையும் இவருடைய நண்பர் சுப்பிரமணிய சிவாவும் ஒரு கூட்டத்தில் பேசினார்கள். அதனால் இருவரும் கைது செய்யப்பட்டார்கள். பிறகு

அவர்கள் விசாரணை செய்யப்பட்டுப் பல ஆண்டு களுக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் சிதம்பரம் பிள்ளைக்குக் கல் உடைத்தல், செக்கு இழுத்தல் போன்ற கடுமையான வேலைகள் கொடுக்கப்பட்டன. எனினும் நம் நாடு விடுதலை பெற வேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக, இத் துன்பங்களை அவர் பொருட்படுத்தவில்லை.

சிறையில் அவர் அனுபவித்த இன்னல்கள் காரண மாக, அவரது உடல் நலம் குன்றிவிட்டது. அவர் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு சென்னையில் பல ஆண்டுகள் வாழ்ந்துவந்தார் ; அப்பொழுது சில தமிழ் நூல்களைப் பதிப்பித்து, தமிழ் இலக்கியத் தொண்டு செய்தார். காந்தியடிகள் தொடங்கிய அறப்போரில் ஈடுபட அவரது உடல் நலம் இடந் தரவில்லை. ஆனால் அவர் மனம் மட்டும் நம் நாடு விடுதலை பெறவேண்டு மென்று இடையறாது சிந்தித்துக் கொண்டிருந்தது. 1936-ம் ஆண்டில் இப்பெருவீரர் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

சிதம்பரம்பிள்ளை எதற்காகத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் தியாகம் செய்தாரோ, அந்த சுதந்திரத்தை இன்று நாம் அடைந்துள்ளோம். எனி னும் நம் மக்களின் வறுமைப் பிணி முற்றிலும் நீங்க வில்லை. பல துறைகளில் நாம் இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். சிதம்பரம் பிள்ளை போன்ற தியாகிகளைப் பின்பற்றி நாமும் நம் நாட்டு நலனுக்காக உழைக்க முன் வரவேண்டும்.

தலைமைதாங்கு	*வாய்த்த*	*பண்டைப் பெருமை*
மந்திரம்	*பிரசாரம்*	*கைது செய்*
வாதாடு	*இயக்கம்*	*கடுங்காவல்*
இன்னல்	*குன்றிவிட்டது*	*இடையறாது*
நீத்தார்	*ஈடுபட*	*பிணி*

அருஞ்சொற்பொருள்

தலைமை தாங்கு - தலைவனாயிரு. வாதாடு - தருக்கம் செய். இன்னல் - துன்பம். நீத்தார் - துறந்தார். குன்றி விட்டது - குறைந்து விட்டது. ஆவி - உயிர். பண்டைப் பெருமை - பழங்காலப் பெருமை. இடையறாது - நீங்காது. பிணி - நோய்.

கேள்விகள்

1. சிதம்பரம் பிள்ளையவர்களது பிறந்த ஊர் எது? பெற்றோர் யாவர்?
2. சிதம்பரம் பிள்ளை எவ்வாறு வழக்கறிஞர் தொழிலைச் செய்தார்?
3. சிதம்பரம் பிள்ளைக்குக் கப்பலோட்டிய தமிழன் என்ற பெயர் எப்படிக் கிடைத்தது?
4. சிதம்பரம் பிள்ளை எப்பொழுது சிறைப் பட்டார்? சிறையில் அவர் அனுபவித்த துன்பங்கள் யாவை?

பயிற்சி

I உன் சொந்த வாக்கியங்களில் பின் வரும் வார்த்தைகளை அமைத்து எழுது:—

தலைமை தாங்கு; வாதாடு; வாய்த்த; குன்றிவிட்டது; இடையறாது.

II நிறுத்தக்குறிகள் :

(,) இந்த அடையாளம் கால் புள்ளி எனப்படும். வாசிக்கும் போது இந்தக் குறி இருக்குமிடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உதாரணம்):—பால், சோறு, எலி முதலியவற்றைப் பூனை தின்னும்.

(.) இது முற்றுப்புள்ளி எனப்படும். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இது காணப்படும். வாசிக்கும்போது இந்தக் குறியிட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

உதாரணம்:—பறவைகள் வானத்தில் பறக்கின்றன. தவளைகள் தண்ணீரில் நீந்துகின்றன.

குறிகள்

(" ") இக்குறி, மேற்கோள் குறி எனப்படும். ஒருவர் எந்த வாக்கியங்களை எந்த விதமாய்க் கூறினரோ, அந்த வாக்கியங்கள் அப்படியே உபயோகிக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கும் இடங்களில், முதலிலும் முடிவிலும் இவ்வடையாளங்கள் உபயோகிக்கப்படும்.

உதாரணம்:—வனதேவதை அவன் முன் தோன்றி, "நீ இன்பமாய் வாழ்வாயாக," என்று கூறியது.

(' ') இக்குறியும் மேற்கோள் குறிதான். ஆனால் இது பழமொழியையும், பிற மொழி வார்த்தைகளையும் குறிக்கிற இடங்களில், அவைகளின் முதலிலும் முடிவிலும் உபயோகிக்கப்படும்.

உதாரணம் :—'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

நாம் உணவில் சேர்க்கின்ற உப்பு, 'சோடியம் குளோரைடு' எனப்படும்.

III பின்வரும் வாக்கியத்தில் தகுந்த நிறுத்தக்குறிகளை அமைத்து எழுதவும்:—

சிதம்பரம் பிள்ளை சுப்பிரமணிய சிவா பாரதியார் முதலியோர் தமிழ் நாட்டில் மக்களிடையே சுதந்திர ஆர்வத்தைத் தூண்டினர் அவர்கள் நம் நாட்டு விடுதலைக்காகப் பெரிதும் பாடுபட்டனர்

20. இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

கங்கை நதி பாய்வதால் வளம்பெற்ற வங்காளத்தில் ஹூக்ளி ஜில்லாவில் காமர்ப்புகூர் என்றொரு கிராமம் உண்டு. இது கல்கத்தா நகரத்திற்கு மேற்கே சுமார் எண்பது மைல் தூரத்தில் உள்ளது. ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் இவ்வூரில் க்ஷுதிராம சட்டோபாத்தியாயர் என்ற வேதியர் வாழ்ந்திருந்தார். இவர் மிகவும் ஏழையாயிருந்தபோதிலும் குணசீலராய் இருந்தார். இவருக்குச் சந்திரமணி தேவி என்ற பெண்மணி மனைவியாய் வாய்த்திருந்தாள். இல்

லறத்தை நல்லறமாக்கிய இவர்கட்கு இரு குமாரர்களும், ஒரு குமாரியும் இருந்தனர். பின்னர் **கயா க்ஷேத்திரத்துக்கு** யாத்திரை சென்றிருந்த காலத்தில் அங்குக் கோவில் கொண்டிருக்கும் கதாதரர் அருள் பெற்று, ஆண்மகவு ஒன்றைப் பெற்றனர். 1836-ம் ஆண்டிலே பிறந்த இத் தெய்வக் குழந்தைக்கு **கதாதரன்** எனப் பெயரிட்டனர்.

கதாதரர் குழந்தைப் பருவத்திலேயே, தமது அழகாலும் விளையாட்டுக்களாலும் எவரையும் வசீகரித்தார். களிமண்ணுல் தெய்வச் சிலைகள் செய்வதிலும், சித்திரம் வரைவதிலும் பக்தி ரசக் கீர்த்தனைகள் பாடுவதிலும், வல்லவராயிருந்தார். இவரது ஏழாம் வயதில் க்ஷுதிராமர் மரணமடைந்தார். அதன் பின் கதாதரர் தம் தாயின் மனம் கோணுமல் நடந்துவந்தார். அவ்வூர்த் தருமசாலையில் வந்து தங்கும் பெரியோர்களது உபதேசங்களைக் கேட்டு வந்தார். புராண இதிகாசங்

களில் கேட்டறிந்த விஷயங்களை, ஆடல் பாடல்களோடு அபிநயத்துக் காட்டி, தம்மையொத்த சிறுவர்களுக்கு இன்பமூட்டிவந்தார். பள்ளிக்கூடப் படிப்பிலே இவருக்குச் சிறிதும் சிரத்தை இல்லாமையால் அதனைக் கைவிட்டார். இவரது மூத்த சகோதரர் ராமகுமாரர் கல்கத்தாவிலே சம்ஸ்கிருத பண்டிதராய் இருந்தார். அவர் கதாதரர் பதினேழு வயது ஆகியும், கல்விப் பயிற்சியும் உலக அனுபவமும் பெருதது கண்டு மனம் வருந்தி, இவரையும் தம்மோடு கல்கத்தாவுக்கு

அழைத்துச் சென்ருர். அங்குச் சென்றதும் தட்சிணே சுவரம் என்ற புண்ணிய ஸ்தலத்தில் இருந்த ஆலயம் ஒன்றில் பூஜைசெய்யும் திருப்பணி ராமகுமாரருக்குக் கிடைத்தது.

தம் தமையனுடன் கூடவே அக்கோவிலுக்கு அடிக் கடி சென்ற கதாதரர் பக்தி பரவசராய் அந்தரங்க பூஜை செய்து வந்தார். சில நாட்களில் கதாதரரே அத் திருப்பணியை ஏற்றுக் கொண்டார். தேவி மந்திரம் உப தேசம் பெற்றுக்கொண்டு பூஜை செய்யத் தொடங்கிய கதாதரர், அத்தேவியை நேரில் தரிசிக்க ஆவல்கொண் டார். இவர் தம்மை மறந்து பூஜைசெய்யும் சமயங்க ளிலே பல அதிசயச் செயல்கள் செய்வார். இக்காலத் திலேயே இவருக்கு உலக வாழ்க்கையில் பற்றுக் குறைந்தது. உள்ளம் உருகிக் கண்ணீர் வடியத் தேவி யின் தோத்திரங்களே இசையோடு பாடி ஆனந்தங் கொள்வார். இச்சமயத்திலே இவருடைய மூத்த தமைய ஞர். இறந்தார். அப்போதும் இவர் மனம் குடும்பப் பொறுப்பில் செல்லவில்லே. தேவி பிரத்யட்சமாக வில்லேயே என்ற கவலேயே கொண்டிருந்தார். முடிவில் ஒரு நாள் தேவியை நேரில் தரிசித்தார்.

இதன் பின் இவர் தேவியைப் பூஜைசெய்யும் முறை கள் மாறின. அவை பார்ப்பவர்க்குப் பைத்தியம் பிடித் தவர் செயல்களாகவே தோன்றின. இது கண்ட கோவிற் காவலர், தாம் கண்ட விபரீதக் காட்சிகளேக் கோவில் அதிகாரியான மதுரநாதரிடம் அறிவித்தனர். மதுரநாதரும் தாமே நேரில் வந்து மறைந்து நின்று பார்த்துப் பல சோதனேகள் செய்தார். இதன் பயஞக கதாதரருடைய உண்மையான பக்தியின் பெருமையை உணர்ந்து கொண்டார். கதாதரர் விருப்பம்போல் பூஜைகள் செய்யலாம் என்று அவர் உத்தரவிட்டார்.

கதாதரர் அங்கிலேயில் இருப்பதை நன்கு அறியாத இவருடைய தாயும் இரண்டாம் தமையனும் இவருக்கு விவாகம் செய்துவைக்க முயன்றனர். அவ்வாறே ஜெயராமபட்டியில் வாழ்ந்த ராமசந்திர முகர்ஜியின் குமாரி சாரதாதேவியை மணம் செய்வித்தனர். மணம் நிறைவேறியதும் கதாதரர், சாரதா தேவியைப் பிறந்த வீட்டிலேயே விட்டு, தட்சிணேசுவர ஆலயத்தில் முன் போல் பூஜை செய்துவந்தார். குடும்பப் பொறுப்பை மேற்கொள்ளாமல், தம்மை மறந்து நிஷ்டையிலும் தியானத்திலும் பொழுது போக்கினர். ஆறு வருடங்கள் தூங்காமல் தவம்புரிந்தார். அக்கடும் தவத்தின் பயனுகப் பொன்னேயும் மண்ணேயும் ஒன்றுபோல் கருதும் வைராக்கியம் அடைந்தார். அறியாமையால் எவரேனும் தமக்கு இழைக்கும் தீங்கைப் பொறுக்கும் தன்மையைப் பெற்ருர்.

இக்காலத்திலே பைரவிப் பிராம்மணி என்ற அம்மையார் தமக்குத் தக்க சீடர் ஒருவரைத் தேடிவந்து கதாதரரைக் கண்டார். கதாதரரும் தாம் அறிந்து அனுபவித்த உயர்ந்த உண்மைகளேப் பற்றிப் பெரியோர்களிடம் அளவளாவி உண்மையை அறிய விரும்பினர். அப்போது இவருக்குக் கதாதரர் என்ற பெயர் மாறி, இராமகிருஷ்ணர் என்ற பெயர் வாய்த்தது. பைரவிப் பிராம்மணியாரும் இராம கிருஷ்ணரது தவத்தின் மகிமையை உணர்ந்து, பல சாஸ்திரவாதிகளுக்கும் இவர் பெருமையை நன்கு விளக்கினர். தேச சஞ்சாரம் செய்துவந்த மகான்கள் பலர், தட்சிணேசுவர ஆலயத்துக்கு வந்து இராமகிருஷ்ணரைத் தரிசித்துச் சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் இவரது பெருமையை உலகம் அறியச் செய்தனர். வேதாந்த விஷயங்களேப் பற்றிய நுட்பமான சந்தேகங்

களை இனிய சொற்களால் விளக்கும் சக்தி இராம கிருஷ்ணருக்கு ஏற்பட்டது.

இந்நாளில் நருமதை நதிக்கரையில் நாற்பது வருடம் கடுந்தவம் புரிந்து பயன்பெற்ற தோதாபுரி என்ற பெரியார் தட்சிணேசுவரத்துக்கு வந்தார். அங்கு ஆலய வாயிலிலே அமைதியாக இருந்த இராம கிருஷ்ணரைக் கண்டார். தாம் கண்டு இன்புற்ற பேரின்ப வாழ்வை அவருக்கு உபதேசிக்க விரும்பினர். கிரமப்படி இவருக்குச் சந்நியாசம் கொடுத்து, தாம் அறிந்த உண்மைப்படி பொருளை உபதேசித்து, சமாதி நெறியை விளக்கினர். இராமகிருஷ்ணருக்கு அந்நெறி வெகு எளிதில் கை கூடியது. மூன்று நாள்வரை தம்மை மறந்து சமாதியிலிருந்த அவரைத் தோதாபுரி திரும்பவும் உலகத்தைப் பார்க்கச் செய்தார். இராம கிருஷ்ணருடன் ஒரு வருடகாலம் அன்புடன் பழகிய பின் தோதாபுரி விடைபெற்று அகன்றார். அதன் பின் இராமகிருஷ்ணர் 'எல்லா மதங்களிலும், உள்ள கருத்து ஒன்றே, வணங்கப்படும் தெய்வம் ஒன்றே' என்ற உண்மைகளை உலகோர்க்கு உணர்த்தினர்.

இளம் பருவத்திலே இவரை மணந்த சாரதா தேவியார் கணவரை யடைந்து, இவருக்குப் பணி விடைகள் செய்து கொண்டிருந்தார். பிறகு இராம கிருஷ்ணர் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்க யாத்திரை சென்றார். திரும்பிவந்து தட்சிணேசு வரத்தில் யோக முறைகள் பலவற்றையும் பழகினர். இக்காலத்தில் கல்கத்தாவிலிருந்து இளைஞர் பலர் இவ்வபூர்வ சந்நியாசியைக் காணவந்தனர். அவர் களுள் இந்திய நாட்டின் புகழை உலகெங்கும் பரவச் செய்த விவேகானந்தரும் ஒருவர். இராமகிருஷ்ணர் இந்தச் சிஷ்யர்களுக்குப் பொதுஜன நன்மைக்கு

உழைத்தலே பெருந்தருமம் என உபதேசித்தார். இராம கிருஷ்ணரது பெயரால் பல மடங்களும், வித்தியாலயங் களும் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன.

வடிய	விபரீத	பக்திரசம்
யோகம்	நிஷ்டை	வேதாந்த
தருமசாலை	இல்லறம்	குணசீலர்
திருப்பணி	சாஸ்திரவாதி	அந்தரங்க
பிரத்யட்சம்	வித்தியாலயம்	கீர்த்தனைகள்
வைராக்கியம்	கோயில்கொண்டு	

அருஞ்சொற்பொருள்

திருப்பணி–கோயில், சத்திரம் முதலிய தரும காரியங் களுக்குச் செய்யும் ஊழியம். பிரத்யட்சம்–நேரில் பார்த்தல். வைராக்கியம்–மன உறுதி. நிஷ்டை–தியான நிலை. வித்தியா லயம்–கல்விச் சாலை. அந்தரங்க–மனத்திற்கு நெருங்கிய. கீர்த்தனைகள்–துதிப் பாடல்கள்.

கேள்விகள்

1. இராமகிருஷ்ணரின் பெற்றோர் யாவர்? அவர்கள் அவ ருக்கிட்ட பெயர் என்ன?
2. இராமகிருஷ்ணருடைய இளமை வாழ்க்கை பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுது.
3. தோதாபுரி என்பவர் யார்? அவர் இராமகிருஷ்ணருக்கு என்ன செய்தார்?

பயிற்சி

I. உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :—
திருப்பணி; இல்லறம்; அந்தரங்க.

II. பின்வரும் வாக்கியங்களைக் கவனி :—

1. வீட்டுக்குப் போ.
2. காலையில் துயிலெழு.
3. நற்காரியங்களையே செய்வோம்.

இவற்றில் எழுவாய்கள் வெளிப்படையாக இல்லை. ஆனால் பயனிலையைக் கவனித்தால், முதலிரண்டு வாக்கியங் களுக்கும் 'நீ' என்பதும், மூன்றும் வாக்கியத்துக்கு 'நாம்' என் பதும் எழுவாய் என்று விளங்கும். இம்மாதிரியான எழுவாய்க் குத் தோன்றா எழுவாய் என்று பெயர்.

III. தோன்றா எழுவாய் உள்ள மூன்று வாக்கியங்கள் எழுது.

21. படப்பயிற்சி—III

பின் வரும் படங்களில், ஒவ்வொன்றும் ஒரு பழமொழியைக் குறிக்கிறது. படத்திற்குரிய பழமொழியைக் கண்டுபிடி.

22. கிராமத் தொண்டு

ஒரு கிராமத்திற்குத் தொண்டு அல்லது ஊழியம் செய்வது எளிதான காரியமல்ல. ஒருவன் முதன் முதலில் தன்னைப் பெற்ற தாய் தந்தையர்க்கும், பிறகு உடன் பிறந்தார், சுற்றத்தார், ஏழை எளியவர்கள், கஷ்டப்படுகிறவர்கள் முதலியவர்களுக்கும் உதவிபுரியக் கடமைப்பட்டவன். ஒருவன் ஒரு கிராமத்துக்குத் தொண்டு செய்தால், அவன் அநேக ஏழைக் குடும்பங்களுக்கும் தொண்டு செய்தவனுவான்.

ஒரு கிராமத்திற்குத் தொண்டு செய்வதற்காக வீடு வீடாய்ச் சென்று ஒவ்வொருவருக்கும் உதவி செய்வதும் முடியாத காரியம். ஆனால் அந்தக் கிராமத்தவர்களுக்கான, பொதுவான சில தொண்டுகள் செய்வதுதான் சிறந்ததாகும். ஒரு கிராமத்திற்குப் பொதுவாகச் செய்யவேண்டிய தொண்டுகள் பல உள. அவைகளைக் கல்வி, சுகாதாரம், செல்வநிலை என மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

கல்வியே எவ்விதமான சீர்திருத்தத்திற்கும் ஆதி காரணமாயிருந்து பலனளிக்கக்கூடியது. ஒரு கிராமத்தில் குறைந்தது ஒரு பள்ளிக்கூடமும், அதை உண்மையான நோக்கத்துடனும், தளராத ஊக்கத்துடனும் விருத்தி செய்யும் சில ஆசிரியர்களும் தேவை. இலக்கியக் கல்வியுடன் பிள்ளைகளுக்குச் சிறு குடிசைத் தொழிற் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும். தேக ஆரோக்கியத்திற்கான பலவித விளையாட்டுக்களும் ஏற்படுத்த வேண்டும்; பல பாட்டுக்களையும் கற்பிக்கவேண்டும். இவ்வாறு செய்தால்தான் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொள்ள ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்.

ஒழிவு நேரங்களில் வயது வந்தவர்கள் கல்வி கற்றுக் கொள்ள இரவுப் பள்ளிக்கூடங்களும் நடத்த வேண்

டும். படித்து வெளியேறுபவர்கள் தங்கள் கல்வியறிவை விருத்தி செய்துகொள்ளவும், விவசாய அறிவை அதி கப்படுத்திக் கொள்ளவும், உலகப் போக்கை அறிந்து கொள்ளவும் இலவச வாசகசாலைகள் அமைக்கவேண் டும். அவைகளில் விவசாயம், கைத்தொழில் முதலிய வைகளை விளக்கும் புத்தகங்களும், பத்திரிகைகளும் வழங்கப்படவேண்டும். இவைகளை வாங்குவதற்காக, நன்கொடை, சந்தா முதலியவை வசூல் செய்யவேண் டும். கல்வியே மனிதர்க்குக் கண் என்பதை மறக்கக் கூடாது.

கல்விக்கு அடுத்தது சுகாதாரமே யாகும். 'சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டும்' என்னும் பழ மொழிக்கிணங்க ஒருவன் தேக சுகத்துடன் இருந்தால் தான், அவன் எக்காரியமும் செய்யமுடியும். சுகமாய் ஒருவன் வாழவேண்டுமானுல் அவன் சுத்தமாயிருக்க வேண்டும். பிறரையும் சுத்தமாயிருக்கச் செய்யவேண் டும். வீடுகளும் வீடுகளின் சுற்றுப்புறங்களும் தெருக் களும் பொதுவில் கிராம முழுவதும் சுத்தமாயிருக்கும் படி செய்யவேண்டும். சுகாதார விஷயங்களைப்பற்றி ஜனங்களுக்கு விவரமாக எடுத்துச் சொல்லவேண்டும். தெருவைப் பெருக்குதல், தெருக்களைச் சீர்திருத்தம் செய்தல் முதலிய வேலைகளை நடத்திக் காட்டவேண் டும். கிராமத்திலுள்ள மற்ற வாலிபர்களையும் இவ் வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபடச் செய்தல் வேண் டும். கிராமத்திலுள்ள குப்பை கூளங்களைத் தனியாக ஒரு புறத்தில் கொட்ட ஏற்பாடு செய்யவேண்டும். குளம், கிணறு முதலியவைகளை ஜனங்கள் அசுத்தம் செய்யாமல் பாதுகாக்கவேண்டும். இராக் காலங்களில் தெருக்களில் விளக்குகள் போடவேண்டும். மிருகங் களுக்குத் தனி இடவசதி ஏற்பாடு செய்யவேண்டும்.

தொற்று வியாதிகளைப்பற்றி ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல, சுகாதார அதிகாரிகள் மூலம் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விதமாகக் கிராமச் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யலாம்.

அடுத்தபடியாகக் கிராமத்தின் செல்வ நிலையைப் பலவிதத்திலும் உயர்த்தப் பாடுபடவேண்டும். விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் காலாகாலத்தில் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும்படி ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தலாம். இவற்றின் மூலமாக விவசாயிகள், தமக்குத் தேவையான உழவுச் சாமான்கள் முதலியவைகளை வாங்கலாம். விளைபொருள்களைச் சேர்த்துவைத்துக் கூட்டு விற்பனை செய்து நல்ல லாபம் பெறலாம். உள்ளூரில் விளையும் பொருள்களை ஒன்றுசேர்த்து அயலூரில் கொண்டுபோய் விற்று லாபம் அடையலாம்.

இந்த விதமான முன்னேற்றத்திற்கான வேலைகளை ஒருவர் செய்வதே, கிராமத்திற்குச் செய்யும் பேருதவியாகும். நம் கிராமங்கள் முன்னேறினால்தான், நம் நாடு முன்னேறும். நம் நாடு முன்னேறினால்தான் நம் தேசமும் முன்னேற்றம் அடையும். நம் தேசம் முன்னேற்றம் அடைந்தால்தான், நாம் சுதந்திரத்தோடு சுகமாக வாழலாம். தன் கிராமத்திற்காக உழைப்பவனே தேசத்திற்காக உழைக்கும் உண்மைத் தொண்டனாவான்.

சந்தா	தொண்டு	சீர்திருத்தம்
பலன்	இலக்கிய	பெருக்குதல்
குடிசை	அடுத்தது	நன்கொடை
தளராத	விவரமாக	ஆரோக்கியம்
உள்ளூர்	சுற்றத்தார்	கூட்டுவிற்பனை
பேருதவி	அபிவிருத்தி	உடன்பிறந்தார்
வட்டி	விளைபொருள்	

அருஞ்சொற்பொருள்

தளராத - சோர்ந்து போகாத. தொண்டு - ஊழியம். நன்கொடை - பரிசு, இனமாகக் கொடுத்தல்.

கேள்விகள்

1. பள்ளிக்கூடப் பையன்கள் செய்யக்கூடிய கிராமத் தொண்டுகள் சிலவற்றை எடுத்துச் சொல்லி அவைகளை நீ செவ்வனே செய்ய என்ன ஏற்பாடுகள் செய்வாய் என்று எழுது.
2. கிராமத்தொண்டு எவ்வாறு தேசத் தொண்டாகிறது?

பயிற்சி

I வாக்கியங்களிலமை:—தளராத, நன்கொடை, அபிவிருத்தி, சுற்றத்தார், பேருதவி.

II சொற்றொடர்: சில சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து நின்று ஒரு கருத்தை உணர்த்தினால் அச்சொற்கள் சொற்றொடர் ஆகும். சொற்களின் கருத்து முடிந்ததாயிருந்தால் அச்சொற்றொடரை வாக்கியம் என்கிறோம்.

வாக்கியத்தில் சாதாரணமாக எழுவாய் முதலில் வரும்; செயப்படுபொருள் இருந்தால் அது அடுத்தபடியாக வரும்; முடிவில் பயனிலை வரும்.

(உ - ம்) கந்தன் அரக்கரை வதைத்தான்.

இந்த முறை மாறியும் வாக்கியம் வரலாம்.

(உ - ம்) அரக்கரைக் கந்தன் வதைத்தான்.

அரக்கரை வதைத்தான் கந்தன்.

III எதிர்ச்சொற்கள் கூறு:

பாடுவார்; நல்ல; முடியாத; ஆதி.



23. தாஜ்மஹால்

மதுரைக்குச் சென்றால் மீனாட்சியம்மன் கோவிலைப் பார்க்காமல் நாம் வரமாட்டோம். இதேபோல், தஞ்சை, திருச்சி, ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் முதலிய ஊர்களில் பெரிய பெரிய கோவில்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் காணும்பொழுது, நம் நாட்டின் பண்டைக்காலப் பெருமை நினைவுக்கு வருகிறது. " இந்தக் கோவில்களை நிர்மாணித்த அரசர்களும் சிற்பிகளும் எவ்வளவு அரிய பெரிய வேலையைச் செய்திருக்கிறார்கள் ! எத்தனை நூற்றாண்டுகளாக இவை அழியாமல் நின்று, அவர்களுடைய பெயர்களை நமக்கு நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன !'' என்று எண்ணுகிறோம். தென்னாட்டின் அழியாச் செல்வங்களாகக் கோவில்கள் விளங்குவதைப்போல், வட இந்தியாவிலும் பல கட்டடங்கள் நம் சரித்திரப் பெருமைக்குச் சான்றாக நிற்கின்றன. இவற்றில் தலைசிறந்தது ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் ஆகும்.

தாஜ்மஹால் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன் கட்டப் பெற்றது. இதை நிர்மாணித்தவர் யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். பதினேழாம் நூற்றுண்டின் மத்தியில் டில்லியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த ஷாஜஹான் என்ற மொகலாயப் பேரரசரே தாஜ்மஹாலைக் கட்டியவர். இவரது மனைவியாரான மும்தாஜ் மஹால் தம் கணவரின் அன்பை முழுதும் பெற்றிருந்தார். இவ்வம்மையாரின் புதல்வர்களில் ஒருவரே ஷாஜஹானுக்குப் பிறகு சக்கரவர்த்தியான ஔரங்கசீப் ஆவர். மும்தாஜ்மஹால் மரணமடைந்த பொழுது ஷாஜஹான் ஆராத்துயர் அடைந்தார். அவருடைய பெயரும் தம் பெயரும் உலகில் என்றும் நிலைத்து நிற்கத்தக்க ஒரு நினைவுச் சின்னத்தைக் கட்டிவைக்க அவர் நிச்சயித்தார். அதன் பயனுகத் தோன்றியதே தாஜ்மஹால்.

தாஜ்மஹால், ஆக்ரா நகருக்கருகே யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளது. இதன் அழகையும் அமைப்பையும் கண்டோர் யாரும் வியக்காமல் இரார். இது முழுதும் சலவைக் கல்லாலேயே அமையப் பெற்ற ஒரு பெரிய கட்டடம். இது ஒரு தோட்டத்தில் அமைந்துள்ளது. தாஜ்மஹாலின் முன்னே சுமார் 300 அடி நீளமும் அகலமும் கொண்ட ஓர் உயர்ந்த சலவைக்கல் மேடை போன்ற முற்றம் அமைந்திருக்கிறது. இந்த மேடையின் முன்புற மூலைகளில் இரு உயர்ந்த தூபிகள் இருக்கின்றன.

தாஜ்மஹாலின் முக்கியக் கட்டடம் எண்கோண வடிவமாகவும் இரண்டு அடுக்கு மாடிகளோடும் அமைந்திருக்கிறது. சுவர்களெல்லாம் பலவகையான ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டு அழகு நிறைந்துள்ளன. இக்கட்டடத்தின் சிகரம் மிகப்பெரிய கோள வடிவ

விமானமாயிருக்கிறது. கட்டடத்தின் கீழ் அறையில் ஷாஜஹான், மும்தாஜ்மஹால் ஆகிய இருவரின் சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

தாஜ்மஹாலைக் கட்டி முடிக்க இருபது ஆண்டுகள் பிடித்தன என்றும் பதினாயிரக் கணக்கான ஆட்கள் உழைத்து அதைக் கட்டினார்கள் என்றும் வரலாற்று நூலாசிரியர்கள் கூறுகிறார்கள்.

தாஜ்மஹாலை நிலவொளியில் பார்த்தால், அது பகலில் பார்ப்பதைவிடப் பன்மடங்கு அழகாகத் தோன்றுகிறதென்று கூறுகின்றனர். உலகில் தாஜ்மஹாலைவிடப் பெரிய கட்டடங்கள் பண்டைக்காலத்திலும் தற்காலத்திலும் கட்டப்பட்டுள்ளன. ஆனால் தாஜ்மஹாலுக்கு இணையான அழகுள்ள கட்டடம் வேறெதுவும் இல்லையென்றே சொல்லலாம்.

சிற்பி	*ஆராத்துயர்*	*சடலம்*
நினைவுறுத்து	*வியக்காமல்*	*சான்று*
தலைசிறந்தது	*முற்றம்*	

அருஞ்சொற்பொருள்

சிற்பி - கட்டடக் கலையில் வல்லவன். நினைவுறுத்து - ஞாபகப்படுத்து. ஆராத்துயர் - குறையாத துயரம். முற்றம் - ஒரு கட்டடத்தின் முன்னே பின்னே திறந்த வெளியாக அமைக்கப்பட்ட பகுதி. சடலம் - உடல். சான்று - சாட்சி.

கேள்விகள்

1. *நம் நாட்டுச் சரித்திரப் பெருமைக்கு இன்று சான்றாக உள்ளவை யாவை?*
2. *தாஜ்மஹாலை யார், எதற்காகக் கட்டினார்?*
3. *தாஜ்மஹாலைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுது.*

பயிற்சி

உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி:—
நினைவுறுத்து; ஆராத்துயர்; சான்று.

II *எதிரான பொருளுடைய சொற்களைக் கூறு:—*
பார்க்காமல்; பெரிய; சிறந்தது; உழைத்து.

24. உண்மையின் பெருமை

காட்சி 1

இடம் :—*மதுரை நகரில் ஒரு வீடு.*

காலம் :—*மாலை வேளை.*

பாத்திரங்கள் :—*கோபாலன், அவனுடைய தாய்.*

[கோபாலனுடைய தாய் படுக்கையில் சாகும் தருணத்தில் இருக்கிறுள்.]

தாய் :—(தனக்குள்) ஐயோ ஈசா! இவ்வளவு கெட்டவனுக எனக்கு ஒரு பிள்ளை பிறக்க வேண்டுமா! நான் என்ன சொல்லியும் கேட்க மாட்டேன் என்கிறுனே! கடைசியாகச் சொல்லிப் பார்க்கிறேன். (வெளிப்படையாய்) கோபாலா!

[கோபாலன் வருகிறுன்.]

கோபாலன் :—அம்மா! ஏன் கூப்பிட்டாய்?

தாய் :—கோபாலா ! நான் சீக்கிரம் இறந்து விடுவேன்.

கோபா :—அம்மா! நீ சாக வேண்டாம்! அம்மா!

[அழுகிறுன்.]

தாய் :—அப்பா! நான் ஏன் இன்னும் இந்தப் பூமியிலே இருக்க வேண்டும் ? நீயோ திருடுதல், பொய் சொல்லுதல், சூதாடல் முதலிய பல கெட்ட காரியங்களையும் செய்கின்றுய். நான் எவ்வளவோ சொல்லியும் நீ அவைகளை விடமாட்டேன் என்கிருய். ஆகையால் நான் இறப்பதே நல்லது.

கோபா :—நான் என்ன செய்வேன் அம்மா! பிழைக்கும் வழி ஒன்றும் தெரியாமல் திருட ஆரம்பித்தேன். அதிலிருந்து இந்தப் பழக்கங்கள் எல்லாம் என்னைப் பிடித்துக்கொண்டன. என்ன செய்வேன்?

தாய் :—கோபாலா! அப்படியானுல் நீ உன்னுடைய தீய தொழில்களை விடமாட்டாயா ?

கோபா :—எப்படியம்மா ஒரேயடியாக விட்டுவிட முடியும்? ஒரு வழியும் தோன்றவில்லையே!

தாய் :—அப்பா! கடைசியாகக் கேட்கிறேன். இவைகளில் ஒன்றையாவது நீ விட்டுவிட முடியாதா?

கோபா :—(தனக்குள்) நம் தாய் கடைசியாகக் கேட்பதற்காக ஏதாவது ஒன்றை விட்டுவிடத்தான் வேண்டும். எதை விட்டுவிடலாம்–? திருடுவதை– ஐயையோ! அதைவிட முடியாது. பொய் சொல்லுவதை வேண்டுமானால் விட்டுவிடலாம். (வெளிப்படையாய்) அம்மா, நான் இன்றுமுதல் என் உயிர் உள்ளளவும் பொய் சொல்ல மாட்டேன்.

தாய் :—கோபாலா! இனிமேல் நான் மகிழ்ச்சியுடன் உயிர் விடுவேன். நீ எப்பொழுதும் உண்மையையே பேசு; உனக்கு நல்ல காலம் பிறக்கும்.

காட்சி 2

இடம் :—*அரச மாளிகைக்கு அருகே ஒரு வீதி*

காலம் :—*நள்ளிரவு.*

பாத்திரம் :—*கோபாலன், பாண்டியன்.*

[மதுரை அரசனை பாண்டியன் பிச்சைக்கார வேஷத்தில் நகர சோதனை செய்து வருகிறான்.]

பாண்டியன் :—(தனக்குள்) அதோ! யாரோ ஒருவன் வருகிறான். அவனைப் பார்த்தால் திருடனைப்போல் காண்கிறது. அவனைச் சோதிக்கலாம்.

[கோபாலன் வருகிறான்.]

பாண்டி :—பசி கண்ணை மறைக்கிறதே! ஈசனே! நீ எல்லோர்க்கும் உணவு அளிப்பவன் என்பது பொய்யோ! (கோபாலனிடம்) அப்பா, நீ யார்?

கோபாலன் :—நான் ஒரு திருடன்; அரசரது அரண்மனையில் களவாடப் போகிறேன்.

பாண்டி : என்ன! அரண்மனையிலா களவாடப் போகிறாய்? நீ யாரப்பா?

கோபா :—என் பெயர் கோபாலன். நான் தெற்கு வெளி வீதியில் வசிப்பவன். திருடுவதே என் தொழில்.

பாண்டி :—நல்ல வேலை! எனக்கும் அதே தொழில்தான். நானும் உனக்குத் துணையாக வருகிறேன். எனக்கும் பாதிப் பங்கு கொடுக்கிறாயா?

கோபா :—கண்டிப்பாய்த் தருகிறேன். வா போகலாம்.

[இருவரும் பக்கத்திலுள்ள அரண்மனைக்குச் செல்கிறார்கள். காவலாள் தூங்கிக்கொண்டிருக்கிறான்.]

கோபா :—(பாண்டியனை நோக்கி) நீ இங்கேயே காவலாக இரு. நான் உள்ளே போய் திருடிக் கொண்டு வருகிறேன். பிறகு நாம் இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாம்.

[பாண்டியன் தலை அசைக்கிறான். கோபாலன் உள்ளே போகிறான்.]

பாண்டி :—(தனக்குள்) திருடர்கள் உண்மை பேசுவதை நான் இதுவரை பார்த்ததில்லை. இவன் புது மாதிரித் திருடனாக இருக்கிறான்.

[சிறிது நேரங் கழித்துக் கோபாலன் வருகிறான்.]

கோபா :—அப்பா! அரசனுடைய பொக்கிஷ சாலையில் எவ்வளவோ தங்கம்,வெள்ளி யெல்லாம் இருந்தன. அவைகளையெல்லாம் தொடவில்லை. விலை மதிக்க முடியாத மூன்று ரத்தினங்கள் இருந்தன. அவைகளில் ஒன்றை அரசனுக்காக வைத்து விட்டேன். மற்ற இரண்டையும் கொண்டு வந்திருக்கிறேன். இந்தா, உனக்கொன்று. (கொடுக்கிறான்.) நான் போய் வரட்டுமா?

பாண்டி :—கோபாலா! போய்வா. உன்னை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன்.

[கோபாலன் போகிறான். அதன்பின் பாண்டியன் அரண் மனைக்குள் சென்று பொக்கிஷ சாலையை அடைந்து பெட்டியைத் திறக்கிறான்.]

பாண்டி :—*(பெட்டியிலிருந்த ஒரு ரத்தினத்தை எடுத்துப் பார்த்து)* ஆம்! கோபாலன் சொன்னது உண்மையாகவே இருக்கிறது. திருடர்களுக்குள் யோக்கியர்கள் கூட இருக்கிறார்கள். *(இரத்தினத்தைப் பெட்டியில் வைத்துவிட்டுப் போகிறான்.)*

காட்சி 3

இடம் ;—*பாண்டியன் சபை.*

காலம் :—*பகல்.*

பாத்திரங்கள் :—*அரசன், மந்திரிகள், பிரபுக்கள், சேவகர்கள்.*

[பாண்டியன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறான். மந்திரிகளும் பிரபுக்களும் உரிய இடங்களில் இருக்கிறார்கள். சேவகர்கள் ஒரு புறமாக நிற்கிறார்கள்.]

பாண்டி :—பொக்கிஷ மந்திரி! நேற்று இரவு நமது பொக்கிஷத்தில் களவு போனதாகக் கனவு கண்டோம். தாங்கள் உண்மை அறிந்து வாருங்கள்.

[பொக்கிஷ மந்திரி போகிறார்.]

பார்த்தீர்களா! நாம் என்னதான் காவல் வைத்திருந்தாலும் திருடர்கள் அதையும் கடந்து திருடி விடுகிறார்களே!

முதல் மந்திரி:—அரசே! காவலாளிகள் தூங்கிவிட்டார்கள் போலிருக்கிறது.

கல்வி மந்திரி :—மன்னா! கைதேர்ந்த திருடர்கள் எவ்வகைக் காவலையும் கடந்து விடுகிறார்கள்.

பாண்டி :—மந்திரிகளே! நான் கண்டது கனவுதானே!

[பொக்கிஷ மந்திரி வருகிறார் ; அவரை நோக்கி]

பொக்கிஷம் சரியாக இருக்கிறதா?

பொ. மந் :—அரசே! நமது பொக்கிஷத்தில் விலை யுயர்ந்த மூன்று இரத்தினங்களை மட்டும் கள்வர் கள் எடுத்துச் சென்றிருக்கின்றனர். மற்றவை களெல்லாம் அப்படியே இருக்கின்றன.

பாண்டி :—என்ன ! மூன்று இரத்தினங்களையுமா ?

பொ. மந் :—ஆம், அரசே !

பாண்டி :—(சிறிது யோசித்து) சேவகா! இங்கே வா. இம் மந்திரியின் உடைகளைச் சோதனை செய்.

[சேவகன் வருகிறான். மந்திரியைச் சோதனை செய் கிறான். மூன்றும் இரத்தினம் கீழே விழுகிறது.]

முதல் மந் :—ஆகா ! இதென்ன ஆச்சரியம் !

ஒரு பிரபு :—(மற்றொரு பிரபுவிடம்) என்ன ஐயா ! பொக்கிஷ மந்திரி பக்காத் திருடன் போல இருக் கிறாரே !

பாண்டி :—(கோபத்துடன்) சபையோர்களே! பார்த்தீர் களா, இம்மந்திரியின் செயலை! நேற்றிரவு யான் நகர சோதனைக்குச் சென்றபொழுது ஒரு திருடனைக் கண்டேன். அவன் அரண்மனையில் திருடச் செல்வதாக உண்மையைக் கூறினான். யானும் அவனுக்கு உடந்தையாக இருந்தேன்; அவன் மூன்று இரத்தினங்களில் ஒன்றைப் பெட்டியிலேயே வைத்துவிட்டு, இரண்டை எடுத்து வந்தான். ஒன்றை எனக்குக் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துச் சென்றான். பிறகு யான் பொக்கிஷத்திற்குச் சென்று, அவன் கூறியபடியே ஓர் இரத்தினம் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டேன். பிறகு இங்கு நடந்தவை களை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அக் கள்வனிடம் உள்ள உண்மை கூட நம் பொக்கிஷ

மந்திரியிடம் இல்லை—சேவகா! நீ சென்று தெற்கு வெளி வீதியில் வசிக்கும் கோபாலன் என்பவனை அழைத்துவா.

[சேவகன் போகிறான்]

(பொக்கிஷ மந்திரியை நோக்கி) சேவகர்களே ! இக்கள்வனைச் சிறையில் அடையுங்கள்.

[சேவகர்கள் பொக்கிஷ மந்திரியைப் பிடித்துப் போகின்றனர். ஒருசேவகன் கோபாலனை அழைத்து வருகிறான்.]

கோபா :—(பாண்டியனை வணங்கி) அரசே!

பாண்டி :—கோபாலா! நேற்று இரவு நீ நம் பொக்கிஷத்தில் திருடியது உண்மைதானா?

கோபா :—(பயத்துடன்) உண்மைதான், அரசே!

பாண்டி :—கோபாலா! நீ உண்மை பேசுவதைக் கண்டு யான் மகிழ்ச்சி அடைகிறேன். நேற்று இரவு உன்னுடைய கூட்டாளியாக இருந்தவன் யானே. இதோ இருக்கிறது நீ எனக்குப் பங்காகக் கொடுத்த இரத்தினம். இன்று முதல் உன்னையே எனது பொக்கிஷ மந்திரியாக நியமிக்கிறேன். முதல் மந்திரியாரே ! என்ன சொல்கிறீர் ?

முதல் மந் :—ஆம் அரசே! இது சரிதான். பொக்கிஷ மந்திரியாக இருப்பவர் உண்மை உள்ளவராய் இருத்தல் வேண்டும். அப்பதவிக்கு இவர் முற்றிலும் தகுந்தவரே.

பாண்டி :—கோபாலா! நீ என்ன சொல்கிறாய் ?

கோபா :—அரசே! நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது ? தங்கள் உத்தரவுபோல் நடக்கக் காத்திருக்கிறேன்.

பயிற்சி

இந்நாடகத்தை நடித்துக் காட்டு.

25. வெற்றிவேற்கை

கல்வி மாண்பு

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.
நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பர்.
அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

ஆகையால்,

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

எவர்க்கு எது இல்லை

யானைக் கில்லை தானமும் தருமமும்.
பூனைக் கில்லை தவமும் தயையும்.
ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.
நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
கேளும் கிழமையும் கெட்டோர்க் கில்லை.
அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
அல்லல் இல்லை அறிவுடை யோர்க்கே.

நிலையாமை

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

(1) செல்வ நிலையாமை

குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.
சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.

(2) வறுமை நிலையாமை

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.

(3) யாக்கை நிலையாமை

மணவணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி அணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

ஆதலால்,

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே ;
இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

அச்சம்

தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
குன்றுடை நெடுங்கா டுடே வாழினும்
புன்தலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.
ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகவஞ் சும்மே.
குஞ்சரந் தன்னைக் கோடழிக்கும் பாம்பு
பைம்பொறி மஞ்ஞைக் கிரையா கும்மே.

இதனில் இது நன்று

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.
சான்றோ ரில்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்றேர் குறவர் தேயம் நன்றே.

பதர்

காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.
அங்கண்மா ஞாலத் தரசுவீற் றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே.
முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ்செய்(து)
அதன்பயன் உண்ணு வணிகரும் பதரே.
வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.
தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

பொய்யும் மெய்யும்

பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

ஒழிக்க வேண்டுவது

பழியா வருவது மொழியா தொழிவது.
சுழியா வருபுனல் இழியா தொழிவது.

போக்கு வரவு

துணையோ டல்லது நெடுவழி போகேல்.
புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.
வழியே ஏகுக வழியே மீளுக.

26. வாக்குண்டாம்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மே லெழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 4

உற்றவிடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 5

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம். 6

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் நன்று. 7

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் தீது. 8

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 9

பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையா தாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். 10

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 11

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். 12

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 18

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 14

சுதேச வாசகம்

ஐந்தாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாட நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்தவை

சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்
வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை
திருத்தியது.

வி. சூ. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை. | பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை.

பதிப்புரிமை] :: [விலை ரூ. 0-9-0

திருத்திய முதற்பதிப்பு–1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

ஆரம்பப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டப்படி, சுதேச வாசகம் ஐந்தாம் புத்தகம் வெளியிடப் பெற்றுள்ளது. பாடங்கள் யாவும், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும், தற்காலச் சூழ்நிலைக்கும், இவ்வகுப்பு மாணவரின் அறிவுத் திறத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. புதுச் சொற்களைச் சிரமமின்றிக் கற்பிக்கத் தக்க முறையிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

பாடத்தில் கற்ற விஷயங்களை மனத்திற்கொள்ளுமாறு செய்வதற்குரிய வினாக்களுடன், மொழிப் பயிற்சிக்கும் இலக்கணப் பயிற்சிக்கும் தேவையான கேள்விகளும் ஒவ்வொரு பாடத்திலும் தரப்பட்டுள்ளன. சில எளிய பாட்டுக் களும், கதைப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர் களது சில பாட்டுக்களைச் சேர்த்துக் கொள்ள இசைவு அளித்த பிள்ளையவர்களுக்கு எம் நன்றி உரித்தாகும்.

இந் நூலைத் திருத்தியமைப்பதில் எமக்கு உதவிய ஸ்ரீ வித்துவான், எஸ். முத்து ஐயங்கார் அவர்களுக்கு எமது நன்றி.

ஆசிரியர்கள்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தேசிய கீதம் (பாட்டு)	...	6
2.	ஜவாஹர்லால் நேரு	...	7
3.	நூல்நிலையங்கள்	...	12
4.	திருவள்ளுவர் (பாட்டு)	...	15
5.	நாட்டுப் பற்று	...	16
6.	தேனீ வளர்த்தல்	...	21
7.	ஆறு (பாட்டு)	...	26
8.	இதுவும் ஒரு நன்மைக்கே	...	28
9.	படப் பயிற்சி—I	...	33
10.	உப்பும் சர்க்கரையும்	...	34
11.	திலகர்	...	38
12.	உண்மையின் பெருமை (பாட்டு)	...	43
13.	பத்திரிகைச் செய்திகள்	...	46
14.	தபால் கடிதத்தின் பயணம்	...	48
15.	சரோஜினி தேவியார்	...	51
16.	மாதிரிக் கடிதங்கள்	...	54
17.	மனுச் சோழன்	...	57
18.	படப் பயிற்சி—II	...	62
19.	வீரபாண்டியன்	...	63
20.	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	...	66
21.	சிறுமியர் களிப்பு (பாட்டு)	...	72
22.	சுவாமி விவேகானந்தர்	...	73
23.	தருமசீலர்	...	78
24.	நட்பின் மேன்மை	...	82
25.	போகின்ற பாரதமும், வருகின்ற பாரதமும் (பாட்டு)	...	92
26.	வாக்குண்டாம்	...	93
27.	நல்வழி	...	94

1. தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்க
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்க
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஷ மாகே,
காஹே தவ ஜய காதா.

ஜன கண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
ஜய ஜய ஜய, ஜயஹே !

—ரவீந்திரநாத தாகூர்

2. ஜவாஹர்லால் நேரு

'இந்தியாவின் மணிமுடி' என்று சிறப்பிக்கப் பெறும காஷ்மீரம் இயற்கை யழகுக்கு இருப்பிடமாகும். வானளாவிய மலைச்சிகரங்களில் மேகங்கள் சூழ்ந்துவிளங்கும் இயற்கைக் காட்சியையும், எழில் மிகுந்த பல இடங்களையும் அங்கே காணலாம். இத்தகைய அழகு வாய்ந்த காஷ்மீரத்தில், 'மனிதருள் மாணிக்கம்' எனப்பெறும் பண்டித ஜவாஹர்லால் நேரு தோன்றினார். இவரது முன்னோர் வெகுகாலத்துக்கு முன்பே காஷ்மீரத்தைவிட்டு வெளியேறி டில்லியில் குடியேறினர். பின்னர் இவரது தந்தை மோதிலால் நேரு, அலகாபாத்தில் குடியேறி, வழக்கறிஞர் தொழிலை நடத்திப் புகழும் பெருஞ் செல்வமும் பெற்று விளங்கினார்.

பண்டித ஜவாஹர்லால் நேரு, அலகாபாத்தில் 1889-ம் வருடம் நவம்பர் மாதம் 15-ம் தேதியன்று

மோதிலால் நேருவுக்கும் சுவரூபராணி அம்மையாருக்கும் மூத்த புதல்வராகப் பிறந்தார். இவருடைய சகோதரிகள் இருவரில் விஜய லட்சுமி அம்மையார் உலகப் புகழ் பெற்றவர். நேரு சிறு வயதில் மிகுந்த சுறுசுறுப்பு உள்ளவர். அக்காலத்திலேயே இவர் தமது தந்தையாரின் குமாஸ்தாவிடம் பல விஷயங்கள் தெரிந்துகொண்டார். அவற்றில் முக்கியமானவை நாட்டுப்பற்றை யூட்டும் கதைகளே! அந்தக் குமாஸ்தாவிடம் இவர் மிகுந்த உள்ளன்புடன் பழகிவந்தார்.

ஜவாஹர் ஆரம்பக் கல்வியை வீட்டிலேயே ஒரு ஆங்கிலேயரிடம் கற்ருர். போதிய கல்வி கற்றபின், இவர் தம் பதினைந்தாவது வயதில் உயர்தரக் கல்வி கற்க இங்கிலாந்து சென்ருர். அங்கு இவர் 'பாரிஸ்டர்' பரிட்சையில் தேர்ச்சிபெற்று 1912-ம் வருடத்தில் இந்தியா திரும்பினுர். கல்வியைக் கசடறக் கற்ற இவர், பொது அறிவு பெறப் பல நூற்றுக்கணக்கான நூல்களையும் பத்திரிகைகளையும் படித்தார். பிற நாட்டு விஷயங்களையும், பேரறிஞரது கருத்துக்களையும் நன்கறிந்தார். இதனுலேயே இவர் இன்று சிறந்த அறிஞராக விளங்குகிருர்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியதும், ஜவாஹர்லால் அலகாபாத்தில் வக்கீல் தொழில் நடத்த ஆரம்பித்தார். 1916-ம் வருடத்தில் இவருக்கும் கமலா அம்மையாருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தையே இந்திரா நேரு அம்மையார். இவர் இல்வாழ்க்கை வாழ்ந்து வருவதுடன், தந்தையுடன் தேசப் பணியிலும் ஈடுபட்டு உழைக்கிருர்.

ஜவாஹரின் மனம் வக்கீல் தொழிலில் ஈடுபடவில்லை. இவர் நம்நாட்டு முன்னேற்றத்திற்காக உழைக்க விரும்பினுர். இவர் அலகாபாத் நகரசபைத் தலைவராகச் சில ஆண்டுகள் இருந்து அந் நகரத்தைப் பலவகைகளிலும் அழகுபடுத்தி, மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார்.

இவரது தந்தையார் மோதிலால் நேரு திறமையும் புகழும் மிகுந்த வக்கீல். மாதந்தோறும் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் சம்பாதித்தார். இவர் ஒரு சிற்றர

சரைப் போலவே வாழ்ந்துவந்தார். பிறகு தேச சேவை செய்யக் காங்கிரசில் சேர்ந்து வக்கீல் தொழிலை விட்டார். சுகவாழ்வைத் துறந்து தேசத்திற்காகச் சிறை சென்றார். இவரது குடும்பமே தேசப் பணியை மேற்கொண்டது.

ஜவாஹர்லால் நேருவும் தம் தந்தையைப் பின்பற்றித் தேசத்தொண்டு செய்ய முன்வந்தார். 1920-ம் ஆண்டில் சிறை புகுந்தார். அது முதல் இரவு பகலாக ஓய்வு ஒழிவு இல்லாது இவர் இந்திய நாட்டுக்காகவே உழைத்து வருகிறார். பல ஐரோப்பிய நாடுகளையும் சுற்றிப் பார்த்து அவைகளின் அரசியல் முறைகளை அறிந்துவந்தார். அதனால் இவரது அரசியல் அறிவு சிறப்புற்றோங்கியது. இவர் ஏழு தடவை சிறைவாசம் செய்திருக்கிறார். சிறையிலிருந்த காலத்தில் பல அரிய நூல்களை எழுதினார். இவரது சகோதரி விஜய லட்சுமி அம்மையாரும், இவரது மனைவி கமலா நேரு அம்மையாரும் அரசியல் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். கமலா நேரு அம்மையார் சிறையில் நோய் வாய்ப்பட்டு இறந்தார். ஜவாஹர் தமது மனைவி இறந்த துயரால் வருந்திய போதிலும், தேசத்தொண்டை மறக்கவில்லை. இவர் மூன்று முறை காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக இருந்து சிறந்த தொண்டு செய்தார்.

நேரு, மகாத்மா காந்தியடிகளின் முக்கிய சீடர். அவரது கருத்துக்களைச் செய்கையில் நடத்திக் காட்டிய தீரர். தேசத் தொண்டில் முன்னணியில் நின்று பாடுபடும் வீரர். சாதி மத பேதம் கருதாதவர். ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு பாராட்டாதவர். யாவருடனும் தாராளமாகப் பழகுவார். இவர் ஏழை மக்களின் அன்பர்; பாட்டாளி மக்களின் நண்பர்; எவ்வித வேற்றுமையையும் விரும்பாதவர். சிறந்த வீரனுக்கு வேண்டிய துணிவும், இராஜதந்திரிக்கு வேண்டிய அரசியல் அறிவும் வாய்ந்தவர். அன்பும் அருளும் நிறைந்த உள்ளம் படைத்தவர். தேசப் பணிக்காகச் செல்வத்தையும் சுகவாழ்வையும் துறந்த குடும்பத்தில் தியாகமணியாய் விளங்கும் ஜவாஹர்லால், நமது நாட்டின் பிரதம மந்திரியாய் இருந்து தொண்டு செய்கிறார். 'நாட்டின் நலனுக்காகவே இவர் வாழ்கிறார்' என்று திண்ணமாய்க்

கூறலாம். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால், இவர் நீண்டகாலம் வாழ்ந்து, இந்திய மக்களுக்கும் உலக மக்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்குவாராக!

மணிமுடி	பாகுபாடு	இராஜதந்திரி
திருவருள்	வழக்கறிஞர்	பொதுஅறிவு
பாட்டாளி	தியாகமணி	கசடற

அருஞ்சொற்பொருள்

மணிமுடி—கிரீடம். வழக்கறிஞர்-வக்கீல். பாகுபாடு-வித்தியாசம். இராஜதந்திரி—அரசியல் கலையில் வல்லவர். தியாகமணி—தியாகம் செய்தவர்களில் நல்லமையானவர். திருவருள்—கடவுளின் கிருபை. கசடற—குற்றமில்லாமல்.

கேள்விகள்

1. ஜவாஹர்லாலின் இளமையைபற்றிப் பத்து வரிகள் எழுது.
2. ஜவாஹரின் தேசப் பணிகளைக் கூறு.

பயிற்சி

I பொருள் கூறு:—எழில், கசடற, பாகுபாடு, பாட்டாளி.

II வாக்கியங்களிலமை:— வானளாவிய, திருமணம், முன்னேற்றம், துறந்து, பேதம்.

III எழுத்துக்களில் அ முதல் ஔ முடியப் பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள் என்பதும், க் முதல் ன் முடியப் பதினெட்டும் மெய்யெழுத்துக்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

உயிர் எழுத்துக்களில் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் குற்றெழுத்துக்கள் எனப்படும். இவை குறுகிய ஓசை உடையவை.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழும் நெட்டெழுத்துக்கள் ஆகும். இவை நீண்ட ஓசை உடையவை.

மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும்.

1. வல்லினம் : க், ச், ட், த், ப், ற்
2. மெல்லினம் : ங், ஞ், ண், ந், ம், ன்
3. இடையினம் : ய், ர், ல், வ், ழ், ள்

இவை முறையே, வலிய ஓசையும், மெலிய ஓசையும் இடைப் பட்ட ஓசையும் பெற்றிருப்பதால் இப்பெயர்கள் ஏற்பட்டன.

IV மாதிரிகளில் காட்டியபடி சேர்த்து எழுது:—

சுகம்	+	வாழ்வு	=	சுகவாழ்வு
மரம்	+	வீடு	=	
சனம்	+	திரள்	=	சனத்திரள்
வனம்	+	தேக்கு	=	
இனம்	+	இயிர்	=	



3. நூல்நிலையங்கள்

உங்கள் பள்ளிக்கூடத்தில் நூல்நிலையம் இருக்கிறதா? பெரும்பாலும் இருக்கக் கூடும். அதில் எத்தனை நூற்றுக் கணக்கான புத்தகங்கள் இருக்கின்றன! அவ்வளவு புத்தகங்களைப் பார்த்ததுமே, நமக்கு அவற்றை எல்லாம் படிக்க வேண்டுமென்ற ஆவல் தோன்றும்.

பள்ளிக்கூட நூல்நிலையங்களில் மாணவர்க்குப் பயன் படக்கூடிய புத்தகங்களே அதிகமிருக்கும். கதைகள், வரலாறுகள், விஞ்ஞான நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலிய பகுதிகளாகப் புத்தகங்கள் பிரித்து வைக்கப்பட் டிருக்கும். மாணவர் தமக்குத் தேவையான புத்தகங்களை எடுத்து அங்கேயே படிக்கலாம். நூல்நிலைய அதிகாரி யிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, புத்தகங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்றும் படிக்கலாம்.

மாணவர்களுக்குச் சிறந்த மொழிப் பயிற்சியும் அறி வும் ஏற்பட வேண்டுமானால், பாடப் புத்தகங்களை மட்டும் படித்தல் போதாது. அவர்கள் தமது திறமைக்கும் அறிவுக் கும் மொழிப்பயிற்சிக்கும் தகுந்தவாறு வேறு பல நூல்

களையும் பெற்றுப் படிக்க வேண்டும். நமக்கு வேண்டிய எல்லாப் புத்தகங்களையும் நாமே விலைகொடுத்து வாங்க முடியாதல்லவா? ஆகவே பள்ளிக்கூட நூல்நிலையங்கள் மாணவர்க்குப் பல புத்தகங்களைப் படிக்க வாய்ப்பு அளிக்கிறது.

ஊர்ப்பொது நூல்நிலையங்கள் மற்றொரு வகை. இவற்றில் சில ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கும். இவற்றில் நவீனக் கதைகள், புராணங்கள், மத சம்பந்தமான நூல்கள், நாட்டு வரலாறுகள், தொழில் முறைகள் முதலிய பல துறைகளையும் சார்ந்த நூல்கள் இருக்கும். பொதுமக்கள் இங்கே அமர்ந்து படிக்க இடவசதியும் அமைக்கப்பட்டிருக்கும். யாரும் இந்த நூல்நிலையங்களில் புத்தகங்கள் பெற்றுப் படிக்கலாம். பொதுமக்கள் தம்முடைய அறிவை வளர்த்துக்கொள்ளவும், கற்றதை மறக்காமல் இருக்கவும் இந்த நூல்நிலையங்கள் பயன்படும். இவற்றில் அங்கத்தினராயிருப்போர், நூல்களைப் பெற்றுத் தம் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படித்துவிட்டுத் திருப்பிக் கொடுக்கலாம்.

சென்னை போன்ற நகரங்களில் பல்லாயிரக் கணக்கான புத்தகங்களைக் கொண்ட பெரிய நூல்நிலையங்கள் உண்டு. இவற்றில் எல்லா அறிவுத்துறைகளிலும் எழுதப்பட்ட சிறந்த புத்தகங்கள் இருக்கும். விஞ்ஞானம், வரலாறு, மொழியாராய்ச்சி, கணிதம் முதலிய துறைகளில் ஆராய்ச்சி செய்வோருக்கு இந்த நூல்கள் பேருதவியாயிருக்கும். சென்னையிலுள்ள கன்னிமாரா நூல்நிலையமும், பல்கலைக் கழக நூல்நிலையமும் இம்மாதிரியானவை.

நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர்கள். ஐந்து வயதுக்கு மேற்பட்ட யாவரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதே நம் அரசாங்கத்தாரின் குறிக்கோள். இதற்காகவே கட்டாய ஆரம்பக்கல்வி, வயதுவந்தோர் கல்வி முதலிய இயக்கங்கள் நடந்து வருகின்றன. இந்த நன்முயற்சிகளுக்கு, நூல்நிலையங்கள் பெரிதும் துணை செய்யும்.

சில மாதங்கள் கல்வி கற்பித்து, கிராம மக்களுக்கு எழுத்தறிவு ஏற்படும்படி செய்து விடலாம். பிறகு அவர்கள் மேன்மேலும் படித்துக்கொண்டிருந்தால்தான் கற்ற கல்வி மறக்காது. இதற்குக் கிராமந்தோறும் நூல்நிலையம் இருப்பது நல்லது. ஆனால் அவ்வாறு ஏற்பட இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும்.

தற்காலத்தில் நூல்நிலையக் கழகம் ஒன்று இருக்கிறது. இது மோட்டார் வண்டிகளில் புத்தகங்களை எடுத்துச் சென்று கிராமந்தோறும் படிப்பவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. அவர்கள் அந்தப் புத்தகங்களைப் படித்து முடித்த பிறகு அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, வேறு நூல்களைப் பெற்றுப் படிக்கலாம். இத்தகைய ஏற்பாட்டை **நடை நூல்நிலையம்** என்று சொல்லலாம். இந்த நடை நூல்நிலையங்களின் தலைமையிடத்தை ஒரு பெரிய ஊரில் அமைத்துக்கொண்டு, சுற்றுப் புறத்திலுள்ள கிராமங்களுக்கு எல்லாம் மோட்டார் வண்டிகளில் நூல்களைக் கொண்டு சென்று கொடுத்து வந்தால், கிராம நூல்நிலையங்கள் இல்லாத குறை பெரிதும் நீங்கும்.

எவ்வகை நூல்நிலையத்திற்கும், அதனைத் திறமையுடன் வகித்துப் பயன்படுத்தும் முறையைப் பயின்ற ஓர் அதிகாரி வேண்டும். அவர், புத்தகங்களை வகைப்படுத்தல், வரிசைப்படுத்தி எண்கள் கொடுத்தல் முதலியவற்றில் நன்கு பயிற்சி பெற்றிருக்கவேண்டும். நூல்நிலையத்தைப் பயன்படுத்த வருவோரிடம் இன்முகத்துடன் பேசி, அவரவர் வேண்டும் புத்தகங்களை விரைவிலேயே எடுத்துத் தர அவர் வல்லவராயிருத்தல் வேண்டும். நூல்நிலையங்களைப் பயன்படுத்துவோர், புத்தகங்களை அழுக்குப் படுத்தாமலும் கிழிக்காமலும் கவனத்துடன் படித்துவிட்டுத் திருப்பித் தரவேண்டும்.

பெரும்பாலும்	**வகித்து**	**வரலாறு**
மொழிப்பயிற்சி	**பயின்ற**	**இன்முகம்**
வாய்ப்பு	**வல்லவர்**	**குறிக்கோள்**

அருஞ்சொற்பொருள்

பெரும்பாலும் – அனேகமாக. வாய்ப்பு–சந்தர்ப்பம். வகித்து–பொறுப்பு ஏற்று. பயின்ற–கற்ற. இன்முகம்–மகிழ்ச்சி தோன்றும் முகம். வல்லவர் – திறமையுள்ளவர். குறிக்கோள் - அடைய விரும்புவது.

கேள்விகள்

1. பள்ளிக்கூட நூல்நிலையம் மாணவர்க்கு எவ்வாறு பயன் படுகிறது?
2. ஊர்ப்பொது நூல்நிலயத்தில் எம்மாதிரியான நூல்கள் இருக்கும்?
3. பெரிய நூல்நிலயங்கள் யாருக்கு அதிகம் பயன்படும்?
4. நடை நூல்நிலயம் என்றால் என்ன? இதனால் கிராம மக்களுக்கு என்ன பயன்?
5. நூல்நிலய அதிகாரி எத்தகையவராக இருத்தல் வேண்டும்?

பயிற்சி

I சொற்கள் சேர்ந்து கருத்து முடிந்திருந்தால் அந்தச் சொற்றொடருக்கு வாக்கியம் என்று பெயர். பின் வருவனவற்றில் எவை வாக்கியம், எவை வாக்கியமல்ல என்று சொல்லு:–

1. ஆசிரியர் மாணவர்க்குப் பாடம்.
2. ஆசிரியர் மாணவர்க்குப் பாடம் கற்பித்தார்.
3. கோழி உயரமாக.
4. பருந்து உயரமாகப் பறக்கும்.
5. கண்டேன் என் நண்பனை.
6. புத்தகங்களை வீட்டுக்கு.
7. புத்தகங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்கலாம்.

II எதிர்மொழி கூறு:–

பிரித்து; போதாது; நவீன; நல்லது.

III சொற்கள் மாறியிருக்கும் வாக்கியங்களைச் சரிப்படுத்தி எழுது:–

1. போதாது மாணவர் படித்தால் மட்டும் பாடப் புத்தகங்களை.

2. கல்வியறிவை பொதுமக்கள் தம்முடைய வளர்த்துக் கொள்ள வேண்டும்.

3. பயன்படத்தக்கவை கிராம மக்களுக்கு நடை நூல் நிலயங்கள் பெரிதும்.

4. திருவள்ளுவர்

இம்மை மறுமையின் – பயன்கள்
எவருமேய டையச்
செம்மை நெறியினை – விளக்கும்
தெய்வ நூல் செய்தோன்.

வழுக்கள் போக்க வந்தோன் – நல்ல
வாழ்வை ஆக்க வந்தோன்.
ஒழுக்கம் காட்ட வல்லோன் – தமிழுக்
குயிரை ஊட்ட வந்தோன்.

தொன்மை நூல்களெல்லாம் – நன்கு
துருவ ஆராய்ந்து
நன்மை தீமைகள் – வகுத்த
நாவலர் கோமான்.

எதை மறந்தாலும் – உள்ளம்
என்றுமே மறவா
பொது மறை தந்த – தேவன்
பொய் சொல்லாப் புலவன்.

அறிவின் எல்லை கண்டோன் – உலகை
அளந்து கணக்கிட்டோன் ;
தறியில் ஆடை நெய்தோன் – தமிழில்
தரும நூல் நூற்ருேன்.

சாதி ஒன்றேயாம் – தமிழர்
சமயம் ஒன்றேயாம்
நீதி ஒன்றேயாம் – என்று
நிலை நிறுத்தி நின்ருேன்.

—தேசிக விநாயகம் பிள்ளை.

அருஞ்சொற்பொருள்

இம்மை–இவ்வுலக வாழ்க்கை. மறுமை–இறந்தபின் அடைய விருக்கும் வாழ்க்கை. வழுக்கள்–குற்றங்கள். தொன்மை–பழமை. நாவலர் கோமான் – புலவர்களுக்கு அரசன். பொதுமறை – திருக்குறள். சமயம்–மதம்.

கேள்விகள்

1. திருவள்ளுவரின் பெருமையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
2. திருக்குறள் எத்தகைய நூல்?

5. நாட்டுப் பற்று

"இது நம் நாடு" என்பதை உணர்ந்து, தன் தாய் நாட்டுக்காக உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் தியாகஞ் செய்ய முன்வரும் தன்மையே நாட்டுப் பற்று எனப் படும். இவ்விதத் தியாகம் செய்தவர்களும், தாய் நாட்டிற் காகவே ஓயாது உழைத்தவர்களும் பல நாடுகளிலும் இருந்திருக்கின்றனர்.

ஐரோப்பாக் கண்டத்திலே மலைகள் நிரம்பிய சுவிட்சர் லாந்து என்னும் நாட்டில் வில்லியம் தெல் என்னும் மலை வாசி ஒருவன் இருந்தான். அவன் பரந்த தோளும், இரும் பைப் போன்ற வலிமையுள்ள உடலும் படைத்தவன் ; சிறு வயதிலிருந்து தன் நாட்டுக்கு நன்மை செய்வதையே

கடமையாகக் கொண்டவன். அவன் தன் குடும்பத்துடன் மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தான். அம்பெய்வதில் அவனுக்கிணை அக்காலத்தில் எவருமில்லை.

அந்நாளில் ஆஸ்திரியா தேசத்துச் சக்கரவர்த்தி சுவிட்சர்லாந்தைத் தம் வசமாக்கி அதை ஆளுவதற்கு ஒரு தலைவனை ஏற்படுத்தியிருந்தார். ஜஸ்லர் என்னும் அத்தலைவன் கொடுங்கோல் ஆட்சியே புரிந்துவந்தான். அந்நாட்டு மக்களைப் பல வழிகளில் துன்புறுத்தி வந்தான். சுவிட்சர்லாந்தின் தலைநகரின் மந்தைவெளியில் ஒரு கம்பத்தைநாட்டி, அக் கம்பத்தில் தன் தொப்பியை மாட்டி, அதற்கு அவ்வழிச் செல்வோர் யாவரும் முழங்காற்படியிட்டு மரியாதை செய்ய வேண்டுமென்று விளம்பரப் படுத்தினன். அத் தொப்பிக்கு அவ்வாறு மரியாதை செய்யாதவரைக் கடுமையாய்த் தண்டிக்கலானன். சிலருக்கு மரண தண்டனையும் விதித்தான். தொப்பிக்கு மரியாதை செய்ய அந்நாட்டார் சிறிதும் உடன்படவில்லை. "கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்றே," என்பதற்கிணங்க, பலர் மலைக்காடுகளில் சென்று ஒளிந்துகொண்டனர். சிலர் அந்நகரிலிருந்தும் கூட, அவ்வழி வாராதிருந்தனர். வேறு சிலர் அக் கொடுங்கோலனது கொடுமைக்கு அஞ்சி மரியாதை செய்தனர்.

ஒருநாள் தெல், தன் வில் அம்பு முதலியவைகளுடன் அம்மந்தை வழிச் சென்முன். ஆனல் அவன் அத்தொப்பிக்கு மரியாதை செய்யவில்லை. அதனல் ஜஸ்லருடைய ஆட்கள் அவனைப் பிடித்து, தமது தலைவன் முன் நிறுத்தி விஷயத்தைக் கூறினர். அப்போது ஜஸ்லர் தெல்லை நோக்கி, "அடே! நமது தொப்பிக்கு மரியாதை செய்ய மறுத்தவன் நீ தானே?" என்று வினவினன். அதற்குத் தெல், "உயிரற்ற தொப்பிக்கு மரியாதை செய்வது எனது வழக்கமில்லை," எனத் தலைநிமிர்ந்து கூறினன். அது கேட்ட ஜஸ்லர் கோபங்கொண்டு, "அடே! நீ செய்தது பெருந்தவறு. தவறு செய்ததுமல்லாமல் என்னையும் எதிர்த்து வாதாடுகிருய். இதற்கு மரண தண்டனையே விதிக்கவேண்டும். ஆயினும் நீ ஒரு வீரனுதலின், நான் ஏற்படுத்தும் ஒரு பந்தயத்தில் வென்றல் உன்னை நான் விடுதலை செய்வேன்.

இல்லையேல் மரண தண்டனையையே உறுதிப்படுத்துவேன்," என்றான். "என்ன செய்யவேண்டும்?" என்று வினவினான் தெல்.

அச்சமயம், "அப்பா! அப்பா!" என்று கத்திக்கொண்டு தெல்லின் குமாரன் அங்கு வந்து தெல்லைக் கட்டிக் கொண்டான். அது கண்ட ஜஸ்லர் தெல்லை நோக்கி, "அடே! ராஜத் துரோகி! நீ சிறந்த வில்லாளி யென்று உன்னைப் போற்றுகின்றார்களே! இதோ நிற்கும் உன் மகன் தலைமீது ஒரு ஆப்பிள் பழத்தை வைப்பேன். அப்பழத்தை உன் அம்பினால் குறி தவறாமல் அடிப்பாயானால் உன்னை விடுவிப்பேன். இல்லையேல் நீ கொலை செய்யப்படுவாய்," என நவின்றான். அவ்வாறே தெல்லின் புதல்வனைச் சிறிது தூரத்தில் நிறுத்தி, அவன் தலைமீது ஒரு ஆப்பிள் பழத்தை

வைத்து, தெல்லின் கையில் அவனது வில்லையும் அம்புகளையும் கொடுத்து, தன் உத்தரவை நிறைவேற்றுமாறு கட்டளையிட்டான்.

தன்னையும் தன் மகனையும், தன் தேசத்தின் மானத்தையும் காத்துக்கொள்ள வேறு வழியில்லாதது கண்ட தெல், வில்லையும் இரண்டு அம்புகளையும் கையில் எடுத்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது. அதைத் துடைத்துக் கொண்டு, வில்லில் ஓர் அம்பைப் பூட்டிக் குறிபார்த்தான்.

ஆண்டவனைத் துதித்து, தைரியத்தைக் கைவிடாது அப்பழத்தைக் குறிவைத்து அம்பெய்தான். அந்த அம்பு நேராகப் பாய்ந்து சென்று, சிறுவனுக்கு யாதொரு தீங்கும் செய்யாது பழத்தை மாத்திரம் இரு கூறுகப் பிளந்து சென்றது. கண்டோர் யாவரும் மகிழ்ச்சி மிகுதியால் ஆரவாரித்தனர். ஜஸ்லரும் அவனது அம்பெய்யும் திறமையைக் கண்டு வியந்தான்.

எனினும் தெல் இப்பந்தயத்தில் வெற்றியடைந்ததால், தனக்கு அவமானம் ஏற்பட்டதாய்க் கருதிய ஜஸ்லர் கோபத்துடன் தெல்லை நோக்கி, "இரண்டாவது அம்பு எதற்காக எடுத்துக் கொண்டாய்?" என்று கேட்டான். அதற்குத் தெல், "முதல் அம்பு குறிதவறி என் மகனைக் கொல்லுமாயின், உடனே உன் தலையைக் கொய்யவே இரண்டாவது அம்பையும் எடுத்து வைத்தேன்," என்று கூறிச் சிரித்தான். இது கேட்ட ஜஸ்லர் மேலும் கோபித்து, தெல்லைச் சிறைப்படுத்தும்படி கட்டளையிட்டான். அவ்வாறே வீரர்கள் தெல்லைப் பிடித்துக் கட்டி, அருகிலிருந்த ஊரி என்ற ஏரியின் கரையில் காத்திருந்த ஒரு படகில் ஏற்றினர்.

தெல்லைக் கொண்டுபோக வேண்டிய சிறைச்சாலை, அந்த ஏரிக்கு அப்பால் ஒரு குன்றின்மேல் கோட்டைபோல் கட்டப்பட்டிருந்தது. அக்கோட்டைக்குள் சிறைப்பட்டவர் என்றும் திரும்பார். தெல்லைக் கொண்டு சென்ற தோணியில் ஜஸ்லரும் ஏறிக்கொண்டான். படகு சிறைச்சாலையை நோக்கிப் புறப்பட்டது. நடு ஏரிக்குச் சென்றதும், பெரும் புயலடிக்க ஆரம்பித்தது. படகோட்டிச் சென்ற வீரர்களுக்கு அப்பிரதேசம் நன்கு தெரியாததால், 'படகை எத்திசையில் செலுத்துவது?' என்று அறியாது விழித்தனர். அப்போது ஜஸ்லர், "வீரர்களே! சிறைப்பட்ட அந்தத் துரோகியின் தளையைத் தறித்து விடுங்கள். அக் கைதி நம்மை எளிதில் கரைசேர்ப்பான்," என்று கூறினான். அங்ஙனமே தெல்லின் தளை தறிக்கப்பட்டது.

இங்ஙனம் விடுதலையடைந்த தெல், "இக்கொடுங் கோலனால் நம் நாட்டுக்குப் பெருந் தீங்கு விளைந்துவிட்

டது. இவன் நம் நாட்டுக்குச் செய்த கொடுமைகள் எல்லாம் இன்றோடு தொலையட்டும். பாறைகள் நிறைந்த கரையருகில் இப் படகைக் கொண்டுபோய், நான் மாத்திரம் கரையில் தாவி ஏறிக் கொண்டு, இவர்களை ஏரியில் ஆழ்த்திவிடுகிறேன்; அப்போதுதான் நமது நாடும் நன்மை அடையும்,'' என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். உடனே, படகைக் கரையைநோக்கி வேகமாகச் செலுத்தினான். படகு கரையருகில் சென்றதும், தெல் தான் மாத்திரம் கரையில் தாவிக் குதித்து, படகு பாறையில் மோதிக் கவிழும்படி செய்தான். ஜஸ்லரும் அவனுடைய வீரர்களும் மடிந்தனர். அவர்களுடன் அவர்களது கொடுமைகளும் ஒழிந்தன. சுவிட்சர்லாந்தும் ஜஸ்லரது கொடுங்கோலாட்சியிலிருந்து விடுபட்டது. தெல்லின் நாட்டுப்பற்றைப் பாருங்கள்! இவ்வாறு தேசத்திற்கே பெரிய உபகாரம் செய்த தெல் எல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டு, நெடுநாள் சுகமாக வாழ்ந்திருந்தான். சுவிட்சர்லாந்து நாட்டினர் அவனது கதையையும், புகழையும் இன்றும் பாடல்களாகப் பாடி வருகின்றனர்.

ஆவி	அப்பால்	தீங்கு
கைதி	படியிட்டு	மறுத்தவன்
நாட்டி	வில்லாளி	வாதாடுகிறாய்
துணிவு	உடன்பட	கவிழும்படி
மானம்	மடிந்தனர்	ராஜத்துரோகி
தறித்து	நவின்றான்	மந்தைவெளி
தளையை	வியந்தான்	கொல்லுமாயின்
ஆப்பிள்	கொய்யவே	நிறைவேற்றுமாறு

அருஞ்சொற்பொருள்

ஆவி—உயிர். நாட்டி—நிலை நிறுத்தி. தளை—விலங்கு. படியிட்டு—பூமியைத் தொடச்செய்து. நவின்றான்—சொன்னான். கொய்ய—பறிக்க. வாதாடு—தர்க்கம் செய். உடன்பட—சம்மதிக்க.

கேள்விகள்

1. தெல் என்ற தேசாபிமானிக்குக் கொடுக்கப்பட்ட பரிட்சை யாது?

2. சுவிட்சர்லாந்து தெல் காலத்தில் எப்படி விடுதலை அடைந்தது?

3. தெல் என்னும் தேசாபிமானியின் கதையைச் சுருக்கமாக எடுத்துச் சொல்.

பயிற்சி

I வாக்கியங்களில்மை:- உணர், பரந்த, இணை, இடையூறு, அப்பால்.

II எதிர்மொழி கூறு:- நன்மை, தூரத்தில், சந்தோஷம், மரியாதை, கொடுங்கோல்.

III ஒரு வாக்கியத்தில் எந்தப் பொருளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறதோ அதைக் குறிக்கும் சொல் **எழுவாய்** எனப்படும். ஒரு வாக்கியத்தை முடிக்கும் சொல் **பயனிலை** எனப்படும்.

(உ-ம்) **தெல்** மகன் தலையிலிருந்த ஆப்பிளை நோக்கி அம்பு **எய்தான்.**

இந்த வாக்கியத்தில் 'தெல்' எழுவாய்; 'எய்தான்' பயனிலை.

IV பின்வரும் வாக்கியங்களில் எழுவாய் பயனிலை கூறு:-

1. ஜஸ்லர் கொடுங்கோல் ஆட்சி புரிந்தான்.

2. தொப்பிக்கு மரியாதை செய்ய அந் நாட்டார் சிறிதும் உடன்பட வில்லை.

3. ஆலமரம் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந் திருக்கும்.

6. தேனீ வளர்த்தல்

மலர்களிலுள்ள சுவை மிக்க மதுவை எடுத்துச் சென்று, 'தேன்' என்ற இனிமையுள்ள பதார்த்தமாகச் செய்யும் **தேனீ** ஒரு சிறு பூச்சியே. எனினும் தேனீக்கள் நெடுந் தூரம் பறந்து சென்று மலர்களில் மொய்த்து, தேனை உறிஞ்சிக் கொண்டுவந்து தம் கூடுகளில் சேமித்து வைக்கின்றன.

இவ்வாறு, தான் பாடுபட்டுத் தேடிச் சேர்க்கும் தேனை, தேனீ மிகவும் கவலையோடு காப்பாற்ற முயலுகிறது. தனக்கு உணவுப் பொருளாக உதவும் பொருட்டுச் சேர்க்கும் தேனை மனிதன் கொள்ளை கொள்ள வரும்போது, அது மிக்க சினத்தோடு போராடுகிறது. புகையும் நெருப்புங் கொண்டு மனிதன் அவைகளை நெருங்குங்கால், சிறிய உயிர்களாகிய தேனீக்கள் யாது செய்யும்? தத்தம் உயிரையும் பொருளையும் இழந்து அழிகின்றன. இதனாலேயே

தேனீக்கள், காடுகளிலும், மலைகளிலும், நாடுகளிலும், மனிதர் நெருங்குவதற்கு அரிதான இடங்களிலேயே தம் கூட்டையமைத்து வாழ்கின்றன. செல்லுவ்தற்கரிதான அவ்விடங்களுக்கு மனிதர் சென்று தேன் கூட்டிலுள்ள ஆயிரக்கணக்கான தேனீக்களைக் கொன்று தேன் சேகரிக்கிறார்கள். மெழுகினால் அமைந்த தேனடைகளைக் கசக்கிப் பிழிந்து தேன் எடுக்கப்படுகிறது. இப்படி எடுக்கப்படும் தேனில், அப்பூச்சிகளின் பாகங்களும், பலவித அழுக்குகளும், மெழுகும் நிரம்பியிருக்கும். மலைத்தேன், கொம்புத் தேன் என்று விற்கப்படும் தேன் இப்படி எடுக்கப் பட்டதே.

உணவுப் பொருள்களிற் சேர்க்கவும், மருந்துகளிற் கலக்கவும் உதவத்தக்க தேனை இயன்றவளவு சுத்தமாக எடுக்க முயல்வது நல்லது. பழைய வழிகளைப் பின்பற்றினால் சுத்தமான தேன் கிடைப்பது அரிதாகும். மலைக் குறவர்கள் தேன் எடுப்பதற்கு உரியவர்கள் என்று எண்ணல் தவறாகும். தேனீக்களை நாமே கூட்டில் வளர்த்து, முறைப் படி சுத்தமான தேனையெடுத்து நல்ல ஊதியம் பெறலாம்.

தேனீக்களில் மலைத்தேனீ, நாட்டுத்தேனீ, சிறுதேனீ, கருந்தேனீ என நான்கு வகைகள் உண்டு. இவற்றுள் நாட்டுத்தேனீக்களே நாம் எளிதிற் பிடித்து வளர்க்கத் தக்கவையாம். இவ்வகைத் தேனீ தனது கூட்டுக்குள் தேன் அறைகளையும் புழு அறைகளையும் வெவ்வேறாய் அமைக்கும். சாதாரணமாய் இத்தேனீக்கள் அமைக்கும் கூடு, மனிதர் நெருங்கத் தக்க உயரத்திலேயே இருக்கும். இதனால் இவ்வகைத் தேனீக்களை வளர்த்தலே நலம். தவிரவும் மரத்தினால் கூடுகள் அமைத்து வளர்ப்பதற்கு இவ்வகையே சிறந்தது. நாம் படும் பாட்டுக்குத் தக்க பலனும் கிடைக்கும்.

மேற்கூரையுள்ள சிறிய அறைபோல் மரத்திலே கூடு அமைத்து, அடைகளுக்காகப் பல சட்டங்கள் வைக்க வேண்டும். தேனடைகளும் பூச்சியறைகளும் தனித்தனி அமையத் தக்க இடங்கள் அக்கூட்டினுள் இருக்க வேண்டும். காட்டு மரங்களிலே கூடு கட்டி வாழும் தேனீக்

களை நெருங்கிச் சிறிது புகையிட்டு, தேனீக்களின் அரசியைப் பிடித்து நாம் செய்துள்ள மரக் கூட்டினுள் விட்டுக்



ஆண் ஈ இராணி ஈ வேலைக்கார ஈ

காக்கவேண்டும். அரசியுள்ள இடத்துக்கு அதற்குக் காவலாகவுள்ள தேனீயினங்கள் யாவும் வந்து சேரும். அரசியோடு வரும் ஆண் ஈக்களையும், வேலைக்கார ஈக்களையும் வலையால் எளிதிற் பிடிக்கலாம்.

ஆனால் அரசியைப் பிடித்துக் கூட்டில் அடைப்பது எளிதன்று. தேள் கொட்டுவதுபோலத் தேனீயும் கொட்டும். அது மிகவும் கடுக்குமாயினும் எடுத்த முயற்சியை விடலாகாது. புகையிடுவதால் கடிபடுவது குறைவாகலாம். அரசியோடு தேனடைகளையும் பூச்சி அறைகளையும் எடுத்து மரக் கூட்டினுள் வைத்து விட்டால், அக்கூடே தேனீக்களுக்கு உறைவிடமாய் விடும். பிறகு இக்கூட்டிலே தேன் திரட்டுவது மிக எளிதாகும். அரசியை அறிவது முதலில் எளிய செயலன்று. சிறிது பழகிய பிறகு அதன் உருவத்தாலும், அதற்கு அமைந்த காவலாலும் அறிந்து கொள்ளலாம்.

மற்றோர் எளிய வழியாலும் தேனீக்களைப் பிடித்து வரலாம். இருபுறமும் துளைத்த பனைமரத் துண்டில், வாய் இல்லாமற் பலகையால் அடைத்து, ஒரு புறத்திலே சிறுதுளைகள் விட்டு, உட்புறம் மெழுகு தடவிக் காடுகளில் வைத்தால், தேனீக்கள் தாமாகவே அதில் வந்து குடியேறும். தேனடை வைப்பதை யறிந்த பிறகு, அதை எடுத்துக் கொண்டுபோய் வைத்துக் கொள்ளலாம். சிறிய பானைகளின் உட்புறம் மெழுகுதடவி வைத்துத் தேனீக்களைப் பிடிப்பதும் உண்டு. இப்படிக் கொணர்ந்த தேனீக்களின் கூட்டத்தை, நமது கூட்டிலே வைத்து, நாம் நன்கு போற்றி வளர்க்க வேண்டும்.



தேனடைச் சட்டங்கள்

தேனீக்கள் ஓயாது உழைத்துத் தேன் திரட்டுவது அரசியின் நன்மைக்காகவேயென்று நாம் அறியலாம். ஒரு கூட்டுக்கு ஓர் அரசியே உண்டு. வேறு சில பெண் ஈக்கள் இருப்பினும் அவை யாவும் அறைகளில் அடைபட்டிருக்கும். எப்பொழுதேனும் அரசி வெளியேறித் திரும்பவும் வராது என்று கண்டோமானால், உடனே வேறொரு பெண் ஈயை அரசியின் நிலையில் வைக்க வேண்டும். ஏனெனில் அரசியில்லாத கூடு பாழாய்விடும். நாள்தோறும் பல நூற்றுக்கணக்கான முட்டைகளை யிடுவதும், நன்றாய்த் தின்று கொழுப்பதுமே அரசிக்கு அமைந்த வேலையாகும். ஆண் ஈக்கள் பெருஞ் சோம்பேறிகளாகும். தொழிலாள ஈக்களே இப்பெருங் குடும்பத்துக்காக உழைக்கின்றன.

இப்படி அமைந்த தேனீ வீடுகள் மாதம் இருமுறை தேன் தரும். அரசியின் வாழ்நாள் மூன்று வருடங்களாம். அக்காலமெல்லாம் தேன் அகப்படும். மூப்பு மிக்க அரசியைக்கொன்று தேனீக்களே புதிய அரசியை அமைக்கும் காட்சியையும் பார்க்கலாம். இங்ஙனம் மரக் கூடுகளில் அமைந்த தேன் அடைகளை யெடுத்துத் தேனெடுக்கும் பொறியில் வைத்துச் சுற்றித் தேன் எடுக்க வேண்டும். அடைகளை எடுக்குமுன் அடைகள் மூடுண்டிருப்பதைக் கவனித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தேனெடுக்கும் பொறி

மலர்களிலே தேன் தேடும் இப்பெரும் குடும்பம் மரநிழல்களிலேயே நன்கு வளரும். காலை வெயில் படும்படி கூடுகளை வைத்தால், அவை சுறுசுறுப்பாய்த் தேன் தேடப் புறப்படும். இவை திரட்டிய தேனை நாம் எடுக்கப் புகுங்கால் தொழிலாள ஈக்களை ஓட்டிவிடுவது நல்லது. இவ்வளவு பாடுபட்டுத் தேடிய தேனை நமக்குக் கொடுப்பதில் இவை மடியாவண்ணம் பார்த்துக் கொள்வது நமது கடமையாகும். ஒரு கூட்டிலேயே பலமுறை தேன் எடுக்க எளிய வழி உண்டென்றால், ஆயிரக் கணக்கிலே இச்சிறிய உயிர்களை நாம் ஏன் கொல்லவேண்டும்?

தேனை மண் பாண்டங்களிலும், கண்ணாடிப் பாத்திரங்களிலும் வைப்பது நலம். ஈரம் பட்டால் தேன் புளித்து நுரை தோன்றிக் கெட்டுப்போகும். ஆகவே தேனை நன்றாய் மூடிவைக்க வேண்டும். தாமரைப்பூ, வேப்பம்பூ முதலிய பூக்களின் தேன் மருந்துக்கு மிகவும் சிறந்ததாகும். எவ்வகைப் பூவிலும் தேன் தேடிவரும் இயல்புள்ளது தேனீ. தேன் கூடுகளால் வரும் வருமானம் அதிகமில்லையே என்று எண்ணக்கூடாது. ஒரு கூட்டுக்கு ஒரு வருடத்தில் முப்பது ரூபாய்வரை கிடைக்கும். ஆரம்பத்தில் சிறிது சிரமம் ஏற்படலாமே தவிர, பின்னால் யாதொரு கஷ்டமுமின்றி வருமானம் கிடைக்கும். பத்துக்கூடு வைத்து வளர்க்கும் விவசாயி தன் வேளாண்மைக்கு இது மிக்க உதவியாயிருக்கக் காண்பான். கிராமங்களிற் செல்வம் பெருக, தேனீ வளர்த்தல் ஒரு சிறந்த வழியாம் என்பதைத் திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள மார்த்தாண்டம் என்ற ஊரிலே செய்து காட்டுகிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் பொழுதுபோக்காகச் சில கூடுகள் ஏற்படுத்தினாலும் தக்க வருவாய் கிடைக்குமென்பது திண்ணம். தேனீ வளர்த்தல் எளிதிற் செய்யக் கூடிய சிறந்த குடிசைத் தொழிலாகும்.

கடுக்கும்	அடைகள்	உறைவிடம்
கொழுப்பது	வருவாய்	பொறி
கொட்டுவது	பயன்படுவது	கொம்புத்தேன்

அருஞ்சொற்பொருள்

கடுக்கும்—நோகும். வருவாய் - வருமானம். பொறி—எந்திரம். கொம்புத்தேன் – மரக்கிளைகளில் கட்டப்படும் கூட்டிலிருந்து எடுக்கப்படும் தேன்.

கேள்விகள்

1. தேனீக்கள் எத்தனை வகைப்படும்?
2. எந்தெந்த விதமாய்த் தேனீக்களைப் பிடித்து வளர்க்கலாம்?
3. ஒரு குடியானவன் தேனீ வளர்ப்பது அவனுக்கு உபகாரமாயிருக்கிறது என்பதற்கு உன் சொந்த வாக்கியங்களில் காரணங்கள் கூறு.

பயிற்சி

I வாக்கியங்களிலமை:- சேகரி, கொட்டு, கசக்கு, உறைவிடம், வருவாய்.

II பொருள் வேறுபாட்டை விளக்கு:-கொல்லல், கொள்ளல்; தலை, தளை, தழை; வாழ், வால், வாள்; தனி, தணி; அரிய, அறிய.

III ஒரு வாக்கியத்திலுள்ள எழுவாயும் பயனிலையும் பொருத்தமாக இருக்க வேண்டும்.

பின்வரும் வாக்கியங்களைக் கவனி:—

1. தேனீக்கள் மதுவை உறிஞ்சுகின்றன.
2. தேனீ மதுவை உறிஞ்சுகின்றது.

இவற்றில் எழுவாய்க்குப் பொருத்தமாகப் பயனிலை இருப்பதைப் பார்.

IV மாதிரிகளில் காட்டியபடி, பின் வரும் வாக்கியங்களில் எழுவாய்க்கு ஏற்ற பயனிலையை அமைத்து எழுது:-

1. நான் புசித்தேன்.		5. அவன் படிக்கிறான்.	
2. நாங்கள்	———.	6. அவள்	———.
3. நீ	———.	7. அவர்கள்	———.
4. நீங்கள்	———.		

V மாதிரிகளில் காட்டியபடி சேர்த்து எழுது :-

1.	நாம்	+	எல்லாம்	=	நாமெல்லாம்
2.	யார்	+	அவர்	=	
3.	நான்	+	ஏழை	=	
4.	என்	+	உடை	=	என்னுடை
5.	உன்	+	உயிர்	=	
6.	தம்	+	ஒடு	=	

7. ஆறு

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்.
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளிரப் பயிர் கண்டுவந்தேன்.
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன். 3

ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்.
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

பஞ்சை யரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்.
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்து வந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்.
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும் 8
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

—தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்சொற்பொருள்

சாடி—தாவி, குதித்து. கண்ணறை—மதகு. அழல்—வெப்பம். ஆழி—கடல். நில்லும் - நிற்பதற்கும்.

கேள்விகள்

1. ஆறு எந்த எந்த வழிகளில் பாய்ந்து வருகிறது?
2. ஆறு செய்யும் நன்மையான காரியங்கள் எவை?

8. இதுவும் ஒரு நன்மைக்கே

மகத தேசத்தை மகிபாலன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய முதல் மந்திரியின் பெயர் மதியூகி. அரசாங்க விஷயங்களிலெல்லாம் மகிபாலன் மதியூகியின் சொற்படியே நடந்து வந்தான். மதியூகியும் தன் பெயருக் கேற்ப, வருங்காலமறிந்து மன்னனுக்குத் தக்க யோசனைகள் கூறி வந்தான். ஆனால் மதியூகி, அரசனுக்குத் துன்பம் வந்த சமயத்திலும் இதுவும் ஒரு நன்மைக்கே யென்று கூறுவது வழக்கமாயிருந்தது.

ஒரு நாள் சில குடிகள் அரசனது சபைக்கு வந்து, "அரசே! காட்டு மிருகங்கள் நாட்டுக்குள் நுழைந்து பெருந் தொல்லை விளைக்கின்றன. அவைகளை வேட்டையாடிக் கொன்று, எங்கள் தொல்லைகளை யொழிக்க வேண்டும்," என்று கூறி முறையிட்டனர். எனவே அரசன் அம்மிருகங் களை வேட்டையாடிக் கொல்வதற்காக, மறுதினம் வேட் டைக்குப் புறப்படத் தீர்மானித்தான். வேட்டைக்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்து வைக்கும்படி மதியூகிக்குக் கட் டளையிட்டான். அச்சமயம் வேந்தனைக் காணவந்த பெரியார் ஒருவர், ஓர் அரிய மாங்கனியை மன்னனுக்குக் கொடுத்துச் சென்றார். அக்கனியை அக்கணமே உண்ண ஆவல் கொண்ட அரசன், ஒரு கூரிய கத்தியால் அதனைச் சீவ ஆரம்பித்தான். பழத்தை அரசன் சீவும்பொழுது, கத்தி அரசனது இடதுகைச் சுண்டுவிரலைத் துணித்துவிட்டது. அரசனும் அலறித் துடிதுடித்தான். அருகேயிருந்த மதி யூகி சிறிதேனும் வருத்தம் காட்டாது, "வேந்தே! இதுவும் ஒரு நன்மைக்கே," என வழக்கம்போல் பகர்ந்தான். இது கேட்ட அரசன், "அமைச்சரே! விரலிழந்து நான் தவிக் கையில், 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று துணிந்து கூறு கிறீர். விரலிழந்தது நன்மையோ, தீமையோ? வருங்கால மறிந்து கூறும் மதியூகியோ இவ்வாறு கூறுவது?" என்று சினந்து கூறினன். மதியூகியும் சிறிதும் மனந்தளராது, "அரசே! நமது வாழ்நாளில் நிகழும் நிகழ்ச்சிகள் யாவும் நமது நன்மைக்கே என்பது திண்ணம்," என மொழிந்தான்.

கொற்றவனும் கடுங்கோபங்கொண்டு, "அமைச்சரே! உமது கொள்கை அதுவானல், உம்மைச் சிறையில் அடைக்க உத்தரவிடுகிறேன்," என்று கூறி, ஏவலரை அழைத்து, மந்திரியைச் சிறையிலிடுமாறு கட்டளையிட்டான். காவலாளர் மதியூகியைச் சிறைக்கு அழைத்துச் செல்லும் போது அவன், 'இதுவும் ஒரு நன்மைக்கே,' என்று கூறிக் கொண்டே சென்முன். இதற்குள் அரண்மனை வைத்தியர் அங்கு வந்து வெட்டுப்பட்ட விரலுக்கு மருந்து வைத்துக் கட்டினர். அரசனது வேதனை சிறிது குறைந்தது.

மதியூகியின்றி மன்னன் எப்பொழுதும் வெளியிற் புறப்படுவதேயில்லை. அதுவும் வேட்டைக்கு ஒருபோதும் மந்திரியில்லாமல் சென்றதில்லை. அதனல் மன்னன், மந்திரி யில்லாமல் வேட்டைக்குப் போகலாமா, வேண்டாமா என ஆலோசித்தான். மந்திரியின்மேல் அரசனுக்கிருந்த சினம் தணியவில்லையாதலால், மந்திரியின்றியே தன் வீரர்க ளுடன் வேட்டைக்குச் சென்ருன். மந்திரியின் குதிரை ஒன்றே மன்னனது குதிரையைத் தொடர்ந்து செல்லும் வேகமுடையது. காட்டில் வேட்டையாடும்போது, அரசன் தன் வீரர்களை விட்டுத் தனியே பிரிய நேர்ந்தது. இதற்கு

முன் வேட்டையாடும் போதெல்லாம் மதியூகியும் அரசனை விட்டுப் பிரியாமல் தொடர்ந்து செல்வான். ஆனால் இப்பொழுதோ, அரசன் காட்டில் வழி தெரியாது குதிரையுடன் அலைந்து திரிந்து மிகவும் களைத்துப்போய், குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு, அம்மர நிழலில் படுத்துக் கண்ணயர்ந்தான்.

மாலையாயிற்று; சூரியனும் மலைவாயில் விழும்தருவாயிலிருந்தான். அக்காட்டில் சில கள்வர்கள் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் வருடம் ஒரு முறை, மனிதன் ஒருவனைத் தங்கள் குல தேவதையாகிய காளிக்குப் பலி கொடுப்பது வழக்கம். அன்று அவர்கள் நரபலி கொடுக்க வேண்டிய தினம். மாலை நேரம் வரை பலிக்கு மனிதன் ஒருவனும் அகப்படவில்லை. ஆதலின் அவர்கள் அக் கானகம் முழுவதும் தேடி அலைந்தனர். இறுதியாக அரசன் நித்திரை செய்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர். உடனே அரசனைக் கட்டிப்பிடித்து, காளி கோவில் பூசாரியிடம் கொண்டுபோய் நிறுத்தினர்.

பலிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் மனிதனது தேகத்தில், எக்குறையும் இருத்தல் கூடாது. ஆதலால் பலி கொடுக்கப்படும் மனிதனைப் பூசாரி நன்கு சோதனை செய்வான். அதன் பிறகே பலி கொடுப்பது வழக்கம். வேந்தனையும் அவ்வாறே பூசாரி பரிசோதித்தான். பரிசோதிக்குங்கால், அரசனுக்கு இடக்கைச் சுண்டுவிரல் இல்லையென அறிந்ததும், 'இவன் பலிக்கு உதவான்,' என்று பூசாரி கூறிவிட்டான். உடனே கள்வர்கள் அரசனை விடுவித்து, வேறு மனிதனைத் தேடச் சென்றனர். இவ்வாறு விடுதலை அடைந்த அரசன் 'பாம்பின் வாயினின்றும் தப்பிய தவளை' போல் அளவிலா ஆனந்தங்கொண்டான். "ஆகா! சுண்டு விரல் வெட்டுப்படாது இருந்திருப்பின், இப்போது என்னைப் பலி கொடுத்திருப்பார்களே! ஆகையால் மதியூகி கூறியபடி, என் சுண்டுவிரல் நறுக்குண்டதும் ஒரு நன்மைக்குத்தான்," என்று எண்ணித் தன் நாட்டை அடைந்தான்.

அரண்மனை சேர்ந்ததும் மகிபாலன், மதியூகியை விடுவித்து அழைத்து வரும்படி ஆணையிட்டான். சேவகரும்

மந்திரியை அழைத்து வந்தனர். அரசன் மந்திரியைத் தழுவி, கானகத்தில் நடந்த வரலாற்றைக் கூறி, "மந்திரி! நான் விரலைத் துணித்துக் கொண்டபோது நீர் கூறியது உண்மையாயிற்று. ஆனால் நான் உம்மைச் சிறையிலிட்ட பொழுது, 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று கூறினீரே, அதனால் என்ன நன்மை ஏற்பட்டது?" என்று வினவினான்.

அது கேட்ட மதியூகி, "வேந்தே! தாங்கள் என்னைச் சிறையில் அடைக்காவிட்டால் நானும் தங்களுடன் வேட்டையாடக் காட்டுக்கு வந்திருப்பேன். அங்கு மற்ற வீரர்கள் தங்களைப் பிரிந்தபோதிலும், எனது குதிரையின் வேகத்தினால் நான் மட்டும் உங்களைப் பிரியாமல் உங்களுடனேயே இருந்திருப்பேன். அப்பொழுது கள்வர்கள் என்னையும் பிடித்துக்கொண்டு போயிருப்பார்கள். கண்டு விரல் இல்லாததால், தங்களை விடுவித்தபோதிலும், தேகத்தில் ஒரு குறைவும் இல்லாத என்னைக் காளிக்குப் பலி கொடுத்திருப்பார்கள் அல்லவா? ஆகையால் என்னைச் சிறையில் அடைத்ததும் ஒரு நன்மைக்கே," என்று புகன்றான்.

அரசன் அது கேட்டு மிகவும் மகிழ்ந்து, மதியூகியின் மதி நுட்பத்தைப் புகழ்ந்து, அன்று முதல் மந்திரி சொல்லும் யோசனையின்படி தவறாது நடந்து வந்தான். அதனால் அவன் நாடும் நன்மை யடைந்தது.

'மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்'

சீவ	தருவாய்	கானகம்	குலதேவதை
நரபலி	நிகழ்ச்சி	அளவிலா	விளக்கின்றன
பூசாரி	வேந்தன்	புகன்றான்	ஆணையிட்டான்
ஏவலர்	துணித்து	அமைச்சர்	கண்ணயர்ந்தான்
வேதனை	தொல்லை	பகர்ந்தான்	துணிந்துவிட்டான்

அருஞ்சொற்பொருள்

தருவாய் - தக்க சமயம். அமைச்சர் - மந்திரிகள். புகன்றான் - சொன்னான். நரபலி - மனிதரை ஒரு தெய்வத்துக்கு பலியாகக் கொல்வது. தொல்லை - தொந்தரவு, கஷ்டம். கானகம் - காடு. பகர்ந்தான் - சொன்னான். கண்ணயர்ந்தான் - உறங்கினான்.

கேள்விகள்

1. மந்திரி கூறியது எவ்வாறு உண்மையாயிற்று?
2. மந்திரியைச் சிறையில் அடைத்ததால் என்ன நன்மை ஏற்பட்டது?

பயிற்சி

I வாக்கியங்களிலமை :— ஏற்ப, கூறிய, பலி, ஆணை, பகர்.

II சொற்கள் எத்தனை வகைப்படும்? பாடத்திலிருந்து உதாரணங்கள் கூறு.

III ஒரு வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளியிட வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். வாக்கிய முடிவில் வரக்கூடிய வேறு குறிகளும் இருக்கின்றன. வாக்கியத்தின் இடையில் வரக்கூடிய குறிகளும் உண்டு. இவைகளுக்கு **நிறுத்தக்குறிகள்** என்று பெயர். நிறுத்தக்குறிகளிடுவதால், வாக்கியத்தின் பொருளை நன்கு அறிந்து படிக்கலாம். இவைகளில் வாக்கிய முடிவில் வரக்கூடிய குறிகள்:

? இது **வினாக்குறி** அல்லது **கேள்விக்குறி** எனப்படும். ஒவ்வொரு வினாவின் முடிவிலும் இது இட வேண்டும்.

(உ - ம்) 1. இளங்கோ வந்தானா?
2. நீ நேற்றுப் படித்தாயா?

! இது **ஆச்சரியக்குறி** என்றும் **விளிக்குறி** என்றும் சொல்லப்படும். விளிக்கும் சொற்களுக்குப் பின்னும், வியப்பு, பயம், ஏளனம் முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் வாக்கியத்தின் இறுதியிலும் இக்குறி இடப்படும்.

(உ - ம்) 1. ஐயோ! பாம்பு, பாம்பு!
2. பிள்ளைகளே! கவனியுங்கள்.

9. படப் பயிற்சி—I

பின் வரும் படங்களை வரிசையாகப் பார்த்து, அவை குறிக்கும் கதையைச் சொல்லு :-



10. உப்பும் சர்க்கரையும்

காஞ்சி நாட்டில் நந்தகோபாலன் என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு மூன்று பெண்கள் இருந்தனர். அப்பெண்களில் மூத்த இருவரும் கர்வங் கொண்டவர்கள்; வஞ்சகம் நிறைந்தவர்கள்; வெளிப் பகட்டு நிறைந்தவர்கள். ஆனால் கடைசிப் புதல்வியான காமாட்சியோ, அடக்கமும் பொறுமையும் வாய்ந்தவள். புத்தியும் வித்தையும் அவளிடம் நிரம்பியிருந்தன. மூத்த பெண்கள் இருவரும் தங்கள் அகம்பாவத்தினல், ஆடம்பரம் சிறிதுமற்ற காமாட்சியை அவமதித்து வந்தனர். ஒரு வேலைக்காரியைப் போலவே அவளை நடத்தலாயினர்; அவளுடன் பேசுவதும் இல்லை. ஆனால் காமாட்சி இதை யெல்லாம் பொருட்படுத்தாது, அவர்களுடன் தாராளமாய்ப் பழகிவந்தாள். தனது தந்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளைத் தவருது செய்து வந்தாள். மூத்தோர் இருவருக்கும் தந்தையிடம் உள்ளன்பு சிறிதும் கிடையாது.

ஒரு நாள் நந்தகோபாலன் தனது குமாரிகள் மூவரையும் அழைத்து, "புத்திரிகளே! நீங்கள் மூவரும் என்மேல் அளவு கடந்த அன்புடன் இருக்கிறீர்கள். ஆனால் உங்கள் அன்பு எத்தன்மையது என்று தெரியவில்லை," என்று கூறினன். மூத்தவர்கள் இருவரும் தங்கள் வஞ்சகத்தை வெளியிடாமல், தந்தையைச் சந்தோஷப்படுத்த எண்ணினர். அதன்படியே மூத்தவள், "தந்தையே! சர்க்கரையை விரும்புவதுபோல் தங்களை விரும்புகிறேன்," என்று கூறினள். இரண்டாம் புத்திரி, "பிதாவே! நான் கரும்பை விரும்புவது போலத் தங்களை விரும்புகிறேன்," என்ருள். இவர்களுடைய வெளி வார்த்தைகளில் மயங்கி மகிழ்ந்த நந்தகோபாலன், காமாட்சியை நோக்கினன். ஆனால் காமாட்சியோ, "அப்பா! நான் உப்பை விரும்புவதைப்போலத் தங்களை என்றும் விரும்புவேன்," என்று பணிவுடன் கூறினள்.

காமாட்சி இவ்வாறு கூறியதன் உட்கருத்தை யறியாத நந்தகோபாலன் கோபங்கொண்டான். "காமாட்சி! உன்னை இத்தனை காலம் அருமையாய் வளர்த்தேனே. நீ சிறிதும் நன்றியில்லாமல் உப்பைப்போல் என்னை விரும்புகிறேன்

என்று கூறினாய். உப்பு எவ்வாறு கரிக்குமோ அவ்வாறே நீயும் என்னை வெறுக்கிறாய் போலும்! என்னை வெறுக்கும் நீ எனது அன்புக்குப் பாத்திரமானவள் அல்லள். உடனே என் நாட்டைவிட்டு வெளியே போய்விடு,'' என்று கூறி அவளைத் துரத்திவிட்டான். உள்ளன்பு உள்ளவர் அதை வெளியே காட்டிக் கொள்ளார் என்பதை நந்தகோபாலன் அறியவில்லை. காமாட்சி தொலைந்தாள் என்று மூத்தவர் இருவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

நாட்டைவிட்டு வெளியே துரத்தப்பட்ட காமாட்சி, ஒரு காட்டு மார்க்கமாய்ச் செல்லுகையில் வழி தவறி, திகைத்து அலைந்துகொண்டிருந்தாள். அச்சமயம் அங்கு வேட்டையாட வந்த அரசகுமாரன் ஒருவன் காமாட்சியைக் கண்டான். கண்டதும் அவள் யாரென விசாரித்தான். காமாட்சியும் நடந்ததைக் கூறினாள். நடந்த விஷயம் யாவையும் கேட்ட அரசகுமாரன், அவளைத் தன் நாட்டிற்குக் கூட்டிச் சென்றான். சில நாட்கள் சென்றபின் காமாட்சியைத் தானே மணம் செய்துகொண்டான்.

மூத்தபெண்கள் இருவரும் கூறிய வஞ்சக மொழிகளை மெய்யென நம்பிய நந்தகோபாலன் அவர்களை மிகவும் அன்புடன் கவனித்து வந்தான். இரு அரசகுமாரர்களுக்கு அவர்களை மணஞ்செய்து கொடுத்தான். பிறகு தன் நாட்டை இரண்டாய்ப் பகிர்ந்து அவர்கள் இருவருக்கும் கொடுத்தான். அவன் இவ்வாறு செய்யும்வரை மூத்தவர் இருவரும் அவன்மேல் மிகுந்த அன்புடையவர்கள் போல் நடித்து வந்தனர். ஆனால் நாடு கிடைத்ததும் அவர்கள் நந்தகோபாலனைக் கவனிக்கவேயில்லை. தங்கள் கணவர்களுடன் கூடி, தகப்பனைக் கொடுமையாய் நடத்தவும் துணிந்தனர்.

முதலில் அன்பு காட்டிய மூத்த பெண்கள் இருவரும் தன்னைத் துன்புறுத்துவதைக் கண்ட நந்தகோபாலன், தேச யாத்திரை போய்வருவதாகக் கூறி, நாட்டைவிட்டு அகன்றான். வழியில் காமாட்சியின் கணவன் அரசாண்ட நகரை யடைந்தான். காமாட்சியின் கணவன், நந்தகோபாலனைக் கண்டதும் உபசரித்துத் தன் அரண்மனைக்கு

அழைத்துச் சென்றான். தன் கடைசி மகள் அங்கு இருப்பதை நந்தகோபாலன் அறியான். காமாட்சியோ தந்தை வந்ததை யறிந்தவளாய், விருந்துக்கு ஏற்பாடு செய்தனள். நந்தகோபாலன் விருந்துண்ண உட்கார்ந்ததும் முழுதும் சர்க்கரையால் செய்யப்பட்ட தித்திப்புப் பண்டங்களே பரிமாறப்பட்டன. அவனும் அவைகளைச் சிறிதுநேரம் ஆவலுடன் தின்றான். பிறகு அவனால் தித்திப்புப் பண்டங்களைத் தின்ன முடியவில்லை. வேறு பதார்த்தங்களை விரும்பிக் கேட்டான். அப்பொழுதும் தித்திப்புப் பண்டங்களே பரிமாறப்பட்டன. அவற்றையும் அவனால் உண்ண முடியவில்லை.

முடிவில் அவன் மனம் வருந்தி, "உப்புப் பண்டங்கள் ஒன்றும் இல்லையா?" என்று வாய்விட்டுக் கதறினான். அப்பொழுது காமாட்சி அங்கு வந்து, "தந்தையே! முன்பு தாங்கள் கரும்பையும் சர்க்கரையையும்தானே விரும்பினீர்கள். உப்பை வெறுத்தீர்களே! இப்போது உப்பை ஏன் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டாள். இது கேட்டவுடன் நந்தகோபாலன் தன் மகளாகிய காமாட்சியை அறிந்து கொண்டான். உடனே அவன் உளமகிழ்ந்து, "காமாட்சி! முதலில் நான் விரும்பிய தித்திப்புப் பண்டங்கள் எவ்வாறு இப்

பொழுது எனக்கு வெறுப்பாயினவோ, அவ்வாறே நான் விரும்பிய என் மூத்த பெண்கள் இருவரும் என் நாட்டைப் பிடுங்கிக்கொண்டு என்னைக் கொடுமையாய் நடத்தினர். நானும் அவர்களை வெறுத்து வந்துவிட்டேன். இப்போது உப்பை எவ்வளவு ஆவலுடன் விரும்புகிறேனே அவ்வளவு அன்புடன் உன்னையும் விரும்புகிறேன். சர்க்கரையைக் காட்டிலும் உப்பே மனிதர்க்கு இன்றியமையாதது என்பதை யறியாது உன்னைத் துரத்தியதற்காக என்னை மன்னிப்பாயா?'' என்று கூறிக் கண்ணீர்விட்டான்.

காமாட்சியும் அவள் கணவனும் நந்தகோபாலனைத் தேற்றினர். பிறகு காமாட்சியின் கணவனுன அந்நாட்டரசன், தன் படைகளுடன் சென்று, நந்தகோபாலனது நாட்டை வென்று, அவனைத் திரும்பவும் அரசனுக்கினுன். மூத்த பெண்கள் இருவரும் அவர்களுடைய கணவர்களும் நாட்டைவிட்டு இருந்த விடம் தெரியாது ஓடிவிட்டனர். காமாட்சியும் அவள் கணவனும் இன்பமாக வாழ்ந்தனர்.

புறம்	நடித்து	கரிக்கும்	வஞ்சகம்
அடக்கம்	தேற்றினர்	அகன்றுன்	உட்கருத்து
தாராளமாய்	மார்க்கமாய்	வெளிப்பட்டு	தொலைந்தாள்

அருஞ்சொற்பொருள்

மார்க்கமாய் – வழியாய். கரிக்கும் – உப்பாயிருக்கும். உட்கருத்து – மனத்திலுள்ள எண்ணம்.

கேள்விகள்

1. இக்கதையைச் சுருக்கி இருபது வரிகளில் எழுது.

2. பின் வருபவை யாரால் எந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன ?

1. "உடனே என் நாட்டைவிட்டு வெளியே போய்விடு."

2. "ஐயோ! உப்புப் பண்டங்கள் ஒன்றுமில்லையா?''

பயிற்சி

I வாக்கியங்களிலமை:–கரி, அகல், உட்கருத்து, தொல்லை, வாய்விட்டு.

II எதிர்ப்பதம் கூறு:– ஆதி, அடக்கம், வெளியே, மெய், வெறுப்பு.

III மேலுஞ் சில நிறுத்தக் குறிகளை இப்பொழுது தெரிந்து கொள்ளுங்கள்:-

, இது **கால்புள்ளி** எனப்படும்.

(உ-ம்) நான் கடைக்குச் சென்று, வாழைக்காய், கத்தரிக்காய், மிளகாய் இவைகளை வாங்கினேன்.

; இது **அரைப்புள்ளி.**

(உ-ம்) நீ பெரும் பொய்யன்; திருடன்; பேராசைக்காரன்.

: இது **முக்காற்புள்ளி.**

" " இவை **மேற்கோள் குறிகள்.**

(உ-ம்) ஔவையார் கூறினர்: "ஆலயம் தொழுவது சால வும் நன்று."

IV பின்வரும் வாக்கியங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை அமைத்து எழுது:-

காமாட்சி தந்தையிடம் வந்து தந்தையே முன்பு தாங்கள் கரும்பையும் சர்க்கரையையும்தானே விரும்பினீர்கள் இப்போது உப்பை ஏன் விரும்புகிறீர்கள் என்று கேட்டாள்.

11. திலகர்

ஒவ்வொரு தேசத்திலும் பல தேசாபிமானிகளும் தேசத் தலைவர்களும் தோன்றுவதுண்டு. நம் இந்தியா தேசத்தின் விடுதலைக்காக அரிய தியாகங்கள் செய்த தேசத் தலைவர்களுள் **திலகர்** ஒருவர் ஆவார்.

இவரது முழுப் பெயர் **பால கங்காதர திலகர்** என்பதாம். இவர் மகாராஷ்டிரப் பிராமண வகுப்பிற் பிறந்தவர். இவர் பம்பாய் ராஜ்யத்திலுள்ள **இரத்தினகிரி** என்ற ஊரில் வசித்து வந்தார். இவரது தந்தையார் பெயர் இராமச் சந்திர திலகர். அவர் கல்வி இலாகாவில் மேற்பார்வையாளர் உத்தியோகம் வகித்து வந்தார். நம் திலகர் 1856-ம் வருடம் ஜூலை மாதம் 23-ம் தேதியில் அவரது புதல்வராய்ப் பிறந்தார். சிறு வயதிலேயே திலகர் கல்வியில் ஊக்கமும் கவனமும் செலுத்தி வந்தார். மெட்றிகுலேஷன் பரிட்சை தேறிய பின், புனாவிலுள்ள டெக்கான் காலேஜில் சேர்ந்தார். 1876-ம் வருடம் பி. ஏ. பரிட்சையில் தேறினர். பின்பு சட்டப் பரிட்சைக்குப் படித்து அதிலும் வெற்றி

பெற்ருர். இவரது பதினேழாவது வயதில் இவருடைய தந்தையார் காலமானுர்.

திலகருக்கு இளமைப் பருவத்திலேயே தம் நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் அளவற்ற அன்பு உண்டா பிற்று. அது நாளடைவில் இவர் மனத்தில் வளரலா



யிற்று. நம் தேச மொழிகளை விருத்தி செய்யவேண்டு மென்றும், அவைகளிலுள்ள பூர்விக ஏடுகளைப் பார்வை யிட வேண்டுமென்றும் இவருக்கு அளவிலா ஆவல் தோன்றியது. தாமாகவே சம்ஸ்கிருத மொழியைக் கற்று, அதிலுள்ள கணித சாத்திரங்கள், சோதிட சாத்திரங்கள் முதலியவற்றை ஆராய்ந்து, அவைகளிலுள்ள அரிய பெரிய உண்மைகளை நமக்கு வெளியிட்டார். திலகர் உத்தி யோகப் பற்று அற்றவராயிருந்தார். ஆனுல் நமது நாட் டில் கல்வியை அபிவிருத்தி செய்ய, அளவு மிக்க ஊக்கங் காட்டி உழைத்து வந்தார்.

'வருந்திஞல் வாராததொன்றில்லை' என்பதற்கும், 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கு மிணங்க, திலகர் பெருமானது உழைப்பிஞலும், இவருடைய நண்பர்களிற் சிலரது உதவியிஞலும், புனு நகரில் ஓர் ஆங்கிலக் கலா சாலை ஆரம்பிக்கப்பட்டது. சிறந்த கல்விமான்களுடன், போற்றத் தகுந்த முறையில் அக்கலாசாலையைத் திலகர் செவ்வனே நடத்திவந்தார். நகரம், நாடு, கல்வி இவை களை முன்னேறச் செய்யும் நோக்கங்கொண்ட சங்கங் களிலும், சபைகளிலும் இவர் கலந்து உழைத்து அவை களில் முதன்மை பெற்று விளங்கினுர்.

இவர் பல சமயங்களில் மக்களது கஷ்ட நஷ்டங்களைக் காணப் பொருதவராய் மனமுருகி, அவைகளை எளிதில் நீக்கத் தகுந்த முறைகளைத் தேடுவார். ஒரு சமயம் புனு நகரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் பெரிய பஞ்சம் ஏற் பட்டது. நிலங்களில் சரியான விளைவு இல்லாமல், மக்கள் உணவுப் பொருள்களுக்காகத் தவித்தனர். அப்போது நம் திலகர், சர்க்காருக்கு அனேக மகசர்கள் தயார் செய்து அனுப்பியும், தாமே நேரில் போய்ப் பார்த்து ஒரு பண்டக சாலை ஏற்படுத்தியும் அப்பஞ்சத்தின் கொடுமையினின்று ஒருவாறு மக்களைக் காப்பாற்றினுர். 'கடலில் மூழ்கு பவனுக்குக் கட்டை ஒன்று கிடைத்தது' போல, பஞ்சத் தால் தவித்த குடிமக்களுக்கு இவர் உதவினுர். திலகரைப் போன்ற ஒரு பொது ஜன ஊழியர் கிடைத்ததுபற்றி, பம்பாய் ராஜ்ய மக்கள் பெரிதும் களிப்படைந்தனர்.

நாளடைவில் திலகரின் செல்வாக்குப் பெருகியது. இவரும் தேச சேவையில் ஈடுபடலானுர். காங்கிரஸ் மகா சபையின் ஆரம்பத்தில் அதில் சேர்ந்து உழைக்கலானுர். தமது நோக்கத்தையும், கொள்கையையும் வெளியிடும் பொருட்டு, மராட்டா, கேசரி என்னும் இரு பத்திரிகைகளை நடத்த ஆரம்பித்தார். அவைகளை அச்சிடவேண்டி, ஓர் அச்சுக்கூடத்தையும் ஏற்படுத்திஞர். அப்பத்திரிகைகளின் மூலம் இந்தியாவின் பூர்விக நிலைமை, தற்கால நிலைமை, எதிர்காலத்தில் இந்தியர் நடந்து கொள்ளவேண்டிய விதம், அரசாங்கம் செய்யவேண்டிய சீர்திருத்தம் முதலிய

வைகளைப் பற்றிப் பல அரிய கட்டுரைகள் எழுதி வெளியிடலானார். அவைகளில் மராட்டா என்ற பத்திரிகை, இந்தியாவின் எல்லா இடங்களுக்கும் சென்று, இந்திய மக்களைத் தட்டி எழுப்பியது.

"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைவேன்," என்பதுதான் இவரது கொள்கை. இவர் அநேக இடங்களில் இந்தியாவின் பெருமையையும் உரிமையையும் பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பண்டிதரும், பாமரரும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் உபந்நியாசம் செய்யும் தன்மை வாய்ந்தவர் திலகர். இவ்வாறு பிரசங்கித்து வருங்கால், இவர் ராஜத் துரோகக் குற்றம் சாட்டப் பெற்று, சிறையில் அடைக்கப்பட்டார். இவர் சிறையில் இருந்த காலத்தில், பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, அதன்மூலம் இந்தியாவின் பெருமையை உலகோர் அறியச் செய்தார். இவ்விதம் சிறையிலிருந்தபோதும் தேசத் தொண்டு செய்வதில் முனைந்த திலகர், சிலகாலம் கழித்து விடுதலையடைந்தார்.

பின்னர் இவர் இங்கிலாந்து சென்று, அங்குத் தம் தாய் நாட்டின் பெருமையை எடுத்துக் கூறலானார். அரிய பெரிய சொற்பொழிவுகள் பல செய்து, மிகவும் நாகரிகம் வாய்ந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று நிரூபித்தார். இவரது பிரசங்க வன்மையையும் சொற்பொழிவு ஆற்றும் அழகையும் கண்ட அந்நாட்டு மக்கள், இவரை மற்றும் சில பிரசங்கங்கள் செய்ய வேண்டினர். இவரும் அவ்வாறே, 'சுயராஜ்யம் இந்திய மக்களின் பிறப்புரிமை' என்பதைப் பற்றி ஆங்கிலேயருக்கு நன்கு விளக்கினார். பல ஆங்கிலேயர் இவரை ஒரு மகான் எனக் கொண்டாடினர். பின்னர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, நாடெங்கும் சுற்றி, நம் நாட்டு மக்களுக்கு அரிய பிரசங்கங்கள் பல செய்யலானார். அந்நிய நாடுகளில் தாம் கண்ட சீர்திருத்தங்களையும், நற்பழக்கங்களையும் இந்தியருக்கு எடுத்துக்கூறி, அவர்களது கடமையைச் செய்யும்படி தூண்டினார்.

திலகர் இந்தியா வெங்கும் புகழ்ந்து கொண்டாடப் பெற்ற பெரிய தேசத் தலைவராய் விளங்கினார். சுதேச

சாமான்களையே வாங்கவேண்டும் என்று திவிரமாய்ப் பிரசாரம் செய்துவந்தார். அதன் பயனாக சுதேசி இயக்கம் ஆரம்பமாயிற்று. திலகர் பலாத்காரத்தில் மிகுந்த நம் பிக்கை கொண்டிருந்தார். அக்காலத்தில், 'அன்பினால் ஆகாத தொன்றில்லை,' 'அஹிம்சையே மேலான தர்மம்' என்னும் கொள்கைகளைச் செய்கையில் நடத்திக் காட்டிய காந்திப் பெரியார் இவரைச் சந்தித்தனர். இருவரும் கலந்து உரையாடினர். அதன்பின் திலகர் அஹிம்சா தர் மத்தில் நம்பிக்கை வைத்து, காந்திப் பெரியாருடன் ஒத்து உழைக்கலாயினர். ஆனால் இவர்கள் இருவரும் ஒத்து உழைத்து அரிய காரியம் எதுவும் சாதிக்கும் முன்னரே, திலகர் மரணமடைந்தார். இவர் ஞாபகார்த்தமாக, இவருடைய நண்பர்களால் 'திலகர் நிதி' திரட்டப்பட்டு, கல்வி அபிவிருத்திக்காகவே செலவழிக்கப்பட்டது.

நாட்டுக்கும் நாட்டினருக்கும் சதா நன்மை செய்ய வேண்டு மென்பதே இவர் நோக்கம். இவரது விடா முயற்சியும், தேச பக்தியும் இந்தியர் என்றும் இவரை மறவாதிருக்கும்படி செய்துவிட்டது. இவரது அறிவும் ஆற்றலும் இன்றும் கொண்டாடப்படுகிறது. திலகர் நம் நாட்டுக்கே ஒரு திலகமாய் விளங்கியவர்.

சதா	முனைந்த	தீவிரமாய்
நிகழ்த்தினர்	இயக்கம்	வன்மை
திலகமாய்	பூர்விக	மகசர்கள்
ஆற்றலும்	சாத்திரங்கள்	அந்தோ
சாதிக்கும்	கல்விமான்	பண்டகசாலை
ஆற்றும்	பாமரரும்	செவ்வனே
உபந்நியாசம்	பிரசாரம்	ஞாபகார்த்தம்
சாட்டப்பெற்று	பலாத்காரத்தில்	கொழுந்துவிட்டு

அருஞ்சொற்பொருள்

ஞாபகார்த்தம் - நினைவுக்காக. மகசர் - மனு, விண்ணப்பம். பாமரர் - சாதாரண மக்கள். செவ்வனே - நன்றாக. உபந்நியாசம் - சொற்பொழிவு.

கேள்விகள்

1. திலகருடைய இளம் பருவத்தைப் பத்து வரியில் எழுது.
2. திலகர் நம் நாட்டிற்குச் செய்த நன்மைகள் யாவை?
3. திலகரது சிறந்த சில வாக்கியங்களை எழுது.

பயிற்சி

I வாக்கியங்களிலமை :—ஸ்தாபி, சேவை, முனை, பாடுபடு, ஆற்றல்.

II எதிர்ப்பதம் கூறு :—பூர்விகம், பலாத்காரம், பாமரர், பிறப்பு, பொது.

III கல், மரம், சிறுவன், எலி, மனிதர்—இந்தச் சொற்கள் பொருள்களின் பெயர்களாகையால், **பொருட் பெயர்** எனப்படும். சென்னை, பாலைநிலம், முதலிய பெயர்கள் **இடப் பெயர்** எனப்படும். ஆண்டு, காலை, சித்திரை முதலிய பெயர்கள் **காலப் பெயர்** ஆகும். இலை, விரல், பூ, கை, கால் முதலிய பெயர்கள் **சினைப் பெயர்** எனப்படும். நன்மை, தீமை, செம்மை, வெண்மை, அன்பு, வெறுப்பு முதலிய பெயர்கள் **பண்புப் பெயர்** எனப்படும். ஓடுதல், புசித்தல், முதலியன **தொழிற் பெயர்** என்று சொல்லப்படும்.

எல்லாப் பெயர்ச் சொற்களும் இந்த ஆறுவகையுள் அடங்கும்.

IV பின் வருவன எவ்வகைப் பெயர்ச் சொற்கள்?

தேசம், இந்தியா, மக்கள், கல்வி, ஊழியர், சிறை, அழகு, கை, காய், முயற்சி.

12. உண்மையின் பெருமை

உண்மையே பேசலின் உயர்வை விளக்கியே
ஓர் கதை சொல்லுவேன் பாலர்களே!
திண்மையாய் நீங்கள் எல்லோரும் அதைக்கொண்டு
சிறந்து விளங்குவீர் சிலர்களே! 1

சோழவள நாட்டில் வேளாளர் ஜாதியில்
சுப்பிரமணியப் பிள்ளை என்றொருவர்
வாழ்வில் வறுமையில் மக்கள் ஐவரோடும்
வாழ்ந்திருந்தார் மிகத் தாழ்ந்திருந்தார். 2

ஆண்மக்கள் மூவரும் தம்மால் இயன்ற
அளவு முயன்று பணந்தேடவே
வீண்மக்க ளல்லாமல் பெண்மக்க ளிருவரும்
வீட்டில் உழைத்தனர் ஊக்கமுடன். 3

இவ்விதம் வாழ்ந்திடும் நாளில்ஓர் நாளையில்
எங்கும் நிறைந்தவ னின்செயலால்
எவ்விதமும் பாவம் செய்யாத சுந்தரம்
என்னும் முதல்மகன் வேலைசெய்த, 4

ஜவுளிகள் விற்றிடும் வணிகன் அந்த ஊர்
ஜமீன்தா ராயஓர் சீலரிடம்
'ஜவுளிகள் காட்டி வியாபாரம் செய்துவா
ஜாக்கிரதை' என்றனன் சுந்தரத்தை. 5

அவ்வாறே கொண்டுபோய் நூற்றைம்பது ரூபாய்
ஆகும் விலையென ஓர்புடவை
இவ்வாறே கூறி அவர் வாங்கிடச் செய்து
ஏகினனே சுந்தரம் கடைக்கு. 6

கடைக்கு வந்தபின் மூட்டையை அவிழ்த்துக்
காட்டிப் பணம் தரும் காலையிலே
நடத்தை சிறிதும் தவருத சுந்தரம்
நடுங்கியே இது சொல்லுகிருன். 7

" ஐயோ ! என்ன சொல்வேன் நூறு ரூபாய் விலை
ஆகும் புடவையை நூற்றைம்ப தாய்ப்
பொய்யாய் விலை கூறி விற்றுவிட்டேன் அந்தப்
புண்ணிய வானிடம் போய் வருவேன்." 8

என்றதும் வியாபாரி, " என்னடா முட்டாளே !
இப்படி வந்த பெரும் பொருளை
ஒன்றும் அறியாது கொண்டு கொடுப்பேனென்
றுளறுகிருய் அடா பைத்தியமே !" 9

இப்படியே அவன் சொல்லியும் கேளாமல்
எழுந்து சுந்தரம் ஓடினதால்
அப்படியே அந்தப் பேராசைக் காரனும்
அவனைப் பின் தொடர்ந் தோடினனே. 10

புண்ணியவான் அந்த ஜமீன்தாரைக் கண்டு
புடவை விலையில் அதிகமதைக்
கண்ணிய மாகத் திருப்பிக் கொடுத்ததைக்
கண்டவர் ஆச்சரியப் பட்டனரே. 11

"ஐயா! என் குற்றத்தை மன்னித்து நீர் இதை
அங்கீகரிப்பீர்,'' என் றவனே சொல்லப்
"பையா! உனக்கே நான் தந்திடுவேன் இந்தப்
பணத்தைக் கொண்டுபோ,'' என்றனரே. 12

"வேண்டாம்,'' என்றே பையன் வெளியில் திரும்பிட
வியாபாரி அவனைக் கைப்பிடித்தே
"வேண்டாம் எனக்கினி ஓடிவிடு,'' என்றே
வெருட்டி விட்டானவன் சுந்தரத்தை. 13

தந்தையிடம் சென்று தான்செய்த செய்கையும்
தன் யஜமானனின் செய்கையையும்
சுந்தரம் சொல்லிடக் கேட்டவர் மகிழ்ந்து
துயரமே கொள்ளா திருந்தனரே. 14

செல்வச் சீமானந்தச் சிறுவன் சுந்தரம்
செவ்விய நடத்தை கண்டுவந்து
பல்வகையால் அவன் மேன்மை யுறும்படி
பதவியைத் தந்தவர் ஆதரித்தார். 15

பிள்ளைகளே! இவன் உண்மையைப் பேசியே
பெற்ற பெருமையைக் கண்டீர்களா!
கள்ளம் இல்லாமலே உண்மைதனைப் பேசி
கனமடைகுவீர் நீங்களுமே. 16

—நா. கனகராஜ ஐயர்.

அருஞ்சொற்பொருள்

இண்மை - உறுதி. சீலர் - ஒழுக்கமுள்ளவர். அங்கீகரிப்பீர் - ற்றுக்கொள்ளுவீர். செவ்விய - நேர்மையான.

கேள்விகள்

1. சுந்தரம் ஜமீன்தாரிடம் புடவை விற்றபொழுது என்ன தவறு செய்தான்?
2. சுந்தரம் புடவை விற்பதில் தான் செய்த தவற்றை எவ்வாறு திருத்திக்கொண்டான்?
3. சுந்தரத்தினுடைய கடை முதலாளி என்ன செய்தான்? ஜமீன்தார் என்ன செய்தார்?
4. இச் செய்யுளில் உள்ள கதையைச் சுருக்கி எழுது.

13. பத்திரிகைச் செய்திகள்

(மௌன வாசிப்பு)

1. எட்டயபுரத்தில் பேய்மழை

மதுரை, அக் 9—

கோவில்பட்டி தாலூகாவில் எட்டயபுரத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் சென்ற 25 வருடங்களில் பெய்யாத கடுமையான மழை பெய்தது. 4 மணி நேரத்தில், மொத்தம் 6 அங்குலம் பெய்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இடியும் மின்னலும் தாங்க முடியாத அளவுக்கு இருந்தன. பெருமழையால், கூரை போடப்பட்ட வீடுகளும் கடைகளும் இடிந்து விழுந்தன. தோட்டிகள் குடியிருக்கும் குடிசைகள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டன. சாலை ஓரத்திலிருந்த மரங்கள் பல, வேரோடு பெயர்ந்து விழுந்ததால், பல இடங்களுக்குப் பஸ் போக்குவரத்து தடைப்பட்டது.

கோழிகள், நாய்கள், பன்றிகள் ஏராளமாகக் கொல்லப்பட்டபோதிலும், மனித உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படவில்லை. கோவில்பட்டி தாலூகா முழுவதிலும் பெய்ததாகக் கூறப்படும் இம்மழை, நெல் சாகுபடிக்குப் பெரிதும் உதவியாயிருக்குமென்று கருதப்படுகிறது.

2. கம்பன் கலைக் கோவிலுக்குக் கவர்னர் அஸ்திவாரக் கல் நாட்டினார்

தஞ்சை, அக் 10—

கவிச் சக்கரவர்த்தி கம்பன் கலைக் கோவில் அஸ்திவாரக் கல் நாட்டு விழா இன்று கம்பன் பிறந்த ஊராகிய திருவழுந்தூரில் (தேரழுந்தூர்) கோலாகலமாக நடைபெற்றது.

கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் எனச் சொல்லிக் கலைக் கோவிலுக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார்.

கம்பன் நினைவுக் கழகக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ வி. ரங்காச்சாரி, கவர்னரை வரவேற்று, அஸ்திவாரக் கல் நாட்

டும்படி கேட்டுக்கொண்டு, தமது உரையில் இந்த ஸ்தல மாகாத்மியத்தைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

உடல் உரம் பெற உணவு ஊட்டுவது தஞ்சை ஜில்லா. உடல் உரத்தோடு உளம் உரம் பெறக் கவியரசன் கம்பனைக் கொடுத்ததும் தஞ்சை ஜில்லாதான். தஞ்சை ஜில்லாவிலே, மாயூரத்தை அடுத்துள்ள குற்றாலத்தின் தெற்கே மூன்று மைல் தொலையிலே, திருமங்கையாழ்வார் பாடியுள்ள ஆமருவியப்பன் காட்சியளிக்கும் தேரழுந்தூர் என்னும் திருப்பதியிலே, தெவிட்டாத தெள்ளமுது எனக் கற்றோரும் மற்றோரும் போற்றும் இராமாயண காவியத்தை அளித்த கம்பன் பிறந்தான்.

கவிச் சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊரிலே இந்தக் கலைக் கோவில் நிர்மாணிக்கப் பெறுவது பெரிதும் பொருத்தமே. இதற்கு ஆமருவிப்பெருமாள் தேவஸ்தானத்து தர்ம கர்த்தாக்கள் பெருந்தொகை உதவ இசைந்திருக்கிறார்கள். இந்தப் புனித கைங்கர்யத்துக்குத் தமிழ் அன்பர்களும் தங்கள் காணிக்கையைச் செலுத்தக் காத்திருக்கிறார்கள்.

புனித	பாக்கியம்	கைங்கரியம்
ஸ்தலம்	மாகாத்மியம்	கோலாகலம்
சாகுபடி	காணிக்கை	அஸ்திவாரக்கல்

அருஞ்சொற்பொருள்

சாகுபடி - பயிரிடுதல். அஸ்திவாரக்கல் - கட்டடத்திற்குச் சுவர் எழுப்ப முதலில் நடப்படும் கல். கோலாகலம் - கொண்டாட்டம், ஆடம்பரம். பாக்கியம் - நல்லதிருஷ்டம். ஸ்தலம் - இடம். மாகாத்மியம் - பெருமை. புனித - தெய்வீகமான, சுத்தமான. காணிக்கை - தெய்வம் முதலியவற்றிற்குச் செலுத்தப்படும் பொருள். கைங்கரியம் - ஊழியம்.

பயிற்சி

I முதல் செய்தியை மௌனமாகப் படித்துவிட்டு, மழையினால் ஏற்பட்ட சேதங்களைப்பற்றி எழுது.

II இரண்டாம் செய்தியைப் படித்துவிட்டு, தஞ்சை, தேரழுந்தூர் ஆகியவற்றின் பெருமைகளைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

III கம்பன் கலைக் கோவிலை நிர்மாணிக்க எவ்வழிகளில் நிதி கிடைக்கும் ?

14. தபால் கடிதத்தின் பயணம்

நம்மைத் தேடி வருபவர்களில், நாம் மிகவும் ஆவலுடன் எதிர்பார்ப்பவர் தபால்காரரே. நம் வீட்டுக்கு ஒரு கடிதமோ, நாம் எதிர்பார்க்கும் ரிஜிஸ்தர் பொட்டணமோ வந்துவிட்டால் நமக்கு எத்துணை மகிழ்ச்சி ஏற்படுகிறது! நூற்றுக் கணக்கான மைல் தூரத்திற்கு அப்பால் எழுதப் பட்டுத் தபால் ஆபீசில் சேர்க்கப்பட்ட ஒருகடிதம் தவருமல் நமக்கு வந்து சேருவது வியத்தற்குரியதல்லவா? இது எவ்வாறு இயலுகிறது?

ஒரு தபாலாபீசில் போடப்படும் கடிதங்கள் அவை போக வேண்டிய திசையை ஒட்டிப் பிரிக்கப்படும். ஒரே திசையில் செல்ல வேண்டிய கடிதங்கள் எல்லாம் ஒரு பையில் போட்டுக் கட்டப்பெற்று, ரயில் வண்டியிலுள்ள தபால் வண்டியில் கொடுக்கப்படும். இந்த வண்டியிலுள்ள தபால் ஊழியர்கள் பையை அவிழ்த்து அதில் உள்ள கடிதங்களை ஊர் ஊராகப் பிரிப்பார்கள். ரயில் வண்டி ஓடிக் கொண்டிருக்கும் பொழுதே இந்த வேலை நடைபெறுகிறது. விலாசத்தில் எழுதப்பட்டுள்ள ஊரை மட்டும் பார்த்து, அந்த ஊருக்கு உரிய சிறு அறையில் கடிதத்தைப் போடுவார்கள்.

ரயில் வண்டி ஒவ்வொரு ஊரிலும் நிற்கும்பொழுது அந்த ஊருக்கு உரிய அறையிலுள்ள கடிதங்கள் எல்லாம் எடுத்து ஒரு பையில் போட்டுக் கட்டப்பட்டு அங்கே கொடுக்கப்படும். தபால் பை அந்த ஊரிலுள்ள தபாலாபீசை அடையும். அங்கே தபால் ஊழியர்கள் கடிதங்களை எடுத்துப் பிரித்து, விலாசதார்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்கள். ஒரு பெரிய ஊருக்குச் சுற்றுப் புறத்திலிருக்கும் கிராமத் தபாலாபீசுகளுக்கு அந்த ஊரிலிருந்தே கடிதங்கள் அனுப்பப்படும்.

சில சமயங்களில் கடிதங்கள் விலாசதாருக்குப் போய்ச் சேரத் தாமதமாகிறது; ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய கடிதம் வேறொருவருக்குக் கொடுக்கப்படுகிறது. இப்படித்

தவறுகள் ஏற்படுவதற்கு விலாசம் சரியாகவும் தெளிவாகவும் எழுதப்படாததே பெரும்பாலும் காரணமாகும்.

ஒரு கடிதத்துக்குரிய தபால் ஸ்டாம்புகளை ஒட்டி, அனுப்ப வேண்டும். தபால் ஸ்டாம்புகள் ஒட்டாமலோ குறைந்த மதிப்புள்ள தபால் ஸ்டாம்புகளை ஒட்டியோ கடிதம் அனுப்பக்கூடாது. விலாசத்தைத் தெளிவாக மையினால் எழுத வேண்டும்.

விலாசத்தைப் பின் வரும் முறையில் எழுத வேண்டும். முதலில் விலாசதார் பெயரும் அவருடைய வேலையும், பிறகு அவர் வசிக்கும் வீட்டு இலக்கமும் தெருவும் எழுத வேண்டும். பெரிய எழுத்துக்களில் அவர் வசிக்கும் ஊரின் பெயரை எழுத வேண்டும்; அந்த ஊரில் தபால் நிலையம் இல்லாவிடில், அந்த ஊருக்குரிய தபால் நிலையம் எங்குள்ளதோ அந்த ஊரின் பெயரைப் பெரிய எழுத்துக்களில் எழுதினால், ஊர்வாரியாகப் பிரிப்பவர்களின் வேலை எளிதாகும். தேவையாயிருந்தால், ஜில்லாவின் பெயரையும் ராஜ்யத்தின் பெயரையும் எழுதுவது நல்லது.

விலாசத்தை நெருக்கமாக எழுதாமல், வரிக்கு வரி இடம்விட்டு எழுதுதல் நல்லது. ஒரு விலாசதார் இடம் மாறி வேறிடத்திற்குச் சென்றுவிட்டால், அவருடைய புதிய விலாசத்தை எழுதுவதற்கு இது வசதியாயிருக்கும். கடிதத்தைத் தபாலில் போடுமுன், சரியான மதிப்புள்ள ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டுள்ளனவா, உறை நன்றாக ஒட்டப்பட்டிருக்கிறதா, சரியான விலாசம் எழுதப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களைக் கவனிக்க வேண்டும்.

ரிஜிஸ்தர்	**விலாசதார்**	**இலக்கம்**
பொட்டணம்	**தெளிவாக**	**தபால் நிலையம்**
இயலுகிறது	**ஸ்டாம்பு**	**மதிப்புள்ள**

அருஞ்சொற்பொருள்

ரிஜிஸ்தர் - பதிவுசெய்தல். **இயலுகிறது** - முடிகிறது. **தெளிவாக** - நன்கு விளங்கும்படி. **ஸ்டாம்பு** - 'தபால்தலை'. **இலக்கம்** - எண்ணிக்கை. **மதிப்புள்ள** - விலையுள்ள.

கேள்விகள்

1. தபாலாபீசில் போடப்படும் கடிதங்கள் எவ்வாறு பிரிக்கப் படுகின்றன ? ரயில் வண்டியில் கடிதங்கள் எப்படிப் பிரிக்கப்படுகின்றன ?
2. தபாலாபீசு இல்லாத கிராமங்களுக்கு எவ்வாறு தபால் கடிதங்கள் போய்ச் சேருகின்றன ?
3. விலாசம் எந்த முறையில் எழுதப்பட வேண்டும் ?

பயிற்சி

I மாதிரியில் காட்டப்பட்டிருப்பது போல் சொற்களைச் சேர்த்து எழுது.

வியத்தற்கு + உரியது = வியத்தற்குரியது.
புசித்தற்கு + இனிமை =
செய்தற்கு + எளிது =
மருந்து + எல்லாம் =
விருந்து + உணவு =
பட்டு + ஆடை =

II பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை எழுதி அவை என்ன வகைப் பெயர்கள் என்றும் எழுது :-

1. முருகன் நேற்று வண்டியிலிருந்து விழுந்தபொழுது அவனது கை ஒடிந்தது.

2. நீ இப்பொழுது ஊருக்குச் செல்லல் தவறாகும்.

3. நேர்மையும் அன்பும் மனிதர்க்குரிய பண்புகளாம்.

15. சரோஜினி தேவியார்

ஔவையார், ராணி மங்கம்மாள், ஆண்டாள், மீரா பாய், ஜான்ஸி ராணி, முதலியோரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இவர்களெல்லாரும் சரித்திரப் புகழ் பெற்றவர்கள். ஔவையார் ஒரு பெரும் புலவர்; ராணி மங்கம்மாள் ஒரு சிறந்த அரசி. மீராபாயும் ஆண்டாளும் தெய்வ பக்தியில் ஒப்பற்றவர்கள்; ஜான்ஸி ராணி ஒரு வீர மாது. இம்மாதரசிகளைப் போல் சரித்திரப் புகழ் பெற்றவர் சமீபத்தில் வாழ்ந்திருந்த சரோஜினி தேவியார் ஆவர்.

சரோஜினி தேவியார் 1879–ல், ஹைதராபாத் சமஸ்தானத்தில் உத்தியோகம் செய்துவந்த அகோரநாத் சட்டோபாத்தியாயர் என்பவருடைய புதல்வியாராகப் பிறந்தார். இளமையில் நன்கு கல்வி கற்றார். ஆங்கிலத்தில் இவருக்குப் பெரும் புலமை ஏற்பட்டது. அம்மொழியில் பல பாடல்களையும், நாடகங்களையும் எழுதினார். இங்கிலாந்துக்குச் சென்று மூன்று ஆண்டுக் காலம் கல்வி பயின்றபின் நம் நாடு திரும்பினார்.

இந்தியா திரும்பிய பிறகு சரோஜினி தேவியார் டாக்டர் கோவிந்தராஜுலு நாயுடு என்பவரை மணந்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டார். ஆனால் அவரது மனம் நாட்டின் விடுதலைக்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் பாடுபட விரும்பியது.

மகாத்மா காந்தியடிகள் நம் நாட்டின் சுதந்திரத்திற் காக அறப்போர் தொடங்கினர். அவரையே தம் அரசியல் குருவாகக் கொண்ட சரோஜினி தேவியாரும் அப்போரில் ஈடுபட்டார். தேசீய காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக்குச் சென்று, அச்சபையின் கட்டளைகளை மக்களுக்கு எடுத் துரைத்து தேசத் தொண்டு செய்தார். அவருடைய சொற் பொழிவுகள் மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தன.

1925-ம் ஆண்டில் கான்பூர் நகரில் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு சரோஜினி தேவியாரே தலைவரா னர். அப்பொழுது இவர் செய்த சொற்பொழிவு சுருக்கமாக வும் அழகாகவும் மக்களுக்குத் தம் கடமைகளை எடுத்து ரைப்பதாகவும் அமைந்தது. அறப்போர்களில் ஈடுபட்ட இவர் பலதடவை சிறைவாசமும் அனுபவித்தார்.

1947-ல் நம் பாரதநாடு சுதந்திர நாடாயிற்று. ஜவா ஹர்லால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட மந்திரி சபை நம் நாட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றது. அப் பொழுது நம் நாட்டின் உட்பிரிவுகளான பல ராஜ்யங் களுக்கு இந்தியர்களே கவர்னர்களாக நியமிக்கப்பட்டனர். சரோஜினி தேவியார் உத்தரப் பிரதேசம் என்ற ராஜ்யத் தின் கவர்னராக நியமனம் பெற்றார். கவர்னருக்கு உரிய கடமைகளை இவர் நன்கு நிறைவேற்றினர். அக்காலத்தில் இந்து-முஸ்லிம் கலகங்கள் சில நிகழ்ந்தன. இவை பரவா மல் தடுப்பதிலும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமை யாக வாழவேண்டிய அவசியத்தை வற்புறுத்துவதிலும் சரோஜினி தேவியார் அளவிடற்கரிய தொண்டு செய்தார்.

உத்தரப் பிரதேச கவர்னராக இருக்கும்பொழுதே 1949-ம் ஆண்டில் சரோஜினி தேவியார் காலமானர். இவ ருடைய மறைவுக்காக நம் நாட்டு மக்களும் தலைவர்களும் பெரிதும் வருந்தினர்கள்.

சரோஜினி தேவியாருடைய அறிவு ஆற்றல்கள் பல துறைகளில் சிறந்து விளங்கின. ஆங்கில மொழியில் இவர் இயற்றிய கவிதைகளும், நாடகங்களும் மிகச் சிறந்தவை என்று ஆங்கிலப் புலவர்களும் புகழ்கின்றனர். ஆனல் இத் துறையிலேயே அவர் தம் உழைப்பு முழுமையும் செலவிட

வில்லை. நம் நாட்டு விடுதலைக்காகவே அவர் தமது வாழ் நாட்களைக் கழிக்க உறுதி பூண்டபிறகு, இலக்கியத் துறையில் அவரது கவனம் குறைந்துவிட்டது.

நம் நாட்டு விடுதலைப் போருக்குத் தலைமை வகித்தவர் காந்தியடிகள். அவருக்கு உறுதுணைவராயிருந்த சில தலைவர்களில் சரோஜினி தேவியாரும் ஒருவராவார். ஆகையால் நம் நாட்டு வரலாற்றில் இவருடைய பெயரும் புகழும் நிலைத்து நிற்குமென்பதற்கு ஐயமில்லை.

வீரமாது	**அறப்போர்**	**நியமனம்**	**உறுதுணை**
பெரும்புலமை	**ஒப்பற்ற**	**அவசியம்**	**ஐயமில்லை**
இல்வாழ்க்கை	**கவர்னர்**	**அளவிடற்கரிய**	**மறைவு**

அருஞ்சொற்பொருள்

பெரும்புலமை–மிகுந்த கல்வியறிவு. இல்வாழ்க்கை–குடும்ப வாழ்க்கை. பாடுபட–உழைக்க. அறப்போர்–அஹிம்சையையும் உண்மையையும் அடிப்படையாகக் கொண்ட போர். காங்கிரஸ்–மக்கள் பிரதிநிதிகளின் கூட்டம். கவர்னர்–ராஜ்யத்தின் அரசாங்கத் தலைவர். நியமனம்–பதவியில் அமர்த்துதல். வற்புறுத்தி–கட்டாயப் படுத்தி. அவசியம்–இல்லாமல் முடியாத நிலைமை. அளவிடற்கரிய–அளக்கமுடியாத. மறைவு–மரணம்.

கேள்விகள்

1. சரோஜினி தேவியாரின் இளமைப் பருவத்தைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. சரோஜினி தேவியார் நம் நாட்டு விடுதலைக்காகச் செய்த தொண்டுகளைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுது.

3. சரோஜினி தேவியார் எத்துறைகளில் சிறந்து விளங்கினார்?

பயிற்சி

I எதிர்மொழிகளை எழுது:—

இளமை; சுதந்திரம்; நிறைவு.

II மாதிரியில் காட்டியுள்ளது போல், சொற்களைப் பிரித்து எழுது:—

அறப்போர் = அறம் + போர்
மரப்பலகை =
மறப் பண்பு =
சனக் கூட்டம் =
இனக் கூலி =
இனப் பூசல் =

III பெயர்ச் சொற்களெல்லாம் இரு திணைகளாகப் பிரிக்கப்பட்டுள் ளன. மக்களையும் தேவரையும் குறிக்கும் பெயர்கள் உயர் திணைப் பெயர்கள் என்று சொல்லப்படும். பிற பெயர்கள் எல் லாம் அஃறிணைப் பெயர்கள் எனப்படும். (திணை என்பதற்கு, குலம் அல்லது சாதி என்பது பொருள்.)

(உ-ம்) (i) சாத்தன், செங்குட்டுவன், மக்கள், தேவர்கள், இந்திரன், இவை உயர்திணைப் பெயர்கள்.

(ii) மரம், கல், எந்திரம், மாடு, நாய், யானை—இவை அஃறி ணைப் பெயர்கள்.

IV பின்வரும் பெயர்கள் ஒவ்வொன்றும் என்ன திணை?

புள், புல், தச்சர், கடவுள், வீடு, பழம், மாமன், சபை, மரணம், பிறப்பு.

16. மாதிரிக் கடிதங்கள்

I புத்தக வியாபாரிக்கு

ஆண்டார் தெரு,
திருச்சிராப்பள்ளி,
10-10-'54.

மாக்மில்லன் கம்பனி,
சென்னை.

ஐயா,

தங்கள் கம்பனியில் பிரசுரிக்கப்பட்டுள்ள (i) ஆங்கிலப் பேரகராதியில் ஒரு பிரதி, (ii) மெட்றிகுலேஷன் வகுப்புக்கு உரிய பௌதிகமும் ரசாயனமும் என்ற நூலில் ஒரு பிரதி ஆகிய இரு புத்தகங்களையும் வி. பி. பி-யில் மேற்கண்ட எனது விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள் கிறேன். வி. பி. பி-யில் அனுப்புவதற்கு அதிகச் செலவாகு மென்று தங்களுக்குத் தோன்றினால், புத்தகங்களின் விலையை முன் பணமாக அனுப்பி விடுகிறேன்; தாங்கள் புத்தகங்களை ரயில்வே பார்சலாக அனுப்பி விடலாம். தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
கமலக் கண்ணன்.

II நகர சுகாதார அதிகாரிக்கு

பொன்னப்ப சந்து,
சென்னை-5,
1-11-'54.

நகர சுகாதார அதிகாரி,
சென்னை.

ஐயா,

நான் குடியிருக்கும் தெருவின் சுகாதார நிலை மிகவும் மோசமாக இருப்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்கள் தெருவில் இரண்டு இடங்களில்தான் குப்பைகளைக் கொட்டி வைக்கும் தொட்டிகள் இருக்கின்றன. பெரும்பான்மையான வீட்டுக்காரர்கள் தங்கள் வீட்டு வாயில்களில் குப்பைகளைக் கொட்டி விடுகிறார்கள். வாரத்திற்கு இரண்டு நாட்களே இந்தக் குப்பைகள் அப்புறப்படுத்தப் பெறுகின்றன. சாக்கடைகள் நன்கு அமைக்கப்படாததால், தெருவெங்கும் கழிவு நீர் ஓடிக் கொண்டிருக்கிறது. மல ஜலங்களும் பல இடங்களில் கழிக்கப்படுகின்றன. இந்த நிலையில் இத்தெருவில் வாழ்வோரின் உடல் நலம் மிகவும் கெட்டுவிடும் என்பது திண்ணம்.

ஆகையால், தாங்கள் அன்பு கூர்ந்து எங்கள் தெருவைப் பார்வையிட்டு, அதைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
சீவகன்.

பார்சல்	கம்பனி	பிரசுரிக்க
ஆவன	கழிவுநீர்	பௌதிகம்
மோசம்	ரசாயனம்	அப்புறப்படுத்து

அருஞ்சொற்பொருள்

கம்பனி - கூட்டு வியாபாரம். பிரசுரிக்க - (புத்தகம்) வெளியிட. பௌதிகம், ரசாயனம் - விஞ்ஞானப் பிரிவுகள். பார்சல் - தபால், அல்லது ரயில் மூலம் அனுப்பப்படும் பொட்டணம். மோசம் - இழிநிலை. அப்புறப்படுத்து - நீக்கு. ஆவன - வேண்டுவன.

பயிற்சி

I உன் தேவைக்கான சில புத்தகங்களை அனுப்புமாறு அயலூரிலுள்ள ஒரு புத்தக வியாபாரிக்குக் கடிதம் எழுது.

II உன் தெருவிலுள்ள சிலர் உன்னைப் பயமுறுத்துவதாகவும், அவர்களை எச்சரிக்க வேண்டுமென்றும் போலீசு அதிகாரிக்கு எழுது.

III உயர்திணைப் பெயர்ச்சொற்கள் மூன்று பால்களாகப் பிரிக்கப்படும் :

1. ஆண்பால் பெயர்கள் ஆண்களைக் குறிக்கும் :—

செங்குட்டுவன், நெடுஞ்செழியன், கண்ணன், மாமன், தம்பி.

2. பெண்பால் பெயர்கள் பெண்களைக் குறிக்கும் :—

ஔவை, ஆண்டாள், மங்கை, தாய்.

3. பலர்பால் பெயர்கள் பலரைக் குறிக்கும் :—

மக்கள், பிள்ளைகள், பெரியோர், பெற்றோர்.

அஃறிணைப் பெயர்கள் இரண்டு பால்களாகப் பிரிக்கப்படும் :—

1. ஒன்றன்பால் பெயர்கள் அஃறிணையில் ஒரு பொருளைக் குறிக்கும் :—குதிரை, கல், மரம், அது.

2. பலவின்பால் பெயர்கள் அஃறிணையில் பல பொருள்களைக் குறிக்கும் :—குதிரைகள், கற்கள், மரங்கள், அவை.

IV பின் வரும் வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணையும் பாலும் சொல்லு :—

அந்த ஊர்க் குடியானவர்களில் ஒருவனான முருகன் தன் மனைவி மக்களுடன் தேசத் தொண்டில் ஈடுபட்டுத் தன் உடைமைகளை எல்லாம் நாட்டிற்கே செலவழித்தான்.

17. மனுச் சோழன்

சோழ நாட்டிலே திருவாரூர் என்ற நகரைத் தலை நகராகக் கொண்டு மனுவேந்தன் செங்கோல் செலுத்தி வந்தான். அம்மன்னன் 'தன்னுயிர்போல் மன்னுயிர்களை யும்' காத்து வந்தான். தன் நாட்டில் வாழும் குடிகட்கெல் லாம் கண்போல் விளங்கி வந்தான். நீதி சிறிதும் தவருத வனுய்ச் சிறந்து விளங்கினன். இத்தகைய அரசனுக்குப் பல ஆண்டுகள் புத்திரப்பேறு இல்லாதிருந்தது. அதனுல் மன்னன் மனம் வருந்தி, பற்பல தான தருமங்கள் செய்து, பல நோன்புகள் நோற்று வந்தான். அதன் பயனுக அவனது மனைவி ஓர் ஆண்மகவைப் பெற்ருள். அதனுல் அவன் அளவற்ற ஆனந்தமடைந்தான்.

இவ்வாறு தெய்வத் திருவருளால் தோன்றிய அக் குழந்தைக்குப் பெற்ருேர் வீதி விடங்கன் எனப் பெயரிட்டு, நன்கு வளர்த்து வந்தனர். தக்க பருவம் வந்ததும் அவ் வரசிளங் குமரன் நல்லாசிரியரை யடுத்துப் பல கலைகளை யும் பயில்வானுயினன். அரசர்க்குரிய எல்லாக் கலை களையும் கற்றுத் தேர்ந்து, 'தந்தைக் கேற்ற தனயன் இவனே' யென யாவரும் கொண்டாடும் வண்ணம் நடந்து வந்தான். இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒரு நாள் வீதிவிடங்கன் தந்தையின் அனுமதி பெற்று, தியாக ராசப் பெருமானை வணங்கிவரச் சென்ருன். அரண்மனையி னின்றும் மந்திரிகள், பிரதானிகள், சேனை வீரர்கள் முதலி யோர் சூழ்ந்து வரத் தேரின் மீதேறி வீதிவழியே சென் ருன். அரசகுமாரனைக் கண்ட நகரத்தாரும் மகிழ்ந்தனர்.

இங்ஙனம் அரச குமாரனது தேர் சென்று கொண் டிருக்கும்போது, 'இளங்கன்று பயமறியாது' என்றபடி ஒரு பசுங் கன்று துள்ளிக் குதித்துத் தேர்க்காலில் அகப் பட்டு உடல் நசுங்கி உயிரிழந்தது. இது கண்ட இள வரசன் திகைப்புற்றுத் தேரைவிட்டுக் கீழே இறங்கிக் கன்றை நோக்கினன். அவ்வமயம் கன்றைப் பிரிந்த தாய்ப் பசு அங்கு ஓடி வந்து, தன் கன்றின் நிலையைக் கண்டு அலறிக் கண்ணீர் உதிர்த்தது. இக் காட்சியைக்

கண்ட இளவரசன், மனம் வருந்தி, " என்னே ! இன்று யான் செய்த செயல்! இறைவனைத் தரிசிக்கப் புறப்பட்ட சமயத்தில் இவ்விடையூறு நேர்ந்ததே! அநியாயமாய் ஓர் உயிரை யழித்தேனே! என் குலச் சிறப்பு ஒழிந்ததே! இனி யான் என் செய்வேன்?" என்று புலம்பினன். பின்னர் இப் பழியை ஒழிக்க வழி தேடல் வேண்டும் என்று மனந் துணிந்து, அறமுறை யறிந்தோரைக் காணச் சென்றான்.



தன் உயிரினும் சிறந்த கன்றை யிழந்த தாய்ப் பசுவோ தன் துயர் பொறாமல் கண்ணீருடன் மனு வேந்தனது அரண்மனை வாயிலையடைந்து, அங்கிருந்த ஆராய்ச்சி மணியின் கயிற்றைத் தன் வாயினால் இழுத்து அடித்தது. தன் ஆட்சியில் ஒரு நாளும் கேட்டறியா ஆராய்ச்சி மணியோசையைச் செவியுற்ற மனுவேந்தன், ஓடோடியும் வந்து அரண்மனை வாயிலையடைந்தான். அடைந்ததும் மணியடித்த மானிடர் எவரையும் காணாது, அங்கிருந்த வாயிற்காவலரை நோக்கி, "மணியை அடித்தது யார்?" என வினவினன். காவலரும் தலை வணங்கி, "அரசே! இதோ நிற்கும் இப்பசுவே மணியை அடித்தது," என்று கூறினர். அது கேட்ட வேந்தன்,

"வாயில்லாப் பிராணியாகிய இப் பசுவிற்குத் துன்பம் விளைத்தவர் யாவரோ? இதற்கு நேரிட்ட துன்பந்தான் யாதோ?" என்று விசாரணை செய்யப் புகுந்தனன்.

அப்போது அங்கு வந்த மந்திரிகளுள் ஒருவர், வீதியில் நடந்த விபத்தைக் கூறினர். அரசனும், 'நெருப்பில் விழுந்த புழுப்போல்' துடித்தான். "அந்தோ! எனது குலப் பெருமைக்கே தீராப் பழி நேர்ந்து விட்டதே! புத்திரனால் ஏற்பட்ட இப் பழியை எப்படிப் போக்குவது? இப் பசுவின் துயரத்தை எப்படித் தீர்ப்பது?" என்று கூறி மனம் வருந்தினன். அது கேட்ட மந்திரிகள், "அரசே! சென்றதை எண்ணி மனம் வருந்துவதால் என்ன பயன்? தரும சாஸ்திரங்களிலே பசு வதை செய்ததற்கு விதித்திருக்கும் பரிகாரத்தைச் செய்வதே முறை," என்று கூறினர். அம் மொழிகளைக் கேட்ட மன்னன், "மந்திரிகளே! நீங்கள் கூறும் நியாயம் பொறுத்தமற்றது. பரிகாரம் செய்வதனால் பழி நீங்கி விடுமோ? கன்றை யிழந்து தவிக்கும் பசுவின் துயரமும் இதனால் தீருமோ? தன்னாலும் தன் பரிவாரங்களாலும் பகைவர்களாலும், திருடர்களாலும், வனமிருகங்களாலும் தன் குடிமக்களுக்கு யாதொரு வருத்தமும் நேராவண்ணம் காக்க வேண்டுவது அரசனது கடமையல்லவோ? உயிர்க்குயிர் வாங்குதலே மனுநீதியாகும். ஆதலின் பசுங்கன்று, எவ்வாறு இறந்ததோ, அவ்வாறு என் மகனைக் கொன்றாலே இப்பழி தீரும்," என்று கோபத்துடன் கூறினன்.

இது கேட்ட அமைச்சர் திடுக்கிட்டு, "அரசே! அற்பப் பிராணியாகிய இக்கன்றின் பொருட்டு அரச குமாரனைக் கொல்லத் துணிவது முறையாகாது," என்றனர். இதைக் கேட்ட மனுவேந்தன், "மந்திரிகளே! நீங்கள் குடிகட்கொரு விதம், கொற்றவர்க் கொருவிதம் என்றும், பிராணிகட் கொருமுறை, மானிடர்க் கொருமுறை என்றும் நியாயமின்றிக் கூறத் துணிந்தீர்கள். அற்பப் பிராணியாயினும் இதுவரை எப்பசுவேனும் இவ்விதம் ஆராய்ச்சி மணியை அடித்துள்ளதோ? கன்றிழந்த பசு கதறுவது போலவே நானும் என் மகனை யிழந்து தவித்தலே நியாயமாம்," என்று சினந்து கூறினன்.

மன்னனது தீர்மானத்தை யறிந்த மந்திரிமார் மேற்கொண்டு யாதொன்றும் கூறத் துணிந்திலர். பிறகு அரசன் ஒரு மந்திரியை அழைத்து, "கன்று இறந்த இடத்திலேயே என் மகனைத் தேர்க்காலில், இட்டுக் கொல்க," என்று கட்டளையிட்டு அனுப்பினான். அவ்வமைச்சனோ, அக்கொடுஞ் செயல் புரிய மனமில்லாது, தன் உடைவாளால் தன் உயிரையே மாய்த்துக்கொண்டான். இச்செய்தியைக் கேட்ட அரசன் மிகவும் வருந்தித் தானே தன் மகனைத் தண்டிக்கத் தேரேறிப் புறப்பட்டான். 'தன் குலத்தை விளக்க வீதிவிடங்கன் ஒரு தவப் புதல்வனே யிருக்கின்றான்' என்பதைச் சிறிதும் கருதாது, தரும நெறிப்படி கடமையைச் செய்வதே நீதியென மனந்துணிந்து, தன் மைந்தன் மார்பின்மேல் தேர்ச் சக்கரம் செல்லுமாறு தேரைச் செலுத்தினான்.

அரசனின் இவ்வருஞ் செயலைக் கண்ணுற்ற குடிகள் கண்ணீர் விட்டனர். அக்கணமே தியாகராசப் பெருமான் திருவருளால், உயிரிழந்த கன்றும், மந்திரியும், இளவரசனும் உயிர் பெற்றெழுந்தனர். பசுங்கன்றும், "அம்மா!" என்று கதறிக்கொண்டு தன் தாயிடம் ஓடி நின்றது. பசுவும் கன்றைத் தழுவி நின்றது. வீதிவிடங்கனும் தன் தந்தையின் பாதம் பணிந்து நின்றான். இவ்வாறு நீதி வழுவாது நெறி முறையில் நின்ற மனுவேந்தன் புகழ் இன்றும் ஓங்கி நிற்கின்றது.

வதை	பரிகாரம்	அறமுறை	செவியுற்ற
நோன்பு	ஆராய்ச்சிமணி	நோற்று	மன்னுயிர்
பிரதானி	அரசிளங்குமரன்	மகவு	தனயன்

அருஞ்சொற்பொருள்

நோன்பு-விரதம். **பிரதானி**-மந்திரி, பிரபு. **வதை**-கொலை. **நோற்று**-விரதம் அனுட்டித்து. **ஆராய்ச்சிமணி**-விசாரணை வேண்டுமென்பதைத் தெரிவிக்கும் மணி. **அறமுறை**-நீதிமுறை. **செவியுற்ற**-செவியால் கேட்ட.

கேள்விகள்

1. இக்கதையை இருபது வாக்கியங்களில் எழுது.

2. இக் கதையில் வந்துள்ள பழமொழிகள் நான்கு எழுது.

8. பொருள் கூறு:—வேந்தன், வதை, தனயன், தேர்க்கால், செவியுற்ற.

4. வாக்கியங்களிலமை:—உதிர், புகு, அறமுறை, பரிகாரம், தரிசிக்க.

பயிற்சி

I மாதிரிகளில் காட்டியுள்ளது போல் சேர்த்து எழுது.

நன்மை	+	குணம்	=	நற்குணம்.
வன்மை	+	கண்	=	வன்கண்
நன்மை	+	பெயர்	=	
புன்மை	+	கண்	=	

II மாதிரியில் காட்டியிருப்பதைப்போல் வாக்கியங்களை மாற்றி எழுது.

பசு, மணியை அடித்தது = மணி பசுவினால் அடிக்கப்பட்டது.

1. அரச குமாரன் தேரை ஓட்டினான். =

2. ஆசிரியர் மாணவனை அடித்தார். =

8. மாணவன் பாடம் படித்தான். =

III பின்வரும் வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால் கூறு:—

அரசனின் இவ்வருஞ்செயலைக் கண்ணுற்ற குடிகள் கண்ணீர் விட்டனர்.

18. படப் பயிற்சி–II

பின் வரும் படங்களில், ஒவ்வொன்றிலும் ஒரு குற்றம் இருக்கிறது. அக் குற்றத்தைக் கண்டுபிடித்துக் கூறு.



19. வீரபாண்டியன்

திருநெல்வேலி ஜில்லாவில் பாஞ்சாலங்குறிச்சி என்ற ஒரு பாளையப்பட்டைச் சுமார் நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன் கட்ட பொம்மன் என்ற வீரபாண்டியன் ஆளத் தொடங்கினான். அவனுக்கு இரு தம்பியர் இருந்தார்கள். அக்காலத்தில் ஆங்கிலேயர் நம் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள். தமிழ் நாட்டை ஆண்ட பல சிற்றரசர்கள் ஒவ்வொருவராக ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிந்து கப்பம் செலுத்த ஒப்புக்கொண்டார்கள். ஆனால் கட்ட பொம்மன் அவர்களுக்குப் பணியவில்லை. கப்பம் கொடுக்க மறுத்தான்.

ஆங்கிலேயர் கட்டபொம்மனைத் தமக்குக் கீழ்ப்படியச் செய்வதற்குப் பல வழிகளில் முயன்றனர். அம்முயற்சிகள் பயனற்றுப் போயினமையால், படைவலி கொண்டு வீர பாண்டியனை அடக்கத் திட்டமிட்டனர். மேஜர் பானர்மன் என்ற ஆங்கிலத் தளபதியின்கீழ் ஒரு படை புறப்பட்டுப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைச் சூழ்ந்தது. போர் தொடங்கிற்று. ஆங்கிலேயரின் பீரங்கிகள் கோட்டை வாயில்மீது குண்டுமாரி பொழிந்தன. கோட்டை வாயில் தகர்ந்து வழி ஏற்பட்டது. ஒரு ஆங்கிலேய தளகர்த்தனும் சில வீரர்களும் திறந்த கோட்டைக்குள் நுழைய முயற்சித்தனர். ஆனால் கோட்டையின் உட்புறம் மறைந்திருந்த சில பாஞ்சாலங்குறிச்சி வீரர் உள் நுழைந்த எதிரிகளை ஈட்டிகளால் குத்தி எமனுலகுக்கு அனுப்பிவிட்டனர். பிறகு இருதிறத்தாருக்கும் பல மணி நேரம் கைகலந்த போர் நடந்தது. இரவு வந்ததும் போர் நின்றது; ஆனால் அன்று கோட்டை ஆங்கிலேயரிடம் சிக்கவில்லை. அன்றையப் போரில் கணக்கற்ற ஆங்கிலப் படை வீரர் அழிந்தனர்.

கட்டபொம்மனும் அன்று இரவு தனது மந்திரிகளுடனும் தம்பியருடனும் ஆலோசனை செய்தான். ஆங்கிலேயருடைய பீரங்கிப் படையை எதிர்த்துப் பல நாட்கள் கோட்டையைக் காக்க இயலாதென நிச்சயித்தான். எனவே கோட்டைக்கு வெளியே சென்று, ஆங்கிலேயருக்கு விரோதமானவர்களையெல்லாம் திரட்டின பிறகு

அவர்களை எதிர்க்க எண்ணினான். இந்த நோக்கத்துடன் வீரபாண்டியனும் அவன் தம்பியர் இருவரும் சில முக்கிய வீரர்களும் அன்றிரவு கோட்டையை விட்டுத் தப்பி விட்டனர்.

மறு நாள் பானர்மனுக்கு இச்செய்தி தெரிந்தது. உடனே வீரபாண்டியனைத் தேடிப்பிடிக்கத் தன் ஒற்றர்களைப் பல திசைகளிலும் அனுப்பினான். தமிழ் நாட்டில் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிந்திருந்த சிற்றரசர்கள், பாளையக்காரர்கள் ஆகியோருக்கெல்லாம் வீரபாண்டியனைத் தேடிப்பிடிப்பதில் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று உத்தரவுகள் அனுப்பப்பட்டன.

கோட்டையை விட்டு வெளியேறிய கட்டபொம்மன் பல இடங்களில் தங்கி, ஆங்கிலேயரிடம் பிடிபடாமல், புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குச் சென்றான். தனது ராஜ்ய எல்லைக்குள் வீரபாண்டியன் வந்திருப்பதை அறிந்த புதுக்கோட்டை மன்னன், அவனை அழைத்து வருமாறு தன் ஆட்களை அனுப்பினான். வீரபாண்டியனுக்கும் புதுக்கோட்டை மன்னனுக்கும் பழைய நட்பு உண்டு. ஆகையால் அம்மன்னன் தன்னை ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்க மாட்டானென்று நம்பிய கட்டபொம்மன் புதுக்கோட்டைக்குச் சென்றான்; அங்கே அம்மன்னனால் உபசரிக்கப்பட்டுச் சில நாட்கள் தங்கினான்.

ஆனால் புதுக்கோட்டை மன்னன் மனத்தில் துரோக எண்ணத்துடனேயே வீரபாண்டியனை அங்கு வரவழைத்திருந்தான். ஆங்கிலேயரிடம் தனது செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள அதுவே தக்க தருணம் என எண்ணினான். ஆகையால் உடனேயே, வீரபாண்டியன் தன்னிடம் சிக்கியிருக்கும் செய்தியை பானர்மனுக்குச் சொல்லி அனுப்பினான். பானர்மன் தன் படையினரைப் புதுக்கோட்டைக்கு அனுப்பி வீரபாண்டியனைச் சிறைப் பிடித்தான்.

வீரபாண்டியனைச் சிறைப்பிடித்த ஆங்கிலேயர், அவன் மீது பல குற்றங்களைச் சாட்டி, விசாரணை செய்தனர். அவன் குற்றவாளி என்றும் தூக்கிலிடப்பட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. கயத்தாறு என்னும் கிராமத்தில்

இந்த விசாரணை நடந்தது. தூக்கு தண்டனையும் அவ் விடத்திலேயே நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற கடைசி மன்னன் நம் வீரபாண்டியனே ஆவான். தமிழ் நாட்டின் சுதந்தரத்துக்காகவும் பாரத நாட்டின் சுதந்தரத்துக்காகவும் போரிட்டுத் தன் உயிரையே தியாகம் செய்த இவனுடைய வீரத்தை நாம் என்றும் போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பாளையப்பட்டு	தளபதி	ஒற்றர்
ஆதிக்கம்	குண்டுமாரி	காட்டிக்கொடு
கப்பம்	பீரங்கி	செல்வாக்கு
படைவலி	கைகலந்த	தூக்கிலிட

அருஞ்சொற்பொருள்

பாளையப்பட்டு - சிறு ராஜ்யம் அல்லது ஜமீன். படைவலி - ராணுவபலம். கை கலந்த - நெருங்கிய.

கேள்விகள்

1. கட்டபொம்மன் எந்தப் பாளையப்பட்டின் தலைவன்?
2. கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் ஏன் போர் ஏற்பட்டது?
3. ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தகர்த்த பின் ஏன் உள்ளே நுழைய முடியவில்லை?
4. கட்டபொம்மன் எவ்வாறு ஆங்கிலேயரிடம் சிக்கினான்?
5. கட்டபொம்மனை நாம் ஏன் போற்றிப் புகழவேண்டும்?

பயிற்சி

I சேர்த்தெழுது :-

அந்த + பிள்ளை = அந்தப்பிள்ளை.
எந்த + கணக்கு =
இந்த + தெரு =
அ + மாணவன் =
இ + வீரன் =

II ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல் ஒருமை எண் என்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் பெயர்ச்சொல் பன்மை எண் என்றும் சொல்லப்படுவது உங்களுக்குத் தெரியும். ஒருமை பன்மை எண்கள் இருதிணைகளுக்கும் உண்டு.

மரம், வீடு, ஊர்—அஃறிணை ஒருமை.
மரங்கள், வீடுகள், ஊர்கள்—அஃறிணைப் பன்மை.
மனிதன், பெண், சிறுவன், தேவன்—உயர்திணை ஒருமை.
மனிதர், பெண்கள், சிறுவர், தேவர்—உயர்திணைப் பன்மை.

உயர்திணை ஒருமையில் உள்ள சில பெயர்களை மரியாதைக்காகப் பன்மையாகக் கூறுவதுண்டு. இவ்வாறு கூறுவது மரியாதைப் பன்மை எனப்படும்.

மாமன் — மாமனார் தந்தை — தந்தையர் ஔவை — ஔவையார்	மரியாதைப் பன்மை.

III பின் வரும் சொற்களுக்குத் திணையும் எண்ணும் கூறு :-

சிறுமியர், யானைகள், மக்கள், சிறுமி, சிறுவன், அன்னையார், தேவர், வீடுகள்.

20. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒரு வனத்தில் இலகுபதனன் என்ற காகமும், இரணியகன் என்ற எலியும் ஒன்ருெடொன்று மிக்க நேசமாய் நெடுநாள் வாழ்ந்துவந்தன. எலி தன் வளையிலும், காகம் அதன் அருகிலுள்ள ஒரு மரத்திலும் வசித்தன. அவை யிரண்டும் தினந்தோறும் இரை தேடப்போகும் நேரந்தவிர, மற்ற நேரங்களில் ஒன்ருெடொன்று வார்த்தையாடிக் கொண்டிருக்கும். ஒரு நாள் இலகுபதனன் இரணியகனை நோக்கி, "நண்பா! இவ்வனத்தில் எனக்குத் தகுதியான இரை கிடைக்கவில்லை. ஆதலின் இவ்வனத்தை விட்டு வேருெரு வனத்துக்குப் போக எண்ணுகிறேன். நீ என்ன சொல்லுகிருய்?" என்றது. இரணியகன், "நேசனே! சுதேசம்விட்டுப் பரதேசம் போவது ஒருவருக்கும் தகுதியன்று. நல்லது, நீ எங்குச் செல்ல எண்ணியிருக்கிருய்?" என்று வினவியது.

அதற்குக் காகம், "இரணியகா! நீ கூறுவதும் மெய்தான். ஆயினும் சுதேசத்தில் ஆகாரம் கிடையாவிடில், பரதேசம் போய்ப் பிழைக்க வேண்டியதுதானே. தைரியசாலிகளுக்கு ஏது பரதேசம்? அவர்கள் எங்கே சென்ருலும், அதைத் தங்கள் தேசம்போலவே எண்ணிச் சுகித்திருப்பர். கற்பூர கௌரம் என்கிற தடாகத்துக்குப் போக அவாக்கொண்டிருக்கின்றேன்," என்றது. அது கேட்ட எலியரசு,

"சிநேகிதா! அத்தடாகம் எங்கேயிருக்கின்றது? அதைப் பற்றியும் அதன் அருகிலுள்ளவைகளைப்பற்றியும் எனக்கு விவரமாகக் கூறு," என்று கேட்டது. காகமும், "அப் பொய்கை தண்டகாரணியத்தில் நருமதையாற்றின் அருகில் இருக்கின்றது. அதில் வசிக்கும் மந்தரன் என்னும் ஆமைக்கும் எனக்கும் நெடுநாளைய நட்புண்டு. அங்கு எனக்கு மீன்களையும் சுவையுள்ள பண்டங்களையும் மந்தரன் அளிப்பான். அதைக் குறித்துத்தான் நான் அங்கே போக விரும்புகிறேன்," என்றது.

இதைக் கேட்ட இரணியகன், "நண்பா! நீ அங்கே போக, நான் இங்கே இருப்பானேன்? நானும் உன்னுடன் அங்கு வந்து விடுகிறேன். உனது நண்பன் எனக்கும் நண்பனே. ஆதலால் என்னையும் அவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டுபோ," என்றது. காகமும் அதற்கு உடன்பட, இரண்டும் புறப்பட்டுப் பேசிக் கொண்டே கற்பூர கௌரம் போய்ச் சேர்ந்தன. அவைகள் வருவதைக் கண்ட மந்தரன் என்னும் ஆமை, அவைகளை எதிர்கொண்டழைத்து, அவ்விரண்டுக்கும் விருந்தளித்தது. அப்போது இலகுபதனன் மந்தரனை நோக்கி, "நேசனே! இரணியகன் என்னும் இந்த எலியரசு எனது மனமொத்த நண்பன். இவன் முன்பு சித்திரக்கிரீவன் என்னும் புறுவரசை அதன் கூட்டத்தோடு வலையினின்றும் விடுவித்தான். அப்போது இவனுடைய நட்பின் பெருமையைக் கண்டு நானும் இவனுடன் சிநேகம் ஆனேன்," என்றது. அது கேட்ட ஆமை களிப்படைந்து, "இரணியகா! நீ மனித சஞ்சாரமற்ற இக்கானகத்துக்கு வந்த காரணம் யாது?" என வினவியது.

அதற்கு எலி பதில் சொல்லத் தொடங்கியது: "மித்திரா! சம்பகாவதி என்னும் பட்டினத்தில் சந்நியாசிகள் மடம் ஒன்று இருக்கின்றது. அங்கு சூடாகர்ணன் என்னும் ஒரு சந்நியாசி, தினந்தோறும் தான் உண்டு மிகுந்த சோற்றை ஒரு கப்பரையில் போட்டு உறியின்மேல் வைத்து விட்டு நித்திரை செய்வான். அவன் உறங்கிய பின் நான் உறியில் எழும்பிக் குதித்து, அச்சோற்றைத் தின்று சுகமாக வாழ்ந்து வந்தேன். ஒரு நாள் வீணாகர்ணன் என்னும்

மற்றொரு சந்நியாசி அங்கு வந்து அவனோடு பேசிக்கொண் டிருந்தான். அப்போது என்னைப் பயமுறுத்த, சூடாகர்ணன் ஒரு தடியினால் தரையில் தட்டிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த வீணாகர்ணன், 'என் பேச்சைக் கேளாமல் நீ என்ன செய்கிறாய்?' என்று கேட்டான். சூடாகர்ணன், 'நண்பா! உன் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் இருக் கிறேன். ஆனால் இந்த எலி என் பாத்திரத்திலுள்ள அன்னத்தை ஒவ்வொரு நாளும் தின்று விடுகிறது. அதனால் அதை ஓட்டுகின்றேன்,'' என்றான்.

"வீணாகர்ணன் உறியைப் பார்த்து, 'அற்ப பலமுள்ள இவ்வெலி எப்படி இவ்வளவு உயரம் குதிக்கிறது? இதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும். இது மிகுதி யான தானியத்தைச் சேகரித்து வைத்திருக்கும். அதனால் தான் அதற்கு இவ்வளவு பலமும் திமிரும் இருக்கிறது,' என்று கூறி என் வளையைத் தோண்டி, அதில் நான் சேமித்து வைத்திருந்த தானியம் யாவையும் எடுத்துச் சென்றான். அன்று தொடங்கி நான் இளைத்துப் போனேன். அப்பால் அந்த உறியில் ஏறிக் குதிக்க எனக்கு வலு இல்லாது போயிற்று. அங்கே வேறு ஆகாரமும் அகப்படா மையால் மிகவும் வருந்தி, இலகுபதனனுடன் இங்கு வந்தேன். வந்த இடத்தில் என்னிடம் மெய்யன்பு காட்டிய உனது சிநேகம் எனக்குக் கிட்டியது. இதுவும் என் அதிர்ஷ்டமே,'' என்று தன் கதையை முடித்தது. அன்று முதல் ஆமையும், காகமும், எலியும் தமக்கு விருப்பமான இடத்துக்குப் போய் இரை தேடிச் சுகமாய் வாழ்ந்தன.

ஒரு நாள் சித்திராங்கன் என்னும் ஒரு கலைமான், ஏதோ ஒன்றைக் கண்டு பயந்து அலறிக்கொண்டு அவ் விடத்துக்கு ஓடிவந்தது. அது ஓடிவந்த சப்தத்தைக் கேட்டுப் பயந்த ஆமை, தண்ணீரில் ஒளிந்துகொண்டது. எலி தன் வளையில் நுழைந்துகொண்டது. காகம் ஓர் உயர மான மரத்தின் உச்சியிற் பறந்துபோய் உட்கார்ந்து பார்த் துக்கொண்டிருந்தது. வெகு நேரம் வரை யாதொன்றும் காணப்படாமையால், அம்மூன்றும் மறுபடியும் அம்மரத் தடியிற் கூடிப் பேசிக்கொண்டிருந்தன. அப்போது சித்தி

ராங்கன் அங்கு வந்து, "என்னை ஒரு வேடுவன் துரத்தி வந்தான். நான் உங்களோடு நேசமாயிருக்கலாமென்று இங்கு வந்தேன்," என்றது. அது கேட்ட மந்தரன், "அப்பனே! இது உன் வீடு; நான் உன் சேவகன். இங்கே புல்லும் நீரும் குறைவற்றுக் கிடைக்கும். இவ்விடத்தில் நீ சுகமாய் வாழலாம்," என்று முகமலர்ச்சியோடு பகர்ந்தது. அதன்மேல் அந்த மானும் அவைகளோடு சிநேகமாகி, புல் மேய்ந்து, நீர் அருந்தி, ஓர் ஆலமரத்து நிழலில் வந்து படுத்தது.

அப்போது ஆமை, "நண்பா! இந்த ஆரணியத்தில் வேடர்கள் வருகின்றார்களா? நீ ஏன் பயந்தாய்?" என்று வினவியது. அதற்கு மான், "நண்பர்களே! கலிங்க தேசத்தரசன் இங்கே வரப் போகிறான் எனக் கேள்வியுற்றேன். அவன் நாளையதினம் இந்தக் கற்பூரகௌரத்தின் கரையில் வந்து தங்கப்போகிறான் என்று வேடுவர்கள் பேசிக்கொண்டனர். ஆதலால் இங்கே இருப்பது அபாயம். உடனே நாம் வேறு எங்கேயாவது போய்விடவேண்டும்," என்றது. ஆமையும், காகமும், எலியும் அவ்வாறே வேற்றிடம் செல்வதென நிச்சயித்தன. அதன்படியே அவை நான்கும் புறப்பட்டன. மந்த நடையுள்ள ஆமை மிகுந்த கஷ்டத்தோடு மற்றவைகளுடன் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில், வழியில் அதை ஒரு வேடன் கண்டான். கண்டதும் அவன் அதைப் பிடித்துத் தன் வலையிற் கட்டிக்கொண்டு வீட்டுக்குப் போக ஆரம்பித்தான்.

நண்பனது அவதியைக் கண்ட மானும், காகமும், எலியும் வருத்தத்துடன் வேடுவனைப் பின்தொடர்ந்து போயின. எலியரசு, "நண்பர்களே! இவ்வேடன் காட்டைக் கடக்குமுன் ஆமையை விடுவிக்க நம்மாலான முயற்சி செய்ய வேண்டும்," என்றது. உடனே மற்றவை யிரண்டும், "நீயே ஓர் உபாயம் சொல்லு; நாம் அனைவரும் சேர்ந்து முயற்சிக்கலாம்," என்றன. உடனே எலி, "மான் குளக் கரையில் போய், இறந்ததுபோலக் கிடக்கவேண்டும். காகம் அதன் தேகத்தின் மேல் உட்கார்ந்து அதைப் பொய்யாகக் கொத்திக் கொண்டு இருக்க வேண்டும்.

அப்போது வேடன் எப்படியும் ஆமையைக் கீழே வைத்து விட்டு மானண்டை போவான். இதற்குள் நான் ஆமையின் கட்டைக் கடித்து அறுத்து விடுவேன்,'' என்று தந்திரம் கூறியது.

காகமும் மானும் அவ்வாறே செய்தன. குளத்தில் தண்ணீர் அருந்தி இளைப்பாறியிருந்த வேடுவன், இறந்ததுபோற் கிடந்த மானைக் கண்டான். கண்டதும் ஆமையைக் குளக்கரையில் வைத்துவிட்டு, ஒரு கழியை எடுத்துக்

கொண்டு மானண்டை ஓடினான். அதற்குள் எலியரசு மந்தரனது கட்டுக்களைத் தறித்துவிட்டது. மந்தரனும் குளத்தில் பாய்ந்து தப்பிப் பிழைத்தது. வேடுவன் அருகில் நெருங்குவதையும், ஆமை தப்பிப் பிழைத்ததையும் காகம் பறந்தோடியதிலிருந்து அறிந்த மான், திடீரென்று துள்ளிக் குதித்து ஓடிப்போயிற்று. மான் தப்பியதால் ஏமாந்த வேடுவன், 'ஆமையையாயினும் கொண்டு செல்வோம்' என எண்ணிக் குளக்கரைக்குத் திரும்பினான். அங்கு ஆமையைக் காணாமல், 'மரத்திற் கண்ட பழத்தை நம்பிக் கைப் பழத்தை எறிந்தவன்' போல ஏமாந்து, வருத்தத்துடன் வீடு சேர்ந்தான்.

இவ்வாறு ஒன்றுபட்டு வாழ்ந்ததால் உயிர் தப்பிய அந்நான்கு பிராணிகளும் வேறொரு காட்டுக்குச் சென்று நிம்மதியாய் வாழ்ந்துவந்தன.

வலு	**மந்த**	**அருந்தி**	**பரதேசம்**
திமிர்	**நிம்மதி**	**சேமித்து**	**மனமொத்த**
அவதி	**கப்பரை**	**மித்திரன்**	**வார்த்தையாடு**

அருஞ்சொற்பொருள்

இமிர் - உடற்கொழுப்பு. நிம்மதி - அமைதி. கப்பரை-ஒருவகைப் பாத்திரம். அருந்தி - புசித்து. வார்த்தையாடு - பேசு.

கேள்விகள்

1. சந்தர்ப்பம் கூறு:—"நீயே ஒரு உபாயம் சொல்லு."

2. இப்பாடத்தில் வரும் ஏதாவது இரண்டு பழமொழிகளை எடுத்து ஒவ்வொன்றையும் பத்து வரிகளுக்குக் குறையாமல் விளக்கி எழுது.

8. வேறு பெயர்கள் கூறு:—பொய்கை, நட்பு, சுவை, அவதி, அருந்தி.

4. வாக்கியங்களிலமை:—ஒன்றுபடு, உறி, வலு, மந்த, சேமித்து.

பயிற்சி

I எதிர்ச் சொற்கள் கூறு:—

பரதேசம்; மித்திரன்; மெய்யன்பு; காணமல்.

II சேர்த்தெழுது:—

ஒன்றோடு + ஒன்று = ஒன்றோடொன்று
தன்னோடு + அவனும் =
பின்னோடு + ஏறினன் =

III பெயர்ச் சொற்களெல்லாம் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களில் அடங்கும்.

தன்மைப் பெயர்—நான், யான், நாம், யாம்.

முன்னிலைப் பெயர்—நீ, நீர், நீங்கள்.

படர்க்கைப் பெயர்—அவன், அவள், அவர், அது, அவை, செழியன், குட்டுவன், மரங்கள்.

தன்மை முன்னிலைப் பெயர்கள் அல்லாதன எல்லாம் படர்க்கைப் பெயர்களாம்.

மூவிடப் பொதுப் பெயர்:—தான், தாம், எல்லாம். (இந்த மூன்றும் மூவிடப் பெயர்களோடும் சேர்ந்து வரும்.)

21. சிறுமியர் களிப்பு

பாகமாகச் செய்த பண்டமுண்போம்—நன்ருய்ப்
பக்குவம் வந்த பழங்களுண்போம்
தாகமானுல் பல பானகமும்—தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம். 1

காலத்துக் கேற்ற உடையணிவோம்—வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்.
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து—மலர்
கூந்தலிற் சூட்டி யழகுசெய்வோம். 2

பந்துக ளாடிப் பழகிடுவோம்—கழல்
பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்
சந்தமெழக் கும்மி பாடிடுவோம்—சுற்றிச்
சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம். 3

ஓடி ஒளித்துக் களித்திடுவோம்—நாங்கள்
ஒற்றை யிரட்டையும் வைத்திடுவோம்
நாடியே வட்டுக ளாடிடுவோம்—தோழி
நாணக் கண்பொத்தி நகைத்திடுவோம். 4

உன்னியெழும் ஊஞ்சல் ஆடிடுவோம்—கேட்போர்
உள்ளங் குளிரவே பாடிடுவோம்
சின்னஞ் சிறுவீடு கட்டிடுவோம்—அதில்
சித்திர வேலைகள் செய்திடுவோம். 5

பத்துப் பசுக்களெம் வீட்டிலுண்டு—நல்ல
பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை
நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம்—இந்த
நீணிலத் தெம்மையொப் பாருமுண்டோ. 6

—தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்சொற்பொருள்

வாசம் கட்டிய—வாசனை சேர்த்த. நீணிலம்—உலகம்.

கேள்விகள்

1. சிறுமியர் எவ்வகையான உணவுகளை உண்பர் ?
2. சிறுமியர் விளையாட்டு வகைகளைக் கூறு.

22. சுவாமி விவேகானந்தர்

சுமார் நூறு வருடங்களுக்கு முன்னே கல்கத்தாவில் விசுவநாத தத்தர் என்ற பிரபல வக்கீல் ஒருவரிருந்தார். அவர் மிகவும் தெய்வபக்தியும் இரக்கச் சிந்தையும் உடையவர். புவனேசுவரி என்னும் அம்மையார் அவர் மனைவியாவர். இவர்களுக்கு 1858-ம் வருடம் ஜனவரி மாதம் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு நரேந்திரர் என்று பெயரிட்டனர். நரேந்திரரும் தம் சிறு வயதிலேயே 'இளமையிற் கல்' என்பதற் கிணங்கக் கல்வியறிவில் தேர்ச்சியடைய ஆவல்கொண்டார். 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி கல்வியிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து பதினெட்டாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். அவர் கல்வி பயிலும் காலத்திலேயே, "நம்மைப் படைத்தவர் யார்? நம்மை ஏன் படைக்க வேண்டும்? நம் நோக்கம் என்ன?" என்பது போன்ற கேள்விகள் பல அவர் மனத்தில் உதயமாயின. அவற்றைப் பெரியவர்களிடத்திலும் அறிவாளிகளிடத்திலும் கேட்டுத்தெளிய எண்ணங்கொண்டார். பி. ஏ. பட்டம் பெற்றபின் தம் தகப்பனாரைப் போலவே சட்டப் பரிட்சையில் தேற விரும்பினார். ஆனால்

அவர் மனத்தில் எழுந்த தெய்விக எண்ணங்கள், வேறெந்த எண்ணத்திற்கும் இடங்கொடுக்கவில்லை. எப்பொழுதும் கடவுளை நினைத்து உருகுவார். தம் சந்தேகங்களை நிவர்த்திக்கக்கூடிய ஒருவரைத் தேட ஆவல் கொண்டார். கடவுளைப் பற்றிய உருக்கமான பாடல்களைத் தமது இனிய குரலால், கேட்பவர் மனமுருகப் பாடுவார்.

அச்சமயத்தில் கல்கத்தாவிற்கடுத்த காளிகட்டத்திலே, ராம கிருஷ்ண பரமஹம்ஸர் என்ற மகாத்மா ஒருவரிருந்தார். அவர் சதா காளிதேவியை மனத்திலிருத்தி ஆனந்த பரவசமடைவார். அவருடைய கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியது. அவரைப் பெரியோரும் சிறியோரும் தரிசனம் செய்து, அவருடைய அரிய உபதேசங்களைக் கேட்டுக் களித்தனர். இதையறிந்த நரேந்திரர் ஒரு நாள் அவரைப் பார்க்கக் காளிகட்டத்திற்குப் போனார். அங்கு நரேந்திரர் பரமஹம்ஸரைக் கண்டதும் அவருக்கு ஒருவித மனஎழுச்சி ஏற்பட்டது. பரமஹம்ஸரது பாதங்களில் பணிந்து அவருடைய உபதேசங்களைக் கருத்துடன் கவனித்தார். பரமஹம்ஸரும் இவருடைய முகத்தெளிவைப் பார்த்து, இவரிடம் அன்பு கொண்டார். தெய்விகமான பாடல்களை நரேந்திரரைப் பாடச்சொல்லி மனங்குளிரக் கேட்கலானார். அது முதல் அடிக்கடி நரேந்திரர் பரமஹம்ஸரிடம்போய் அவருடைய அருள்வாக்கைக் கேட்டு, தமது சந்தேகங்களையும் தெளிவித்துக்கொண்டார். பரமஹம்ஸருக்கு அநேக சீடர்களிருந்தார்கள். அவர்களில் நரேந்திரரே முக்கியமானவர். இவரும் உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசம் ஏற்றுக் கொண்டார். அதுமுதல் இவருக்கு விவேகாநந்தர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

அக்காலத்தில்தான் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் சர்வ மதசபை ஒன்று கூடியது. அதற்கு விஜயம் செய்யும் பொருட்டு, நம் விவேகாநந்தர் இந்தியா முழுவதும் சுற்றி வந்தார். சென்னையிலுள்ள பிரமுகர்கள் ஒரு நிதி திரட்டி இவர் கையில் கொடுத்து வழியனுப்பினார்கள். இதுவரை அந்நிய நாடுகள் போய் அறியாத நம் சுவாமிகளும், ஹிந்துமதக் கொள்கைகளை அயல் நாட்டினர் அறி

யும்படி எடுத்துச் சொல்ல ஆவல்கொண்டு புறப்பட்டார். இவர் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றும் திறமை வாய்ந்தவர். பணக் கஷ்டத்தினுல் ஏற்பட்ட பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது இவர் அமெரிக்கா அடைந்தார். முதலில் அங்கு ஒருவரும் இவரை மதிக்கவில்லை. ஆனால் கடவுள் இவரோடிருந்தார். முடிவில் ஓர் அமெரிக்க மாது இவரை உபசரித்தார். சர்வ மத சங்கத்தில் பேசவும் இடங் கிடைத்தது. இவரை அற்பமாய் எண்ணிய அனைவரும் 'உடல் சிறியரென்றிருக்க வேண்டாம்' என்ற முதுமொழியை அறிந்து, இவருடைய அறிவைக் கண்டு ஆனந்தங்கொண்டார்கள். ஹிந்து மத உண்மையை அறிந்தார்கள். பல நாட்டு அறிஞர் இவரோடு நெருங்கிப் பழகினுர்கள். இவரைத் தங்களுடைய நாடுகளுக்கு வந்து உபதேசம் செய்ய வேண்டிக் கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஆங்காங்கே சென்று, அரிய பெரிய உபந்நியாசங்கள் செய்து ஹிந்து மதத்தின் பெருமையை நிலை நாட்டினுர்.

பிறகு இவர் இந்தியாவிற்குத் திரும்பி வந்து, வெள்ளத்தில் கஷ்டப் பட்டவர்களுக்கென்று ஒரு நிதி திரட்டி உதவி செய்தார். சென்னையில் இராமகிருஷ்ண மடமொன்று கட்டி அதில் கைத்தொழிற் கல்வியும் கற்பிக்குமாறு செய்து, அதை நடத்தச் சில சந்நியாசிகளையும் நியமித்தார்.

இச்சமயம் விவேகாநந்தரின் உடல் நிலை சரியில்லாமலிருந்தது. இவரை மறுபடியும் மேல் நாடுகளுக்குப் பிரயாணம் செய்யுமாறு வைத்திய நிபுணர்கள் வற்புறுத்தினர். சுவாமியும் மேல்நாட்டுப் பிரயாணத்தை இரண்டாம் முறையும் முடித்து, இந்தியா திரும்பினுர். இவர் தம் உபதேசங்கள் ஒன்றில், "இந்தியாவிற்கு நேராக ஒரு நட்சத்திரம் இருந்தது. அப்பொழுது இந்தியா எல்லாச் செல்வமும் உயர்வும் பெற்றிருந்தது. அது மேற்கு நோக்கிப் பிரயாணமாகிச் சுற்றி வந்து, ஜப்பானுக்கு நேராக இப்பொழுதிருக்கிறது. ஆகையால் இப்பொழுது ஜப்பான் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இன்னும் கொஞ்ச காலத்தில் அந்

நட்சத்திரம் இந்தியாவிற்கு நேராக மறுபடியும் வரும். அப்பொழுது இந்தியா திரும்பவும் தன்னுடைய பழம் பெரு நிலையை அடையும்,'' என்று தீர்க்க தரிசனம் சொல்லி யிருக்கிறார்.

சுவாமி விவேகாநந்தர் தமது நாற்பதாவது வயதில் திடீரெனச் சமாதி யடைந்தார். உலகத்தில் இவரை அறி யாதவரே இல்லை; இவரைப் புகழாத மனிதரும் இல்லை. இவர் புகழ் இன்றும் ஓங்கி நிற்கிறது.

பிரபல தெளிய காளிதேவி சந்நியாசம்
நிவர்த்திக்க உபசரித்தார் அருள்வாக்கு உதயமாயின
நிலைநாட்டினர் தீர்க்கதரிசனம் இரக்கச்சிந்தை

அருஞ்சொற்பொருள்

பிரபல - புகழ்பெற்ற. தெளிய-விளக்கமடைய. சந்நியாசம்- துறவு. நிவர்த்திக்க - போக்க. தீர்க்கதரிசனம் - வரும்பொரு ளுரைத்தல். இரக்கச் சிந்தை - அருளுடைய மனம்.

கேள்விகள்

1. சொந்த வாக்கியங்களிலமை:-பிரபல, உபசரி, பிரமுகர், அறிகுறி.
2. தகப்பனைப்போல் பிள்ளையும் என்பதற்கிணங்க இப்பாடத் தில் நீ என்ன அறிகிறாய்?
3. இந்தியாவைப்பற்றி விவேகானந்தர் சொன்ன தீர்க்க தரி சனம் என்ன?
4. இவருடைய பெயர், எப்பொழுது எதிலிருந்து உலகத்திற் குத் தெரியத் தொடங்கியது?

பயிற்சி

I பின் வரும் வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொற்களின் வகை, இணை, பால், இடம் கூறு:

அவர் சதா காளிதேவியை மனத்தில் இருத்திப் பரவசம் அடை வார்.

II பெயர்ச் சொற்களின் பொருளை வேற்றுமை செய்வது வேற் றுமை எனப்படும். இவை எட்டு வகைப்படும். பொருளை வேற் றுமை செய்யச் சில அடையாளச் சொற்கள் பெயர்ச்சொற்களுடன்

சேர்க்கப்படும். இந்த அடையாளச் சொற்களுக்கு வேற்றுமை உருபுகள் என்று பெயர்.

	வேற்றுமை		பெயர்ச்சொல்	உருபு
1.	முதல்	,,	வேலன் வந்தான்	உருபு இல்லை
2.	இரண்டாம்	,,	வேலனைப் பார்த்தேன்	ஐ
3.	மூன்றும்	,,	வேலனால் கிடைத்தது	ஆல்
			வேலனோடு சென்றேன்	ஓடு
			வேலனுடன் வருவேன்	உடன்
4.	நான்காம்	,,	வேலனுக்குப் பரிசு	கு
5.	ஐந்தாம்	,,	வேலனில் பெரியவன்	இல்
			சென்னையிலிருந்து வந்தான்	இருந்து
			மதுரையின் நீங்கினேன்	இன்
6.	ஆறும்	,,	வேலனது வாத்து	அது
			வேலனுடைய புத்தகம்	உடைய
7.	ஏழாம்	,,	வேலனிடம் தங்கியது	இடம்
			மரத்தின்கண் கிளி	கண்
8.	எட்டாம்	,,	வேலா, உட்கார்.	உருபு இல்லை

III பின்வரும் வாக்கியங்களில் வரும் தடித்த எழுத்துக்களாலான பெயர்ச்சொற்களுக்கு வேற்றுமை கூறு :-

1. அவர் **காளிதேவியை** மனத்தில் இருத்திப் பரவசம் அடைவார்.

2. **அவருடைய கீர்த்தி** இந்தியா முழுவதும் பரவிற்று.

3. **நரேந்திரர்** ஒருநாள் **அவரைப்** பார்க்கக் **காளிகட்டத்திற்குப்** போனார்.

23. தருமசீலர்

சென்னை மாநகரிலுள்ள பச்சையப்பன் கல்லூரியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது நம் ராஜ்யத்திலுள்ள பெரிய கல்லூரிகளில் ஒன்று. ஆண்டு தோறும் பல நூற்றுக் கணக்கான மாணவர் அதில் கல்வி கற்று பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்களைப் பெறுகிறார்கள். இக்கல்லூரிக்காக அழகிய பெரிய கட்டடங்கள் சில ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டன. இக் கல்லூரியை நடத்துவதற்கான மூலதனங்களை அளித்தவரே தரும சீலர் பச்சையப்ப முதலியார் ஆவர்.

பச்சையப்ப முதலியார் பிறந்த ஊர் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெரியபாளையம் என்ற சிற்றூர். இவருடைய தந்தையாரின் பெயர் விசுவநாத முதலியார்; தாயார் பூச்சியம்மாள். இக்குடும்பத்தினர் பெரும்பாலும் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தமையால், பச்சையப்பரைக் காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் என்று அழைப்பதுண்டு.

பச்சையப்பர் பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பே அவருடைய தந்தையார் மரணமடைந்தமையால், இளமையில் தந்தையின் ஆதரவு இல்லாமலேயே இவர் வளர்ந்து வந்தார். இவருக்கு மூத்த சகோதரிகள் இருவர் இருந்தார்கள். இவருடைய தாயாரே குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்திவந்தார்.

பச்சையப்பருக்கு ஐந்து வயதாயிருந்தபொழுது இக் குடும்பத்தினர் சென்னைக்குச் சென்றனர். அங்கே நாராயண பிள்ளை என்ற ஒரு கனவானுடைய கண்காணிப்பில் பச்சையப்பர் கல்வி கற்றார். அக்காலத்தில் நம் நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் வேரூன்றிவிட்டது. வியாபாரத்திற்காக இங்கு வந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் பல போர்களில்

ஈடுபட்டனர் ; இந்திய அரசர்களுடன் சமாதான உடன் படிக்கைகள் செய்துகொண்டனர். இவற்றின் பயனுக ஆங்கிலேய சாம்ராஜ்யம் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் பரவியது. ஆங்கிலேயரை அடுத்துப் பிழைத்த பல துவி பாஷிகளுக்கு அளவற்ற பொருள் திரட்டும் வாய்ப்புக் கிடைத்தது.

இளமையிலேயே துவிபாஷி உத்தியோகம் பெற்ற பச்சையப்ப முதலியார் விரைவில் பெரும்பொருள் திரட்டத் தொடங்கினர். தஞ்சாவூர் ராஜ்ய நிர்வாகம் அக்காலத்தில் சீர்குலைந்திருந்தது. அதைச் சீர்திருத்த ஸலிவன் என்ற ஆங்கிலேய அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். அவரிடம் பச்சையப்பர் துவிபாஷியாக அமர்ந்தார். அக்காலத்தில் இவர் அளவற்ற செல்வம் திரட்டினர். தஞ்சையில் தமக் கெனப் பெரியதொரு மாளிகை அமைத்துக்கொண்டார்.

இவருக்கு இரு மனைவியர் இருந்தார்கள் ; எனினும் பிள்ளைப்பேறு ஏற்படவில்லை. மனைவிமாரும் அடிக்கடி கலகம் செய்து கொண்டனர். குடும்ப வாழ்க்கையில் இவருக்கு மன அமைதி இல்லாது போயிற்று. இதனல் பச்சையப்ப முதலியாரின் மனம் தான தருமங்களிலும் கடவுளைத் தொழுவதிலும் ஈடுபடலாயிற்று.

1794-ம் ஆண்டில் பச்சையப்ப முதலியார் இவ்வுலக வாழ்வை நீத்தார். அதற்கு ஒரு வாரத்திற்குமுன் தமது திரண்ட செல்வத்தையெல்லாம் தரும காரியங் களுக்கே செலவழிக்க வேண்டுமென்று ஒரு மரண சாசனம் எழுதிவைத்தார்.

அந்தச் செல்வமே இப்பொழுது 'பச்சையப்பர் தரும நிதி' என்ற பெயரில் சில தருமகர்த்தர்களினுல் பரிபாலிக் கப்பட்டு வருகிறது. சென்னை பச்சையப்பர் கல்லூரியைத் தவிர, தற்போது காஞ்சீபுரத்திலும் ஒரு கல்லூரி நடத்தப் படுகிறது. மேலும் சென்னை, காஞ்சீபுரம், சிதம்பரம் ஆகிய நகரங்களில் உயர்தரப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. ஆகவே நம் ராஜ்யத்தில் கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ஸ்தாபனங்களில் பச்சையப்பர் நிதியை முக்கிய மானதாகச் சொல்லலாம்.

பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டில் வாழ்ந்த பல வள்ளல்கள் புலவர்களை ஆதரித்தார்கள் என்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். அவர்களில் சிறந்த ஏழுபேரைக் கடையெழு வள்ளல்கள் என்று சொல்வார்கள். அவர்கள் பாரி, காரி, ஓரி, எழினி, நள்ளி, பேகன், ஆய் என்பவராவர். அவர்கள் புலவர்களால் பாடப்பெற்று இன்றும் நம்மால் போற்றப்படுகிறார்கள். அவர்களோடு வைத்து எண்ணத் தக்க பெருமையுடையவர் நம் தருமசீலர் பச்சையப்ப முதலியார். இவர் தருமத்துக்கு எழுதிவைத்த பெருநிதியினால் ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கான மாணவர் கல்வி கற்க வசதி ஏற்பட்டுள்ளது. ஒருவர் செல்வம் பெற்றதனால் அடையக்கூடிய பேறு இதனிலும் சிறந்திருக்க முடியுமா ?

கல்லூரி	**கனவான்**	**துவிபாஷி**
பட்டம்	**கண்காணிப்பு**	**சாசனம்**
நிர்மாணிக்க	**வேரூன்றி**	**ஸ்தாபனம்**
மூலதனம்	**அடுத்து**	**பேறு**

அருஞ்சொற்பொருள்

கல்லூரி - உயர்தரப்பள்ளிப் படிப்பைவிட மேலான கல்வியளிக்கும் கலாசாலை. பட்டம் - அறிவு ஆற்றல்களில் சிறந்திருப்போருக்குக் கொடுக்கப்படும் சிறப்புப் பெயர். நிர்மாணிக்க - அமைக்க, நிலைநாட்ட. கனவான் - பெருமையுடையவன். கண்காணிப்பு - மேற்பார்வை. அடுத்து-சார்ந்து. துவிபாஷி - இருபாஷை பேசக்கூடியவன். பேறு - பெறப்படும் ஒன்று, நல்ல அதிட்டம்.

கேள்விகள்

1. பச்சையப்ப முதலியாருக்கு இளமைப் பருவத்தில் என்ன கஷ்டம் ஏற்பட்டது ?
2. சென்னையில் பச்சையப்ப முதலியார் கல்வி கற்றபின் அவருக்கு என்ன உத்தியோகம் கிடைத்தது ?
3. பச்சையப்ப முதலியாருடைய மனம் தரும காரியங்களில் திரும்பியதற்குக் காரணமென்ன ?
4. பச்சையப்பர் நிதி எதற்காக எவ்வாறு பரிபாலிக்கப்படுகிறது ?
5. கடையெழு வள்ளல்கள் யாவர் ? அவர்களை நாம் ஏன் போற்றுகிறோம் ?

பயிற்சி

I வினைச் சொற்களைப் பற்றி முன் வகுப்பில் நீங்கள் ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல், வினைச்சொல் ஆகும்.

வினைச் சொல்லின் கருத்து முடிந்திருந்தால் அது முற்றுவினை எனப்படும்: செய்தான்; செய்வான்.

கருத்து முடியாத வினைச் சொல்லாயின் அது எச்சவினை எனப்படும்: செய்து; செய்கிற; செய்த.

II பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்கள் முற்று வினையா, எச்சவினையா என்று கூறு:

1. பச்சையப்பரால் திரட்டப்பட்ட பெருநிதி இப்பொழுது ஆயிரக் கணக்கான மாணவர் கல்வி கற்க உதவுகிறது.

2. மாணவர்கள் காலையில் எழுந்து மனத்தில் கடவுளைத் துதிக்க வேண்டும்.

III மேலே கொடுத்துள்ள வாக்கியங்களில் திரட்டப்பட்ட என்ற எச்சவினை, பெருநிதி என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆகவே, திரட்டப்பட்ட என்பது பெயரெச்சம் எனப்படும்.

கற்க என்ற எச்சவினை, உதவுகிறது என்ற வினைச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆகவே கற்க என்பது வினையெச்சம் எனப்படும்.

IV பின்வரும் எச்சவினைகள் பெயரெச்சமா வினையெச்சமா என்று கூறு:-

1. பையனைக் கடித்த பாம்பைக் கல்லால் அடித்துக் கொன்றார்கள்.

2. கண்ணன் நல்ல பையன்; அவன் நாள்தோறும் விடியுமுன் எழுந்து, நீராடி, கடவுளைத் துதிப்பான்.

24. நட்பின் மேன்மை

[மதுரையில் சந்திரசேகர பாண்டியன் ஆண்டு வந்த காலத்தில் மதுரை நாயகம் என்ற ஏழை வேளாளன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரத்தினம் என்ற ஒரு குமாரன் உண்டு. பாண்டியன் சபையில் இராஜ நாயகம் என்ற பிரபு ஒருவர் இருந்தார். அவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர். அவருக்குக் கிருஷ்ணன் என்ற ஒரு குமாரன் உண்டு. இரத்தினமும் கிருஷ்ணனும் மதுரையிலிருந்த ஒரு பள்ளிச்கூடத்திற் படித்து வந்தனர். நாளடைவில் அவர்களிருவரும் நெருங்கிய நண்பராயினர்.

ஒரு சமயம் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளெல்லோரும் பந்து விளையாடினர். கிருஷ்ணன் பந்தை வேகமாய் எறிந்தான். அது உபாத்தியாயரது மேஜைமீதிருந்த கடிகாரத்தில் விழுந்து கடிகாரம் உடைந்துவிட்டது. இதைக் கண்ட பிள்ளைகள் பயந்து தங்கள் தங்கள் இடத்தில் உட்கார்ந்தனர். உபாத்தியாயரும் உள்ளே நுழைந்தார்.]

காட்சி—1

இடம் :—மதுரைப் பள்ளிக்கூடம்.

காலம் :—பிற்பகல்.

பாத்திரங்கள் :—கிருஷ்ணன், இரத்தினம், மற்றப் பிள்ளைகள்.

[பிள்ளைகள் சத்தம் செய்யாமல் உட்கார்ந்திருக்கின்றனர். உபாத்தியாயர் வருகிறார்.]

உபாத் :—(மேஜையருகிற் சென்று கடிகாரம் உடைந்திருப்பதைக் கண்டு, கோபத்துடன்) அடே! யாரடா இதை உடைத்தவன்? உடனே உள்ளதைச் சொல்லிவிடுங்கள். நீங்கள் ஒருவரும் கூறுவிட்டால், எல்லோரையும் தண்டித்து விடுவேன். அடே! ராமா! நீயா உடைத்தாய்?

ராமன் :—இல்லை, ஐயா!

[உபாத்தியாயர் ஒவ்வொருவராகக் கேட்கிறார். எல்லோரும் 'இல்லை' என்கின்றனர்.]

உபாத் :—அடே கிருஷ்ணா! நீயா உடைத்தாய்?

கிருஷ்ணன் :—(*பயந்து தயங்கி*) நா—ன்—ன் உடைக்-க-வில்லே.

உபாத் :—சரி! அப்படியானுல் இரத்தினம்தான் உடைத்திருக்க வேண்டும். அடே இரத்தினம்! நீ என்ன சொல்லுகிருய்?

இரத் :—(*தனக்குள்*) ஐயோ! இதென்ன! எல்லோரும் இல்லையென்கிருர்கள். கிருஷ்ணனும் இல்லை என்று சொல்லி விட்டானே. இனிமேல் நானும் இல்லை என்று சொன்னுல் உண்மை எப்படியும் வெளிவந்துவிடும். பிறகு உபாத்தியாயர் கிருஷ்ணனை அதிகமாய்த் தண்டிப்பார். ஆகையால் நானே உடைத்ததாக ஒப்புக்கொண்டு என் நேசனைக் காப்பாற்றுகிறேன். ஒப்புக்கொண்டால் உபாத்தியாயர் அதிகமாகத் தண்டிக்கவும் மாட்டார்.

உபாத் :—என்னடா யோசிக்கிருய்?

இரத் :—(*பணிவுடன்*) ஐயா! இதை உடைத்தவன் நானே. நான் அறியாமற் செய்த இப்பிழைக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். இதற்காக என்னைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் தள்ளிவிட வேண்டாம்.

[உபாத்தியாயரை வணங்குகிருன்.]

உபாத் :—உண்மையாக நீயா உடைத்தாய்?

இரத் :—ஆமாம், ஐயா!

உபாத் :—(*பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டு*) அப்படியானுல் உன் கையை நீட்டு.

[இரத்தினம் கையை நீட்டுகிருன். அவன் உண்மையைக் கூறியதாக எண்ணிய உபாத்தியாயர் அவனை மெதுவாக அடித்துவிட்டு]

சரி! போ! இனிமேல் இம்மாதிரி துஷ்டத்தனம் செய்யாதே. நீ ஒழுங்கான பையன். ஆகையால் உன்னைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் தள்ளவில்லை.

[உபாத்தியாயர் போகிருர். பிள்ளைகள் இரத்தினத்தைப் புகழ்ந்தும் கிருஷ்ணனை இகழ்ந்தும் பேசிக்கொண்டு செல்லுகிருர்கள்.]

கிருஷ் :—(கண்ணீர் விட்டுக்கொண்டே) இரத்தினம்!—ஐயோ!—என் குற்றத்தை ஒப்புக்கொண்டு, நான் பெற வேண்டிய அடிகளை நீ பெற்ருயே! உன் கை மிகவும் வலிக்குமே! பயத்தினுல் நான் பொய் சொல்லி விட்டேன். நீ குற்றத்தை ஒப்புக்கொண்டு என்னைக் காப்பாற்ருவிட்டால், உபாத்தியாயர் எப்படியும் உண்மையைக் கண்டுபிடித்து, என்னைக் கடுமையாகத் தண்டித்திருப்பார். நீ செய்த இந்த அரிய உபகாரத்தை நான் ஒருபோதும் மறக்கவே மாட்டேன்.

இரத் :—நண்ப! ஒரு சிநேகிதன் செய்ய வேண்டிய கடமையையே நான் செய்தேன். வீணுக ஏன் என்னைப் புகழ்கிருய்?

கிருஷ் :—நீ என்ன சொன்னபோதிலும் இந்த உபகாரத்தை நான் மறக்கவே மாட்டேன். வா, வீட்டுக்குப் போகலாம்.

[இருவரும் போகின்றனர்.]

[இவ்விஷயம் நடந்து பதினைந்து வருடங்கள் ஆயின. இரத்தினமும் கிருஷ்ணனும் பெரியவர்களாகிவிட்டனர். இரத்தினம் பாண்டியனது சேனையில் போர்வீரனுய் அமர்ந்தான். கிருஷ்ணனுடைய தந்தை சோழநாட்டுக்குப் போய்விட்டார். அதனுல் கிருஷ்ணன் தன் தந்தையுடனேயே வசித்து வந்தான். இப்படி யிருக்கும் சமயம் சோழன், பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்தான். பாண்டியனும் அவனது வீரர்களும் எதிர்த்து யுத்தஞ் செய்தனர். கடைசியில் பாண்டியன் தோற்று யுத்தத்தில் மடிந்தான். அவனது சேனு வீரரில் பலர் சிறையாயினர். சோழன், சிறைப்பட்ட வீரர்களைத் தனது தலைநகருக்குக் கொண்டுபோனுன். அவர்களில் இரத்தினமும் ஒருவன்.]

காட்சி—2

இடம் :—தஞ்சையில் அரசன் சபை.
காலம் :—பிற்பகல்.
பாத்திரங்கள் :—சோழன், மந்திரி, கிருஷ்ணன், பிரபுக்கள், சேவகர் முதலானேர்.

சோழன் :—மந்திரி! நாம் அன்று சிறைப்படுத்திய பாண்டிய வீரர்களைக் கொண்டுவரச் சொல்லும்.

மந்திரி :—இதோ அரசே! (சேவகனைப் பார்த்து) அடே சேவகா! நீ சிறைச்சாலைக்குச் சென்று, பாண்டிய நாட்டுக் கைதிகளை அழைத்துவரச் சொல்.

சேவகன் :—உத்தரவு! அரசே!

சோழன் :—மந்திரி! அவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். என்ன சொல்லுகிறீர் ?

மந்திரி :—அரசே! அவர்கள் தங்கள் அரசனுக்காகச் சண்டை செய்தனர். ஆகையால் அவர்களுடைய வீரத்தையும் ராஜ பக்தியையும் மெச்சி விடுதலை செய்வதே நல்லது.

சோழன் :—மந்திரி! நீர் சொல்லுவது சரிதான். ஆயினும் நமது படை வீரரில் அநேகரைக் கொன்ற அந்த ஒரு வீரனை மாத்திரம் தூக்கிலிட வேண்டும்.

[வீரர்கள் பாண்டியக் கைதிகளைக் கொண்டுவருகின்றனர்.]

வீரர்களே! உங்களது வீரத்தையும் ராஜ பக்தியையும் மெச்சி உங்களை விடுதலை செய்திருக்கிறோம். ஊர் போய்ச் சேருங்கள். ஆனால் (இரத்தினத்தை நோக்கி) எனது வீரரில் அநேகரைக் கொன்றதற்காக, உனக்கு மாத்திரம் தூக்குத் தண்டனை விதித்திருக்கிறோம். வருகிற ஆடி மாதம் பத்தாவது நாள் மாலையில் நீ தூக்கிலிடப்படுவாய்.

இரத் :—அரசே! எனது தேசத்துக்காக நான் உயிரைக் கொடுக்கவும் தயார். ஆனால் தாங்கள் ஒரு வேண்டுகோளுக்கு இணங்கவேண்டும்.

சோழன் :—என்ன வேண்டுகோள் ?

இரத் :—மதுரை நகரில் இருக்கும், எனது வயது சென்ற தாய் தந்தையரைப் பார்த்துவர, உத்தரவளிக்க வேண்டுகிறேன். அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து தண்டனையை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

சோழன் :—ஒருக்காலும் முடியாது. மெதுவாகத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறாயா ? உனக்குப் பதில் யாராவது பிணையாக இருந்தால் உன்னை அனுப்புவேன். குறித்த தினத்தில் நீ வாராவிடில் அவனைத் தூக்கிலிடுவேன்

இரத் :—ஐயோ! அப்படியானால் நான் என் பெற்றோரைக் காண நினைக்கவும் முடியாது. ஈசா! என்ன செய்வேன்!

[கண்ணீர் விடுகிறான்.]

கிருஷ் :—(எழுந்து) அரசே! என் நண்பன் இரத்தினம் சொன்ன சொல் தவறான். அவனுக்குப் பதில் நான் இங்கு பிணையாக இருக்கிறேன். அவன் வரும் வரை நான் சிறைவாசம் செய்யத் தயார். ஆகையால் தாங்கள் பயமில்லாமல் அவனை மதுரைக்கு அனுப்பலாம்.

சோழன் :—கிருஷ்ணா! நீயா இவனுக்குப் பிணை நிற்கிறாய்! பெரிய பிரபுவின் குமாரனான உனக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்? நீ ஏன் இதில் தலையிடுகிறாய்?

கிருஷ் :—அரசே! இரத்தினம் எனது அருமை நேசன். அவனுடைய குணத்தை நான் நன்கறிவேன். அவனுக்கு இந்த உதவியாவது செய்யாவிட்டால் நான் இருந்து என்ன பயன்?

இரத் :—நண்பா! எனக்காக நீ ஏன் சிறை சென்று கஷ்டப் பட வேண்டும்? என் தலை விதியை நான் அனுபவித்தே தீர வேண்டும். ஆகையால் நீ உன் வழியே செல்.

சோழன் :—கிருஷ்ணா! இப்பொழுதே கூறுகிறேன். உன் உயிரை இழக்க நேரிடும். பிறகு யார் சொல்லினும் நான் கேட்கமாட்டேன். வருகிற ஆடி மாதம் பத்தாம் நாள் மாலை தூக்கிலிடப்பட்டு இறக்க வேண்டியவன் இரத்தினம். ஆகையால் இக்காரியத்தை நன்றாக யோசித்துச் செய்; பதறாதே.

கிருஷ் :—அரசே! என் நண்பனுக்காக என் உயிரையும் இழக்கச் சம்மதம் தான். எப்படியாவது அவனது வேண்டுகோளை நிறைவேற்றினால் போதும்.

சோழன் :—சரி, உன் விருப்பம். குறித்த தினத்தில் சரியான நேரத்தில் அவன் வராவிட்டால் உன்னைத் தூக்கி விடுவேன்.

கிருஷ் :—சம்மதம் !—இரத்தினம்! இனிமேல் நீ மதுரை சென்று உன் தாய் தந்தையரைக் காணலாம். உடனே புறப்படு.

இரத் :—ஐயோ ! இந்த நாட்டில் எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையென நினைத்தேன். சிறிதும் தயங்காமல் எனக்கு உதவிசெய்ய முன்வந்தாயே. இவ்வுதவியை நான் எப்படி மறப்பேன் !

[கிருஷ்ணனைத் தழுவிக் கண்ணீர் விடுகிறான்.]

நண்பா ! வயது சென்ற எனது தாய் தந்தையரைப் பார்த்துவிட்டு, உடனே திரும்பிவிடுகிறேன். பயப்படாதே.

[மறுபடியும் கிருஷ்ணனைத் தழுவுகிறான்.]

சோழன் :—ஏ ! வீரர்களே ! (கிருஷ்ணனைக் காட்டி) இவனைக் கொண்டுபோய்ச் சிறையிலடைத்து வையுங்கள்.

வீரர் :—உத்தரவு, அரசே !

[வீரர்கள் கிருஷ்ணனைக் கைப்பற்றுகிறார்கள்.]

கிருஷ் :—(போகும்போதே) நண்பா ! நீ சிறிதும் தயங்காதே. கடைசி நாள் வரை இருந்து, உன் பெற்றோரைத் தேற்று. நான் வருகிறேன்.

[போகின்றனர்.]

இரத் :—ஈசா ! நீயே என் நேசனைக் காக்க வேண்டும்.

[போகிறான்.]

காட்சி—3

இடம் :—கொலைக்களம்.

காலம் :—பிற்பகல்.

பாத்திரங்கள் :—சோழன், மந்திரி, கிருஷ்ணன், கொலைஞர், சேவகர் முதலானோர்.

சோழன் :—கிருஷ்ணா ! நான் அன்றே சொன்னேனே கேட்டனையா, பார் ! இப்பொழுது குறித்த நாழிகைக்கு இன்னும் சிறிது நேரமே இருக்கிறது. இரத்தினம் வரமாட்டான். அவனுக்குப் பதில் நீ வீணே இறக்கப் போகிறாய்.

கிருஷ் :—அரசே! ஏன் வீண் வார்த்தை? என் நண்பனுக்குப் பதில், இப்பொழுதே என்னைத் தூக்கிலிடலாம். அவனுக்காக என் உயிரைக் கொடுக்கவே ஆசைப்படுகிறேன். தங்களை மிகவும் வேண்டுகிறேன். உடனே என்னைத் தூக்கிலிடுங்கள்.

சோழன்:—அவசரப்படாதே! இன்னும் நேரம் இருக்கின்றது. அதுவரை பொறுப்போம்.

மந் :—அரசே! இரத்தினம் அப்படி வராமல் இருக்கமாட்டான். என்ன காரணமோ தெரியவில்லை!

சோழன் :—(ஏளனமாய்) என்ன காரணம் இருக்கப்போகிறது? தப்பித்துக்கொள்ளுங் காரணந்தான்.

கிருஷ் :— அரசே! என் நண்பனைப் பற்றித் தாங்கள் கூறுவது சரியல்ல. அவனுக்குப் பதில் நான் இருக்கும்போது, அவனை இகழ்வானேன்?

சோழன் :—சரி! குறித்த நேரம் வந்துவிட்டது. மந்திரி! எல்லாம் தயாராய் இருக்கிறதா?

மந் :—அரசே! எல்லாம் தயாராகவே இருக்கிறது. இருந்தபோதிலும் ஒரு நாழிகை பொறுத்துப் பார்க்கலாம்.

சோழன் :—சரி! அப்படியே செய்வோம்.

கிருஷ் :—அரசே! பொறுக்க வேண்டியதே இல்லை. நிபந்தனைப்படி என்னை உடனே தூக்கிலிடுங்கள்.

சோழன் :—உஸ்! சிறிது பேசாமலிரு.

மந் :—சேவகா! பாதையில் யாராவது வருகிறார்களா என்று பார்த்து வா.

[சேவகன் போய்ப்பார்த்துத் திரும்பிவருகிறான்.]

சேவ :—அரசே! ஒருத்தரும் வரல்லீங்க.

சோழ :—சரி! காரியம் நடக்கட்டும். கிருஷ்ணன் தலைவிதியிது.

மந் :—ஐயோ! இனி என்ன செய்வது?—கிருஷ்ணா! கடவுளை வேண்டிக்கொள்.

கிருஷ் :—ஈசா ! என் நண்பனுக்காக உயிரை அளிக்கச் சமயம் வாய்த்ததைப் பற்றி மகிழ்கின்றேன்.

(எழுந்து தூக்குமேடையிலேறி)

கொலேஞர்களே ! உங்கள் வேலையை நடத்துங்கள்.

[கொலையாளிகளில் ஒருவன் கயிற்றைக் கிருஷ்ணன் கழுத்திலிடுகிறான். அப்போது 'நிறுத்துங்கள்' 'நிறுத்துங்கள்' என்ற சப்தம் கேட்கிறது. இரத்தினம் வேகமாக ஓடி வருகிறான்.]

இரத் :—நிறுத்துங்கள் ! நிறுத்துங்கள் !! இதோ நான் வந்து விட்டேன்.

[பாய்ந்து மேடைமீது தாவி, கிருஷ்ணனைக் கட்டிக் கொள்கிறான். இருவரும் மூர்ச்சையாகின்றனர்.]

சோழன் :—ஆகா ! இதென்ன? மந்திரி! உடனே இவர்களது மூர்ச்சையைத் தெளிவியுங்கள்.

[சேவகன் தண்ணீர் தெளிக்க இருவரும் எழுந்திருக்கின்றனர்.]

இரத் :—(கிருஷ்ணனைத்தழுவிக் கொண்டு) ஓ! நண்பா! நான் சிறிது தாமதித்து வந்தால் நீ இறந்திருப்பாயே!

(கண்ணீர் விடுகிறான்.)

கிருஷ் :—தாமதித்து வந்தால்தான் என்ன நஷ்டம்?

இரத் :—நண்பா ! என்ன இப்படிச் சொல்லுகிறாய் ?—என்னுடைய விதியைக் கேட்டதும், என் தந்தை மூர்ச்சையாய் விழுந்தார். நேற்றுத்தான் அவருக்குத் தெளிவு ஏற்பட்டது. உடனே உத்தரவு பெற்றுக்கொண்டு ஓடோடியும் வந்தேன். நண்பா ! உன்னை மறக்க மாட்டேன். (சோழனை நோக்கி) அரசே ! இதோ ! தண்டனையை ஏற்கத் தயாராய் நான் வந்துவிட்டேன். இனி என் நண்பனை விடுவித்து என்னைத் தூக்கிலிடுங்கள்.

கிருஷ் :—நண்பா ! என்ன சொன்னாய்?—ஒருக்காலும் இல்லை. குறித்த நேரத்தில் நீ வராததால், அரசன் கட்டளைப்படி தூக்கிலிடப்பட வேண்டியவன் நானே. நீயல்ல. இது நிச்சயம்.

இரத் :—நண்பா ! தப்பிதம் செய்தவனாகிய நானே தண்டனை யடைய வேண்டும். அப்படியிருக்க உன்னை ஒருவரும் தூக்கிலிட மாட்டார்கள்.

கிருஷ் :—(சோழனை நோக்கி) அரசே! குறித்த நேரத்துக்குள் வந்திருந்தால், தண்டனை அடைய வேண்டியது இரத்தினமே. ஆனால் நேரம் தவறி வந்ததால், இப்போது நியாயப்படி தண்டிக்க வேண்டியது என்னையே. நான் சிறை சென்ற சமயத்தில் தாங்கள் கூறியபடி நிறைவேற்றுங்கள்.

இரத் :—அரசே ! என்ன சொன்னபோதிலும் குற்றம் செய்தவர்களே தண்டனை யடையவேண்டும். ஆகையால் என்னையே தூக்கிலிட வேண்டும்.

சோழன் :—(கண்ணீர்விட்டுத் தனக்குள்) ஆகா ! உலகில் நண்பர்கள் இருந்தால் இவர்களைப்போல் அல்லவா இருக்க வேண்டும் ! இவர்களில் யாரைத் தண்டித்தாலும், என்னைப் பாவமே சூழும். ஆகையால் இவர்களை மன்னித்து,உயர்ந்த பதவியில் வைப்பதே எனது கடமையாகும். (வெளிப்படையாய்) நண்பர்களே ! (இருவரையும் தழுவியபடியே) உங்களைப்போல் உண்மையான நண்பர்களை நான் எங்கும் கண்டதில்லை. இன்று முதல் நீங்கள் எனக்கும் நண்பர்களே. எனது ராஜ்யத்திலே நீங்களிருவரும் உயர்பதவி ஏற்று, என்றும் பிரியாத நண்பர்களாய் வாழ்ந்துவரவேண்டும்.

கிருஷ் :—நண்பா! என்ன சொல்லுகிறாய்?

இரத் :—எல்லாம் இறைவன் செயல்.

சோழன் :—நான் கூறியதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

இரத் :—தாய் தந்தையரைக் கவனித்தபின்தான் மற்றவை.

சோழன் :—சரி ! அப்படியே செய்.

கிருஷ் :—இரத்தினம் ! நானும் உன்னுடன் மதுரை வருகிறேன். உன் தாய் தந்தையரையும் அழைத்துக் கொண்டு இங்கு வருவோம்.

இரத் :—அப்படியே செய்வோம்.

சோழன் :—மந்திரி! இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வாய்.

மந்திரி :—உத்தரவு, அரசே!

(கொலையாளிகளைத் தவிர யாவரும் போகின்றனர்.)

முதல் கொலையாளி :—என்னடாயிது? நம்ம போட்ட கயிறு தப்பிடுச்சே.

இரண்டாமவன் :—போடா! போடா! முன்னே மார்க்கண்டன் மேலே எமன் போட்ட கயிறே தப்பிடுச்சே—நமக்கென்னடா? இன்னக்கி நரி மொவத்துலே முளிச்சோம். அதனாலேதான் பாவஞ் செய்யாமே தப்பிச்சோம். வாடா போவலாம். எல்லாம் அவன் செய்யறதுடா.

மு. கொ :—ஆமாங்கறேன். (போகிறார்கள்.)

பிணை	நிச்சயம்	பாத்திரங்கள்
பதவி	ஆருயிர்	சட்டப்படி
நிபந்தனை	தலைவிதி	பதறாதே

அருஞ்சொற்பொருள்

பிணை - ஜாமீனாக நிற்றல். **பதறாதே** - அவசரப்படாதே. **ஆருயிர்** - அருமையான உயிர்.

கேள்விகள்

1. பள்ளியில் படிக்கும் பொழுது இரத்தினம் கிருஷ்ணனுக்கு என்ன உதவி செய்தான்?
2. சோழ அரசன் அவையில் கிருஷ்ணன் இரத்தினத்துக்கு என்ன உதவி செய்தான்?
3. சோழ அரசன் இரு நண்பர்களையும் எவ்வாறு பெருமைப் படுத்தினான்?

பயிற்சி

I இந்த நாடகத்தை நடித்துக் காட்டுங்கள்.

II இந்த நாடகத்தின் முடிவில் கொலையாளர் இருவரும் பேசிக்கொண்டதைத் திருத்தமான சொற்களாக மாற்றி எழுது.

III பெயர்ச் சொற்களுக்கு உள்ளதைப் போல் வினைமுற்றுக்களுக்கும் திணை, பால், இடம் உண்டு. ஒரு எழுவாயின் திணை, பால் இடங்களுக்குப் பொருத்தமாக வினைமுற்று அமையவேண்டும்.

IV பின்வரும் வாக்கியங்களிலுள்ள முற்று வினைகளுக்குத் திணை, பால், இடம் கூறு:—

1. நீ சென்று அவனைப் பார்.
2. நான் நேற்று வந்தேன்.
3. மரங்கள் வளர்கின்றன.

25. போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்

I

போகின்ற பாரதம்

வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவி லாமுகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ போ

II

வருகின்ற பாரதம்

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

—பாரதியார்

அருஞ்சொற்பொருள்

பொலிவிலா-அழகு இல்லாத. பொறி இழந்த விழி-பார்வை குறைந்த கண். மேனி-உடம்பு. கிலி-பயம். களி-மகிழ்ச்சி. கடுமை-வலிமை. பொங்குவாய்-கோபிப்பாய். ஏறு-காளை.

கேள்விகள்

1. போகின்ற பாரத நாட்டு மக்களுடைய இயல்புகள் எவ்வாறு இருந்தன?
2. வருகின்ற பாரத நாட்டு மக்களுடைய இயல்புகள் எவ்வாறு இருக்கும்?

26. வாக்குண்டாம்

அடக்கம் உடையார் அறிவிலர்என் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 1

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவலீலர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 2

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால். 3

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
விதியின் பயனே பயன். 4

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு. 5

எழுதியவா றேமென் றிரங்குமட நெஞ்சே
கருதியவா றேமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை. 6

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 7

நற்ரு மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்.
காக்கை உகக்கும் பிணம். 8

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்—மன்னர்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்ருேர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு. 9

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். 10

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா(து) ஆதலால்—தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று. 11

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 12

27. நல்வழி

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 1

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்ருற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 2

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 3

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 4

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 5

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 6

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். 7

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சாலறு வும். 8

செய்தி வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம்—வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். 9

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 10

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 11

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 12

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான். 13

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 14

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 15

பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. 16